# வைத்திய கலாநிதி

புஸ்தகம் 10 சஞ்சிகை
புஸ்தகம் 8 ஸங்க்யை 12 மார்கழி 192

145255

144986.

# வைத்திய கல

# THE VAIDYA KALA

EDITED BY
AYURVEDA BHUSHAN
**Pandit M. Duraiswami Aiyangar,** A.K.A.C. பண்டித மே. துரை
ஆயு


## Beel and its Medicinal Virtues*

## பில்வமும் அதன் ஔஷத குணங்களும்


BY DR. ABDUR KARIM.
*Sub-Assistant Surgeon*


போது விவரணம்:—பில்வமென்பது பெரிய விருக்ஷ வகைகளில் ஒன்று. அநேக விடங்களில் அது ஓங்கி வளர்ந்து உன்னதமாயிருப்பதைக் காணலாம். கப்புங்கிளையுமாய், பசுமையான இலைகளாலும், பூக்களாலும், கனிகளாலும் நிறைந்திருக்கும். இதன் பழம் ஸாதாரணமாய் பெரிதாகவும் சற்றேறக்குறைய உருட்சியாகவும், கடினமான மேற்புறணியால் மூடப்பட்டதாகவுமிருக்கும். அக்கனியின் உட்புறம் பத்துப் பதினைந்து அறைகளுள்ளதா யிருக்கும். ஸ்வச்சமாயும், மிகவும் ஒட்டிக்கொள்ளுந் தன்மையதுமான வழுவழுப்பாயுள்ள சோறும், விதைகளும் ஒவ்வோர் அறையிலும் நிறைந்திருக்கும். விதைகள் சிறிது நீண்டும், கொஞ்சம் தட்டையாகவும் காணப்படும்; அவை அறைகளின் உள்ள வரிசையில் ஒட்டிக்கொண்டிருக்கும்.

இந்த விருக்ஷம் இந்துக்களால் மிகவும் புனிதமானதென்று பூஜிக்கப்படுகிறது. பில்வ

தளங்களை அவர்
சிரேஷ்டமென்று
தைக் குடுக்கையாக
மணர்கள் பலர் உ
முள்ள மற்றச்
காட்டிலும் இதன்
ளில் மேலான குண
வருகிறது.

இலைகள்:—பில்வ
விசேஷமாயுண்டென்
விலைகளைப் பிழிந்து பு
ரஸம் வங்காளத்தில்
ஹாரமாகவும் மிகுதிய
றது. இதன் இலைகளை
துக்காய்ச்சியெடுத்த க
கூடியதும் பல வேறு
லெல்லாம் உபயோகிக்
குள்ள கசப்பான சுவை
முண்டுபண்ணுவதற்குக்
யவருகிறது. உலர்ந்த
இலைகள் வேறு சில சரக்
பட்டு சிறந்த பல்ய (toni
ஷ துர்பலத்திலும், ஆண்
மையிலும் உபயோகிக்கப்

வித்துகள்:—இதன் வி
ருட்களைப்போல புஜிப்பத

*Translated from English specially for the "Vaidya Kalanidhi"

...றதாயிருந்தும்
...ாகிக்கும் வழக்
...கு ஸ்தம்பநம்
... உண்டு. இவ்
...ருப்பு போன்ற
...ண்மக்களுடைய
...நறைவிலும், சுக்
...ய ஸம்பந்தமான
...வித்துமுதலியது
...ாகிப்பதால் நல்ல

...—ஸ்தம்பந குண
... கலந்து, வயிற்றி
..., சீதபேதியையும்
...ளக் கொடுக்கலாம்.
...ல் வேலம் பிசினுக்
...ாகங்களும் முற்றி
...டு. குடலின் உஷ்
...கவே அழற்சியைச்
...யைத் தாக்கூடியது.
...ம் ஔஷத
...மா யுபயோகிக்கப்படு
...ழ்ந்தாற்போல் உட்
...மான களிபோன்ற
...குணத்திற் சிறந்தது.
...ந குணமும் அதற்
... சீதபேதியிலும், அதி
...விசேஷ குணமுண்டு
...மாய் குழந்தைகளுக்கு
... அவர்களுக்கு இதைப்
...க்கூடிய சரக்கு வேறு
...ாம். பழுக்காத காயும்
...ம் (astringent), தீபநம்
...ம் (digestive) என்கிற
...நப்பதால் அம்ல பித்தம்,
...அதிஸாரம் முதலிய
...ளாறுகளை நிவர்த்தி
...யோஜனமுள்ளதென்று

கூறப்படுகிறது. நன்கு கனிந்த பழம் இனிப்பாகவும், ஒரு வித மணமுள்ளதாகவும், சிறிது ஸ்ரம்ஸநம் (mild laxative) என்கிற குணமுள்ளதாகவுமிருக்கிறது. இதைப் பொரியலாகப் பக்குவம் செய்து, சிறிது சர்க்கரை கலந்து புஜிக்க நாட்பட்ட ஆமாதி ஸாரம் (சீதபேதி) நிவாரணமாகும். இப் பழத்தை யுலர்த்தி சூர்ணம் செய்து ஸம்பாரச்சரக்கைப் போல் துவையல், பச்சடி முதலியது பக்குவம் செய்யவும் சிலர் உபயோகிக்கிறார்கள். உலர்ந்த பழச் சோற்றைக் கஷாயமிட்டு, அதைப் பிணியாளிகளுக்கு நாவறட்சியைச் சமனம் செய்ய கொடுக்கலாம் என்று ஆயுர்வேத வைத்தியர்கள் கூறுகிறார்கள். முக்கியமாக ஜ்வரத்தினாலும் அதிஸாரத்தினாலும் வருந்துபவருக்கு தாஹம் தணியவும், மலம் கட்டவும், வயிற்றுக் கோளாறைச் சமனம் செய்யவும் இக்குடிநீரையுபயோகிப்பது நலம். பித்த ஹரமாகவும், குளிர்ச்சியுண்டு பண்ணக் கூடியதாகவும் இப் பழத்தைக் கொண்டு ஒரு வித இனிப்பான பானகம் (ஷர்பத்) தயார்செய்யப்படுவதும் வழக்கம். தலைமயிர்களைச் சுத்தம் செய்யவும், மண்டையழற்சியைத் தணிக்கவும், மூளையைக் குளிரச் செய்யவும் இப்பழத்தைச் சிரஸ்ஸில் தேய்த்து ஸ்நானம் செய்வதுண்டு. இதனால் நேத்திரமும் குளிர்ந்து பலங்கொள்ளுமென்று கருதப்படுகிறது.

பில்வப்பழத்தைப் பானகமாகச் செய்தும் ஜ்வரத்தினாலுண்டாகும் குடலழற்சி, நாவறட்சி சீதபேதி முதலியவற்றில் உபயோகிக்கலாம். அதைப் பக்குவம் செய்ய வேண்டிய முறை வருமாறு :—

ஒரு பங்கு பில்வப்பழச் சோறுக்கு (வித்துகள் நாம்புகளில்லாமல் சோதித்தது) 16-பங்கு சுத்த ஜலம் சேர்த்து அரைப்பங்கு ஜலம் வற்றும் படியாகக் காய்ச்சவும். பிறகு பில்வப்பழத்துக்கு இரண்டு பங்கு சர்க்கரை சேர்த்து மறுபடியும் ஜல பாகம் நன்கு வற்றும்படியாகக் காய்ச்சி யெடுத்து வடிக்கட்டிக் கொள்ளவும். தேனைக் காட்டிலும் இப்பானகம் சிறிது கனமாகவும், ஒருவாறு அதைப்போன்ற சுவையுள்ளதாகவும் இருக்கும். வேளைக்கு ½ முதல் 1-அவுன்ஸ் வரையில் உபயோகிக்கலாம்.

---

# Testing Methods of Bhasmas.

## பஸ்மங்களைப் பரீக்ஷிக்கு முறைகள்.

-BY AYURVEDA BHUSHANAM
C. H. SESHACHARLU

---

ஸாதாரணமாய் ஆயுர்வேதத்தில் இரஸங்கள் உபரஸங்கள், ஸாதாரண ரஸங்கள், உலோஹங்கள் இவற்றை பஸ்மம் செய்யு முறைகள் மொழியப்பட்டிருக்கின்றன. அவ்விதமான சரக்குகளை வைத்தியர்கள் தமது அனுபவங்களை யனுஸரித்தாவது, சாஸ்திரானுஸாரமாகவாவது பஸ்மம் செய்வது முறை. ஒவ்வொரு தாதுப் பொருளையும் ஏதோ ஒவ்வொரு வகையில் அவரவர் பஸ்மமாகப் பக்குவம் செய்த போதிலும், அப்பஸ்மங்களைப் பரீக்ஷித்துப் பார்ப்பது அவசியம். அப்பரீக்ஷைகள் இதன் கீழ் குறிப்பிட்ட விதமாய் ஐந்து வகைப்படும்:—

1. ரேகா பூர்ணத்வம், 2. வாரிதரத்வம், 3. உத்தமத்வம், 4. அபுநர்ப்பவத்வம், 5. நிருத்தத்வம் என்பனவாம்.

1. ரேகாபூர்ணத்வம்:—பஸ்மமாகச் செய்த வஸ்துவின் மீது விரல்களின் ரேகைகள் பதிதல் அல்லது விரல்களின் இரேகைகளில் பஸ்மங்கள் பதிந்து நிறைதல் எனப் பொருள் "...அங்குஷ்ட தர்ஜநீஸ்ப்ருஷ்டம் யத் தத் ரேகாந்தரே விசேத். ம்ருதலோஹம் தது த்திஷ்டம் ரேகா பூர்ணமிதாநத:"—பெருவிரல் ஆள்காட்டி விரல் இவற்றால் சிறிது பஸ்மத்தை யெடுக்க, அப்பொழுது அவ்விரல்களின் ரேகைகளில் மிருதுவான பஸ்மங்கள் நிறைந்து ரேகைகளினூடே பதிந்து நிற்கும்; தாதுப்பொருள் நன்கு பஸ்மமானதற்கு இஃதோர் அறிகுறியாக கருதப்படுகிறது.

2. வாரிதரத்வம்:—ஜலத்தின் மீது மிதத்தல் என இப்பரிபாஷைக்குப் பொருள். "ம்ருத... தாதி யத்தோயே லௌஹம் வாரிதரம் வ... தத்"-ஒரு லோஹம் முறைப்படி நன்கு பஸ்ம... செய்யப்பட்டிருந்தால், அந்த பஸ்மத்தை ஜல... தில் போட, அது அத்தண்ணீரின் மீது மித... கும். தாதுப் பொருளுக்குபஸ்மமாக முறை... யில் உண்டாகும் இந்த நிலைமைக்கு 'வாரிதர...' எனப் பெயர்.

3. உத்தமத்வம் :—தண்ணீரில் முற்கூ... வாறு மிதக்கும் பஸ்மத்தின் மீது ஏதா... தானியங்களையாவது வேறு கனமான பதார்... த்தங்களையாவது வைக்க, அதைத் தாங்கி... கொண்டு அந்த பஸ்மம் மிதந்திருக்குமானா... அது "உத்தமம்" என்று வழங்கப்படுகிறது... "தஸ்யோபரி குருத்ரவ்யம் தாந்யஞ் ...த... நயேத் த்ருவம். ஹம்ஸவத் தீர்யதே வ... யுத்தமம் பரிகீர்த்திதம்."

4. அபுநர்ப்பவத்வம் :—பஸ்மமாகப் ... ணமித்த தாது, மீண்டும் சுயநிலைமையை... பெறுமை யென்பது இப்பரிபாஷையின்... பொருள். "குடகுஞ்ஜாஸுகஸ்பர்சமத்வா... யைஸ் ஸஹ யோஜிதம். நயாதி ப்ராக்ருதி... த்மாநாத் அபுநர்ப்பவமுச்யதே."—மிருது... தன்மை பொருந்திய வெல்லம், குன்றுமணி... தேன், குங்கிலியம், நெய் இவற்றிற் பஸ்ம... தைக்கலந்து, மூசையிலிட்டு அக்னியில் வைத்... ஊத மீண்டும் பஸ்மமானது சுய தாதுஸ்வ... பத்தைப் பெறுதிருக்க வேண்டும்; அந்நிலை... "அபுநர்ப்பவம்" எனப்படுகிறது.

5. நிருத்தத்வம் :—மீண்டும் காணமுடி... மை யென இதன்பொருள். "... ஸஹ ஸம்யுக்தம் த்மாதம் ரௌ... லகேத். ததா நிருத்த மி— ...ததபுநர்ப்பவம்"—முன் கூ...

வள்ளாழத் தெரு, வேப்பேரி, மதா...

வமாயுள்ள பஸ்மத்திற் சிறிதளவு எடுத்து, காஞ்சம் வெள்ளியுடன் சேர்த்து அக்னியி லற்றி ஊதினல் அப்பஸ்மம் வெள்ளியுடன் -டிக் கலந்து விடவேணும்; அவ்விதமானல் புதை நிருத்தம் என்பார்கள்.

வைத்திய ச்ரேஷ்டரான வாக்படாசாரியர் ...தே விஷயத்தை இங்ஙனம் வெகு சுருக்க க விளங்கக் கூறுகிறார்:—

"லோஹாதேரபுநர்ப்பாவோ குணதிக்யம் ;தோக்ரதா. அநப்ஸுமஜ்ஜநம் ரேகாபூர் ா புடதோ பவேத்."—உலோஹம் முத வற்றைப் *புடமிட்டு பஸ்மம் செய்து விட் ல் அதிலிருந்து அவற்றிற்கு அபுநர்ப்பவத் ன்மையும், உத்தமத்வமும், நீரில் மிதக்கும் லைமையும், விரல்களாலெடுக்கையில் ரேகை ;ளில் பதியும் தன்மையும் உண்டாகின்றன.

பு மிடுவதால் தாதுப்பொருட்களுக்கு இவ் ;ற்குணங்கள் ஸித்திக்கு மென்று கூறுவ , புடமிட்டு பக்குவமடைந்த பஸ்மங்க ;க்கு இக்குணங்கள் இருக்கவேண்டியது அவ யமென்று ஏற்படுகிறது. எல்லா பஸ்மங்க ளுமே பொதுவாக இவ்விதம் ஆயுர்வேத ரீக்ஷைகளின்படி பரிசோதிக்கக் கூடாமற் போனல் அத்தகையவை முறைப்படி தயார் செய்த ஔஷதங்களாக மாட்டாவென்று கூற வேண்டும். ஆனல் இப்பரீக்ஷா முறைகள் சாஸ் திரத்திற் கூறப்பட்டிருப்பது போல க்ரியாம் த்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆகிலும் சில வைத்தியர்கள் பஸ்மத்தில் ரகாபூர்ணத்வம் இருந்தால், அந்த ஔஷதம் ற்றிலும் சரியா யிருக்கு மென்று எண்ணி ருப்தி யடைந்து விடுகிறார்கள். வேறு சில வைத்தியர்கள் வாரிதர்த்வம் என்கிற பரீ ...ய்து பார்த்து திருப்தி யடைகி றார்கள். ஸித்த வைத்தியமென்கிற முறையைக் கையாளுவதாகக் கூறும் வேறு சில வைத்தியர் கள் சிறிதளவு பஸ்மத்தை மஞ்சளிற் கலந்து அது சென்னிறங்கொண்டால் அது சரியான பஸ் மமெனக் கருதி, அப் பரிசோதனையை மாத்தி ரம் செய்து திருப்தி யடைவதாயிருக்கிறார்கள். வைத்திய ச்ரேஷ்டர்கள், இப்பரீக்ஷைகளை யெல்லாம் செய்து பார்க்காமலே, ஔஷதப் பிரயோகங்களைச் செய்வது மிகவும் சிந்தைக் கிடமானது. சிலர் ஒரே புடமிட்டு பஸ்மம் தயார் செய்வதும், வேறு சிலர் சாஸ்திரானு பவங்களைக் கவனிக்காமலே ஏதோ ஒரு வித மாக அதைத் தயார் செய்வதும் வழக்கத்திலி ருக்கிறது. இதுவும் விரும்பத் தக்கதல்ல.

பல வேறு வகையான முறைகளைக் கொண்டு பஸ்மங்கள் தயார் செய்யப்படுகையில், பஸ்மத் திற்குக் குறிப்பிட்ட குண தோஷங்கள் இல் லாமற் போகலாம். பஸ்மங்களுக்கு இருக்க வேண்டிய குணங்களை யனுஸரித்து, மூலிகை களின் சாறு முதலியவற்றைச் சேர்ந்து ஆட்டி பஸ்மங்களைத் தயார் செய்ய சாஸ்திரம் மொழி ந்திடும். கேவலம் ஒரு சரக்கை பஸ்மமாகச் செய்வதே போதுமென்றால், சில சரக்குகளைச் சாதாரணமாய் அக்கினியிற் காட்டிச் சுட்ட மாத்திரத்திலேயே பஸ்மமாகச் செய்து விட லாம். ஆகவே இவ்விதம் தோன்றியவாறு ஏதோ ஒரு வகையில் லோஹாதிகளை பஸ்மம் செய்வது சரியான முறையாகமாட்டாது.

"இரஸரத்நஸமுச்சயம்" என்கிற கிரந்த த்தில் லோஹாதிகளை பஸ்மம் செய்யு முறை யைப்பற்றி இங்ஙனம் கூறப்படுகிறது:—"லோ ஹாநாம் மாரணம் ச்ரேஷ்டம் ஸர்வேஷாம் ரஸபஸ்மநா: மூலீபிர் மத்யமம் ப்ராஹு: கநிஷ் டம் கந்தகாதிபி:"— (இரஸபஸ்மத்தைக் கொண்டு எல்லா உலோகங்களையும் பஸ்மம் செய்யு முறையே சிறப்பாம். மூலிகைகளைச் சேர்த்து பஸ்மமிடுவது மத்திமம். கந்தகம் முதலிய சரக்குகளைச் சேர்த்து பஸ்மம் செய்யு முறை அதமமாகக் கருதப்படுகிறது.)

இச்சாதாரண விதியைக்கொண்டு பலவேறு வகையான பஸ்ம முறைகளுக்குள்ள குணதா ரதம்யங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இப் படியே அந்தந்த சரக்குகளுக்குக் கூறியுள்ள சாஸ்த்ரீயமான புடமிடும் முறைகளின்படி தயார் செய்யப்பட்ட ஔஷதங்கள் சாஸ்திரங் களிற் குறிக்கப்படும் விதமான குணங்களைப் பெற்றிருக்குமேயல்லாது, வேறு வகையில் தயார் செய்யப்படும் பஸ்மங்களுக்கு அவ்வித குணங்கள் சரியானபடி யிருக்கமாட்டாவென்ப தில் ஐயமில்லை.

ஆகையால் வைத்திய ச்ரேஷ்டர் அனைவரும் ஆயுர்வேத ஸம்பந்தமான சாஸ்திர முறைகளை அபிவ்ருத்தி செய்ய ஆவலுள்ளவராயிருந்தால் ஒவ்வொரு வழியிலும் க்ரியாம்சத்திற்கு ஸம் பந்தப்பட்ட வகையில் சாஸ்த்ரீய அறிவை உலகத்திற் பிரயோகித்துக் காட்ட முன் வர வேண்டியது இன்றி யமையாத காரியம்.

*...யது என்பதால் ...ஸங்கள், உப ...ங்கள் முதலிய இதாதுக்க...

---

## "Ama Dosha."

### THE SEROUS TOXIN.

### ஆமதோஷம்.

### வாதாதி தோஷங்களுக்கு ஆமதோஷத்தின் ஸம்பந்தாஸம்பந்தங்கள்.



ஆமம் (சரீரத்தின் இயற்கைச் சூட்டுக்குள்ள பலம் குன்றுவதால் தேஹத்தின் முதல் தாது (இரஸம்) தகுந்தவாறு பக்குவ மடையாமற் போக, அது ஆமாசயத்திற் பதன்கெட்டு நிற் கையில், அந்த இரஸத்தை ஆமதோஷம் என் பர். அந்த ஆமத்தோடு வாதாதி தோஷங் களும், தாதுக்களும் கலந்து கோளாறடைய அவை "ஸாமங்கள்" (ஆமதோஷக் கலப்புள்ள வை) எனக் கூறப்படுகின்றன. அவற்றாலுண் டாகும் வியாதிகளும் அங்ஙனமே ஸாமங்கள் எனப்படும். இதற்குப் பிரமாணங்களான ச்லோகங்கள் பின்வருமாறு :—

"ஊஷ்மணோல்ப பலத்வேந தாதுமாத்யமபாசிதம், துஷ்ட மாமாசயகதம் ரஸமாமம் ப்ரசக்ஷதே" ஆமேந தேந ஸம்ப்ருக்தா தோஷா தூஷ்யாச் ச தூஷிதா: ஸாமா இத்யுபதிச்யந்தே யே ச ரோகாஸ்ததுத்பவா:"

ஆமதோஷம் உற்பத்தியாவதற்குச் சாத ரணமாய் காயாக்னி (சரீரத்தின் இயற்கை சூடு) குன்றுவதே காரணமெனினும், ஜா... ராக்னியின் பலக்குறைவையே அதற்கு முக்கி ஹேதுவாகக் கூறவேண்டும். அக்னிக்குபல குறைவானது, உட்கொள்ளப்படும் ஆஹார தின் அளவுக்கும் தன்மைக்கும் ஏற்ப வாறுண்டாவதாகக் கருதப்படுகிறது. ... வது எவனது அக்னியானது எவ்வளவு ஆ... ரத்தை எளிதில் ஜீர்ணம் செய்... அவனுக்கு ஜாடராக்னி அவ்வளவு ... தென்று எண்ணப்படுகிறது. ... அதிகமாகவோ, குணத்தினுல் அதிக... வோ உள்ள உணவு உட்கொள்ளப்... அவ்வித உணவை ஜாடராக்னி இ... நிலைமையிலிருந்தும் பக்குவம் செய்து ... கக் கூடாமற்போகலாம்; அப்பொழுது ஆ... ரத்தையபேக்ஷித்து அந்த இயற்கை நிலை... யிலுள்ள அக்னியும் அற்பபலமுள்ளதாக கருதப்படும். ஆகவே ஆஹாராதிகளைப்பற்றி தோஷங்கள் அக்னிசக்தியை மீறியிருப்பதா... இயற்கையான அக்னியும் பலக்குறைவு... அக்னியாகத் தோற்றுவது இயல்பு.

தாதுக்களுள் முதலாவதான இரஸதா... வானது, ஆஹாராதிகளின் தோஷத்தினு... நன்கு பக்குவ மடைவதில்லை யென்று ... வேண்டும். நன்கு பக்குவமடைவதில்... யென்றால் உத்தமமான இரக்தாதி இ... தாதுக்களாக மாறக்கூடியவாறு பரிபா... அதற்கு ஏற்படுவதில்லை யெனக் கருத்து. ... விதமான ரஸம் தோஷக்கு... அதுதான் ஆமதோஷம் ... தாய் அறிக. "தேஹத்... யத்தில் பக்குவ ம... முதலில் கூறப்பட்...

ற்பத்தியாய் தற்காலம் நிற்பதாக அதன் பாருளேயன்றி, ஆமாசயத்திலேயே அது ிருந்து வ்ருவதாக அதன் பொருளல்ல. இர தாது சரீரமெங்கும் வியாபித்து வருமியல் டையதாகையால், இரைப்பையிலேயே அது ன்று வருவதாகக் கருதக்கூடாது.

"க்ருத்ஸ்நதேஹசரஸ்யாபி ரஸஸ்ய ஹ்ருதயம் த்தலம். பூர்வம் ஸமாநமருதா யுதயம் ஹ்ருதயே வைநத:"

(இரஸதாது தேஹமெங்கும் வியாபித்து ஸஞ்சரிப்ப ாயினும் அதற்கு முக்கிய ஸ்த்தலம் இருதயம். ஸமாந த்தினுல் இந்த ரஸம் முதலில் இருதயத்திற்குத் லேண்டுபோகப்படுகிறது.) மற்ரோரிடத்தில் கூறுவ தோது:—

"ப்ட்தோநமீர் கத்வா ஸர்வாந் தாதூநபம் ரஸ." வற்றைப் *னது தமனிகளின் மூலமாக மேலே ல் அநிலில தாதுக்களையும் போஷணை செய்ய தேஹ பரவும். மேலும் உந்தித் தள்ளி வியாபிக்கச் வும் சக்தியுடைய வியாந வாயுவினுல் இரஸதாது ங்கும் இடைவிடாமல் ஏககாலத்தில் எப்பொழு ளில் வச் செய்யப்படுகிறது" (வ்யாநேந ரஸதாதுர்ஹி க்ஷேபோசிதகர்மாணு. யுகபத் ஸர்வதோஜஸ்ரம் ஹே விக்ஷிப்யதே ஸதா") என்று வாக்படரும். (சாரீ த், 3, கூறுகிருர்.

ஆகையால் இரஸதாது சரீரமெங்கும் வியா கின்றது; அது கோளாறடைந்தால் அதன் பந்தத்தினுல் வாதாதிதோஷங்களும் கட்டுப்போய் விடும். அப்பொழுது உட லங்கும் ஸர்வ காலமும் பரவுமியல்புடைய ம் கோளாறடைந்ததுமான இரஸதாதுவின் ம்பந்தத்தினுல் கோளாறடைந்த வாதாதி தாஷங்களின் இலக்ஷணங்கள் தேஹமெங் ம் பரவியிருக்குமென்பதை நாம் ஞாபகத்தில் வக்க வேண்டும். இதுதான் ஓரிடத்தில் ாறடைந்த தோஷத்தின் குறிகள் வேறி ிலும் சரியா றுவதற்குக் காரணம்.

நப்தி யடைந்து கிற விஷம் ஒரு பிரத்தி வத்தியர்கள் வாமென்றும், அவ்விஷம் ய்து பார் உற்பத்தியாகிறது ம், ஆகவே "ரஸஸ் வது

ஸாம:"—ஆமதோஷத்துடன் கூடியது இரஸம் என்று விவஹரிக்கப்படுகிறதென்றும் கூறுகிருர்கள். அவ்விதமே ஜ்வராதி வியாதிகளிலும் அவற்றிற்குள்ள இதர காரணங்களோஷம் ஆமதேடஎன்கிற விஷமும் சேர்ந்திருக்கும் நிலைமையில் அவ்வியாதிகள் 'ஸாமங்கள் என்று வழங்கப்படுவது வழக்கம்.

ஆமதோஷத்திற்குள்ள பொதுக்குறிகள்:— ஸ்ரோதோ மார்க்கங்கள் அடைபடுதல், சரீரபலம் குன்றுதல், உடல் கனமாகத் தோன்றுதல், அபாநவாயு அடைபட்டு வயிற்றிற் பொருமலுண்டாதல், சோம்பல் மேலிடுதல், உணவு ஜீர்ணமாகாமை, வாயிலும் நாசியிலும் நீரூறுதல், மலம் உடைந்து பேதி காணுதல், அரோசகம், உடல் சோர்வு ஆகியவை வாதாதி தோஷங்கள் ஆமதோஷத்துடன் கூடியிருப்பதற்கான பொதுக்குறிகளாம். ஆமதோஷம் நீங்கியிருப்பதற்குக் குறிகள் இவற்றிற்கு நேர் எதிரிடையாயிருக்கும்.

இங்கே ஸ்ரோதோ மார்க்கங்கள் என்பதற்கு மலமூத்திராதிகளின் மார்க்கங்கள் எனப் பொருள். அவை அடைபடுவதென்ருல் மலாதிகள் எளிதில் வெளியாக முடியாமையென்று கருத்து. சரீரபலம் குன்றுவது தற்செயலாய் திடீரென்று காண்கிறது. ஸ்ரோதஸ்ஸுகள் அடைபடுமென்று கூறி, அப்பால் பேதியாகுமென்று மொழிவது முன்பின்விரோத மாயிருக்கின்றதே யெனலாம். ஆனுல் ஒவ்வொரு ஸமயம் ஆமதோஷாதிக்யத்திஞல் அஜீர்ண பேதிமாதிரிகாண்பதுண்டு; ஸாதாரணமாய் மலச்சிக்கல்தான் தோன்றும் என்று இதற்கு ஸமாதாநம்.

வாதம் ஆமதோஷத்தினுல் கோளாறடைந்ததற்குக்குறிகள்:—ஸ்ரோதோ மார்க்கங்கள் அடைபடும் (வாயு மலாசயத்திலிருந்து கீழ்நோக்கி வர முடியாமல் அடைபட்டுப் போவதால் மலாதிகளும் வெளிப்படுவது பெரும்பாலும் தடையுறுகிறது); ஜாடாக்னி மந்தித்துப் போம்; சோம்பல் அதிகரிக்கும்; குடல் இரையும் (மலரூபமான வாயு அதிகமாகச் சேருவதால் குடலில் இவ்விதம் இரைத்தலுண்டாகிறது); முட்டுகளிலும் பாதம் முதலிய

வற்றிலும் வீக்கம் காணும்; ஆங்காங்கு தேஹத்தில் குத்தல்வலி தோன்றும்; இவ்விதமான வேதனைகள் தேஹமெங்கும் கிரமக் கிரமமாகவாவது, திடீரென்று ஏககாலத்திலாவது வியாபிக்கும்; விடியற்காலத்திலும் இரவிலும் மாரிகாலங்களிலும் இது பிராபல்யம் பெறுகிறது. (ஆகவே சூரிய வெளிச்சம் தாக்குவதால் ஆமதோஷ ஸம்பந்தமுள்ள வாதம் தணியுமென்றுணரலாம்) ; இதற்கு விசேஷ லக்ஷணம் ஒன்றுண்டு ; அதாவது ஸாதாரணமாய் பிரபலமான வாததோஷங்கள் ஸ்நேஹ சிகித்ஸை முதலியதால் சாந்தமாக, ஆமதோஷத்துடன் கூடிய வாததோஷமோ ஸ்நேஹாதி சிகித்ஸைகளால் விருத்தியடையுமென்பதேயாம்.

வாத தோஷம் நிராமமாய் (ஆமதோஷப்பற்றில்லாமல்) இருப்பதற்குக் குறிகள்:—புலன்கள் தெளிவாயிருத்தல், தேஹம் ரூக்ஷமாதல், ஸ்ரோதோ மார்க்கங்கள் அடைபடாமலிருத்தல், வேதனை மெதுவாதல் ஆகியனவாம். மேலும் வாத தோஷக்குறிகளுக்கு எதிரிடையான குணமுள்ள சிகித்ஸை முதலியவைகளாலும் முக்கியமாய் ஸ்நேஹாதி சிகித்ஸைகளாலும் வாததோஷம் தணிவடையும்.

ஆமதோஷத்துடன் கூடிய பித்தத்தின் குறிகள்:—வாந்தி முதலியதன் மூலமாய் வெளியாகும் மல ரூபமான பித்தம் துர்நாற்றமுள்ளதாகவும், இலைப் பசுமை நிறமுடையதாகவும், ஒரு ஸமயம் கறுவலாகாமல் புளித்துமிருக்கும். ஜலத்தில் நன்ருகக் கலக்காமலும் தோய்ந்திருப்பதுபோன்றும், குருத்வமுள்ளதாகவும் காணப்படும். மேலும் பித்தமானது ஆம தோஷத்தினுல் கோளாறடைந்திருக்கையில் தொண்டையில் காகரப்புடன் புளித்தத் தேக்கெறிவும், தொண்டை-மார்புகளில் அழற்சியும் உண்டாயிருக்கும். இவ்விதமான பித்தம் ஆமதோஷத்தினுல் கோளாறடைந்ததென்றறிக.

நிராமமான (ஆமதோஷம் நீங்கிய) பித்தம் ஒருவாறு சிவந்தும், மஞ்சள் நிறமாகவும்; அதிக சூடுள்ளதாகவும், சுவையில் ஒருவாறு காரமாகவும், தண்ணீர் முதலியதில் நன்கு கலக்கக் கூடியவாறு மெதுவாகவும், துர்நாற்றமற்றதாகவும், நல்ல சுவையையும் ஜீர்ண சக்தியையும் தரக்கூடியதாகவும் இருந்தால் அது ஆமதோஷமற்ற சுத்தமான பித்தமென்றறிய வேண்டும்.

கபமானது ஆமதோஷத்தினுல் கோளாறடைந்திருக்கையில் அழுக்கடைந்ததாகவும், லால் தொட்டெடுக்கையில் நூல்போன்று இ படக்கூடிய தாகவும், தோய்ந்து கெட்டியதாகவும், துர்நாற்ற முள்ளதாகவு மிருக்கு மேலும் தொண்டையில் எப்பொழுதும் சிக் கொண்டு பசி தேக்கெறிவு இவற்றையும் த செய்யும்.

அதுவே ஆமதோஷமற்றதாயிருந்தால் வாறு நுரைத்துக் கொண்டும், வெளுத்து விரல்களால் குழைத்தால் விசேஷ பசையில் மல் ஸாரமற்றதாகவும், வாஸனையற்றதா மிருக்கும் ; இருமும்போது எளிதில் உடை வெளிவரக் கூடியதாகவும், வாயில் வழவழ முதலான அருவருப்பைக் கொடுக்காததாக இருந்தால் அதை தோஷமற்ற பக்குவம கபமென்றறிய வேண்டும்.

இங்கே நிராமமான பித்தத்திற்கு "ஒ வத ம சிவந்தும்" என்பது முதற்கொண்டு "ரியர், ட மற்றது" என்பதீருகக் கூறியுள்ள குற தூலமான தோஷரூபமாயுள்ள பித்தம். லக்ஷணங்களென்றும், அதன் பிறகு " சுவையுண்டு பண்ணக் கூடியது" என்பது லாயுள்ள குறிகள் ஸூக்ஷ்மமான பித்தத வைச் சேர்ந்தவை யென்றும் கூறப்படுகிற ஆனுல் கபத்திற்குக் குறித்துள்ள இலக்ஷண கள் யாவும் இங்கே மல ரூபமான ஸ்தூல கப தைச் சேர்ந்தவையே யன்றி ஸூக்ஷ்மமா தாது ரூபகத்தைச் சேர்ந்தவையல்ல.

## The 14th All-India Ayurvedic Conference.

## 14 வது நிகில பாரதாயுர்வேத மஹா வைத்திய ஸம்மேளநம்.

நிகில பாரதாயுர்வேத மஹா வைத்திய ஸம்மேள இவ்வருஷம் எப்ரல் கடைசீ வாரத்தில் (25, 26, 28-தேதியில்) ஸிம்ஹளத் வீபத்து இராஜதானி கொழும்பு நகரத்தில் வெகு சிறப்பாக நிறைவேறிய இந்தியாவிலிருந்து சுமார் நூறு பிரதிநிதிகளுக்கு அ மாகச் சென்றிருந்தனர். அவர்களு

ஆமதோஷத்திற்கு அஜீர்ண கேஸரி
எவ்விதமான அஜீர்ணரோகத்தையும், இரைப்பை புளிப்பு சேருவதையும், வயிற்றுவலியை சிவா செய்யும். இன்றைக்கே ஒரு டப்பி வாங்குங்கள்.
விலை ரூ. 2—8—0.
ஆர்யன் பார்மஸி, 48, வெள்ளாழத் தெரு, வேப்பேரி, மதா.

றக்கே-பஞ்சநதம் (பஞ்சாப்), மத்தியமாகாணம், வங்பாம், ஹைதராபாத் முதல் தெற்கே ஆந்த்ரதேசம், ...ாடகம், தமிழ்நாடு, மலையாளம், ஈருக எல்லாத்தேசங்தேடைய பிரதிநிதிகளும் அடங்கியிருந்தனர். அவர்க...ளர் ஸ்ரீமான் ஆயுர்வேத மார்த்தாண்ட பண்டித லக்ஷ்மீ...ஸ்வாமி ஆசார்ய, பண்டித டாகூர் தத்த சாஸ்திரி, ...ண்டித தயாநிதி ஸ்வாமி, வைத்யரத்ன கவிராஜ ...கீந்திரநாதஸேன், எம்.ஏ., ஆயுர்வேத பூஷணம் ...த்ரி ராமசாஸ்திரி, ஆயுர்வேத பூஷணம் கே. சுப்ரம...ரிய சாஸ்திரி, ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். ...ரஸ்வாமி ஐயங்கார் முதலானவர்கள் முக்கியமான ...ரயி...

...த்தியப் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் கொழும்பு ...துக்கு ஏப்ரல்மீ 24௳ காலையில் போய்ச்சேர, அவர் ...மரதானை ரெயில் ஸ்டேஷனிலிருந்து ஊர்வலமாக "பு...ரதங்களில் இலங்கைவாசிகள் அழைத்துச் ...வற்றைப் ...னந்தா காலேஜ் என்கிற விசாலமான கட்ட...அதிலிவருக்கென்று ஏற்படுத்தியிருந்த அறைக...மைய...க்கவேண்டிய ஸௌகரியங்களைச் செய்துவைத்...ர.

...நாள் மாலை 4-மணிக்கு டாக்டர் பீரி அவர்கள் ...மளத்தில் ஆயுர்வேதம் அபிவ்ருத்தியடைய வேண்...விஷயத்தைக் குறிப்பிட்டு வெகு கம்பீரமாக ஓர் ...ஸங்கம் செய்து பொருட்காட்சிச்சாலையைத் திறந்து...த்தார். பிறகு மாலை 5-மணிக்கு ஆனந்தா காலேஜ் ...டபத்தில் மஹா நாடு ஆரம்பமாயிற்று. அந்த ...லமான மண்டபத்தில் மிகவும் நெருக்கமாய் ஆயிரக்...கான பேர் கூடியிருந்தனர். அதற்குமுன்பு எந்த ...நாட்டிலும், ஸிலோனில் நடக்கும் பெரிய காங்கி...கூட்டத்திலுங்கூட அவ்வளவு ஜனங்கள் சேர...லை யென்று பல பிரமுகர்கள் கூறினர்கள்., உபச...ாக் கமிட்டியின் தலைவராக விருந்த ஸர். பி. இராம...ன் அவர்கள் அங்கு மஹா நாட்டுக்கு வந்திருந்த ...நிதிகளுக்கு நல்வரவுகூறி, இலங்கைக்கும் இந்தி...க்கும் இராஜநீதி முறையிலும், சாஸ்திராபிவ்ருத்தி...றயிலும் இனி விசேஷ ஒற்றுமையும் கூட்டுறவும் ...வேண்டுமென்று கூறி அரியதோர் பிரஸங்கம் ...நார். அவருடைய வாசாலகத்தனமும், சாஸ்திர...ஸ்யமும், தேசாபிமாணமும், இந்திய மக்களிட...உள்ளன்பும் அவரது பிரஸங்கத்தில் ததும்பின. பிறகு மஹா ஸம்மௌநத்துக்குத் தலைவரான ...வைத்யரத்ன கவிராஜ ஜோகீந்திரநாதஸேனர் அவர்கள் தமது ஆரம்பப் பிரஸங்கத்தைச் செய்தார். அது ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. ஆயுர்வேதத்திற்குள்ள மேன்மையையும், உலகத்தில் ஆதிகாலந்தொட்டு ஜனஸமூஹத்துக்கு அதனால் ஏற்பட்டுவரும் நன்மையையும், அச்சாஸ்திரம் விருத்தியடைய வேண்டுவதற்கான உபாயங்களையும் மஹா ஸம்மௌநத் தலைவர் வெகு நன்றாகத் தமது பிரஸங்கத்தில் விவரித்துக் கூறியிருக்கிறார். அப்பிரஸங்கம் முடிந்ததும் முதலில் இரண்டு தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேறின. அவை பின்வருமாறு:—

1. ஸிஹ்மளத்தில், முதலில் கொழும்பு நகரத்தில் ஆயுர்வேத கலாசாலையும், ஆயுர்வேதாதுராலயமும் உடனே ஸ்தாபிக்க வெண்டுமென்றும், கலாசாலை வைத்திய சாலைகளுக்கு உபயோகமான மூலிகைகளைப் பயிரிட்டு வளர்ப்பதற்காக ஸிலோன் கவர்ன்மெண்டார் கொழும்புக்குச் சமீபமாய் ஒரு தோட்டத்துக்குத் தேவையான ஐந்து ஏகரா பூமியை இனமாக அளிக்க வேண்டுமென்றும், அதன் பிறகு கிரமமாக இதர முக்கியமான நகரங்களிலும் ஆயுர்வேத வைத்திய சாலைகளை ஸ்தாபிக்க முயலவேண்டுமென்றும் ஸிலோன் கவர்ன்மெண்டாரை இம்மகாநாடு வணக்கமாகக் கேட்டுக்கொள்கிறது.

2. ஆயுர்வேத வைத்தியத்தை அபிவ்ருத்திசெய்யும் விஷயத்திலும், ஆயுர்வேத முறைகளைக் கற்பிப்பதற்கான கலாசாலையையும் வைத்தியசாலைகளையும் ஸ்தாபிப்பதற்கான உபாயங்களிலும் ஸிலோனிலுள்ள மஹா ஜனங்களும், சட்டஸபை அங்கத்தினர்களும் விசேஷமாக முயலவேண்டுமென்று இம்மஹாநாடு கேட்டுக்கொள்கிறது.

இவ்விரண்டு தீர்மானங்களின்மேல் பிரபலமான ஸிலோன் தலைவர்கள் சில உபந்நியாஸங்கள் செய்து தீர்மானங்கள் நிறைவேறிய பிறகு ஸபையின் மற்ற நடவடிக்கைகள் மறுநாள் ஒத்திவைக்கப்பட்டன. மறுநாள்முதல் மற்ற மூன்று நாட்களிலும் நிறைவேறிய அநேக தீர்மானங்களுள் அடியிற் குறிப்பிடப்படுபவை முக்கியமானவை:—

3. சென்னை கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட சுதேச வைத்தியக் கமிட்டியார் ஆயுர்வேதமுறையின் மஹிமையையும் உபயோகத்தையும் உணர்ந்து, சுதேச வைத்திய கலாசாலைகளை யேற்படுத்துவதன் மூலமாக ஆயுர்வேத வைத்திய முறைக்கு ஆதாவளிக்க வேண்டு



மென்று சிபார்சு செய்திருப்பதற்கு இம்மஹா ஸம்மௌநம் வந்தனம் அளிக்கிறது.

4. நிஷ்பக்ஷபாதமாகவும் நீண்ட கால விசாரணைக்குப் பிறகும் சுதேசவைத்தியக் கமிட்டியார் செய்த சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு சென்னை கவர்ன்மெண்டார் வரவு செலவு திட்டத்தில் சொற்பத் தொகையாகிய 30,000 ரூபாயையே ஒதுக்கிவைத்திருப்பதற்கும், சுதேச வைத்தியாலோசனை ஸபை செய்த சிபார்சுகளையும் அங்கீகரிக்காமல் போதியதல்லாத பாட முறையை சென்னை கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியதற்கும் இந்த மஹாஸம்மௌநம் வருத்தப்படுகிறது.

5. இப்பொழுது சென்னையில் ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கும் சுதேச வைத்திய பாடசாலையில் அகில இந்திய ஆயுர்வேத வித்தியாபீடத்தின் போதனா பாட முறைகளை அனுஷ்டிக்கும்படியும், சுதேச வைத்தியாலோசனை ஸபை ஆதியிற்செய்த சிபார்சின்படி ஆசிரியர்களுக்குக் குறைந்தது ரூ. 250 சம்பளம் ஏற்படுத்தும்படியும், இச்சுதேச வைத்திய கலாசாலையை ஒட்டி ஒரு வைத்திய சாலையை ஏற்படுத்தும்படியும், இச்சுதேச வைத்திய கலாசாலையின் ஆயுர்வேதப்பிரிவின் பரீக்ஷாதிகாரிகளாக அகில இந்திய ஆயுர்வேத வித்தியாபீடத்தை அங்கீகரிக்கும்படியும் இந்த மஹாநாடு சென்னை கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்கிறது.

6. வங்காள கவர்ன்மெண்டார் ஆயுர்வேத முறையை அபிவ்ருத்தி செய்வதற்கான முறைகளைப்பற்றி யோசனை சொல்ல நியமித்திருக்கும் கமிட்டியார் அந்த மாகாணத்தில் ஆயுர்வேத வைத்தியசாலைகளையும் கலாசாலைகளையும் ஏற்படுத்தும்படி அந்த கவர்ன்மெண்டாருக்குக் காலதாமதமன்னியில் சிபார்சு செய்யும்படி இந்த மஹாநாடு கேட்டுக்கொள்ளுவதுடன், ஆயுர்வேத வைத்திய முறையை அபிவிருத்தி செய்யத் தகுந்த முறைகளை அனுஷ்டிக்க வேண்டுமென்று அந்த மாகாண கவர்ன்மெண்டாரையும் கேட்டுக் கொள்கிறது.

7. ஆயுர் வேத மஹா வித்யாலயத்தைக் காலதாமதமன்னியில் புநருத்தாரணம் செய்ய அவசியமான நடவடிக்கைகளை யெடுத்துக் கொள்ளும்படி ஆயுர்வேத மஹா மண்டலத்தை இம் மஹா நாடு கேட்டுக் கொள்வதுடன் இப் புதிய போதனா சாலையை ஏற்படுத்தும் விஷயத்தில் பொது ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் உதவி செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறது.

8. கஞ்சாவானது பல ஔஷதங்களைத் தயார் ...வதற்கு அவசியமாயிருப்பதாலும், பல வியாதிகளுக்...தகுந்த ஔஷதமா யிருப்பதாலும் சுதேச வைத்திய...இதையுபயோகிக்கும் விஷயத்தில் இப்பொழுது இரு...வரும் நிர்ப்பந்தத்தை விலக்கி விடும்படி ஸிலோ...கவர்ன்மெண்டாரை இம் மஹா நாடு கேட்டுக் கொ...றது.

9. புதிய வருஷத்திற்கு அடியிற்கண்ட உத்தி...கஸ்தர்கள் மஹா மண்டலத்துக்கும் வித்தியா பீட...கும் தெரிந்தெடுக்கப் பட்டார்கள் :—

## ஆயுர்வேத மஹா மண்டலம் :

**அக்கிராஸனாதிபதி :**— வைத்திய ரத்னம் கவி...யோகீந்திர நாதஸேனர், எம்., ஏ. வித்யா பூஷண.

**உபாக்கிராஸனாதிபதிகள் :**— ஆயுர்வேத ம...தாண்ட பண்டித லக்ஷ்மீ ராமஸ்வாமி ஆசார்யர், டா...ஏ. லக்ஷ்மீபதி.

**மந்த்ரி :**— ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். து...ஸ்வாமி ஐயங்கார், ஏ. கே. ஏ. ஸி.

**உதவி மந்த்ரிகள் :**— ஆயுர்வேத பூஷண...ன் பானு வைத்தியர். ஆயுர் வேத பூஷணம் கே. சு...மணிய சாஸ்த்ரிகள்.

**கணக்குப் பரிசோதகர்:**—வைத்திய விச...கே. ஏ. வெங்கடாசல சாஸ்த்ரிகள்.

**பொக்கிஷதார்:**—டாக்டர் எம். சுப்பிரம்மண...ஐயர், பி. ஏ., எம். பி., ஸி. எம்.

ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் ஐந்து அங்கத்தி...கள்.

## ஆயுர்வேத வித்யாபீடம்:

**அக்கிராஸனாதிபதி:**—ஆயுர்வேத மார்த்தாண்...பண்டித லக்ஷ்மீராமஸ்வாமி ஆசார்யர்.

**உபாக்கிராஸனாதிபதிகள்:**—ஆயுர்வேத பூஷண...பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்; பண்டி...கிருஷ்ண சாஸ்த்ரி கவடே, பி.ஏ.

**மந்த்ரி:**—டாக்டர் எம். சுப்பிரம்மணியம் ஐயர்.

**உதவி மந்த்ரிகள்:**—ஒய். டி. வெங்கடாசாரி; ஸோமசுந்தர தேவர்.

சென்ற வருஷத்திய இதர அங்கத்தினர்களும்.

10. ஹரித்வாரத்திலிருந்து ஹானர...ஸ்...வீர லிங், அவர்கள் கடிதங்கள் மூலமாகவும், தந்தி...மூலமாகவும் அடுத்த (15-வது) ஆயுர்வேத ஸம்மௌ...திற்கு அனுப்பியிருந்த வரவேற்பு விஷயமும் நீடி...நேரம் ஆலோசிக்கப்பட்டு அடுத்த ஸம்மௌநம் ஹரி...

—த்தில் நடத்தப்படவேண்டுமென்று மஹாநாட்டினால் மா்தியில் தீர்மானிக்கப்பட்டது.

ா 1. ஆயுர்வேத மஹாமண்டலம், வித்தியாபீடம் ...ற்றின் விதிகளில் பிறகு அவசியமான சில மாறுதல் ...டீகொண்டுவரப்பட்டு தீர்மானிக்கப்பட்டன.

---

## Asthma due to Rats or Mice.

## ...அல்லது மூஞ்சுறு ச்வாஸ-காஸத்திற்குக் காரணம்.

...'வாஸ-காஸ நோயால் வருந்தும் பிணியாளிகளைப் ...சோதிக்கையில், அல்லது அவர்களுக்கு சிகித்ஸை ...கையில் ஸாதாரண சிகித்ஸைக்கு வசப்படாத ...ா எலிக் கடியின் மூலமாய் அவ்வித இரைப்பு அல் ... ச்வாஸ-காஸம் உண்டாயிருக்க வேண்டு மென்று ...சுதேச வைத்தியர்கள் அபிப்பிராயப்படுவதை நாம் ...ர்விப்பட்டிருக்கிறோம். அவ்விதம் அவர்கள் ...ல்லி வந்ததை இக்காலத்திய மேனாட்டு வைத்தியங் ...ளிப் பொருட்படுத்தாமல், தோன்றியவாறு வெவ் ...வைத்தியங்களைச் செய்து, கடைசியில் நற்பய ...ன்றும் உண்டு பண்ணாமல் பிணியாளியை இயற்கை ...ஸ்வஸ்தமடைய வேண்டு மென்று அல்லது ...ாத்தியவியாதி யென்று விட்டு விடுகின்றனர். ...னாட்டார் முகத்திலிருந்து வரும் எவ் விஷயமும் ...காலத்தில் வேதவாக்காகக் கருதும்படியாய் ...ஜனங்களுக்கே ஒரு பிராந்தி யேற்பட்டுவிட்டது. ...த விஷயத்தை ஓர் ஆங்கிலேயர் தனது ஸொந்த ...பிப்ராயம்போல வெளியிட்டால், உடனே அது மிக உண்மையான தத்துவமென்று ஜனங்கள் கருதுகி...ள். ஆகவே ஒரு மேனாட்டு வைத்தியர் இதுவிஷய... மொழிந்துள்ள நிரூபத்தின் முக்கியாம்சத்தை ...ன் கீழ் பெயர்த்து வெளியிடுகிறோம் :—

...ராபஸர் W. லிண்ட்ஸ் என்பவர் ச்வாஸ காஸம் ...ப் பிராணிகளின் ஸம்பந்தத்தால் உண்டாகிறது ...து விருத்தியாகிறது என்பதைப் பற்றி அநேக ...சாதனைகள் செய்து பார்த்ததில், எந்தப் பிராணியா... அவ் வியாதி காண்பதாக அவர் அறிய முடியவில்லை. ...ல் ... அவர் எலிகள் அல்லது மூஞ்சுறுகள் ...வியாதிக்குக் காரணமாகுமா வென்பதைப் பரிசோ...வில்லை. ஒரு ஸமயம் 36-வயதுள்ள ஒரு ஸ்த்ரீ ...வருஷ காலமாய் இவ் வியாதியால் வருந்த, அது ...வைத்தியருடைய பார்வைக்கு வந்தது. இது மாதத்துக்கு 4 அல்லது 5 முறை தோன்றி, ஒவ்வொரு முறையிலும் 3 முதல் 5 நாட்கள் வரையில் அல்லது சில ஸமயம் இரண்டொரு வாரங்களும் தொடர்ந்து தொந்தரவளிப்பது வழக்கம். இவ் வியாதியின் வேகம் பெரும்பாலும் இரவு நேரத்திலும், டிசம்பரிலிருந்து மார்ச்சு மாதம் வரையிலும் அதிகரித்து வந்தது. இவ் வியாதிக்ரஸ்தையின் ஸொந்த வீட்டிலிருந்து இவளது தாயார் வீடு சில வீதிகளுக்கு அப்பாலிருக்கிறது. இவள் தன் வீட்டை விட்டு தாய் வீட்டுக்குப் போயிருந்தால் இவ் வியாதி தோன்றுவதே யில்லை. உட்கார்ந்திருக்கையிலும் அல்லது சாய்ந்திருக்கையிலும் வியாதியின் வேகம் ஒருவாறு தணிந்திருப்பதாக அவளுக்குத் தோன்றும்; ஆனால் படுக்கையில் படுத்தால் வியாதியின் வேகம் அதிகரிப்பது வழக்கம். சீதோஷ்ண ஸ்திதிகளாவது சாப்பாடுகளில் எற்படும் எவ்வித மாறுபாடுகளாவது வியாதியை விருத்தி செய்வது அல்லது குறைக்கும் விஷயத்தில் எவ்வித ஸம்பந்தமும் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை; அல்லது பூனை, நாய், குதிரை முதலிய மிருகங்களுடன் ஸஹவாஸம் செய்வதால் இவ்வியாதி காண்பதாகவும் பரிசோதனைகளி லிருந்து தெரியவில்லை. ச்வாஸம் எப்பொழுது அதிகமாகிறதோ அப்பொழுதெல்லாம் இருமலும் நன்றாகத் தோன்றி, அதனால் கனமாகவும் மஞ்சள் நிறமாகவுமுள்ள கபமும் வெளிப்படும். கபஹாரமான ஔஷதம் எதாவது கொடுத்தால் இரைப்பின் வேகம் தணிவடையும். மூச்சு விடவும் முடியாதபடி ச்வாஸ வேகங்களில் அப் பிணியாளி ஈழை யிழுப்பால் மிகவும் துன்புறுவான். மிகச் சொற்ப வேலையும் ஆயாஸத்தைக் கொடுத்து மூச்சுத் திணரச் செய்தது. போஜனம் செய்தல், பேசுதல்கூட பெரிதும் ஆயாஸமளித்தது. சர்மத்தின் மீது சிவந்த தழும்புகள் தோன்றின; ச்வாஸ வேகம் வலுவடைகையில் கடுமையான தினவுண்டாகும். இவள் தன் தாய் வீட்டிற்குப் போனால் இவ்வியாதியின் தொந்தரவு தோன்றுவதே யில்லை யென்கிற விஷயத்தைக் கொண்டு அவளது வைத்தியர் ஒருவாறு நுட்பமாக யோசனை செய்தார். இந்த வியாதியின் வேகம் அவ்வப்பொழுது மேலெழுவதற்குக் காரணம் அவளுடைய சொந்த வீட்டைப்பற்றியதாகவேஇருக்கவேண்டுமென்றும் ஆலோசிக்கப்பட்டது. ஆகிலும் உண்மையான காரணம் இன்னதென்று தெரிந்து கொள்வது சிறிது சிரம ஸாத்தியமாயிருந்தது. ஒருநாள் அவளுடைய வீட்டில் அநேகம் எலிப் பொறிகள் ஆங்காங்கு வைக்கப்பட்டிருந்ததை அவ் வைத்தியர் கண்டார். அதைப்பற்றி விசாரித்ததில் அவ் வீட்டில் எலிகளும் மூஞ்சுறுகளும் மிகுதியா யிருப்பதாகத் தெரிய வந்தது. அதன் பிறகு அப்பிணியாளிக்கு ச்வாஸ-காஸம் டிசம்பர் முதல் மார்ச்சு மாதம் வரையில் அதிகமாய் தோன்றி தொந்தரவளிக்கும் விஷயம் இவருடைய ஞாபகத்துக்கு வந்தது; அக்காலங்களில்தான் வெளி நிலங்களை விட்டுவிட்டு எலி முதலிய இப்பிராணிகள் வீடுகளுக்குள் பிரவேசிப்பது வழக்கம். மேலும் இராக்காலத்தில் எலிகள் அதிகமாய் வெளியில் நடமாடுவது ஸஹஜமாகையால், இவ்வியாதியால் அவ் வியாதிக்ரஸ்தை இரவு நேரத்திலேயே மிகுதியாக வருந்த நேரிட்டது என்றும் ஆலோசிக்க வேண்டியதாயிற்று. அவளுடைய தாய் வீட்டில் எலிகளாவது மூஞ்சூருகளாவது கிடையா தென்பதும் தெரிந்தது. தாய் வீட்டிற்குப் போய் இச்சுவாஸ-காஸம் நன்றாகத் தணிந்து அவள் சுகமாயிருக்கையில், இவ்விடம் போவதாக அவளுக்கு முற்றிலும் தெரியாதபடி ஒருநாள் அவளுடைய வீட்டுக்கு ஒருவாறு கொண்டுவரப்பட்டாள். தன் வீட்டுக்குப் போவதால் வியாதி விருத்தியாகு மென்கிற சங்கை அவள் மனதில் தோன்றாமலிருப்பதற்காக இவ்வுபாயம் செய்யப்பட்டது. அந்த வைத்தியர் மெல்லிய இரும்புக்கம்பி வலையால் செய்த ஒரு எலி பிடிக்கும் பேழையில் மூஞ்சூறுகளை விட்டு, அக்கூண்டை இவளிடம் கொண்டுவந்து அவளை முகரச் செய்தார். ஒரு தடவை நன்றாக முகர்ந்த பிறகு, அக்கூண்டு அவளுக்கு அருகில் ஒரு மேஜையின்மீது வைக்கப்பட்டது. இரண்டு மூன்று நிமிஷங்களில் ச்வாஸகாஸம் வெகு படபடத்துக் கடுமையாகத் தோன்றிவிட்டது. மூச்சுத் திணறுதல், உப்பஸம், கர் கர் சப்தத்துடன் கூடிய காஸம் ஆகிய இவற்றின் வேகமும், உடம்பில் காற்றுப்படும்படியான பிரதேசங்களிலெல்லாம் தழும்புடன் அதிக அரிப்பும் மிகக் கடுமையாயுண்டாயின. அதன் பிறகு எலிகளையெல்லாம் ஓட்டியும், வீட்டுப் பாழிகளில் அடைந்தும் இறந்தும் கிடந்த மூஞ்சுறு முதலியதை அப்புறப்படுத்தியும் வீட்டை சுத்தம் செய்த பின்பு அப்பிணியாளி ஸௌக்கியமடைந்தாள். இவ்விதம் "பிராக்டிகல் மெடிஸின்" என்கிற வைத்தியப் பத்திரிகையில் ஓர் நிரூபம் வெளியாயிருக்கிறது.

---

ச்வாஸாசயம், இருதயம் இவற்றைப்பற்றிய வியாதிகளில் சியவநப்ராசம் (ஆர்யன்) என்கிற திவ்யௌஷதத்தை ஆர்யன் பார்மஸியிலிருந்து வரவழைத்து உபயோகியுங்கள்.



SMA...

## வை...படித் தடுப்பது?

...மொய்க்காமல் பார்த்துக் அல்லது பெரியம...

## அதைத் தடுக்க என்ன செய்வ...

[சென்னை கார்பொரேஷன் ஹெல்தாபீஸாய் சமைத்த வைத்திய கலாநிதியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்பட்டது.]

வைசூரி என்னும் கொடிய நோய் நம்தேசத்தைவிட்டு ஒழிந்தபாடில்லை. அம்மை குத்திக்கொள்வதால்தான் அந்நோயைத் தடுக்க முடியும். சிறு குழந்தைகளையும் (சிசு) அம்மை குத்திக்கொள்ளாத பெரியோர்களையும் அந்நோய் பீடிக்கும். ஸாதாரணமாக இந்நோயால் மரணம் எற்படுவதில்லை. ஆனால் அது மிகவும் கொடூ...மாக ஊரில் பரவினால் அநேகர் சாவதுமுண்டு. அது ஓர் துர்தேவதையின் விளையாட்டென்றும், மனிதரால் அதைத் தடுக்க முடியா தென்றும் நம் தேசத்துப் பேதை ஜனங்கள் எண்ணி அவ்வியாதியைத் தடுக்க போதுமான முயற்சி செய்யாமல் இருந்து விடுகிறார்கள். இந்நோயால்... அனேகர் மாற்ற முடியாமல் கோர மடைகிறார்கள். இன்னும் பலர் பார்வையை இழக்கின்றார்கள், மற்றும் சிலர் நொண்டியாகவும் வேறு அனேக வித அவஸ்தைகளுக்கும் உட்படுகிறார்கள்.

2. வைசூரி ஓர் இடத்தில் நேரிட்டால் அங்கே வேகமாய்ப் பரவுகிறது. எல்லா ஜாதியார்களும், இனத்தார்களும் எவ்வயதினராயினும், எத்தேசத்தினராயினும், அப்பொழுது பீடிக்கப்படுகின்றார்கள். எவ்வூர்களில் ஜனங்கள் எல்லோரும் அடிக்கடி அம்மை குத்திக்கொள்கிறார்களோ அவ்வூர்களில் அந்நோய் பரவுவதற்கு மார்க்க மில்லாமல் நசித்து விடுகிறது. அம்மை குத்திக்கொள்ளாத ஜனங்கள் அதிகமா யிருக்குமிடங்களில் இவ்வியாதி கொடுந்தீயைப்போல் பரவுகிறது. இவைகளுடன் வறட்சியான காற்றும் உஷ்ணமும், அசுத்தமும் எற்பட்டால் அந்த பூமியில் அந்நோய் குடிகொண்டு எராளமாகத் தீங்குகளை விளைக்கின்றது.

3. வைசூரி மற்றெல்லாத் தொத்து வியாதிகளைக் காட்டிலும் கொடியது. அதி சீக்கிரத்தில் ...னேக மைல் தூரம் பரவும் தன்மை யுள்ளது. அந்நோய் கொண்ட வியாதியஸ்தர்களின் சேர்க்கை கூடாது. அவ...

---

*ஆயுர்வேத முறைப்படி இதற்கு "மஸூரிகா" எனப் பெயர்.

, உடுக்கும் வஸ்திரங்களி
ல் நடத்தப்படவேண்டுமென்று மீ, தேகத்தின்மேல் உண்டா
யில் தீர்மானிக்கப்பட்டது. கருகளிலும் அந்நோய்ப் பூச்சிகள்
டிகொண்டிருப்பதால் இவைகளின்
ஆயுர்வேத மஹா மற்றுமுள்ள ஜனங்களுக்கும் வைசூரி
றின் விதிகளில் றது. பெரியம்மையினுல் தேகத்திலுண்டா
காண்டுவோ புண்களில் அவ்விஷப்பூச்சி, குடிகொண்டிருப்ப
தாக எண்ணப்படுகிறது. ஜ்வரம் உண்டான நாள் முதல்
தேகத்தில் உண்டான புண்களெல்லாம் நன்ருய்க்
காய்ந்து முழுதும் உதிர்ந்துபோகும்வரை இந்நோய்
கொண்டவரிடமிருந்து மற்றவர்களுக்கு இந்நோய் பரவ
மார்க்கமுண்டு. இவர்களின் எச்சில், மலம் முதலியவை
களாலுங் கூட வியாதி பரவும்.

4. வைசூரி வருவதற்குமுன் கடுமையான ஜ்வரம், தலைநோய் கண், முக்கு எரிச்சல் முதலியவைகள் ஏற்படுகின்றன. சிறுகுழந்தைகள் விடாமல் வாந்தி செய்யும். ஜ்வரம் ஆரம்பித்த மூன்றும் நாள் நெற்றி, முகம், பிறகு கைகள், மார்பு, வயிறு முதலிய இடங்களில் தோலின் கீழ் கடினமான சிறு உருண்டைகள் விரலுக்குத் தென்படுகின்றன. இவைகள் இரண்டொரு நாட்களில் தேகமெங்கும் பரவுகின்றன. பிறகு இவைகள் நீர்க் கொப்புளங்களாகவும், அதன் பின் சீழ் கொப்புளங்களாகவும் மாறி பத்து நாட்களுள் மத்தியில் கறுப்பாகி உலர ஆரம்பிக்கின்றன. இவைகளெல்லாம் உதிர்ந்து, தேகம் சௌக்கியமடைய (வியாதின் ஆரம்பம் முதல்) சுமார் மூன்றுவாரங்கள் பிடிக்கும்.

5. வைசூரி கொண்டவர்களை நல்ல காற்றோட்டமும், வெளிச்சமும் உள்ள தனி அறையில் வைக்க வேண்டும், குளிர் காற்றடிக்கக்கூடாது. மேஜை, நாற்காலி, துணி மணிகள் இவையொன்றும் அவ்வறையிலிருக்கக் கூடாது; அம்மை குத்திக் கொண்ட ஒருவர் தவிர வேறு ஒருவரும் வியாதியஸ்தரின் ஸமீபத்திலிருக்கக்கூடாது. அத் துணி, படுக்கை மற்றவைகளை எல்லாம் தினந்தோறும் மாற்றி மருந்து ஜலத்தில் நனைத்து கொதிக்க வைத்த பிறகு உலர்த்தவேண்டும். வியாதியஸ்தருக்கு உபயோகப்படுத்தும் பாத்திரங்களைப் பிரத்தியேகமாக வைக்கவேண்டும். எவரும் எக்காரணம் பற்றியும் அவ்வறையை அண்டக்கூடாது.

6. மேற்கூறிய ஏற்பாடுகள் அவரவர் வீட்டில் செய்ய முடியாத விஷயத்தில் நோயாளியை தொற்றுவியாதி ஆஸ்பத்திரிக்குத் தாமதமில்லாமல் அனுப்பவேண்டும். அந்த ஆஸ்பத்திரிகளில் அவர்களை மிகவும் ஜாக்கிரதையாகக் கவனிப்பார்கள்.

7. எந்த வீட்டிலாவது வைசூரி கேஸ் இருந்தாலும் அல்லது வைசூரி யென்று ஸந்தேஹபடக்கூடிய ஜ்வரம் இருந்தாலும் அவ்விஷயத்தை ஸானிடரி **அதிகாரிக்கு தாமதமின்றி அறிவிக்கவேண்டியது அவசியம்.** அப்படிச் செய்யாமல் மறைத்துவைப்பது தவறு. அதனுல் அனேக தீங்கு விளையக்கூடும்.

8. வைசூரி உள்ள வீட்டுக்கு அண்டை வீட்டுக்காராவது பந்துமித்திரர்களாவது போகவே கூடாது. அந்நோயாளி முற்றிலும் சுகமடைந்து, அவ்வீடு தோஷஹர ஜலம் முதலியவைகளாலும், சுண்ணும்பு அடிப்பதாலும், நன்ருகச்சுத்தம் செய்யப்பட்ட பிறகு தான் அயலாரும், மற்றவர்களும் அவ்வீட்டுக்குப் போகலாம். அந்த வீட்டிலுள்ள மற்றவர்கள் குறைந்தது இரண்டுவாரம் வரையில் அக்கம் பக்கத்தாருடன் பழகாமலும் அவரவரின் தொழிலுக்குப் போகாமலுமிருப்பது அவசியம்.

9. நோயாளி சுகமடைந்தவுடன் ஹெல்த்ஆபீஸருக்கு அவ்விஷயத்தைத் தெரிவித்தால் அவர் உடனே வீட்டை சுத்தம் செய்ய ஏற்பாடு செய்வார். துணி வகையருக்களை நன்ருகச் சுத்தம் செய்து வெயிலில் உலர்த்தவேண்டும். நோயாளியிருந்த அறையை நன்ருகச் சுத்தப்படுத்தி இரண்டுநாள் வரை ஜன்னல்களைத்திறந்து வைத்து சூரிய வெளிச்சமும் காற்றும் ஏராளமாய் உள்ளே வரும்படி செய்யவேண்டும். பத்து அல்லது பதினைந்து நாள் வரை எண்ணெயுடன் யூகலிப்டஸ் அல்லது கார்பாலிக் தைலத்தை சில துளிகள் சேர்த்து, அந்த எண்ணெயை நோயாளி உடம்பெல்லாம் பூசி, சோப்பினுல் கழுவி, ஸ்நானம் செய்து வரவேண்டும். அப்படிச் செய்தால் தேகத்திலிருந்து புண்களின் பொறுக்குகளெல்லாம் நன்ருக உதிர்ந்து விடுவதுடன் தேகத்தில் கோரமான வடுக்களாவது தழும்புகளாவது ஏற்படாமலிருக்கும். நோயாளியின் எச்சல், மலம் முதலியன தோஷஹர ஜலத்துடன் சேர்க்கப்பட்டு பிறகு சாக்கடையில் கொட்டப்படவேண்டும். அவ்வீட்டிலுள்ள உபயோகமற்ற சாமான்களையும், பழந்துணிகளையும், குப்பை செத்தைகளையும் தாமதமின்றி அப்புறப்படுத்தி எரித்துவிடவேண்டும்.

10. இந்நோயைத் தடுக்கும் வழிகளுள் அம்மை குத்திக் கொள்வதுதான் மேலானது. நோயாளியின் அருகாமையிலிருப்பவர்கள் அந்நோய் அவர்களிடம் தொத்தாமலிருக்கும் பொருட்டு உடனே அம்மை குத்திக்கொள்ள



வேண்டும். மூன்று அல்லது நான்கு வருஷங்களுக்கு முன் அம்மை குத்திக்கொண்டவர்களும் வைசூரி வந்து பிழைத்தவர்களும் தவிர மற்றெல்லோரும் அம்மை குத்திக்கொள்வது அத்தியாவசியம். அம்மை ஊரில் பரவுவதற்கு முன்னமே எல்லோரும் அம்மை குத்திக்கொண்டால் அவ்வூரில் வைசூரியை அறவே ஒழித்துவிட முடியும். அம்மை குத்திக்கொள்வதால் வைசூரி உண்டாகிறது என்று சொல்வது தவறு. அம்மை குத்திக் கொண்டவர்களுக்கு வைசூரி வராது. வந்தாலும் இலகுவாய் சொஸ்தமாகிவிடும். அம்மை குத்திக்கொள்வது மிகவும் சுலபமான காரியம். அதனுல் நோயாவது, தீங்காவது ஒன்றும் நேராது. சிறு குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் பிரதிதினம் கார்பொரேஷன் அம்மை குத்தும் சாவடிகளில் அம்மைக் குத்தப்படும். இந்நோயைத் தடுப்பதின் பொருட்டு இரண்டாம் தடவை அம்மை குத்திக்கொள்ள இஷ்டப்படுகிறவர்கள் தங்கள் வீட்டிலேயே தங்களுக்கு அம்மை குத்தவேண்டுமென்னும் விருப்பத்தை ஹெல்த் ஆபீசருக்குத் தெரிவித்தால் அப்படி செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

---

# CHOLERA

## விஷபேசி அல்லது வாந்திபேதி

[சென்னை கார்பொரேஷன் ஹெல்தாபீஸர் அவர்களால் இந்நிரூபம் அனுப்பப்பட்டது.]

---

இது ஒருவித கிருமியை ஆகாரத்துடன் உட்கொள்வதால் உண்டாகும் ஒரு தொற்றுநோய். வேறு எந்த விதத்தாலும் இந்த நோய் உண்டாக மார்க்கமில்லை. தண்ணீர்போன்ற வாந்தியும், பேதியும் நிற்காவண்ணம் ஏற்படுகிறது. பிறகு மூத்திரம் போகாமல் நின்று, களைப்பு அதிகரிக்கும். உடம்பிலுள்ள தண்ணீரெல்லாம் வாந்தியாலும் பேதியாலும் வெளியாகி விடுவதால் நோயாளிக்கு அடங்காத் தாகமுண்டாகி, தேகமெல்லாம் உலர்ந்து, கண்கள் உள்ளே போய், தாடைகள் பள்ளமாகி, தொண்டையடைத்து, மேற்தோல் சுருங்கி, உடம்பெல்லாம் வியர்வை உண்டாகிறது. இரத்தத்திலுள்ள தண்ணீரும் குறைவதால், நாடி கைக்குப் புலப்படாமலும் மூத்திரம் உண்டாகாமலும் போய்விடும்.

வாந்தியும், பேதியும் அரிசி கொதிக்கும் தண்ணீர் போல் இருக்கும். உடனே சிகித்ஸை செய்யாவிடின் மரணம் ஏற்படுவது நிச்சயம்.

### காலராவை எப்படித் தடுப்பது?

ஆகாரத்தின்மேல் ஈக்கள் மொய்க்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஈக்களை அறவே ஒழியுங்கள்.

நன்ருய்க் கொதித்த தண்ணீரையும் புதிதாய் சமைத்த ஆகாரத்தையும் சாப்பிடுங்கள்.

வேகாத காய் கனிகளையும், அஜீர்ணத்தை உண்டாக்கக் கூடிய பதார்த்தங்களையும் சாப்பிடக்கூடாது.

பால் முதலிய ஆகாரங்களை நன்ருகக் கொதிக்க வைத்து, சமைத்து, ஈக்களால் அசுத்தப்படுத்த முடியாதபடி மூடிவைத்துச் சாப்பிடவேண்டும்.

கண்ட பதார்த்தங்களை யெல்லாம் தின்னக்கூடாது.

அஜீர்ணம் ஏற்பட்டால் உடனே தகுந்த மருந்து சாப்பிடவேண்டும்.

### "காலராவால்" பீடிக்கப்பட்டால் என்ன செய்வது?

முனிஸிபாலிடிக்கு, உடனே தெரிவியுங்கள்.

சென்னை கிருஷ்ணம்பேட்டையிலாவது, ராயபுரத்திலாவது உள்ள முனிஸிபாலிடி தொத்துநோய் ஆஸ்பத்திரிக்கு உடனே நோயாளியைக் கொண்டு சேருங்கள்.

அங்கே தகுந்த சிகித்ஸை செய்து நோயாளியை பார்த்துக் கொள்வார்கள்.

நோயாளியின் வாந்தி, பேதி முதலியவைகளை முனிஸிபாலிடியார் இலவசமாகக் கொடுக்கும் திராவகத்துடன் கலந்த பின் அப்புறப்படுத்துங்கள்.

நோயாளியின் துணிகளை கொதிக்கவைத்து திராவகத்தில் நனைத்து சுத்தப்படுத்துங்கள்.

நோயாளிகளை பத்திரமாகவும் ஸௌகரியமாகவும் தொத்துநோய் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோவதற்கென்றே ஏற்பட்ட முனிஸிபாலிடி மோட்டார் வண்டிக்கு (நம்பர் 342) டெலிபோன் செய்தால் இரவு பகல் எந்நேரத்திலும் உங்கள் வீட்டுக்கு உடனே அனுப்பப்படும்.

---

ஆர்யன் பார்மஸி, 48, வெள்ளாழத் தெரு, வேப்பேரி, மதராஸ் என்கிற விலாஸத்துக்கு எழுதி வரவழைத்து பெரிய அம்மையில் தேஹ தாபத்தைத் தணிக்கவும், பாதங்கள் கைகளிலுண்டாகும் அழற்சிகளைப் போக்கவும், அம்மை விரணங்களை ஆற்றவும் தௌதக்ருதம், ஆயுஷ்ய ரஸாயனம் இவற்றை உபயோகிக்கவும். ஆர்யன் பார்மஸியாரால் தயார் செய்யப்பட்டுள்ள "கனஸாரம்", "கனஸாரவடி" என்கிற இரண்டு ஔஷதங்களும் காலராவில் நல்லகுணம் தரக்கூடிய ஸஞ்ஜீவிகள். அவற்றைப்பற்றிய விவரங்களை விளம்பாப் பக்கத்தில் இச்சஞ்சிகையில் படித்துப் பார்க்க.

## Discharge from the Ear.

### காதில் சீழ் வடிதல்.

காதுகளில் சீழ்வடிதலுக்குசுதேச வைத்தியசாஸ்திரங்களில்சிகித்ஸா முறை காணப்படவில்லை யென்று டாக்டர் கோமன் சொல்லியிருந்ததற்குப்பதிலாக, ஒருபச்சிலையின் ரஸமானது கடுமையான எந்த நோயையும் நிவர்த்தி செய்து விடுகிறதென்று சென்ற 1921-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் நான் "ஹிந்து" ப்பத்திரிகைக்கு எழுதியிருந்தேன். இந்த மூலிகையின் பெயரை அறிவிக்க வேண்டுமென்று பல நண்பர்கள் எனக்கு எழுதியிருக்கின்றனர். இந்தப் பச்சிலையை ஒரு கனவான் எனக்குக் காட்டினர். அதனுடைய பெயர் அவருக்கே தெரியவில்லை. ஒரு பைராகி அதைத் தமக்குக் காட்டிக் கொடுத்ததாக அவர் தெரிவித்தார். ஆகவே இந்த மூலிகையின் பெயரை நான் எவருக்கும் அறிவிக்க முடியாமல் போயிற்று. இந்தப் பச்சிலையைச் செடியிலிருந்து பறித்த 10 நிமிஷங்களுக்குள் அதனுடைய உருவமே [illegible]ப்போய் விடுவதால் மாதிரி யிலையும் நான் அனுப்ப[illegible]வில்லை. சில தினங்கள் முன் மார்ச்சு மாதத்தில் [illegible]ளாகவரியான டைம்ஸ் ஆப் இந்தியா வாராந்தப் பத்திரிகை[illegible] ஒரு இதழின் 15-வது பக்கத்தில் இந்தப் பச்சிலை[illegible]ன் படத்தைக் கண்டேன். இதற்கு ஹெலியோ டிரோபிகம் இண்டிகம் என்று சாஸ்திர முறையில் சொல்லுகின்றனர். ஸாதாரணப் பெயர் போராகினே என்பதாகும். தாய்ப்பாஷையில் இது எந்தப் பெயருடன் வழங்குகிறதென்று அறிந்து கொள்ள நான் முயன்றும் பலிக்கவில்லை. பலர் பல பெயர்களைச் சொல்லுவதால் அதை வெளியிடவும் நான் துணியவில்லை. மிகவும் துளிராக இல்லாத 3, 4 இலைகளைக் குளிர்ந்த ஜலத்தில் சுத்தம் செய்யவேண்டும். பிறகு அந்த இலையைக் கசக்கி சாறைப் பிழிய வேண்டும். உலோஹ ஸம்பந்த மில்லாத பாத்திரத்தில், அதாவது கண்ணாடித் தமிழரில் ரஸத்தைப், பிழிந்து கோளாறுள்ள காதில் சில துளிகளை விட்டு பஞ்சால் காதை அடைத்து விடவேண்டும். சீழ் வருவது நிற்கும்வரை தின மிருமுறை இந்த ரஸத்தைக் காதில் விட்டுவரவேண்டும். நூற்றுக் கணக்கானவர்களுக்கு இது நல்ல பலனைக் கொடுத்திருப்பதை நான் பிரத்தியக்ஷத்தில் பார்த்திருக்கிறேன்.

மணற்பாங்கான பூமிகளில் இந்தச் செடி ஏராளமாகக் கிடைக்கும். செடியிலிருந்து பறித்த இலையை அதிக நேரம் வைத்திருக்கக் கூடாது. சென்னையில் மைலாப்பூர் மூலை வீட்டுப் பக்கங்களில் மழை ஜலம் ஓடும் வடிகாலிலும், எழும்பூர் கெங்குரெட்டித் தெரு முனையிலும், ராயப்பேட்டை மோஹன விலாஸ் தோட்டத்திலும், எலியட்ஸ் ரஸ்தாவிலும் இந்தச் செடி அகப்படும். நான் டாக்டரன்று. இந்த இலையின் சாற்றை வேறு காது ரோகங்களுக்கு உபயோகிக்கலாமா வென்று சிலர் கேட்கின்றனர். எனக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாது. மாதிரி இலை அனுப்பாமல் நான் வீண் வேஷம் போடுவதாகச் சில மேனாட்டு முறை பயின்ற வைத்தியர்கள் எனக்கு எழுதி வரும் கடிதங்களை நான் லக்ஷியம் செய்யப் போவதில்லை என்று நெல்லூர் வக்கீல் ஸ்ரீமான் அண்ணாசாமி அய்யர் எழுதுகிறார்.

ஹிந்து பத்திரிகையில் இங்ஙனம் வெளியிடப்படுகிறது :

### இதற்கோர் வைத்தியரது விடை.

நெல்லூர் வக்கீல் ஸ்ரீமான் அண்ணாசாமி ஐயர் காதுவலிகளுக்கு ஒரு மூலிகையின் உபயோகத்தைப்பற்றி பத்திரிகைகளில் முற்கூறிய வாறு, வெளியிட்டிருந்த நிரூபத்தைப் படித்துப் பார்த்தேன்; அவ்வக்கீல் குறிப்பிடும் பச்சிலை காது வலிக்கு மிகவும் உபயோகமான ஔஷதச்சரக்கு. சீழ் வடிதலுக்குக் காரணமான கிருமிகளைக் கொல்லுவதில் இப் பச்சிலைச் சாற்றுக்கு விசேஷ சக்தியுண்டு. நானே அநேக ரோகிகளுக்குப் பிரயோகித்து நல்லகுணம் கண்டிருக்கிறேன், என்னிடம் வருபவருக்கு இப் பச்சிலையைக் காட்டவும் முடியும். அநேகம் சாலை யோரங்களிலும் இம் மூலிகை முளைத்திருப்பதைப் பார்க்கலாம். ஒரு தடவைப் பார்த்தாலே அதை மறுபடி அடையாளம் கண்டுபிடிப்பது சுலபமாயிருக்கும். வருஷாந்தரச் செடிகளில் இதுவுமொன்று, இதில் இருவகையுண்டு; ஒன்று பூமி மட்டத்துக்குப் படர்ந்திருக்கும் ; அதற்குத் தெலுங்கில் "நேலகுருகு" எனப் பெயர். மற்றொன்று ஒன்று முதல் இரண்டு அடி உயரமளவும் வளரும். இதன் செவி ஒருவாறு சிறிய வெளுத்த புஷ்பமுள்ளதாயிருக்கும் ; அது தேளின் கொடுக்கு போன்று வளைந்து நிற்கும். பொது ஜனங்களுடைய நன்மைக்காக இம் மூலிகைக்கு தேச பாஷையிலுள்ள பெயர்களையும் இதன் கீழ்குறிப்பிடுகிறேன் :—

[ஸம்ஸ்க்ருதப் பெயர் :— ஹஸ்திசுண்டீ, தெலுங்கு :— கொருகு அல்லது தேலு மணி. தமிழ் :—தேள் கொடுக்குப் பூண்டு. Botanical name :—Heliotropcum Indicum. English—Turn Sole, Scorpiontail.]

கே. என். தேஸிரி, ஆயுர்வேத வைத்தியர்.

## 33. பிரமேஹ பிரமேஹ பிடகா நிதாநம்.

### பிரமேஹங்கள்.

பிரமேஹ நிதாநம் :—உட்கார்ந்தவாறு சுகமனுபவித்தல், மிதமிஞ்சி தூங்குதல், தயிர், அருவருக்கத்தக்க ஈன மிருகங்கள் ஆநூபப் பிரதேசங்களிலுண்டாகும் மிருகம் இவற்றின் மாம்ஸ ரஸங்கள், பால், புதிதான தானியங்களாலாகிய அன்னபானங்கள், வெல்லம் சேர்த்து, செய்த தின்பண்டங்கள்[1] ஆகிய இவ்வித உணவுகளை யுண்பதும், மற்றும் கபத்தை விருத்தி செய்யக்கூடிய ஸகல பதார்த்தங்களும் செய்கைகளும்[2] பிரமேஹத்*திற்குக் காரணமாகின்றன. 1.

பிரமேஹ ஸம்ப்ராப்தி :— (1) வஸ்தியைப் பற்றிய கபதோஷமானது மேதஸ் என்னும் கொழுப்பு, மாம்ஸம், சரீரத்திலுண்டாகும் மற்றும் கசிவுப்பொருள் இவற்றை மிகவும் தூஷிப்பிருவ்ா மேஹரோகங்களை யுண்டுபண்ணுகிறது. (2) ப...சத்திலும் வீர்யத்திலும் உஷ்ணமாயுள்ள பதார்த்தாதிகளால் மிகப் பிரகோபித்த பித்[illegible] தோஷம் மேதஸ் முதலிய தாதுக்களையே மி[illegible]வும் தூஷிப்பித்து பித்த ஸம்பந்தமான பி[illegible]மேஹங்களை யுண்டு பண்ணுகின்றது. (3) பித்[illegible] கபங்கள் க்ஷீணித்திருக்கையில்[3] தாதுக்களை[4] வஸ்தி மூலத்திற்கு ஆகர்ஷித்து அவற்றைத் தூஷிக்கச்செய்து வாததோஷம் மேஹரோகங்களை யுண்டு பண்ணுகிறது. 2, $2\frac{1}{2}$.

பொதுவான ஸாத்யாஸாத்ய பிரமேஹங்களும் அவற்றின் ஸங்க்யாஸம்ப்ராப்தியும்.—(1) கபதோஷக் கோளாறால் உண்டாகிறபிரமேஹம் பத்து. அவை ஸமக்ரியையால்[5] சிகித்ஸிக்கக்கூடியவையாகையால், ஸாத்ய ரோகங்களாம். (2) பித்ததோஷத்தினால் உண்டாகும் பிரமேஹங்கள் ஆறு; அவை விஷமக்ரியையால்[6] சிகித்ஸிக்கக்கூடியவையாகையால் யாப்யங்கள். (3) வாததோஷக்கோளாறால் உண்டாகும் பிரமேஹங்கள் மிகவும் அபாயகரமானவையாகை

---

* பிரமேஹம்—மூத்திரம் மிதமிஞ்சி அல்லது கோளாறடைந்து எந்த வியாதியில் வெளியாகிறதோ அது "பிரமேஹம்" எனப்படுகிறது. பிரமேஹரோகத்தில் ஸம்பவிக்கும் உபத்திரவ ரூபமான கட்டிகள் "பிரமேஹ பிடகைகள்" எனப்படுகின்றன.

1. சர்க்கரை, கற்கண்டு, வெல்லம் முதலியவைகளும், இவற்றைச் சேர்த்து செய்யப்படும் தின்பண்டங்களும் இதனால் குறிக்கப்படுகின்றன.

2. பிரமேஹத்தில் முக்கியமாய் கபதோஷமே கோளாறடைவதாய் இதனால் அறிக.

3. பித்தமும் கபமும் முதலில் பிரகோபித்திருந்து திடீரென அவை குறைவடையும் நிலைமை "க்ஷீணித்தல்" என்பதால் இங்கே குறிப்பிடப்படுகிறதேயன்றி, இயற்கை நிலைமையிலிருந்து க்ஷீணித்தல் என்று கருதக் கூடாது.

4. வஸை, மஜ்ஜை, ஓஜஸ், லஸீகை யென்னும் நிணநீர் என்பவை 'தாதுக்கள்' என்பதால் இங்கே குறிக்கப்படுகின்றன.

5. ஸமக்ரியை யென்றால் ஸமசிகித்ஸை யெனப் பொருள்; அதாவது வாதாதி தோஷங்களுக்கும் இரஸாதிதாதுக்களுக்கும் ஒன்றோடொன்று வித்தியாஸப் படாமல் ஒரு சீராகச் செய்யப்படும் சிகித்ஸை. உதாரணமாக கபஸம்பந்தமான பிரமேஹங்களில் கபதோஷமும், மேதஸ் லஸீகை முதலிய தாதுக்களும் குணத்தில் ஒரே சீரானவை; ஆகவே இவற்றில் தோஷத்திற்கும் தாதுக்களுக்கும் காரம் கைப்பு ஆகிய சுவை முதலியவை குணத்தில் எதிரிடையானவை; அவ்விதம் எதிரிடையான குணமுள்ள ஔஷதாதிகளால் கபத்தினுடையவும் மேதஸ்முதலிய தாதுக்களுடையவும் கோளாறுகளை ஒருமிக்க நிவர்த்தி செய்யலாம். தோஷதாதுக்கள் இரண்டுக்கும் சிகித்ஸை இங்கு இவ்விதம் ஸமானமாயிருப்பதால் இந்த சிகித்ஸை "ஸமக்ரியை" எனப்படும். ஒரு வியாதியில் தோஷங்களும் தூஷ்யங்களும் (தாதுக்கள்) குணத்தில் ஒரே வகையாயிருந்தால் அந்த வியாதி கஷ்டஸாத்யம் அல்லது அஸாத்யமாகும். "ந ச துல்யகுணோ தூஷ்ய:' என்கிற விஷயம் ஸாமாந்ய விதியாம். ஜ்வரத்தில் தோஷதாதுக்கள் ஸமானமாகவும், பிரமேஹத்தில் தூஷ்யம் துல்ய மாகவும், இரத்த குல்மம் நாட்பட்டதாகவும் இருந்தால் "ஸுகஸாத்யம்" என்று விசேஷ விதியொன்று கூறப்படுகிறது. இதரரோகங்களில் இந்நிலைமைகள் அஸாத்யமானவை யென்றறிக.

6. விஷமக்ரியை யென்றால் விஷம சிகித்ஸை யெனப் பொருள். பிரமேஹத்தில் பிரதான தூஷ்யங்களான மேதஸ் முதலியதற்கும் பித்தத்திற்கும் குணங்களில் வித்தியாஸமிருப்பதால், சிகித்ஸை செய்வது இதில் கடினம். ஏனெனில் பித்தஹரமான மதுராதி சுவையுள்ள பதார்த்தங்கள் மேதஸ் முதலிய தாதுக்களை விருத்தி செய்பவை; மேதோஹரமான கடுரஸாதிகள் பித்தத்தை விருத்தி செய்கின்றன. ஆகவே பித்தப்பிரமேஹத்தில் விஷமசிகித்ஸை செய்யவேண்டி யிருப்பதால் யாப்யங்கள் எனப்படுகிறது.

பால்[1] அஸாத்யங்களாகும். ஆக பிரமேஹங்கள் இருபது விதங்களாகும். 3. 3½.

ஸர்வ மேஹங்களுடையவும் தோஷ-தூஷ்ய ஸங்கிரஹம் :—பிரமேஹங்களில் கோளாறடைந்து அவ்வியாதியை யுண்டுபண்ணுபவை கபம், பித்தம், வாயு இத்தோஷங்களும், மேதஸ் என்னும் கொழுப்பு, இரத்தம், சுக்ரம், இரஸம், வஸா, [2] லஸீகையென்னும் நிணநீர்[3], மஜ்ஜை, ஓஜஸ்[4], மாம்ஸம் ஆகிய தாதுக்களுமேயாம். 4.

பிரமேஹ பூர்வரூபம் :—பிரமேஹம் உண்டாவதற்கு முன்பு பற்கள் முதலியவை[5] மிகவும் அழுக்கடைதல்[6], உள்ளங்கை பாதங்கள் இவற்றில் அழற்சி, தேஹம் பிசுபிசுப்பு கொள்ளல், நாவறட்சி[7], வாய் மதுரமாதல் ஆகிய குறிகள் தோன்றும். 5.

பிரமேஹத்தின் பொதுலக்ஷணம் :—பிரமேஹரோகங்களில் மூத்திரமானது மிகவும் அளவில் அதிகமாகவும், கலங்கியதாகவும் [8] இருப்பது பொது லக்ஷணமாம். 5½.

பிரமேஹ பேதங்களைப்பற்றிய விஷயம் :—தோஷங்களிலும் தாதுக்களிலும் விசேஷ மில்லாமலிருப்பினும், அத் தோஷ தூஷ்யங்களுடைய சேர்க்கைகளின் விசேஷங்களால் மூத்திரத்திற்கு நிறம் முதலியவற்றில் பேதங்கள் ஏற்படுகின்றன ;[9] அந்த பேதங்களைக்கொண்டு மேஹங்களிலும் பேதங்கள் கூறப்படுகின்றன. 6½.

1. வாத தோஷம் மஜ்ஜை முதலிய வெகு ஆழமான தாது முதலியவைகளை ஆகர்ஷித்துக் கோளாறடையச் செய்வதால், வாதப்பிரமேஹம் விசேஷ ஆபத்தை விளைவிப்பதென்று கருதி இங்ஙனம் கூறப்படுகிறது. மேலும் வாதப் பிரமேஹம் மற்றப் பிரமேஹங்களைவிட பிணியாளியை சீக்கிரத்தில் கெடுத்துப்போடும் தன்மையது; இதில் சிகித்ஸையும் விஷமக்கிரியையைச் சேர்ந்தது. இத்யாதி காரணங்களால் இவ்வியாதி "மிகவும் அபாயகரமானது" என்று கூறப்படுவதாய் அறிக.

2. வஸா — மாம்ஸ நீர்; தேஹம் முழுவதும் வியாபித்துள்ள ஒருவித ஸ்நேஹம் என்று சிலர்.

3. லஸீகை—"யத்து மாம்ஸத்வசந்தரே உதகம் தல்லஸீகா சப்தம் லபதே"—மாம்ஸத்துக்கும் அதற்கு ஆவரணமாயுள்ள சர்மத்துக்கும் இடையிலுள்ள நீர்ப்பொருள் 'லஸீகை' எனப்படுகிறது என்று சரகர்.

4. ஓஜஸ்—சிலேஷ்ம ரூபமான ஒருவித தாது. சரீரத்தில் ஸர்வதாதுக்களுடையவும் ஸத்துவரூபமாய் ஜீவாதாரமாக வியாபித்துள்ள வஸ்து. இதன் சராசரி அளவு அரை அஞ்ஜலி (4பலம்) என்று கூறப்படுகிறது. பொதுவாக மேஹரோகங்களில் மூன்று தோஷங்களும், மேதஸ் முதலிய தாதுக்களும் ஓஜோ தாதுவும் விகாரமடைவதாக அல்லது அழிவதாகக் கூறப்படுகிறதாயினும், மதுமேஹத்திலேயே முக்கியமாய் ஓஜோ தாதுவும், த்ரிதோஷங்களும் விசேஷமாகக் கோளாறடைகின்றன.

5. 'பற்கள் முதலிய' என்பதால் நேத்திரம், தவடைகள், செவிகள் முதலியவற்றிலும் விசேஷமாக மலம் சேரும் என்பது குறிக்கப்படுகிறது. "ஜிஹ்வாதந்தேஷு மலோத்பத்தி:" என்று ஸுச்ருதர்.

6. மேதோ தோஷத்தினால் உடல் தந்ரானக கிறது.

7. கபமும் மேதஸ்ஸும் கோளாறடைந்து தேஹத்திற் பிசுபிசுப்பை யுண்டாக்குகின்றன.

8. இந்த ரோகத்தில் கோளாறடையும் தாது மிகுதியானதால் மூத்திரம் அளவில் அதிகப்படுகிறது. கலக்கமாயிருப்பதற்குக் காரணம் தோஷதாதுக்களுடைய பலவகைச் சேர்க்கையேயாம்.

9. சிலேஷ்மமேஹம் முதலியவற்றில் ஒவ்வொன்றிலும் நிறம் முதலியவற்றால் பலவேறு பேதங்கள் ஏற்படுகின்றன ; ஆகவே ஒவ்வொரு தோஷத்தினால் அல்லது தாதுவினால் உண்டாகும் மேஹத்திலும் பலபேதங்கள் தோன்றுகின்றன; இதற்குக் காரணம் ஒவ்வொன்றிலும் இதர தோஷாதிகள் வெகு ஸூக்ஷ்மாம்சமாகக் கலந்திருப்பதே யென்று கருதப்படுகிறது. "ஐந்து தனித்தனி வர்ணங்கள் ஏற்றக்குறைவான அளவில் ஒன்றோடொன்று சேருவதால் கபிலம் முதலிய வேறுவகையான நிறங்கள் உண்டாவதுபோல, தோஷாதிகளின் அன்யோன்ய சேர்க்கைகளால் ஒவ்வொரு தோஷஸம்பந்தமான மேஹத்திலும் பலவேறு பேதங்கள் ஸம்பவிக்கின்றன" என்று ஸுச்ருதர்.



சிலேஷ்மமேஹங்கள்[1]:—(1) உதகமேஹம் : இதில் மூத்திரமானது தெளிவாகவும், அளவில் அதிகமாகவும், குளிர்ச்சியாகவும், எவ்வித நாற்றமில்லாததாகவும், ஆகவே தண்ணீர் போன்றதாயும், சில ஸமயம் சிறிது கலக்கமாகவும், சொற்பம் பிசுபிசுப்பாகவும் இறங்கும். (2) இக்ஷுமேஹம் : இதில் கருப்பஞ்சாறு போன்று மூத்திரம் மிகவும் இனிப்பாயிருக்கும். (3) ஸாந்த்ரமேஹம் : இதில் மூத்திரமானது பழகப்பழக ஒருவாறு இறுகிக்கொள்ளும். (4) ஸுராமேஹம் : இந்த வியாதியில் இறங்கும் மூத்திரம் ஸுரையென்னும் மத்யத்தைப் போன்றதாய் மேலே தெளிவாகவும், அடிப்புறத்தில் கனமாகவும் இருக்கும். (5) பிஷ்டமேஹம்: இதில் மூத்திரம் நீரில் மாகரைத்தாற் போன்ற இலக்ஷணத்துடன் வெளியாகும்: மூத்திரம் வெளியாகையில் பிணியாளிக்கு ஒருவாறு மயிர்ச்சிலிர்க்கை யுண்டாகும் : மூத்திரம் அளவிலும் அதிகமாயிருக்கும். (6) சுக்ர மேஹம்— இதில் பிணியாளி வெளியிடும்மூத்திரம் சுக்ர தாதுவைப் போன்றதாகவாவது, சுக்ரம் கலந்தாவது வெளியாகும். (7) ஸிகதாமேஹம்: இதில் கடினமாகவும் மிக ஸூக்ஷ்மமாகவுமுள்ள சிறு மணல்களைப்போன்ற அழுக்குகள் மூத்திரத்துடன் வெளியாகும். (8) சீதமேஹம் : இதில் மூத்திரம் அதிக அளவாகவும், இனிப்புள்ளதாகவும் மிகவும் குளிர்ச்சியுள்ளதாகவும் இருக்கும். (9) சனைர்மேஹம்: இந்த ரோகத்தில் மூத்திரம் சொற்பமாகவும் அடிக்கடி மெதுவாகவும் வெளியாகும். (10) லாலாமேஹம் : இதில் மூத்திரம் குழந்தைகளுடைய சொள்ளுநீர்போல நூல் நூலாகவும் பசையுள்ளதாகவும் இருக்கும்[2] 7—12.

பித்த மேஹங்கள் :—(1) க்ஷார மேஹம் : இந்த மேஹத்தில் சிறு நீரானது வாஸனை-நிறம்-சுவை-பரிசம் அனைத்திலும் க்ஷாரத்திற்குச் சமானமாய் வெளியாகும். (2) நீலமேஹம் : சிறுநீர் இந்த மேஹத்தில் நீலநிறமாயிருக்கும் [3] (3) அஞ்ஜனத்தைப்போல் கறுநிறமாயிருந்தால் காலமேஹம் எனக் கூறப்படுகிறது[4]. (4) கடுரஸமுள்ளதும், அழற்சியுண்டு பண்ணுவதும்,[5] மஞ்சள் நிறமுமான மூத்திரம் வெளிவருமானால் அது ஹாரித்ர மேஹம் எனப்படும். (5) மஞ்ஜிட்டி யென்னும் சரக்கு கலந்த தண்ணீரைப் போன்றதும், ஒருவித துர் நாற்றமுள்ளதுமாய் மூத்திரம் வெளியாகுமானால் அது மாஞ்ஜிஷ்ட மேஹம் எனப்படுகி

1. கபத்திற்கு வெண்மை, சீதளம், கடினத்தன்மை, பிசுபிசுப்பு, நிர்மலத்தன்மை, ஸ்நிக்தத்தன்மை, குருத்வம், இனிப்பு, இறுகுதல், மந்தத்தன்மை ஆகிய இக்குணங்கள் உண்டு. கபஸம்பந்தமான பத்துவித மேஹங்களில் இவற்றுள் சில குணங்கள் சில மேஹங்களிலும் காணும். அவ்விஷயம் பிறகு ஒவ்வொரு கபமேஹ விவரணத்திலும் குறிக்கப்படும். சிலர் கபத்திற்குக்கூறிய பத்து குணங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மேஹத்தை யுண்டுபண்ணும் என்கின்றனர். ஆனால் சிற்சில குணங்களின் சேர்க்கையினாலேயே இவை யுண்டாகின்றன வென்பது பலரது கொள்கை. அதாவது:—(1) வெண்மை, நிர்மலத்வம், குளிர்ச்சி இவற்றால் உதகமேஹம், (2) மதுரம், சீதளம் இவற்றால் இக்ஷுமேஹம். (3) இறுகுந்தன்மை, பிசுபிசுப்பு இவற்றால் ஸாந்த்ரமேஹம். (4) நிர்மலத்தன்மை, ஸூக்ஷ்மமான பித்தாம்சக் கலப்பு இவற்றால் ஸுராமேஹம். (5) வெண்மையினால் பிஷ்டமேஹம். (6) வெண்மை ஸ்நிக்தத்தன்மை இவற்றால் சுக்ரமேஹம். (7) இறுகுந்தன்மை, கடினத்தன்மை, இவற்றால் ஸிகதாமேஹம். (8) குருத்வம், இனிப்பு குளிர்ச்சி இவற்றால் சீதமேஹம். (9) மந்தத்தன்மை, கடினத்தன்மை இவற்றால் சனைர்மேஹம். (10) பிசுபிசுப்புத் தன்மையினால் லாலா மேஹம்.

2. சரக ஸம்ஹிதையில் ஸுராமேஹம் காணப்படவில்லை; ஆனால் அந்த ஸ்தானத்தில் ஸாந்த்ரப்ரஸாத மேஹம் கூறப்படுகிறது. சரகரும் மாதவகரனும் கூறுகிற சீதமேஹ லாலா மேஹங்களுக்குப் பதிலாக முறையே பேநமேஹமும் இலவணமேஹமும் ஸுச்ருதரால் மொழியப்படுகின்றன.

3. நீலம்—தெளிவான ஆகாய நிறம், அல்லது காடை யிறகின் நிறம் போன்ற நிறம்.

4. காலம்—மையைப்போல் மங்கலான கறுப்பு.

5. மூத்திரமே இந்த வியாதியில் அழற்சியுண்டுபண்ணும் தன்மையதென்று சிலர். இவ்வியாதியில் பிணியாளி சுயம் தேஹத்தில் அழற்சி மேலிட்டவனாயிருப்பனென்று பொருள்படுமாறு "தஹந்" என்கிற பாடமுண்டென்று வேறு சிலர்.

றது. (6) சிறுநீர் ஒருவித சவர் நாற்றமும், உஷ்ணமும், உப்புச்சுவையும், இரக்தநிறமு முள்ளதாயிருந்தால் அதை இரக்த மேஹம் எனக்கூறுவர். 13—14½.

வாதமேஹங்கள்:[1]—(1) வஸாமேஹம்: இந்த ரோகமுள்ளவனுக்கு சிறுநீரானது வஸையென்னும் கொழுப்பு நீரோடு கலந்தாவது, அல்லது வஸையாகவேவாவது அடிக்கடியும் வெளியாகும். (2) மஜ்ஜமேஹம் என்கிற மூத்திர ரோகமுள்ளவன் மஜ்ஜையென்னும் தாதுவைப்போன்ற அல்லது மஜ்ஜையோடு கூடிய நீரை அடிக்கடியும் வெளியிடுவான். (3) மூத்திரமானது சிறிது துவர்ப்பும் இனிப்புமாய் ரூக்ஷ குணமும் உள்ளதாயிருந்தால் அதை க்ஷௌத்ரமேஹம் என்பர். (4) மதங்கொண்ட யானையைப்போல எப்பொழுதும் நிணநீரோடு கூடியதாய் அதிக வேகமில்லாமல் மூத்திரத்தை வெளியிடுவானானால் அது ஹஸ்திமேஹம் எனப்படுகிறது; ஆனால் இடையிடையே இதில் மூத்திரம் தடுக்கப்பட்டது போல் தாரையாயில்லாமல் வெளியாகும். 15—17.

கபமேஹங்களில் உபத்திரவங்கள்:—உணவு ஜீர்ணமாகாமை, அரோசகம், வாந்தி, நித்திரை அதிகரித்தல், பீநஸத்துடன் கூடிய காஸம்[2] ஆகிய இவை கபத்தினாலுண்டான மேஹங்களில் உபத்திரவங்களாகத் தோன்றும். 18.

பித்தமேஹங்களில் உபத்திரவங்கள்:—மூத்திரவஸ்தியிலும் ஆண்குறியிலும் குத்தல், பீஜம் வெடித்தல், ஜ்வரம், உடலழற்சி, நாவறட்சி, புளித்தேகக் கெரிவு, மூர்ச்சை, பேதி ஆகிய இவை பித்தத்தினாலான மேஹங்களில் உபத்திரவங்களாம். 19.

வாதமேஹங்களில் உபத்திரவங்கள்:—உதாவர்த்தம், உடல்நடுக்கம், இருதயத்துபுடிப்பு, நிற்க முடியாமை, வயிற்றுவலி, நித்திரையின்மை, க்ஷயம், இருமல்,[3] ச்வாஸம் ஆகிய இவை வாதமேஹங்களில் உபத்திரவங்களாகத்தோன்றும். 20.

மேஹங்களில் அஸாத்ய நிலைமை:—முற்கூறிய உபத்திரவங்கள்,[4] அரிஷ்டங்கள்[5] இவற்றுடன் கூடியதும், அமித மூத்திரப்பெருக்கையும் நீர்த்துப்போன தாதுக்களையும் பெற்றிருப்பதும், பிடகைகளென்னும் கட்டிகளால் பீடிக்கப்படுவதும்[6], அதிக நீடித்திருப்பதுமான பிரமேஹம் அஸாத்ய நிலைமையை யடைந்து மனிதனைக் கொன்றுவிடும். மேலும் பிறவி முதற்கொண்டே பிரமேஹரோகத்துடன்கூடியவன் அல்லது மதுமேஹ ரோகிக்குப் பிறந்தவன் அவ்வியாதியிலிருந்து நிவ்ருத்தியடைய மாட்டான்.[7] அங்ஙனமே பீஜதோஷத்தினால் குலக்கிரமமாக வரும் வேறு எந்த வியாதிகளுமே அஸாத்யங்கள் எனக்கூறப்படுகின்றன. 21,22.

---

1. வாதமேஹங்கள் நான்கும் முறையே வஸை, மஜ்ஜை, ஓஜஸ், லஸீகா என்கிற தாதுக்கள் கோளாறடைந்து உண்டாகின்றன.

2. கப ஸம்பந்தமான உபத்திரவத்தில் உண்டாகும் காஸம் சிலேஷ்மத்துடன் கூடியது.

3. வாதஸம்பந்தமான உபத்திரவத்தில் உண்டாகும் காஸம் வறண்ட இருமலாயிருக்கும்.

4. முற்கூறிய உபத்திரவங்கள்—கபமேஹாதிகளுக்குக் கூறிய உபத்திரவங்கள்.

5. அரிஷ்டம்—மரணம் உண்டாவதை முன்னதாகக் குறிப்பிடுவதான சகுனம், ஸ்வப்னம் அல்லது லக்ஷணம்.

6. பிடகைகள் பிரமேஹோபத்திரவத்தில் அடங்கியவை. "நாவறட்சி, அதிஸாரம், ஜ்வரம், அழற்சி, துர்ப்பலம், அரோசகம், அஜீர்ணம், மாம்ஸம் துர்நாற்றங்கொள்ளல், பிடகை, அலஜீ, வித்ரதி இவை பிரமேஹங்களின் உபத்திரவங்கள்" என்று சரகர் கூறுகிறார். ஆகவே பிடகையைப் பிரத்தியேகமாய் இங்கு அஸாத்ய லக்ஷணங்களில் ஒன்றாகக் குறிப்பிடுவதேன்? என்றால்—"விநா ப்ரமேஹமப்யேதா ஜாயந்தே துஷ்ட மேதஸ:"—இப்பிடகைகள் பிரமேஹ மில்லாமலே மேதஸ் விகாரமடைந்தவனுக்குக் காண்பதுண்டு—என்கிற சரகது வசனத்தின்படி இவை தனியாகவும் உண்டாகின்றனவென்பதைக் கருதி இங்ஙனம் கூறப்பட்டது.

7. கப மேஹங்களும் பித்த மேஹங்களும் பூர்வ ரூபக் குறிகளை முற்றிலும் பெற்றிருந்தால் அவையும் அஸாத்யங்கள் என்று சரகர் கூறுகிறார்.



மதுமேஹம்:—எல்லாப் பிரமேஹங்களும்[1] தகுந்த பரிஹாரமின்மையினால் காலக்கிரமத்தில் மதுமேஹமாக மாறிப்போய், அப்பால் அஸாத்யத் தன்மையையும் பெறும். மூத்திரமானது மதுமேஹத்தில் தேன் போன்றதாய் விடும்; அம் மதுமேஹம் இரண்டு விதம்: அவற்றுள் ஒன்று (1) தாதுக்கள் க்ஷீணிப்பதால் வாயு பிரகோபமடைந்து ஸம்பவிக்கின்றது; மற்றொன்று (2) இதர தோஷங்களால் வாதத்தின் மார்க்கம் தடையுற அதனால் வாயு பிரகோபித்து ஸம்பவிக்கின்றது; இவ்விரண்டில் ஏதேனும் ஒரு காரணத்தினால் மதுமேஹம் உண்டாகலாம்.[2] இதரதோஷங்களால் வாயுவானது ஆவரணம் செய்யப்பட்டதாய் திடீரென்று அவ்விதர தோஷங்களின் குறிகளை வெளிப்படுத்திக் கொண்டு, ஒரு க்ஷணத்தில் க்ஷீணித்திருப்பதாகவும், அடுத்த க்ஷணத்தில் பூர்ணமாயிருப்பதாகவும் தோன்றும். இந்த நிலைமை க்ருச்சிரஸாத்ய மென படுகிறது. மேஹங்களில் சிறுநீர் பெரு பாலும் தேனைப்போல் இனிப்பாகப் பே ருப்பதாலும், உடல் முடியவும் ஒருவா இனிய சுவையேற்படுவதாலும் அவ்வியா 'மதுமேஹம்' எனக்கூறப்படுகிறது. 23—26.

## பிரமேஹ பிடகைகள்.

பத்துவித பிரமேஹ பிடகைகள்:—பிரமேஹங்களுக்கு அவசியமான சிகித்ஸை செய்ய மல் உபேக்ஷித்து வந்தால் ஸந்திகளின் மர்மஸ்தானங்களிலும் சதை பருத்த விடங்களிலு சராவிகா, கச்சபிகா, ஜாலினீ, விநதா, அலஜ மஸூரிகா, ஸர்ஷபிகா, புத்ரிணீ, விதாரிகா வித்ரதி என்று பத்துவித பிடகைகள் என்னு பிளவைகள் உண்டாகின்றன.[3] 27,28.

---

1. மதுமேஹத்தில் வாததோஷம் பிரபலமாயிருக்கும். ஆனால் பித்த கபமேஹங்களும் வாதமேஹத்தைப் போல காலக்கிரமத்தில் மதுமேஹமாக மாறுமென்பது "எல்லாப் பிரமேஹங்களும்" என்பதன் கருத்து.

2. தேஹத்தில் தாதுக்கள் க்ஷீணித்து வந்தால், வாததோஷம் பிரகோபிப்பது இயல்பு. வாததோஷம் தேஹத்தில் ஸஞ்சரிக்கும் மார்க்கங்கள் வேறு தோஷம் முதலியவற்றால் மறைக்கப்படுமானால் அல்லது அடைக்கப்படுமானால் அப்பொழுதும் வாதம் பிரகோபமடையும். இதே விஷயம் 'வாயோர் தாதுக்ஷயாத் கோபோ மார்கஸ்யாவரணேந ச' என்கிற பிரமாணத்தினால் விளங்கக்குறிப்பிடப்படுகிறது. மதுமேஹம் ஆவரணமுள்ள வாதத்தினாலுண்டாவதாகவே கதாதரன் என்பவர் அபிப்பிராயப்படுகிறார். "இதர தோஷாதிகளால் ஆவரணம் செய்யப்பட்ட வாயுவானது ஜீவாதாரமான ஓஜோ தாதுவைக் கிரஹித்து வஸ்தியை யடைய, அப்பொழுது க்ருச்சிரஸாத்யமான மதுமேஹம் உண்டாகிறது" (தைராவ்ருதகதிர் வாயுரோஜ ஆதாய தச்சதி. யதா வஸ்திம் ததா க்ருச்சிரோ மதுமேஹ: ப்ரவர்த்ததே) என்று சரகரும் கூறுகிறார். அதியோகமான வமந விரேசநாதிகளால் உண்டான தாது க்ஷயத்திலிருந்து ஸம்பவிக்கும் பிரமேஹ வியாதிகளில் வாத தோஷத்திற்கு ஆவரணம் இல்லையென்று இதனால் அறியவும்.

3. இங்கே பத்துவித பிடகைகள் கூறப்படுகின்றன. ஆனால் போஜன் என்பவர் கூறுவதில் சில பெயர் முதலியவை மாறுபாடாயிருப்பதுடன் 'விநதா' என்கிற பிடகையும் அவரால் குறிப்பிடப்படவில்லை. ஆகவே அ ரது கொள்கைப்படி பிரமேஹ பிடகைகள் ஒன்பது வி மாம். அதாவது—"சராவிகா, ஸர்ஷபிகா, கூர்மிக (கச்சபிகா எனப்பொருள்), ஜாலினீ, குளுத்திகா (இதுவே மஸூரிகா,) அலஜீ, புத்ரீ (இதுவே புத்ரிணீ), விதாரீ வித்ரதி" என்பவையாம். வேறு கிரந்தங்களிலுள்ள பிரமாணங்களைப் பார்க்கையில் போஜன் ஒருவரே "விநதா" என்பதை விலக்கிச் சொல்லுவதாகத் தெரியவருகிறது. சரகஸம்ஹிதையிலும் ஸுச்ருதத்திலும் "விநதா" என்பது கூறப்பட்டிருக்கிறது. ஆனால் சரகர் ஏழு பிரமேஹ பிடகைகளையே விவரித்திருக்கிறார்:—"சராவிகா, கச்சபிகா, ஜாலினீ, ஸர்ஷபீ, அலஜீ, விநதா, வித்ரதி" என்பனவாம். "சராவிகா கச்சபிகா ஜாலினீ ஸர்ஷபீ ததா அலஜீ விநதாக்யா ச வித்ரதிச் சேதி ஸப்தமீ" என்பதில் ஸப்த என்று முக்கியமாகக் குறிப்பிடுவதால் அவரது அபிப்பிராயத்தில் பிரமேஹ பிடகை ஏழென்றும், இயந்தச்சிரஸீயாத்யாயத்தில் "ததாந்யா: பிடகாஸ் ஸந்தி" வேறு சில பிடகைகளும் உண்டாவதுண்டு என்று குறிப்பிடுவதால் அப்பிரதாநமாகவும் அரிதாகவும் வேறுசில புத்ரிணீ, மஸூரிகா, விதாரிகா என்கிற பிடகைகளும் உண்டென்று கருதுவதாகக் கொள்ளவேண்டும். பிரமேஹ பிடகைகள் எனப்படுகிற பத்துவிதமான இப்பிளவைகள் முக்கியமாக மதுமேஹரோகிகளுக்கும், ஸாதாரணமாய் இதர மேஹரோகிகளுக்கும், அரிதாக மேஹரோகிகளல்லாதவருக்கும் உண்டாவதாக "விநாப்ரமேஹமப்யேதா: ஜாயந்தே துஷ்டமேதஸ:" என்கிற பிரமாணத்தைக்கொண்டு அறியவேண்டும்.

ந்த்துவித பிரமேஹ பிடகைகளின் விவர
ம் [1] :—அவற்றுள் (I) ஓரங்களில் உயர்ந்
ம், மத்யப் பிரதேசத்தில் சிறிது குழி
ழந்தும், சராவமென்கிற கலத்தைப் போன்ற
நவமுள்ளதுமான பிளவை சராவிகா எனப்
கிறது. (2) குறியிலும் அளவிலும் வெண்
குக்குச் சமானமான பல சிறிய கொப்புளங்
ால் சூழப்பட்ட பிளவைக்கு ஸர்ஷபிகா
று பெயர். (3) அதிக அழற்சியை யுண்டு
ண்ணுவதும், ஆமைக்குச் சமானமான உருவ
டையதுமான பிளவையை கச்சபிகாஎன்பர்.
ஜாலினீ என்கிற பிளவை கொடிகொடியாக
ழும்பிய ஸிராஜாலங்கள் அல்லது தசை
ர்களால் சூழப்பட்டதாகவும், கடுமையான
த்தலை யுண்டுபண்ணுவதாகவு மிருக்கும்.
ஆழமான பிரதேசத்தில் தோன்றி அவ்
த்தில் அதிக வலியோடும் தூர்நீர்க்கசி
வோடும் கூடியதாகவும், கறு நிறமாகவும், பூசி
ற்போல் தாழ்ந்தும் வெகு அகன்றதாகவும்,
துகிலாவது வயிற்றுப் பக்கத்திலாவது
ண்டாகும் பிடகை விநதா எனப்படும். (6)
சின்னஞ்சிறிய அநேகம் சிலந்திகளால் சூழப்
பட்ட பெரிய பிளவை புத்ரிணீ எனப்படுறது.
(7) அளவினுலும், உருவத்தினுலும் கடலைக்குத்
துல்யமா யிருக்கும் பிளவை மஸூரிகா எனப்ப
டும். (8) அநேககொப்புளங்களுடன்கூடியதாய்,
வெண்சிவப்புநிறமுடைய, கடுந்துன்பம்விளைக்கு
மியல்புள்ள பிளவையே அலஜீ யாம். (9)
அமுக்கிருங்கிழங்கு போல திரண்டும் கறடுகட்
டிப் பருத்தும், கடினமாகவுமுள்ள பிள
வைக்கு விதாரிகா எனப்பெயர். (10) வித்ரதிக்
குச் சமானமான குறிகளைப்பெற்ற பிளவையை
வித்ரதி யென்றறிய வேண்டும்.' 29—33½.

பிடகைகளின் ஆரம்ப காரணாதிகள் :—(I)
எந்தெந்த மேஹங்கள் எவ்வெவ்விதம் உண்டா
கின்றனவோ, அவற்றைப்பற்றிய பிடகை
களும் அவ்வவ்விதமாகவே இருக்கும். [3] (2)
மேலும் இப் பிடகைகள் எவனுக்கு மேதஸ்
என்னும் தாது [4] விகாரமடைந்திருக்கிறதோ
அவனுக்குப் பிரமேஹ மில்லாமலிருந்தாலும்
ஸம்பவிப்பதுண்டு. (3) அன்றியும் இப்பிள
வைகள் ஓரிடத்தில் நன்ருகப் பற்றுதலை

1. பத்துவிதமான பிரமேஹ பிடகைகளைப்பற்றி
ங்கு கூறப்படுற விவரணத்தைவிட அஷ்டாங்க ஹ்ரு
நிதானத்திற் கூறியுள்ள விவரணம் இன்னும் சிறிது
ஸ்தாரமாகவும், விளக்கமாகவுமிருப்பது கவனிக்கத்தக்
வு.

2. "வித்ரதி" யென்கிற சிலந்திக்கட்டியைப்பற்றி
லகு 20-வது பிரகரணத்தில் விவரம் காண்க. 'வித்
க்குச் சமானமான குறிகள்' என்பதால் பிறகு கூறப்
ாகிற ஸாதாரண வித்ரதிக்கும், பிரமேஹ பிடகை
ரில் ஒன்ருகிய இவ்வித்ரதிக்கும் ஹேது லக்ஷணாதிக
ில் ஒருவாறு பேதமுண்டென்பது குறிக்கப்படுகிறது.

3. எந்த மேஹமானது எந்த தோஷத்தின் பலத்தி
ல் உண்டாகிறதோ, எந்த தோஷத்தின் அல்லது
ோஷங்களின் குறிகளைப் பெற்றிருக்கின்றனவோ
ந்த தோஷத்தினுல் பிடகைகளும் உண்டாகின்றன ;
த்தோஷக் குறிகளையும் அப்பிடகைகள் அடைந்திருக்
ன்றன என்பது இதன் கருத்து. சில ஸந்தர்ப்பத்தில்
வுந்த ஸாதாரண நியமம் விசேஷ நியமத்தினுல் பாதிகப்
கிறது; உதாரணமாக 'ஜாலினீ' என்கிற பிடகையில்
மையான எரித்தல் காணுமென்று கூறப்படுகிறது.
து. பித்தத்தின் குறி. கபதோஷப்பிரதானமான
மேஹத்தில் ஜாலினீ பிடகை கண்டால் அதில் அழற்சி
யிருக்கமாட்டாதல்லவா? ஆகிலும் ஜாலினீ யென்பது
பித்தத்தினுலேயே ஸம்பவிப்பதாகப்பெரும்பாலோரது
கொள்கை. "பரஸ்பராபிஸம்பத்தா பிடகா சைகதோ
ஷஜா. பித்தோரந்கடா தாஹவதீப்ருசருக் ஜாலிநீ
மதா" என்கிற போஜவாக்கியத்தினுல் ஜாலிநீ
ஒரு தோஷத்தால் ஏற்படுவதாகவும், அது பித்ததோ
ஷத்தாலேயே ஸம்பவிப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது.
ஆகவே "எந்த பிடகை எந்த மேஹத்தைப்பற்றியதோ
அது அவ்விதமாகவே இருக்கும்" என்கிற கோட்பாடு
ஸாமாந்ய கோட்பாடே. ஆனுல் "தஸ்மா த்ஹி ஸர்வே
பரிபாக காலே பசந்தி சோதா த்ரிபிரேவ தோஷை:"
(எல்லாப் பிடகைகளும் பக்குவமாய் வரும் ஸமயத்தில்
மூன்று தோஷங்களாலும் பகுவமாகச் செய்யப்படுகின்
றன) என்கிற பிரமாணப்படி பிடகைகள் பக்குவமாகிற
ஸமயத்தில் மூன்று தோஷங்களும் மும்முரமாக வேலை
செய்யுமென்றும், ஜாலிநீ யென்கிற பிடகையில் மாத்தி
ரம் அச்சமயம் பித்ததோஷத்தின் பிராபல்யம் அதிகமா
யிருக்குமென்றும் வேறு சிலர் அபிப்பிராயப்படுகிருர்கள்.

4. மேதோ தாது—கொழுப்பு அல்லது நிணநீர் ஸம்
பந்தமான தாது.



யடைந்து வெளிப்படையாகப் பருத்துக்
கிளம்புகிற வரையில் இவையுண்டாவதாகத்
தெரியவருவதில்லை. 34, 35.

பிரமேஹ பிடகைகளில் அஸாத்யங்கள் :—
குதம், மார்பு, சிரஸ், தோள், முதுகு, மர்ம
ஸ்த்தானங்கள் [1] இவற்றில் பிடகைகள் உண்ட
ஞலும், உபத்திரவங்களோடு கூடியவை யா
லும், [2] தூர்பலமான ஜாடராக்னியுள்ளவனு
குப் பிளவைகள் கண்டாலும் அவை சிகி
ஸைக்கு வசப்படாத வையாம்.[3] 36.

—o:—

## 34. மேதோ நிதாநம்.*

மேதோரோகத்தின் நிதாந ஸம்ப்ராப்திகள்:—
வியாயாமமின்மை[4], பகலில் நித்திரையுறுதல்,
கபத்தை விருத்திசெய்யக்கூடிய உணவுகளைப்
புஜித்தல் ஆகியவற்ருல் இரஸதாது பெரிதும்
மதுரமாகப்போய் [5] ஸ்நேஹப்பசையையு
விசேஷமாகப் பெற்று மேதோதாதுவை அப
மிதமாய்விருத்திசெய் துவிடும். மேதஸ் என்கி
கொழுப்பினுல் ஸ்ரோதோமார்க்கங்களை

1. மர்மங்கள்:—தேஹத்தில் ஜீவாதாரமாயுள்ள
மிகவும் கூர்மையான உணர்ச்சியைப் பெற்றுள்ள அவய
வாம்சங்கள் 'மர்மங்கள்' எனப்படுகின்றன. அவ்விடங்
களில் ஸாதாரணமாய் அபிகாதாதிகளால் அதிகமாகவோ
சொற்பமாகவோ தேஹத்திற்கோ பிராணனுக்கோ
சிதைவு அல்லது அபாயம் நேரிடும். "தேஹத்தில் எவ்
விடம் சிறிய அபிகாதாதிகளாலும் விஷமமாகத் துடிக்
குமோ, எவ்விடம் அழுத்தப்படுவதால் தீக்ஷ்ணமான
வலியுண்டாகிறதோ அது மர்மஸ்த்தானம்" என்று வாக்ப
டர் கூறுகிருர். "ஸிரைகள், தமனிகள், நாடிகள் முத
லியவற்றின் முக்கியமான பாகங்கள் ஒன்று கூடும்
ஸ்த்தலம் மர்மம்" என்று ஸுச்ருதர் மொழிகிருர்.
மனித தேஹத்தில் நூற்றேழு மர்மங்கள் உண்டு. அவற்
றுள் ஒவ்வொரு காலிலும் பதினொன்று; ஒவ்வொரு
கையிலும் பதினொன்று; கோஷ்டத்தில் (குடலில்)
மூன்று; மார்பில் ஒன்பது; முதுகில் பதினுன்கு; தோளு
க்குமேலுள்ள அவயவங்களில் முப்பத்தேழு" என்று
வாக்படர் கூறும் மர்மங்களைப்பற்றிய வேறுவிஷயங்களை
விஸ்தாரமாக அஷ்டாங்க ஹ்ருதய சாரீர ஸ்தானத்திற்
காணலாம்.

2. பிரமேஹ பிடகைகளில் நாவறட்சி, காஸம்முத
லியவை உபத்திரவங்களாகும். நாவறட்சி, இருமல்,
மாம்ஸபேசிகள் சுருங்குதல், மயக்கம், விக்கல், வெறி,
ஜ்வரம், விஸர்ப்பம், மர்மஸ்த்தானங்களில் நிரோதம் ஆகி
யவை பிடகைகளில் உபத்திரவங்களாகக் காணும்"
(த்ருட்காஸமாம்ஸஸங்கோசமோஹஹிக்காமதஜ்வரா:
விஸர்ப்ப மர்மஸம்ரோதா: பிடகாநா முபத்ரவா:) என்று
சரகர். தோஷங்களும் தூஷ்யங்களும் பெரும்பாலும் கீழ்
நோக்கிப் பாவுமியல்புடையவை யாகையால் பிடகைகள்
பெரும்பாலும் சரீரத்தின் கீழ் அவயவங்களிலேயே உண்
டாவதாக அபிப்பிராயப்படுகிருர்கள்,

3. **ஸ்திரீகளுக்குப் பிரமேஹமும் பிரமேஹ பிட
கைகளும்:**—"ரஜ:ப்ரஸேகோ நாரீணும் மாஸி மாஸி
விசுத்யதி. ஸர்வம் சரீரம் தோஷாச்ச நப்ரமேஹந்த்யத:
ஸ்த்ரிய:" (ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் இரஜஸ் எ
கிற மாதவிடாய் வெளியாய் தேஹமுழுமையும், வாதா
தோஷங்களும் சுத்தியடைவதால், அவர்களுக்குப் பி
மேஹமுண்டாவதில்லை) என்று கூறப்படுகிறது. "இ
கொள்கை முற்றிலும் உண்மையாகக் கருதப்படுவதில்லை
பிரமேஹ ரோகம் ஸ்த்ரீகளுக்கு உண்டாவது அனு
வத்திற் கண்டறிந்த விஷயம். ஆகவே ஸ்த்ரீகளுக்
இவ்வியாதி அரிதாய் உண்டாவதாக இப்பிரமாணம்கூ
வதாய் தாத்பரியம்" என்பது ஸ்ரீ கண்டதத்தனுடை
கொள்கை. ஆகவே பிரமேஹ பிடகைகளும் ஸ்திரீகளு
குக் காண்பதரிதென்று கூறவேண்டும்.

* மேதோ நிதாநம்—தேஹத்தில் மிதமிஞ்சி கொழுப்
விருத்தியாய் உடல் ஸ்தூலித்துப் போகும் வியாதியை
பற்றிய காரணலக்ஷணாதிகளைக் கூறும் பிரகரண
இதை ஸாதாரணமாய் **அதிஸ்நூல ரோகம்** என்
வழங்குவர்.

4. வியாயாமம்—தேஹப்பயிற்சி யென்றும் கஸர
தென்றும் ஸாதாரணமாய் வழங்கப்படுவது.

5. இரஸதாது ஆமதோஷப் பற்றுள்ளது போ
கோளாறடைதல் எனப்படுகிறது. "இந்நிலைமையி
அன்னரஸமானது ஆமதோஷ ஸம்பந்தமுடையதுபொ
மிகவும் இனிப்பாக மாறுகிறது" என்று ஸுச்ருதர்
மேதோரோகத்தில் ஜாடராக்னி தீக்ஷ்ணமாயிருப்பது
வழக்கமென்று பிறகு கூறப்படுகிறது ; ஆமதோஷத்தி
னுல் ஜாடராக்னி மிகவும் மந்தமாய் விடுவது இயல்
பாயிற்றே; அங்ஙனமிருக்க இரஸதாது ஆமதோஷத்தைப்
போல் ஆகிறதென்றுரைப்பது பொருந்தமாட்டாதல்
லவா? என்றுல் ஸமாதானம் பின் வருமாறு :—மிகவும்
மதுரமான அன்னரஸம் நிரம்பிய ஸ்ரோதஸ் ஸுகளில்
அந்த தாது இருக்கும் வரையில் அது மிக்க மதுரமா
யிருப்பதைக்கொண்டு ஆமதோஷப்பற்றுள்ள இரஸதாது
வுக்கு ஒப்பிடப்பட்டதேயன்றி எல்லாக்குணத்தினுலும்
இது ஆமதோஷமாகவே ஆய்விடுவதில்லை.

...ம் மூடப்படுவதால் இதர தாதுக்கள் போஷ...ணையைப் பெறுவதில்லை; ஆகையால் மேதோ...ம் து தேஹத்திற் பெரிதும் விருத்தியடைந்து ...டுகிறது. 1, 2.

...மேதோ ரோக லக்ஷணம்:—முற்கூறியவாறு ...மேதோதாது அபரிமிதமாய் அதிகரிப்பதால் ...கிம்மனிதன் எக்காரியத்தைச் செய்யவும் சக்...குபற்றவனுகிறான்: மேலும் ச்வாஸம் ருறுகு...ால், நாவறளுதல், மயக்கங்காணல், எப்பொ...து முறக்கமுண்டாதல், உடற்சக்தி குன்று...னல், அதிக பசியுண்டாதல், வியர்வை யதிகரித்...னல், உடலில் துர்நாற்றம் தோன்றுதல் ஆகிய ...இக்குறிகளுடன் கூடியவனுப், வன்மையற்று ...ஸ்த்ரீகளிடம் பிரவ்ருத்திக்கவும் திறமையொ...ர்ந்து வருந்துவான். அனைவருக்குமே மேதஸ்...த்னனும் கொழுப்பு உதரத்தில் மிகுதியாகத் ...ங்கிநிற்கும்; ஆகையினுலேயே மேதோரோ...க்குப் பெரும்பாலும் வயிறு மிகவும் ஸ்தூலித்...ாத் தொங்கியாகிறது. 3. 4.

...மேதோரோகத்தில் பசிபதிகரித்தல்:—மேதஸ்...ணல் மார்க்கங்கள் அடைபட்டுப்போகவே ...யுவானது குடலில் விசேஷமாகப் பிரவ்ருத்...த்து ஜாடராக்னியைத் தூண்டுகிறது; உண...வும் சீக்கிரம் சோஷிப்பிக்கப்படுகிறது. ஆகை...னல் மேதோரோகிக்கு உணவு துரிதமாக ஜீர்ணமாய், மேன் மேலும் அவன் உணவை விரும்புகிறான். சிறிதேனும் போஜனகாலம் தவறிப்போனல் கடுமையான சில விகாரங்களும்[1] அவனுக்குக் காண்கின்றன. இவ்வாயுவும், ஜாடராக்னியும் விசேஷமாக உபத்திரவங்களை[2] யுண்டு பண்ணுபவை. இவ்விரண்டும் சேர்ந்து, காற்றும் காட்டுத்தீயும் சேர்ந்து வனத்தை தஹித்துவருவதுபோல ஸ்தூல தேஹியை அழித்துப்போடுகின்றன. 5—7.

மேதோவ்ருத்தியாலுண்டாகும் கேடு:—கொழுப்பானது அபரிமிதமாய் விருத்தியடைந்து விடுமானல் வாதம் முதலியவை ஜடிதியில் மிகவும் உக்கிரமாகப்போய்,கடுமையான உபத்திரவரூபமான கோளாறுகளைக்கிளப்பி ஆயுளை அதி சீக்கிரம் அழித்துப் போடுகின்றன. 8.

அதிஸ்த்தூலன்:—இந்த ரோகத்தில் கொழுப்பும், மாம்ஸமும் அமிதமாக விருத்தியடைந்து விடுவதால் ப்ருஷ்டங்களும், வயிறும், ஸ்தநம் முதலியவைகளும் மிகப் பருத்துக் குலுங்குதன்மையைப் பெறுகின்றன; சரீரத்திற்கு இயற்கையில் ஏற்படும் போஷணை தடைபட்டு, உத்ஸாஹம் குன்றி, உடலெல்லாம் இயற்கைக்கு மாறான பருமனைப் பெறுகிறது. ஆகவே இந்த வியாதி 'அதிஸ்த்தூலரோகம்' எனப்படுகிறது. 9.

1. கடுமையான விகாரங்கள் என்றால் வாத ஸம்பந்...மான கோளாறுகள் எனப் பொருள்.

2. ஜ்வரம, பகந்தரம், வித்ரதி, பிரமேஹ பிடகை போன்ற பிளவைகள் முதலியவை உபத்திரவங்கள் என்பதால் குறிக்கப்படுகின்றன.



## 35. உதர ரோக நிதாநம்.*

உதர ரோகங்களின் பொதுக் காரணங்கள்:—ஜாடராக்னி மந்தப்பட்டால் ஸாதாரணமாய் ஸகல வியாதிகளுக்கும் அஃது இடந்தரும்;[1] அவற்றிலும் முக்கியமாய் உதர ரோகங்களுக்கு அது காரணமாகிறது. பொதுவாக அஜீர்ணத்தினுலும், மலினமான உணவுகளையுபயோகிப்பதாலும்,[2] பழைய மலங்கள் மேன் மேலும் சேர்ந்து விடுவதாலும் உதர ரோகங்கள் உண்டாகின்றன. 1.

உதர ரோகஸம்ப்ராப்தி:—மிகவும் விருத்தியடைந்த வாதாதிதோஷங்கள் தேஹத்திலுள்ள (முக்கியமாய் வயிற்றிலுள்ள) ஸ்வேதவஹஸ்ரோதஸ்ஸுகளையும்,[3] அம்புவஹஸ்ரோதஸ்ஸுகளையும்[4] அடைத்துப் போட்டு, பிராணவாயுவையும் அபாநவாயுவையும் ஜாடராக்னியையும் மிகவும் தூஷிப்பித்து உதரரோகத்தைப் போதுவா யுண்டுபண்ணுகின்றன. 2.

உதர ரோகங்களின் பொதுக் குறிகள்:—வயிற்றுப் பொருமல், நடக்கச் சக்தியின்மை, சரீரபலம் குன்றுதல், ஜாடராக்னி மந்தப்படுதல், வீக்கங்காணுதல், உடலிளைத்தல், அபாநவாயுவும் மலமும் குடலிற் சேர்ந்து அடைபடுதல், உடலழற்சி காணுதல், நிமிர்த்துப் போதல் ஆகிய இவை எல்லா உதர ரோகங்களிலும் தோன்றும் பொதுவான இலக்ஷணங்களாம். 3, 3½.

உதர ரோகங்கள் எட்டுவிதம்:—வாத-பித்த கபங்களால் மூன்று விதம், ஸந்நிபாதத்தினுல் ஒன்று, ப்லீஹம் என்கிற அவயவத்தின் வீக்கத்தினுல் ஒன்று, மலம் முதலியவை வெளிப்படாமல் கட்டிப் போவதால் ஸம்பவிக்கும் பத்தோதரம் என்பதொன்று, குடலில் த்வாரம் விழுவதாலுண்டாகும் க்ஷதோதரம் ஒன்று, வயிற்றில் நீரேற்றமுண்டாதவதால் உதகோதரம் என்பதொன்று ஆக எட்டுவிதமான உதர ரோகங்கள் உண்டு[5]. அவற்றில் ஒவ்வொன்றின் லக்ஷணமும் இதனடியில் கூறப்படுகிறது[6]. 4½.

*வயிறுவது, வயிற்றிலடங்கியப்லீஹம்முதலிய அவயவங்களாவது நோய் கொண்டு நீரேற்றத்துடன் அல்லது வேறு விதமாய் விம்மி வீக்கங் கொள்ளும் வியாதிகள் எல்லாம் பொதுவாக 'உதர ரோகங்கள்' என்று வழங்கப்படும்.

1. "தோஷமக்நிபலே ஹீநே குப்யந்தி பவநாதய:" —ஜாடராக்னி க்ஷீணித்தால் வாதம் முதலிய எல்லாத்தோஷங்களும் பிரகோபமடையும்—என்கிற பிரமாணப்படி இங்கு அக்னிமாந்த்யம் ஸகல வியாதிகளுக்கும் காரணமாகுமென்று கூறப்படுகிறது.

2. அழுக்குகளும், கிருமி முதலிய ஜந்துக்களும் சேர்ந்தவை, ஊசிப்பதனழிந்தவை, ஏற்றக்குறைவானவை, அபத்தியமானவை ஆகிய உணவுகள் எல்லாம் இதனுல் குறிக்கப்படுவதாய் அறிக.

3. ஸ்வேதவஹஸ்ரோதஸ்ஸுகள்—வியர்வை நீர்க்குழாய்கள். "ஸ்வேதஸ்துபாஹ்யேஷு ஸ்ரோதஸ்ஸுப்ரதிஹதகதிஸ் திர்யக்வதிஷ்டமாந ஸ்ததேவோதகமாப்யாயயதி"—தேஹத்தின்வெளிப்புறக்குழாய்களில் வியர்வை தடைபட்டு மேன்மேலும் வீக்கங்கொடுக்கக் கூடியது—துர்நீரை விருத்தி செய்கிறது—என்று சரகர். ஸ்வேதம் மேதோதாது விலிருந்தும் சர்மத்திற்குள்ளடங்கிய ரோமகூபங்களென்கிற உரோமக் குழிகளிலிருந்தும் உண்டாகிறது—"—ஸ்வேதவஹாநாம் மேதோ மூலம், ரோமகூபாச்ச"—என்றும் கூறப்படுகிறது.

4. அம்புவஹஸ்ரோதஸ்ஸுகள்—உமிழ்நீர்,பித்தநீர், நிணநீர் முதலிய திரவப் பொருட்கள் ஓடும் குழல்கள். இவை சரீரத்தின் உட்புறத்தைச் சேர்ந்தவை. ஆகவே உதர ரோகத்தில் தேஹத்தின் வெளிப்புறத்து நீர்களும் உட்புறத்து நீர்களும் மார்க்கங்கள் அடைபட்டு ஊறிச் சேர்ந்து விடுவதாய் அறியவேண்டும்.

5. யக்ருத் என்கிற கல்லீரலைப்பற்றி யுண்டாகும் உதரரோகம் மற்றென்றுண்டு. ஆனல் ப்லீஹோதரத்திற்கும் யக்ருத்தைப்பற்றிய உதரரோகத்திற்கும் சிகித்ஸையில் விசேஷ வேறுபாடில்லை யென்பதை, யத்தேசித்து ப்லீஹமென்பதாலேயே யக்ருதுதரமும் குறிப்பிடப்பட்டதாகவே கருதி, அதைத் தனித்துக் கூறவில்லையென்று ஸமாதானம் சொல்லுகிறார்கள்; ஆகையால் ஒன்பது உதரங்களென்று கூறாமல் எட்டென்று மொழிந்ததாகச் சொல்லப்படுகிறது. கல்லீரலின்வீக்கமே யக்ருதுதரம் அல்லது யக்ருத்தாலீ என்று வழங்கப்படுகிறது.

6. ப்லீஹோதரம் முதலியவையும் வாதாதிதோஷங்களின் கோளாறால் உண்டாவதால், அதை வாதாதிதோஷ ஸம்பந்தமான உதர வியாதிகளில் சேர்க்காமல் பிரத்யேகமாகக் குறிப்பிட்டதற்கு இலக்ஷணங்களிலும் சிகித்ஸை முதலியவற்றிலும் பேதமிருப்பதே காரணமென்று கருதப்படுகிறது.

வாதோதரம்:—கைகள் - பாதங்கள்—நாபிக்குக் கீழே வயிறு இவற்றில் வீக்கம், இரைப்பை, விலாப்பக்கங்கள், வயிறு, இடுப்பு, முதுகு இவற்றில் வேதனை, பூட்டுகளில் ஆங்காங்கு பிளக்கப்படுவது போன்ற வலி, வறட்டு இருமல், தேஹமெங்கும் நசுக்கப்படுவதுபோன்ற வலி, கீழுடலில் பாரம் அதிகரிப்பது, மலச்சிக்கல், சர்மம் முதலியது சிவப்பாக அல்லது கறுஞ் சிவப்பாக மாறுதல், திடீரென்று வயிற்றுவீக்கம் அதிகரிப்பது அல்லதுகுறைவது, வயிற்றிலும் குதத்திலும் பிளக்கப்படுவதுபோன்ற உணர்ச்சியுமுண்டாதல், மெல்லிய கறுநிறமான ஸிரைகள் வயிற்றின்மீது படர்ந்திருத்தல், வயிற்றைத் தட்டும்போது காற்றுநிரம்பிய துருத்தியில் உண்டாவதுபோன்ற சப்தம் தோன்றுதல், வாயு வயிற்றில் ஒருவித வலியையும் சப்தத்தையும் உண்டுபண்ணிக்கொண்டு உள்ளேயே ஓடியுலாவுதல் ஆகியவை வாததோஷத்தினலான உதரரோகத்திற் காணும் குறிகளாம். 5—8.

பித்தோதரம்:--பித்தக்கோளாறுலாகிய உதரரோகத்தில் ஜ்வரம், மூர்ச்சை, அழற்சி, [1]நாவறட்சி, வாயில் ஒருவாறு காரமான உணர்ச்சி, தலைச்சுற்றல், அதிஸாரம், சர்மம் முதலியவை பசுமை நிறங்கொள்ளல் ஆகிய இக்குறிகள் காணும்; மேலும் வயிறு பசுமை நிறமாகவும், மஞ்சளான அல்லது சிவப்பான ஸிரைகளால் பரவப்பட்டதாகவும் இருக்கும்; வியர்வை அதிகமாகும்; சூட்டினால் தேஹம் அழற்சி கொள்ளும்; வெப்பம் விசேஷித்துக் காணும்; உதரம் பரிசிப்பதற்கு மிருதுவாகவும், சீக்கிரம் முதிர்ந்து பக்குவமடையக் கூடியதாகவும் அழற்சியைப்பெற்று[2] மிகத்துன்ப மளிக்கும்.9,10.

கபோதரம்:—கபதோஷக் கோளாறுலாகிய உதர ரோகத்தில் உடல் ஒருவாறு வலுவிற்குன்றும்; தேஹத்திலுணர்ச்சி குறையும்; வீக்கமும் உடலின் பாரமும் அதிகப்படும்; நித்திரை அதிகரிக்கும்; குமட்டுவதுடன் வாயில் நீரூறும்; அரோசகமுண்டாகும்; ச்வாஸம், காஸம் இவையுண்டாம்; சர்மம் முதலியது வெண்மையாகும்; வயிறு ஸ்திமிதப்பட்டு மழமழப்பாய், வெண்மையான ஸிரைகளால் வியாபிக்கப்பட்டதாய் மிகப் பெரிதாகக் காணும். இவ்வுதரரோகம் சிறுகச் சிறுக காலக்கிரமத்தில் விருத்தியாகும்;கடினமாகவும், பரிசிக்கையில் குளிர்ந்ததாகவும், குருவாகவும், அசைவற்றதாகவும்உதரம் காணப்படும்.11,12,

ஸங்நிபாதோதரம்:—நன்னெறி தவறிய ஸ்த்ரீகள்[3] தமது நகங்களையும் உரோமங்களையும், மல மூத்திரங்களையும், இராஜஸ்ஸையும்[4] அன்ன பானங்களிற் கலந்து எவனுக்குக் கொடுத்து விடுகிறார்களோ, அல்லது பகைவர் எவனுக்கு கரவிஷங்களைக்[5] கொடுக்கிறார்களோ, அல்லது எவன் கெட்டுப் போன ஜலத்தையும்[6] தூஷீ விஷத்தையும்[7] அறியா

1. வயிற்றில் மாத்திரம் அழற்சி. பிறகு உடலெங்கும் அழற்சியுண்டா மென்கிறபடியால், வயிற்றில் மாத்திரம் விசேஷ அழற்சி யெனக் கருத்து.

2. இவ்விதம் பக்குவமடைவதால் சீக்கிரத்தில் இதுவே "ஜலோதரம்" என்னும் வியாதியாக மாறும் என்பதாகக் கருதவேண்டும் என்று ஸ்ரீ கண்டதத்தன்.

3. இதனால் அவ்வித ஸ்த்ரீகள் மாத்திரமல்ல. ஆனால் நன்னெறி தவறிய இதர அவிவேகிகளும் குறிக்கப்படுகின்றனர்.

4. இராஜஸ் ஸ்த்ரீகளுக்கு மாதவிடாயிற்காணும் உதிரம். இதுவே ஆர்த்தவம் என்றும் கூறப்படும்.

5. காவிஷம்—சுயம் விஷத்தன்மையற்ற சில பதார்த்தங்களை ஒன்றோடொன்று சேர்ப்பதால் அவை விஷமுள்ளவையாகும்; அவ்வித பதார்த்தம் 'காவிஷம்' என்று வழங்கப்படும்.

6. கர விஷத்தன்மையுள்ள வஸ்துக்களின் சேர்க்கையாலும், இறந்து போன ஜந்துக்கள்—பிராணிகளுடைய மல மூத்திராதிகள் மற்றமுள்ள அழுக்குகள் இவற்றின் சேர்க்கையாலும் தூஷிப்பிக்கப் பெற்ற ஜலம்.

7. தூஷீ விஷம்—கொடிய விஷகுணமுள்ள பதார்த்தம் அக்னி முதலிய வற்றால் தாக்கப்பட்டு வீர்யமிழந்து போனால் 'தூஷீவிஷம்' எனப்படுகிறது (இவற்றைப் பற்றிய மற்ற விவரணம் பிறகு விஷநிதாநத்தில் விளங்கக் கூறப்படும்.)



மையால் உட்கொள்கிறானோ அவனுக்கு அக்காரணத்தினால் ஜடிதியில் இரத்தம் கெட்டுப் போய், தோஷங்களும் பிரகோப மடைந்து[1], மிகக்கொடியதாயும்ஸந்நிபாதஸம்பந்தமுள்ளதுமான உதரரோக முண்டாகிறது. அது சீத காலங்களிலும், விசேஷமாய் வாயு வீசுகையிலும், மழை பெய்யும் ஸமயங்களிலும் மிகவும் அதிகமாய் விருத்தியடைகிறது; உடலில் அழற்சி அதனால் மிகவுமுண்டாகும்; அப்பிணியாளி அடிக்கடியும் மூர்ச்சை யடைவான்; உடல் வெளுத்து, இளைத்து, நாவறட்சியினால் சுஷ்கித்து வருந்துவான்; இந்த ஸந்நிபாதோதரத்திற்கே தூஷ்யோதரம் என்றும் பெயர் வழங்கப்படும். $13—14\frac{3}{4}$.

ப்லீஹோதரம்:— ப்லீஹம் என்கிற அவயவம் வீங்குவதால் காணும் உதர ரோகம்இதன் பிறகு கூறப்படுகிறது. விதாஹி, அபிஷ்யந்தி என்னும் குணமுள்ள திரவ்யங்களை அமிதமாயுபயோகிப்பதால் இரத்தமும் கபதோஷமும் மிகவும் தூஷிப்பிக்கப்பட்டு, அவற்றால் ப்லீஹம் வீங்கி விடுகிறது. இதை 'ப்லீஹோதரம்' என்பார்கள். இது வயிற்றினுள் இடதுபுறத்தில் பருத்துக் காணும். இந்த வியாதியில் எப்பொழுதும் மந்த ஜ்வரமும் அக்னிமாந்த்யமும் தொடர்ந்திருக்கும்; கப பித்தங்களுடைய குறிகள் மேலெழுந்து காணும்; பலம் க்ஷீணிக்கும்; உடல் மிக வெளிறும்; இவற்றால் பிணியாளி மிகவும் துன்புறுவான். 15—17.

யக்ருதுதரம்:— வயிற்றில் ப்லீஹத்தை போல வலது புறத்தில் யக்ருத் என்கிற அவயவம் பருத்துப்போனால் அதை யக்ருத்தால்யுதரம் என்றறிக. இதில் (1) உதாவர்த்தம் வீங்கிய பாகத்தில் வலிப்பு, வயிற்றுப் பொருமல் இவை யுண்டாயிருந்தால் வாததோஷாதிக்யத்தினால் வியாதியுண்டாயிருப்பதாகவும், (2) மூர்ச்சை, நாவறட்சி, அழற்சி, ஜ்வரம் இவை யுண்டானால் பித்தம் அதிகரித்து இவ்வியாதி யுண்டாயிருப்பதாகவும், (3) வயிற்றிலும், தேஹத்திலும் குருத்வம், அரோசகம், கடினத் தன்மை இக்குறிகளுண்டா யிருந்தால் கபதோஷம் அதிகரித்து இஃது உண்டாயிருப்பதாகவும் அறிய வேண்டும் . $17\frac{1}{2}$, 18.

பத்தகுதோதரம் :—எவனுடைய குடலானது ஒட்டிக்கொள்ளுந் தன்மையுள்ள உணவுகளாலும், உணவுடன்கலந்துஉட்செல்வதானஉரோமங்கள் கற்கள் இவற்றாலும் மிகுதியாய் அடைபட்டுப் போகிறதோ அவனது குடலில் மலமும் தோஷங்களும் ? சிறுகச் சிறுகக் குப்பைகளைப்போல் குவிகின்றன ; அவனது குதத்தில் மலம் அடைபட்டு, மிகச்சொற்பச் சொற்பமாய் அதிக கஷ்டத்துடன் வெளியாகிறது ; அதனால் வயிறு நாபிக்கும் மார்புக்கும் இடையில் ஊதிப் பருத்துப் போம் ; இதை "பத்தகுதோதரம்"[3] என்பார்கள். 19, 20.

க்ஷதோதரம் :—அன்னமே ஏதேனும் சல்யம்[4] உணவுடன் கலந்து குடலுக்குட்

1. விஷங்கள் இயற்கையாகவே ஸாதாரணமாய் மூன்று தோஷங்களையும் பிரகோபிக்கச் செய்வதியல்பாகையால், இங்கு ஸந்நிபாத தோஷம் ஸம்பவிப்பதாய் கூறப்பட்டதென்று அறிக.

2. தோஷங்கள்—வாதபித்த கபங்களாகிய மூன்று தோஷங்களும் இதில் கோளாறடைவதாகக் கருதப்படுகிறது. ஆகவே இது ஸந்நிபாததோஷ ஸம்பந்தமான வியாதியாம்.

3. குதத்திற்கு மேலேமலாசயத்தில் குடலில் விசேஷ அடைப்பு உண்டாவதால் இப்பெயர் வந்தது. கீழ் குதத்தில் அடைப்புண்டானதால் பக்வாசயாதிகளும் தோஷங்களால் நிரப்பப்படுவதால் மார்புக்கும் நாபிக்கும் மத்தியில் ஊதலுண்டாகிறது.

4. சல்யம்—முள், கூரிய ஆணி முதலிய வேறு வஸ்துக்கள் முதலானவை, சிதைவையுண்டு பண்ணும் அல்லது துன்பமளிக்கும் எவ்வஸ்துவும் சல்யம் எனப்படுகிறது.

சென்று குடலைக் குத்தி விடுவதால், அல்லது வேறு எக்காரணத்தினுலாவது[1] குடல் சிதைவுறுவதால் அக்குடலின் த்வாரத்திலிருந்து நீர் ரூபமாய் ஒருவித கசிவு நீர் வெளியாம்; அது விசேஷமாய் குதத்வாரத்தின் வழியாக ஊறிவெளிப்படும். அதில் நாபிக்குக் கீழே வயிறு ஊதிப் பருத்துப் போம்; அதிகமான குத்தல் கிழிக்கப்படுவதுபோன்ற வலி இவையுண்டாம்; இதுவே பரிஸ்ராவ்யுதரம்[2] என்றும் மொழியப்படுகிறது. 21, 22.

உதகோதரம்:—ஸ்நேஹபானம்[3] செய்துகொண்டாகிலும், அநுவாஸநவஸ்தி[4] செய்துகொண்டாகிலும், வமனமாவது விரேசனமாவது[5] செய்துகொண்டாகிலும், அல்லது நிரூஹவஸ்தி செய்துகொண்டாகிலும் எவன் உடனே குளிர்ந்த ஜலத்தை மிகுதியாகக் குடிக்கிருனே, அவனுடைய நிணநீர்த்தாரைகள்[6] தூஷிப்பிக்கப்படுகின்றன; அல்லது அந்தஸ்ரோதஸ்ஸுகளே எண்ணெய்ப்பசையுள்ள பதார்த்தங்களால் பூசப்பட்டு அடைபட்டுப்போனுல் அப்பொழுதும் முன்போலவே வயிறு விம்மி தகோதரம் காண்கிறது. இவ்வியாதியில் வயிறு நிகிநிகிப்பாகவும், மிகப் பெரிதாகவும், சாந்துவர்த்துளமாகப் பருத்த நாபியுடன் கூடியதாகவும், வலித்து இழுக்கப்பட்டு நாற்புறமும் விசாலித்து நீர் நிரம்பியிருப்பது போன்றதாகவும் இருக்கும்; தண்ணீர் நிரம்பிய ஒரு தோல் துருத்தியைப் போல தத்தளித்து அசையும்[7] அவ்விதமே சப்தமும் உண்டாகும்; இது "தகோதரம்" எனப்படும்[8]. 23, 24.

உதரரோகத்தில் ஸாத்யாஸாத்ய நிலைமைகள்[9]:-உதரரோகம் உண்டாயிற்றென்ருல் அது எவ்வித உதரமாயிருப்பினும் பெரும்பாலும் மிகவும் கஷ்டஸாத்தியமென்று கருதப்படுகிறது. நல்ல திடகாத்திரமுள்ளவனுக்குஉண்டாவதும், நீர் சேராததும், சொற்பகாலத்திற்

1. அதிகமாய் வயிறு ஊதும்படி சிரித்தல், கொட்டாவி விடுதல், அமிதமாயுண்ணுதல் ஆகியவை வேறு காரணங்களாம். கூரிய கற்கள், ஓடுகள், எலும்புகள், முள் இவை உணவுடன் உட்செல்வதாலும், கொட்டாவி அல்லது அமிதமாகச் சிரிப்பதாலும், அளவுமீறி யுண்பதாலும் குடல் சிதைவுறும்" என்று சாகர்.

2. "க்ஷதோதரம்" என்றும், "சித்ரோதரம்" என்றும் 'பரிஸ்ராவ்யுதரம்" என்றும் ஒரே வியாதியின் நாம பேதங்கள்.

3. ஸ்நேஹபானம்—தைலம் அல்லது தைல ஸம்பந்தமானஔஷதங்களை உட்கொள்ளச் செய்யும் சிகித்ஸை.

4. அநுவாஸந வஸ்தி—தைலத்தை அல்லது தைலம கலந்த இதரதிரவங்களைக் கொண்டு குதத்வாரத்தின் மூலமாய் குடலில் பிரயோகித்து செய்யப்படும்சிகித்ஸை.

5. வமன-விரேசனங்கள்—வாந்திரூபமாகவும் பேதிரூபமாகவும் முறையே தேஹத்திலிருந்து தோஷங்களை வெளிப்படுத்தும் முறைகள்.

6. நிணநீர்த்தாரைகள் - உதகவஹஸ்ரோதஸ்ஸுகள் அல்லது இரஸாயனிகள் எனப்படும் நுண்ணிய குழாய்கள்.

7. க்ஷதோதரத்தில் குடலிலிருந்து நீர் வகைகள் கசிவது பொலவே இவ்வியாதியிலும் நீர்க்கசிவுகுடலுக்குள் ஏற்பட்டு வயிறு விம்மிக்கொள்ளு மெனக்கருத்து. "சித்ரோதரத்தில் நாபிக்குக் கீழே எப்படி வயிறு பருத்து, குதத்திலிருந்தும் நீரும் வடிகிறதோ அவ்விதமே தகோதரத்திலும் காண்கிறது" என்று கதாதரன் கூறுகிருர். ஆனுல் சித்ரோதரத்தில் நீர்க் கசிவுடன் இதர கனபதார்த்தங்களும் குடலிலிருந்து வெளியாகக் கூடும். உதகோதரத்தில் விசேஷமான நீர்க்கசிவுமாத்திரமே காணும்.

8. தகோதரம் என்பது நீர் மிகுதியாகக் குடலுக்கு வெளிப்புறத்திற் சேர்ந்துள்ள வயிற்றுக் கோளாறு. உதகோதரம் என்றும், ஜலோதரம் என்றும், மஹோதரம் என்றும், நீர்க்கோவை யென்றும் தகோதரத்திற்கே பெயர்.

9. உதரரோகத்தில் நீர் சேராத நிலைமைக்குள்ள லக்ஷணம் சரகரால் இங்ஙனம் விவரிக்கப்படுகிறது:—"வயிற்றில் சப்தமுண்டாம்; வயிறு ஒருவாறு சிவந்திருக்கும்; வீக்கம் அதிகமாகத் தோன்ருது; வயிறு விசேஷ பாரமுள்ள தாகாது; ஸிரைகளென்கிற இரத்தக்குழாய்கள் வயிற்றின் மீது கொடிகொடியாகப் புலப்படும்; வயிற்றில் வாயு சேர்ந்து நாபியை விம்மச் செய்து, குதத்தின் மூலமாய் வேகத்துடன் வெளிவந்து தணிவடையும்; இருதயம், தடையிடுக்குகள், இடுப்பு, நாபி, குதம் இவற்றில் விசேஷ வலியையுண்டு பண்ணும்; ஜாடராக்னி ஒருவாறு மந்தமாகும்; வாய் உமிழ் நீரால் அருவருப்பு கொள்ளும்; மூத்திரம் குறைந்து போகும்."



குள்ளாண்டானதுமான உதரரோகம் ஒருவாறு பெருமுயற்சியினுல் நிவாரணம் செய்யத்தக்கது. பத்த குதோதரமும், விசேஷமாக நீர் சேர்ந்துள்ள உதகோதரமும், க்ஷதோதரமும் அவைதோன்றின ஒரு பக்ஷத்திற்குப் பிறகு பெரும்பாலும் அஸாத்ய நிலைமையை யடைகின்றன. கண்கள் வீங்கியும், உபஸ்த்தம் அல்லது லிங்கம் வக்ரித்தும், சர்மம் மெல்லிதாய் கசிவடைந்தும், இரத்தம் மாம்ஸம் ஜாடராக்னி தேஹவன்மை இவை க்ஷீணித்[...]முள்ள நிலைமைகளும்உதரரோகத்தில்அஸா[...] க்குறிகளாகும். மேலும் விலாப்பக்கங்கள் வ[...] வற்றுப்போதல், உணவில் வெறுப்பு, வீக்[...] அதிஸாரம் இக்குறிகளெல்லாம் உண்டா[...] உதரரோகமும், விரேசநம் செய்வித்து நீர்க[...] வடித்தும் உடனே நீர் சுரந்து வயிறு நிரம்[...] நிலைமையைப்பெற்ற உதரரோகமும் சிகி[...]ஸைக்கு வசப்படாததென்றறிக. 25—28.

## 36. சோதநிதாநம்.*

சோதையின் ஸம்ப்ராப்தி:-ஏதேனும்காரணத்தால் கோளாறடைந்த வாயுவானது அங்ஙனமே விகாரமடைந்துள்ள பித்தத்தையும் இரத்தத்தையும் கபத்தையும் ஸிரைகளிலும் ஸிரைகளுக்கு[1] வெளியிலும் மிகுதியாகப் பரவச்செய்து அவற்ருல் இவ்வாயுவின் மார்க்கம் அடைபட்டுப்போக, சர்மத்தையும் மாம்ஸபேசிகளையும் பற்றியதான பெரிய வீக்கத்தை யுண்டு பண்ணும்;[2] ஆகவே எல்லா சோதையையும் ஸந்நிபாதத்தினுலான வியாதி யென்று[3] கூறுவர். I, $\frac{1}{2}$.

சோதை ஒன்பது விதம்:—அந்தந்த காரண பேதங்களால்இவ்வியாதியில் வெவ்வேறுவகையான குறிகள் தோன்றுமாகையால், அவற்றைக் கொண்டு இவ்வியாதி ஒன்பது விதமா[...] பிரிக்கப்படுகிறது:— வாத-பித்த - கபங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சோதையை யுண்[...] பண்ணும்; இரட்டை தோஷங்களால் த்வந்த[...] சோதைகள் மூன்று; ஸந்நிபாதத்தினுல் ஒன்[...] அபிகாத மென்கிற அடி முதலியது தாக்கு[...]தால் ஒன்று; விஷ ஸம்பந்தத்தினுல் ஒன்[...] ஆக இவை ஒன்பது விதங்கள். $2\frac{1}{2}$.

சோதைகளின் பொதுவான பூர்வ ரூபங்கள்[...] ஓர் குறிப்பிட்ட விடத்தில் அழற்சி, ஸிரை[...]ளென்கிற இரத்தக் குழாய்கள் வலித்து வி[...]கப்படுவது போன்ற வேதனை; உடல் பார[...]யுணரப்படுதல் ஆகியவை சோதையின் பூர்[...] ரூபங்களாம். 3.

*சோதை யென்பதே தமிழில் சோகை யென்று மாறிற்று. இதற்கு சோபை அல்லது சோபம், வீக்கம் என்றும் பெயர். சோதையானது சர்மத்தையும் மாம்ஸத்தையும் பற்றி தேஹத்தில் எந்த பாகத்திலாவது உண்டாகலாம்; உதரம் என்கிற வியாதி வயிற்றையும், வயிற்றிலடங்கிய யக்ருத் முதலிய அவயவங்களையும் ஆச்ரயித்தே காணும். இவை உதர ரோகத்துக்கும் சோதைக்குமுள்ள முக்கியமான பேதம்.

1. ஸிரைகள் என்று காரிரத்தக் குழாய்களும், இரஸாயனிகள் என்கிற இதர சிறிய குழாய்களும் குறிக்கப்படுகின்றன.

2. சர்மத்தையும், மாம்ஸங்களையும் பற்றியுண்டா[...]தாகக் கூறுவதால், விரணசோதையினும் இது வே[...]பட்டதென்று குறிப்பிடப்படுவதாய் அறிக. "விர[...] சோதையானது சர்மம், மாம்ஸம், ஸிரைகள், ஸ்நா[...]கள், அஸ்த்திகள், ஸந்திகள், கோஷ்டங்கள், மர்மங்[...] என்கிற எட்டு ஸ்தானங்களை ஆச்ரயித்துண்டாகிறத[...] என்று ஸுச்ருதர்.

3. ஸந்நிபாதம் எனினும், மூன்று தோஷங்களோ[...] இரத்தமும் ஒரு மிக்கக் கோளாறடைந்த விசேஷ ஸந்[...]பாதம் இவ்வியாதியால் குறிக்கப்படுகிறது.

சோதைகளுக்குப் பொதுக்காரணங்கள்:—பல ன சோதநசிகித்ஸைகளாலும்[1] கடுமையான தா வியாதிகளாலும் தகாத போஜனங்களா ம் அல்லது போஜன மின்மையாலும் ளைத்தும் துர்பலமாகவு முள்ளவர் க்ஷாரங் ளையும், அம்லபதார்த்தங்களையும், மற்றும் க்ஷ்ணமும் உஷ்ணமுமான திரவ்யங்களையும், ரு குணமான வஸ்துக்களையும் உபயோகிப் து, தயிர்—பக்குவமாகாத பண்டங்கள்—அத் கைய சாகங்கள்—மண்—ஒன்றுக்கொன்று சேருவதால் விரோத குண முண்டு பண்ணும் ஸ்துக்கள்[2]—பதனழிந்த பதார்த்தங்கள்—கா மன்கிற விஷம் இவை ஸம்பந்தித்த அன் த்தைப் புஜிப்பது, அர்சஸ் என்கிற மூல ாகம், எவ்வித வேலையுமின்றி ஒரே விடக் ல் அசைவின்றி யுட்கார்ந்திருத்தல், சோதன கிச்ஸை செய்து கொள்ள வேண்டிய நிலை மகளில் அவற்றைச் செய்து கொள்ளாம ருத்தல், மர்மஸ்த்தானங்கள்[3] தாக்கப்படு ல், தாறுமாறாகப் பிரஸவித்தல், வமநவி ரசநாதி சிகித்ஸைகளை முறை தவறாகப் பிர யோகித்தல் ஆகிய இவை நிஜ சோதைகளுக் க்[4] காரணங்களாம். 4, 5.

சோதைகளின் ஸாமாந்யலக்ஷணம்:—சோதையென்கிற வீக்கமுண்டான அவயவம் ஒரு ஸமயம் அதிக பாரமுள்ளதாகவும், மற்றொரு ஸமயம் ஸாதாரணமாகவும் இருக்கும்; அவ்விடம் இயற்கையினும் மிகப் பருத்தும் சூடாகவுமிருக்கும்; ஸிரைகள் வீக்கத்தில் வரிவரியாகத் தோன்றும்; ரோமங்கள் சிலிர்த்துக் கொள்ளும்; சர்மத்தின் நிறம் ஒருவாறு கருநிறமாகும். இவை சோதையின் ஸாமாந்ய லக்ஷணங்களாகும். 6.

வாதசோதையின் லக்ஷணம்:—வீக்கமானது ஒரு பாரிசத்திற் பரிசிக்க மற்றொரு பாரிசத்தில் அசைந்தோடும்; அவ்விடத்தில் சர்மம் மெல்லியதாகும்; ரூக்ஷத்தன்மையும், கருஞ் சிவப்பான நிறமும், திமிர்ப்பும், மயிர்ச்கிலிர்க்கையும், வலியும் அவ்விடத்திற் காணும்; இதெல்லாம் திடீரென்று அப்போதைக்கப்போது தோன்றி மறையும்:[5] அவ்விடத்தை அழுத்தினால் குழியைப்போல் அழுந்தி மீண்டும் உயர்ந்து அக்குழி மறையும்; இவ்வீக்கம் பகலில் அதிக தொந்தரவளிக்கும். இவை வாததோஷத்தினாலான சோதையின் இலக்ஷணங்களாம். 7

---

1. சோதந சிகித்ஸைகள்:—வமநம் (வாந்திசெய்வித்தல்), விரேசநம் (மலம் கழியச் செய்தல்), வஸ்தி (குதம் அல்லது மூத்திர த்வாரங்களில் திரவௌஷதங்களைச் செலுத்தி தோஷ சோதனம் செய்வித்தல்), ஸ்வேதநம் (வியர்வை சுரக்குமாறு செய்வித்தல்) ஆகிய இவை போன்றவை தோஷஹர சிகித்ஸைகள்.

2. தேன், நெய், சில பிராணிகளின் கொழுப்புகள், எண்ணெய், ஜலம் இவை தனித்தனி யுபயோகிக்கப்பட்டால் கெடுதியுண்டு பண்ணுபவை யல்லவாயினும், இவற்றைச் சம அளவில் அனைத்தையுமோ சிலவற்றையோ சேர்த்துக் கொண்டால் விஷ குணத்தைக் காட்டு மெனக் கூறப்படுகிறது. ஆகவே இவை ஒன்றுக்கொன்று குணத்தில் விரோதமானவை. அவ்வித பதார்த்தங்கள் குருத் திரவியங்களெனப்படுகின்றன.

3. மர்மஸ்த்தாநங்கள்:—ஸாதாரணமாய் அடி முதலியது தாக்குவதால் பிராணனுக்கோ சில அவயவங்களுக்கோ ஹானியைத் தரக்கூடிய வெகு நுட்பமான ஜீவாதாரமாயுள்ள ஸத்தாநங்கள். மாம்ஸ மர்மங்கள், அஸ்த்தி மர்மங்கள், ஸ்நாயு மர்மங்கள். தமனீமர்மங்கள், ஸிரா மர்மங்கள், ஸந்தி மர்மங்கள் என்று மர்மங்கள் ஸங்கிரஹமாக ஆறு விதம். ஆனால் தேஹ மெங்கும் பரவி 107 மர்மங்கள் அவற்றின் உட்பிரிவுகளாய் உண்டு.

4 தோஷங்களாலுண்டாவது நிஜசோதையென்றும் அடிமுதலியதாலுண்டாவது ஆகந்து சோதை யென்றும் கூறப்படுகிறது.

5. வாததோஷம் எப்பொழுதும் சலநஸ்வபாவமுள்ளதாகையால் அதன் தன்மைக் கேற்றவாறு அதனாலான சோதையும் திடீரென்றுண்டாய் திடீரென்று மறையும் தன்மையதாயிருக்கும்.



பித்த சோதையின் லக்ஷணம்:—வீங்கிய பாகம் மிருதுவாயிருக்கும்; ஒருவித நாற்றம் அதில்காணும்; நிறம் கறுப்பும்பசுமையுமானது; தலைச்சுற்றல், ஜ்வரம், அமிதமாய் வியர்த்தல், நாவறட்சி, வெறி இவைதோன்றும்; வீக்கத்தில் அழற்சி மிகுதியாகும்; வலி கடுமையாயிருக்கும்; கண்கள் சிவக்கும்; வீக்கம் பக்குவமாகையில் அழற்சி தாங்கக்கூடாததா யிருக்கும். இவை பித்த சோதையின் குறிகளாம். 8.

கப சோதையின் லக்ஷணம்:— வீக்கம் குருவாகவும், அசைவற்றதாகவும், வெண்மையாகவுமிருக்கும்; அரோசகமுண்டாகும்; வாயில் உமிழ்நீரையும், நித்திரையையும், வாந்தியையும் அக்னிமாந்த்யத்தையும் அதிகமாய் இவ்வியாதி யுண்டாக்கும்; அழுத்தினால் பள்ளம் விழுந்து மீண்டும் அது மேலெழாமல் நெடுநேரம் நிற்கும்; இரவில் இதன் தொந்தரவு அதிகமாகும்[1] மிகவும் மெதுவாக சரீரத்திலுற்பத்தியாய் மிக்க மெதுவாகவே நிவாரணமாகும். இவை கப தோஷத்தினாலான சோதையின் குறிகளாம். 9.

த்வந்த்வ ஸந்நிபாத சோதைகளின் லக்ஷணங்கள்:— வாத பித்த சோதை, வாத—கப சோதை, பித்த-கப சோதை யென்கிற த்வந்த்வ தோஷ ஸம்பந்தமான மூன்றுவித சோதைகளிலும் இரண்டிரண்டு தோஷங்களின் குறிகள் கலந்து காணும்; ஸந்நிபாத சோதையில் மூன்று தோஷங்களுடைய குறிகளும் தோன்றும. 10.

அபிகாதஜ சோதை:[2]— சஸ்திரம் முதலி வற்றால் அவயவம் அறுபடுவது, பிளவுறுவது மற்றும் காயம் முதலியது தாக்குவது, கடுமையான பனிச்சாரல்-கடலிலிருந்து கிளம்பு விஷக்காற்று-சோரங் கொட்டையின் சா காஞ்சோரி முதலியதின் சுணை இவற்றால் தா கப்படுவது ஆகிய காரணங்களால் விஸர்ப்பத் டன் கூடிய சோதை யுண்டாகும்; இது அ காதத்தினாலான சோபையாம். இந்த சோ யானது மிகவும் உஷ்ணமாகவும், செந்நிறமா வும், பெரும்பாலும் பித்ததோஷக் குறிகளுள் தாகவு மிருக்கும். 11, 12.

விஷஜசோதை: — விஷமுள்ள பிராணிகள் மேலே ஊர்ந்துபோவதாலும், அவை மூத் ரம் விடுவதாலும், கோரப்பற்கள் நகங்க இவற்றால் தீண்டப்படுவதாலும், விஷமில்ல பிராணிகளுடைய கோரப்பற்களும் நகங்களு தாக்குவதாலும், மல-மூத்திரங்கள்-சுக்ரம் மு லியவற்றால் மலினமாய் தோஷப்பற்றடை வஸ்திராதிகளின் ஸம்பந்தத்தாலும், விஷ வி க்ஷங்களிலிருந்து வரும் வாயுவின் பரிசத் லும், கிருத்ரிம விஷங்களாலான சூர்ணங்களி ஸம்பந்தத்தினாலும் சோதை யுண்டாகும். இ மிருதுவாகவும், தொங்கிக் கொண்டு அசை தன்மையதாகவும், சீக்கிரம் உற்பத்தியா அழற்சியையும் வலியையும் அதிகமா யுண் பண்ணுவதாகவு மிருக்கும். 13—14½.

தோஷஸ்த்தானங்களும் அவற்றால் சோ யுண்டாகுமிடங்களும்:—(1) தோஷங்க ஆமாசயத்தைப் பற்றியிருந்தால் அ

---

1. இரவில் ஸ்ரோதஸ்ஸுகள் அதிக சுருசுருப்பில்லாமல் அமர்ந்திருக்கும்; தேஹத்திலுள்ள நீர்கள் வெளிவராமல் சரீரத்திற்குள் ஸ்தம்பித்திருக்கும்; கபமும் சுபாவமாகவே இரவில் அதிகப்படும்; ஆகவே அதனாலான வீக்கமும் இரவில் கடுமையாயிருக்கும்; பகலில் ஸ்ரோதஸ்ஸுகள் சுருசுருப்படைந்து, தெளிவடைந்து, தேஹமும் மனதும் ஏதோ ஒருவாறு வேலை செய்தும் வருவதால் வாத தோஷம் அப்பொழுது வலுப்படுவதும் தோஷம் வலிவிற் குன்றுவது மியல்பு.

2, அபிகாதஜ சோதை—சஸ்திரம் முதலியதால் அ லது விழுவதால் அடிபடுவது, விஷம் முதலி வற்றால் தாக்கப்படுதல் முதலிய வெளிக்காரணங்கள திடீரென்று காணும் வீக்கம்.

3, சையான், பூரான், தேள், சில பாம்புகள் முத யன.

ஹத்தின் மேற்புறத்தில்[1] சோதையை
ண்டு பண்ணும்; அவை பக்குவாசயத்தைப்
றியிருந்தால் ? சரீரத்தின் நடுப்புறத்தில்
ாதையுண்டாகும். அவை மலா சயத்தைப்
றியவையானல் கீழவயவங்களில் சோதை
ணும்; சரீர முழுமையும் பற்றியிருந்தால்
கம் தேஹமெங்கும் பாவித் தோன்றும்.
16.

சோதைகளில் ஸாத்யாஸாத்யங்களும்
த்திரவங்களும்:—(1)தேஹத்தின் மத்தியப்
தேசத்தில்[3] உண்டாகும் வீக்கமும், ஸர்வ
ாத்திலும் வியாபித்துண்டான வீக்கமும்,
ஹத்தில் நெடுகவும் அர்த்த பாகத்தைப்
றியுண்டானதும்,ரிஷ்டரூபமாயிருப்பதும்[4],
ருந்து மேலே பரவிச் செல்லுவதுமான
க்கங்களும் கஷ்ட ஸாத்தியமானவை. (2)
ாஸம் அதிகரித்தல், நாவறட்சி, வாந்தி,
அதிகபலஹீனம், ஜ்வரம், உணவில் விருப்ப
மின்மை ஆகிய இவ் வுபத்திரவங்கள்[5] எந்த
சோதையில் காண்கின்றனவோ அது அஸாத்
திய வியாதியாம். (3) வேறு உபத்திரவங்களா
லுண்டாகாததும்,[6] பாதங்களில் மாத்திரம்
ஆரம்பித்ததுமான வீக்கம் புருஷரையும்,
முகத்தில்தேன்றியது ஸ்த்ரீகளேயும்,குஹ்யஸ்த்
தானத்திலுண்டான[7] வீக்கம் இருபாலரையும்
கொன்றுவிடும்.[8] (4) புதிதாகத் தோன்றியுள்ள
சோதையும்,உபத்திரவங்களேப்பெருத சோதை
யும்எளிதில் நிவாரணம்செய்யத்தகுந்தனவாம்;
இவற்றைத் தவிர முற்கூறிய மற்ற சோதைகள்
அஸாத்தியங்களாகும். (5) மேலும் எந்தவீக்கம்
வயிற்றிலும், தொண்டையிலும், மர்மஸ்த்தான
த்திலும் உண்டாகிறதோ, மிகவும் பருத்து
கடினமாகவு மிருக்கிறதோ,குழந்தைகளுக்கும்
கிழவருக்கும் உண்டாகிறதோ அவ்வித வீக்க
மும் அஸாத்தியமாம். 17—20.

, மேற்புறம் என்ருல்—மார்பு, தோள், கழுத்து
லிய வயிற்றுக்கு மேலேயுள்ள அவயவங்கள்.

, பக்குவாசயம்—குடலில் ஜீர்ண வேலையை
ந்தும் பாகம்.

, இடுப்புக்கு மேலே மார்புக்குக் கீழ்ப்பட்டுள்ள
ம் மத்திய பாகம்.

, ரிஷ்டம்—உருவம், நிறம், இந்த்ரியங்கள், குரல்,
ய, பிரதிச்சாயை யென்னும் பிரதி பிம்பம், செய்
இவற்றிலும், மற்றுமுள்ள இயற்கைத் தன்மைகளி
காரணமறிய முடியாமலே விகாரம் உண்டாளுல்
த ரிஷ்டம் என்று ஸங்கிரஹமாகக் கூறலாம்.

"ச்வாஸம், நாவறட்சி, துர்ப்பலத்தன்மை,
ரம், வாந்தி, அரோசகம், விக்கல், அதிஸாரம்,
ல்ம் ஆகிய இவை சோதை வியாதியில் பிணியாளியை
ழிக்கக் கூடிய உபத்திரவங்கள்" என்று ஸுச்
. சரகரும் சற்றேறக் குறைய இவற்றையே
தைக்கு உபத்திரவமாகக் கூறுகிருர்.

இதா வியாதிகளின் உபத்திரவங்களோடு கூடிய
த சோதை யெனப் பொருள்.

7. குஹ்யம் என்பது பொதுவாக ஸ்த்ரீ புருஷர்க
ளுடைய பெண்குறி-ஆண்குறிகளுக்கே பெயர். ஆனல்
இங்கே வேறு கிரந்தகர்த்தாக்களுடைய பிரயோகங்களே
அனுஸரித்து 'குஹ்யம்'என்பதற்கு வஸ்தி(மூத்திரப்பை)
என்று பொருள் என வியாக்யாதா கூறுகிருர்.

8. புருஷருக்கு முதலில் வீக்கமானது பாதங்களில்
தோன்றி, அது கிரமமாக மேலே முகத்தை நோக்கிப்
பரவுமாயின் அஸாத்யமாகிறதென்றும், ஸ்திரீகளுக்கு
அதற்கு நேர் மாருக முகத்தில் முதலில் வீக்கம் தோன்றி
அப்பால் கிரமமாகக் கீழ்முகமாகப் பாதங்களே நோக்கிப்
பரவினல் அது அவர்களுக்கு அஸாத்யக் குறியாகுமென்
றும் பொதுவாகக் கூறப்படுகிறது. வஸ்தியென்னும்
மூத்திராசயத்தைப்பற்றிய வீக்கம் இருவருக்கும் அஸாத்
யம் என்றும் சொல்லப்படுகிறது. "ஊர்த்வகாமீ நரம்
பத்ப்யா மதோகாமீ முகாத் ஸ்த்ரியம். உபயம் வஸ்தி
ஸஞ்ஜாதச் சோதோ ஹந்தி ந ஸம்சய:" என்று க்ஷார
பாணி. "பாதப்ரவ்ருத்தச் ச்வயதுர் ந்ருணாம் ய: ப்ராப்
நுயாந் முகம். ஸ்த்ரீணாம் வக்த்ராததோ யாதி வஸ்தி
ஜச் ச ந ஸித்யதி" என்று மற்றோர் ஆசிரியர் கூறுகிருர்.
இவற்றிற்குப் பொருள் முற்கூறியதே.


# ஆர்யன் பாரமஸி

சாஸ்திரீயமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்குமிடம்.

சென்னை ஆயுர்வேத கலாசாலையிற் பயின்று டிப்ளோமா வென்கிற அதிகாரப் பத்திரம் பெற்று சுமார் இருபதுவருஷகாலமாய் சிகித்ஸைத் தொழிலே நடத்தி வருபவரும், வைத்தியகலாநிதி பத்திராசிரியரும், எல்லா இந்திய ஆயுர்வேத மஹாமண்டலத்தின் பிரதான மந்திரியும், எல்லா இந்திய ஆயுர்வேத வித்யாபீடத்தின் உபாக்கிராஸனுதிபதியும், மேற்படி வித்யா பீடத்தின் ஆயுர்வேத வித்வத் பரீக்ஷைகளின் பரீக்ஷகரும், க்வாலியர் ஸம்ஸ்த்தானத்து வைத்திய பரீக்ஷகரும், அஷ்டாங்க ஹ்ருதயம், சார்ங்கதர ஸம்ஹிதை, மாதவ நிதானம் முதலிய ஸம்ஸ்க்ருத வைத்தியக் கிரந்தங்களேத் தமிழில் மொழிபெயர்த்தவருமான ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஏ.கே.ஏ.வி., அவர்களுடைய நேர் மேற்பார்வையில் அடியிற்கண்ட முக்கியமான ஆயுர்வேத ஔஷதங்களேத் தயார் செய்து நாம் வைத்தியர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் ஸப்ளை செய்துவருகிறேம். நாம் இவ்வௌஷதங்களே யெல்லாம் சாஸ்திர முறைப்படி வெகு ஜாக்கிரதையாகத் தயார் செய்கிறேம். இப்பொழுது சிலர் சாஸ்திர முறைக்கு முற்றிலும் விரோதமாய் இயந்திரங்களேக் கொண்டு ஏராளமாக ஔஷதங்களேத் தயார் செய்து வருகிருர்கள். அவ்வௌஷதங்கள் சாஸ்திரமுறை தவறியவை யென்றும், ஆகவே குணத்தில் பிரயோஜனமற்றவை யென்றும் சாஸ்திரஞ்ஞர்களும், அவற்றை யுபயோகிக்கும் மற்றவரும் அபிப்பிராயப்படுகிருர்கள். ஆகவே நாம் சாஸ்திரத்திற் கூறியுள்ள முறைகளேயே முற்றிலும் அனுஸரித்து ஆயுர்வேத ஔஷதங்களேத் தயார் செய்து பொது ஜனங்களுக்கு வழங்க முன் வந்திருக்கிறேம். நமது ஔஷதசாலையில் கிடைக்கக்கூடிய ஔஷதங்களின் ஜாபிதா பின்வருமாறு:—

க்வாத சூர்ணங்கள்.

குறிப்பு:—ஸாதாரணமாய் ஒரு பலம் சூர்ணத்தை ஒரு சேர் ஜலத்தில் சேர்த்துக் காய்ச்சி 1/4 பங்காக அந்த ஜலம் வற்றிய பிறகு வடிக்கட்டி எடுத்துக்கொள்ளப்படும் கஷாயம் "க்வாதம்" எனப்படுகிறது. அவ்வித க்வாதத்துக்கு உபயோகமான சூர்ணத்திற்கு "க்வாத சூர்ணம்" என்று பெயர். ரோகிகளுக்கு உணவு ரூபமாகக் காய்ச்சிக் கொடுக்கக் கூடிய சில சரக்குகளேயும் பொடித்து "பேயா" என்றும், "பாநீயம்" என்றும் குறிப்பிட்டு, இந்த க்வாதமுறைகளிலேயே சேர்த்திருக்கிறேம்.

| | 6 அவுன்ஸ் ரூ. | அ. | 1 பவுண்ட் ரூ. | அ. |
|---|---|---|---|---|
| அம்ருதாஷ்டகக்வாதம் (சார்ங்க ம. அத். 2) | 1 | 4 | 3 | |
| உசீராதிபேயா ( ஷை ஷை ) | 1 | 10 | 4 | |
| கண்டகார்யாதிக்வாதம் (ஷை ஷை ) | 1 | 4 | 3 | |
| புநர்நவாதிக்வாதம் ( ஷை ஷை ) | 1 | 10 | 4 | |
| வாஸாதிக்வாதம் ( ஷை ஷை ) | 1 | 4 | 3 | |
| ஷடங்க பாநீயம் (க்வாத சூர்ணம்) | 1 | 4 | 3 | |

சூர்ணங்கள்.

| | ரூ. | அ. | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| அபயாமோதக சூர்ணம் (1 அவு. ரூ. 1) | 4 | 0 | 10 | |
| அச்வகந்தாதி சூர்ணம் (சார்ங்க. ம. அத். 6) | 1 | 4 | 3 | |
| ஆமலகாதி சூர்ணம் ( ஷை ஷை ) | 1 | 4 | 3 | |
| சால்மலீ சூர்ணம் | 1 | 0 | 2 | |
| சித்ரகாதி சூர்ணம் | 2 | 0 | 5 | |
| தாளிஸாதி சூர்ணம் | 2 | 0 | 5 | |
| த்ரிபலா சூர்ணம் | 1 | 0 | 2 | |
| த்ரிகடு சூர்ணம் | 1 | 8 | 3 | 1 |
| த்ரிவ்ருத் சூர்ணம் | 1 | 8 | 3 | 1 |
| படோலாதி சூர்ணம் | 1 | 2 | 2 | 1 |
| பாஸ்கரலவண சூர்ணம் | 1 | 8 | 3 | 1 |
| புஷ்யாநுக சூர்ணம் | 1 | 8 | 3 | 1 |
| ரஸோத்தமாதி சூர்ணம் (1 oz. 1—8.) | 8 | 0 | 18 | |
| லவங்காதி சூர்ணம் (சார்ங்க, M. அத். 6 | 1 | 12 | 4. | |
| ஜாதீபலாதி சூர்ணம் (ப்ருஹத்) | 2 | 8 | 6 | |
| விதோபலாதி சூர்ணம் | 2 | 0 | 5 | |
| ஸுதர்சன சூர்ணம் | 1 | 8 | 3 | 1 |
| ஹிங்க்வஷ்டக சூர்ணம் | 1 | 8 | 3 | 1 |

மாத்திரைகள்

| | | ரூ. | |
|---|---|---|---|
| ஆனந்த பைரவவடி புட்டி 1 | (50 மாத்திரை) | 0 | 1 |
| இச்சாபேதிவடி ,, | ,, | 1 | |
| காஞ்சநார குக்குலு ,, | ,, | 1 | 1 |
| க்ரிமிக்நவடி ,, | (25 மாத்திரை) | 1 | 1 |
| கோரோசநாதி குடிகா,, | (50 மாத்திரை) | 1 | |
| கோக்ஷுராதி குக்குலு,, | ,, | 1 | |
| சந்திரப்ரபாகுடிகா ,, | ,, | 3 | |
| சிரச்சூலாந்தகவடி ,, | (25 மாத்திரை) | 2 | |
| த்ரிபலா குக்குலு ,, | (50 மாத்திரை) | 0 | 1 |
| பித்தாந்தகவடி ,, | ,, | 2 | |
| பூர்ணசந்திரோதயரஸம்,, | (30 மாத்திரை) | 5 | |
| யோகராஜகுக்குலு ,, | (1 தோலா) | 2 | |

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| வாதகஜாங்குசவடி | ,, (50 மாத்திரை) | 1 | 8 |
| ஜலமஞ்ஜரீ ரஸம் (மஹோதரத்துக்கு) (25 மாத்திரை) | | 15 | 0 |
| ஜ்வரமுராரி | ,, (50 மாத்திரை) | 1 | 0 |
| ஸந்நிபாத பைரவி | ,, ,, | 2 | 8 |
| ஸூதிஜன் | ,, (30 மாத்திரை) | 4 | 0 |
| ஸூரணவடி (சார்ங்க. ம. அத்.7) | (50மாத்திரை) | 1 | 12 |
| ஸ்வச்சந்தபைரவி | ,, ,, | 2 | 0 |
| ஹரீதகிவடி | ,, ,, | 1 | 0 |

லேஹ்யங்கள்.

| | 6 அ. ரூ. | அ. | 1 பவுண்டு ரூ. | அ. |
|---|---|---|---|---|
| குடபிப்பலீ (ப்ருஹத்) | 1 | 4 | 3 | 2 |
| கூஷ்மாண்ட லேஹ்யம் | 1 | 8 | 3 | 12 |
| பில்வாதி லேஹ்யம் | 1 | 12 | 4 | 4 |
| ஜம்பீர ரஸாயனம் | 1 | 8 | 3 | 12 |
| ஸூரண கந்த லேஹ்யம் | 1 | 10 | 4 | 0 |

க்ருதங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| கல்யாணகக்ருதம் | 2 | 0 | 5 | 0 |
| சாகலாதிக்ருதம் | 2 | 8 | 6 | 4 |
| பலக்ருதம் | 2 | 8 | 6 | 4 |
| ப்ராஹ்மீக்ருதம் | 2 | 0 | [illegible] | [illegible] |

[illegible]

| | | | | |
|---|---|---|---|---|
| அர்க்க [illegible] | 1 | 12 | 4 | 8 |
| நாராயண தைலம் | 3 | 4 | 8 | 0 |
| நிர்குண்ட்யாதி தைலம் | 2 | 0 | 5 | 0 |
| லாக்ஷா சந்தநாதி தைலம் | 3 | 0 | 7 | 8 |
| ஹிங்க்வாதி தைலம் (3 அவு. ரூ. 1—4—0) | 2 | 4 | 5 | 8 |

ஆஸவாரிஷ்டங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| அசோகாரிஷ்டம் | 1 | 4 | 3 | 2 |
| அச்வகந்தாரிஷ்டம் | 1 | 4 | 3 | 2 |
| கதிராரிஷ்டம் | 1 | 4 | 3 | 2 |
| குடஜாரிஷ்டம் | 1 | 8 | 3 | 12 |
| சந்தனாஸவம் | 2 | 4 | 5 | 8 |
| சாரிபாத்யரிஷ்டம் | 1 | 2 | 2 | 12 |
| தசமூலாரிஷ்டம் | 1 | 8 | 3 | 12 |
| திராக்ஷாரிஷ்டம் | 1 | 4 | 3 | 2 |
| பப்பூலாரிஷ்டம் | 1 | 8 | 3 | 12 |
| பலாரிஷ்டம் | 1 | 4 | 3 | 2 |
| பிப்பல்யரிஷ்டம் | 1 | 8 | 3 | 12 |
| ரோஹிதகாரிஷ்டம் | 2 | 0 | 5 | 0 |
| லோஹாஸவம் | 1 | 8 | 3 | 12 |
| வாஸாரிஷ்டம் | 1 | 4 | 3 | 2 |
| விடங்காரிஷ்டம் | 2 | 0 | 5 | 0 |

இரஸ—லோஹௌஷதங்கள்.

| | 1 தோலா விடை ரூ. | அ. |
|---|---|---|
| அப்ரக பஸ்மம் (100 புடம் செய்தது) | 12 | 0 |
| அயஸ்காந்த ஸிந்தூரம் | 12 | 0 |
| சங்க பஸ்மம் | 1 | 8 |
| சிலாஜது பஸ்மம் | 15 | 0 |
| தாளக பஸ்மம் | 3 | 0 |
| பிரவாள பஸ்மம் | 2 | 0 |
| மகரத்வஜம் | 15 | 0 |
| மண்டூரபஸ்மம் | 5 | 0 |
| மௌக்திக பஸ்மம் | 65 | 0 |
| லோகநாத ரஸம் (இரண்டாவது சார்ங்க. ம.) | 4 | 0 |
| வராட பஸ்மம் | 0 | 12 |
| வாதாக்னி குமாரம் | 6 | 0 |
| வித்த மகரத்வஜம் | 25 | 0 |
| ஸ்வர்ண வங்கம் | 15 | 0 |
| சங்கத்திராவகம் (அவு. 1-க்கு) | 2 | 0 |

லேபம் அல்லது களிம்புகள்.

| | 1 அவுன்ஸ் | | 6 அவுன்ஸ் | |
|---|---|---|---|---|
| கந்தகலேபம் | 0 | 12 | 4 | 0 |
| காஸீஸாதி லேபம் | 0 | 10 | 3 | 4 |
| சததௌதக்ருதம் | 0 | 6 | 2 | 0 |
| சந்திரகலாலேபம் | 1 | 8 | 8 | 0 |
| தசாங்கலேபம் (சூர்ணம்) | 0 | 8 | 2 | 8 |
| மதூச்சிஷ்டாதிலேபம் | 0 | 12 | 4 | 0 |
| ரஸோத்தமாதி லேபம் | 0 | 14 | 5 | 0 |
| ஜாத்யாதிக்ருதம் | 0 | 12 | 4 | 0 |

முன்னதாக அறிவித்தால் வேறு எந்த சாஸ்த்ரீய [illegible] செய்து அனுப்பப்படும்.

## ஆர்யன் பார்மஸியாருடைய விசேஷ ஔஷதங்கள்.

**அஜீர்ண கேஸரீ:**—எல்லாவிதமான அஜீர்ணத்தையும், காமாலையையும், அம்லபித்தம் என்கிற வயிற்றுப் புளிப்பையும், வயிற்றுளைத்தலையும் நிவ்ருத்தி செய்யக்கூடிய உப்பு. ஒரு டப்பியின் விலை ரூ. 2—8—0

**ஆயுஷ்ய ரஸாயனம்:**—வெகு மதுரமான பல வர்த்தக ஔஷதம். ஒவ்வொரு தேக்கரண்டியளவான ஆயுஷ்ய ரஸாயனமும் ஒவ்வோர் அவுன்ஸ் இரத்தத்தை விருத்திசெய்ய வல்லது. சிறுகுழந்தைகளுக்கும் பலஹீனர்களுக்கும் வெகு உபயோகமானது. விலை புட்டி 1-க்கு ரூ. 3—4—0.

**கனஸாரம்:**—காலராவென்கிற விஷூசியைத் தடுக்கவும், நிவர்த்தி செய்யவும் முற்றிலு முபயோகமான திராவகம். வயிற்றுப்பஸம் வயிற்று நோய் இவை தீரும். தொண்டையைப்பற்றிய இருமல் முதலிய வியாதியிலும் வெகு உபயோகமானது. புட்டி 1-க்கு ரூ. 2.

**கனஸாரவடி:**—அதிஸாரம், சீதபேதி இவைகளில் வெகு சிலாக்கியமாக குணந்தரும் மாத்திரை. காலராவில் கனஸாரத்துடன் இதையும் உபயோகிக்கவேண்டியது அவசியம். பலமான வயிற்றுப் போக்குகளில் கனஸாரம், கனஸாரவடி இரண்டையும் சேர்த்து உபயோகிப்பதால் விசேஷ குணம் உண்டு. விலை 30 மாத்திரை ரூ. 1.

**[illegible]ராகாந்தக லேபம்:**—கடுமையான சொறி சிரங்குகளுக்கும், படை வியாதிக்கும், இதர சர்மரோகங்களுக்கும் வெகு சிலாக்கியமான மேல்பூச்சு. விலை டின் 1-க்கு அணா 12.

**ச்யவனப்ராச லேஹ்யம் (ஆர்யன்):**—ச்வாஸப்பைகள், இருதயம் இவற்றிற்கு நல்ல வலிவைத் தாக்கூடியதும், ச்வாஸாசய வியாதிகளை நிவர்த்தி செய்யக்கூடியதுமான மிகப் பிரஸித்திபெற்ற லேஹ்யம். 1 டின் (6 அவுன்ஸ்) விலை ரூ. 1—8—0.

**தந்தசோதினி** அல்லது ஆர்யன் பற்பொடி:—பற்களிலுள்ள ஸகல தோஷங்களையும் போக்கி அவற்றிற்கு பலம் தருவது. டப்பி 1-க்கு அணா 4. 12 டின் அடங்கிய பெட்டியின் விலை ரூ. 3.

**தாம்பூல ரஞ்ஜநீ:**—தாம்பூலத்துடன் உபயோகிக்க வெகு சுகமாயிருக்கும் மாத்திரை. வாயில் ஒருவாறு சுவாஸனையுண்டாம். தொண்டைக்கம்மல், ஜலதோஷம் முதலியதிலும் நல்ல குணம் தரக்கூடியது. 50 மாத்திரை [illegible]டங்கிய புட்டி 1-க்கு அணா 12.

DECEMBER 1921

**த்ரிவ்ருத் குளிகை:**—மலபந்தத்தினால் கஷ்டப்படுபவருக்கு இந்த மாத்திரை மிகப் பிரயோஜனமுள்ளது. வயிற்றில் கிருமிகளையும் போக்கவல்லது. விலை 50 மாத்திரை ரூ. 1.

**நித்யானந்த ரஸம்:**—யானைக்கால், கைகால் முதலியவற்றில் இதர துர்நீரேற்றம் இவைகளை குணப்படுத்தும் பிரஸித்தமான ஔஷதம். ஒரு புட்டி விலை ரூ. 2.

**பஞ்சதிக்த ரஸக்ரியை:**—மலேரியா வென்கிற விஷஜ்வரம், ஜ்வரக்கட்டி, ஜ்வரத்தினாலேற்பட்ட இரத்தக்குறைவு இவற்றிற்கு சிலாக்கியமான ரஸாயனம், ஆங்கில ஆயுர்வேதப் பிரமுகர்களால் கொண்டாடப்பட்டது. விலை ரூ. 1—12—0.

**ப்ருங்காமலக தைலம் (ஆர்யன்):**—மூளையையும், பொதுவில் தேஹத்தையும் குளிரச் செய்யக்கூடிய இத்தைலம் ஸ்நானம் செய்வதற்கும், தலைமயிர்களுக்குத் தடவுவதற்கும் பிரசஸ்தமானதென்று எங்கும் பிரஸித்தி பெற்றிருக்கிறது. பித்தமயக்கம், ஒற்றைத்தலைவலி இவையும் தீரும். மயிர் நரைத்தலையும் தடுக்கும். விலை புட்டி 1-க்கு ரூ. 1—5—0.

**மதுதமனம்:**—மதுமேஹம் என்கிற நீரிழிவு ரோகத்தை நிவர்த்தி செய்ய இது ஒன்றே ஏற்ற மருந்து. நீர் ரோகமுள்ள பலர் இதை யுபயோகித்து குணமடைந்திருக்கிறார்கள். விலை 50 மாத்திரை யடங்கிய பு[illegible] 1-க்கு விலை ரூ. 5—8—0.

**மேஹாரி:**—மேஹவட்டை, சீழ்மேஹம், மூத்[illegible] மார்க்கத்தில் அழற்சி இவற்றால் வருந்துகிற புருஷ[illegible]ளுக்கும், பெரும்பாடு என்கிற வெள்ளையாலும், க[illegible]ப்பை அழற்சியாலும் வருந்துகிற ஸ்த்ரீகளுக்[illegible] இது மிகவும் பிரயோஜனமுள்ள மாத்திரை. 100 ம[illegible]த்திரைபுட்டி ரூ. 2—12—0.

**ராஜ ம்ருகாங்கவடி:**—க்ஷய ரோகங்களுக்கு [illegible]ற்ற மருந்தென்று ஸகல வைத்திய சாஸ்திரஞ்ஞர்க[illegible]ளும் புகழப்பெற்றது. இதை ஆயுஷ்ய ரஸாயனத்துட[illegible] உபயோகித்தால் இன்னும் விசேஷ பலன் உண்டாகு[illegible] விலை 50 மாத்திரைபுட்டி ரூ. 5.

**விச்வவாதாரி தைலம்:**—பிரஸித்தமான தான்[illegible]தர தைலம், நாராயண தைலம் இவற்றின் கூட்[illegible] தைலம். பார்ச்வவாயு, கீல்வாயு, மூளையின் சோ[illegible] முதலியவற்றில் உள்ளுக்கும் வெளிக்கும் உ[illegible] [illegible]க்கக்கூடிய மிகவும் பிரயோஜனமுள்ள தைலம். வி[illegible] புட்டி 1-க்கு ரூ. 3—8—0.

**ஸர்வ ஜ்வராரி:**—மலேரியா வென்கிற விஷஜ்வ[illegible] ஸந்நிபாத ஜ்வரம், இன்ப்ளுயின்ஸா வென்கிற [illegible] ஜ்வரம், கபவாத ஜ்வரம் முதலிய ஸகல ஜ்வரங்களி[illegible] மிக நல்ல பலன் தரக்கூடிய இந்த மாத்திரை ஒவ்வொ[illegible]வருடைய வீட்டிலும் கையிருப்பில் இருக்கவேண்[illegible]யது. விலை 50 மாத்திரை புட்டி ரூ. 1—12—0.

**ஸித்தாஞ்ஜனம்:**—அநேகவிதமான கண்ணோய்க[illegible] நிவர்த்தி செய்து பெயர் பெற்றது. நாசியினுள் உ[illegible]டாகும் கோளாறுகள், காதுவலி, தொண்டையைப்[illegible]றிய நோய்கள் இவற்றிலும் உபயோகிக்கக்கூடி[illegible] ஔஷதம். தலைவலி, மார்வலி, இதர கீல்வாயு மு[illegible]லிய நோவுகள் முதலியவற்றிலும் மேலுக்குத் தேய்க்[illegible] மிகவும் உபயோகமானது. 1 அவு. புட்டி 1-க்கு வி[illegible] ரூ. 1.

ஆர்யன் பார்மஸி, 48, வெள்ளாழத் தெருவு,
வேப்பேரி போஸ்ட், மதராஸ்.

# புஸ்தக வகுப்பு

## சார்ங்கதர ஸம்ஹிதை

சீர்திருத்தப்பெற்ற இரண்டாம் பதிப்பு.

ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் முதன் முதல் வெளி[வந்துள்ள] ஆதிகாலத்திய ஆயுர்வேத வைத்திய நூல். ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

இவ்வைத்தியக் கிரந்தம் மூன்று கண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

1. பூர்வ கண்டத்தில்:—ஆயுர்வேத பரிபாஷை, ஔஷதாதிகளின் விவரம், தீபன-பாசன-ரேசநாதி குண விசேஷங்கள், தேஹதத்துவ ஸம்பந்தமான அம்சங்கள், ரோகஸங்க்யை, மற்றும் அருமையான அநேகம் விஷயங்கள் 7-அத்தியாயங்களைக் கொண்டு விவரிக்கப்பட்டிருக்கின்றன.

2. மத்தியம கண்டத்தில்:—ஸ்வரஸம், க்வாதம், பாண்டம், கல்கம் முதலிய கஷாயவகைகளும், சூர்ணம், குளிகைகள், பாண்டங்கள், தைலங்கள், கிருதங்கள், ரஸௌஷதங்கள், பஸ்ம முறைகள், தாதுமாரண சுத்தி முறைகள், ஆஸவங்கள், அரிஷ்டங்கள் முதலிய ஔஷத நிர்மாண முறைகளும் 12 அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

3. உத்தர கண்டத்தில்:—கிருதபானம், ஸ்வேத சிகித்ஸை, வமன சிகித்ஸை, விரேசன சிகித்ஸை, வஸ்தி சிகித்ஸை (எனிமா), நஸ்யவிதி, கண்டூஷாதிவிதி, ரத்தத்தை வெளிப்படுத்தும் முறை, நேத்திர சிகித்ஸை முதலான மிகவும் உபயோககரமான சிகித்ஸா க்ரமங்கள் எளிதாகச் செய்யக்கூடிய வகையில் 13-அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆக இக்கிரந்தத்தில் மொத்தம் 32 அத்தியாயங்கள் அடங்கியிருக்கின்றன.

விவரமாக வியாக்கியானம் ஒவ்வொரு பக்கத்திலும் உண்டு. முகவுரை மிகவும் விசேஷமானது. விஷய அகராதி விரிவானது. டபுள்கிரௌன் என்னும் அளவில் உயர்ந்த காகிதத்தில் சுமார் 450 பக்கங்களில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஸாதாரண பைண்டு விலை ரூ. 3. முழுக் கலிகோ பைண்டு ரூ. 4.

## அஷ்டாங்க ஹ்ருதயம்.

முதற் பாகம். 52 அத்தியாயங்கள் கொண்டது.

ஸூத்திர-சாரீர-நிதாந ஸ்தாநங்கள் அடங்கியது.

ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது

ஸூத்திர ஸ்தாநத்தில்:—ஆயுஷ்காமீயம், தினசர்யை, ருதுசர்யை, ரோகங்கள் உண்டாகாத வழி, த்ரவத்திரவ்ய விஞ்ஞாநம், அந்நஸ்வரூப விஞ்ஞாநம், அந்நரக்ஷை, தோஷாதி விஞ்ஞாநம், சோதநாதி குண முள்ள திரவ்ய ஸ்வரூபவிவரணம், ஸ்நேஹம், ஸ்வேதம், வமந-விரேசநம், வஸ்தி, நஸ்யம், தூமபாநம், கண்டூஷாதிகள், அஞ்ஜநாதிகள், தர்ப்பண-புடபாகங்கள், யந்திரவிதி, சஸ்திரவிதி, ஸிராவ்யதை, சஸ்திர கர்மம், க்ஷாராக்னி விதிகள் முதலிய அநேகம் விஷயங்கள் 30 அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

சாரீர ஸ்தாநத்தில்:—கர்ப்போற்பத்தி, கர்ப்ப வியாபத், அவயவாதிகளின் தத்துவங்கள், மர்ம விவரணம், விக்ருத சாரீர விஞ்ஞாநம், தூதபரீக்ஷை முதலிய சரீர தத்துவாதி ஸம்பந்தமான விஷயங்கள் 6 அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

நிதாந ஸ்தாநத்தில்:—ஜ்வரம், இரக்த பித்தம், காஸம், ச்வாஸம், ஹிக்கா (விக்கல்), க்ஷயம், மதமென்னும் வெறி, அர்சஸ் என்னும் மூலம், அதிஸாரம், கிரஹணீ, மூத்திர க்ருச்சிரமென்னும் நீர்ச்சுருக்கு முதலியவை, பிரமேஹம், வித்ரதி, அண்ட வ்ருத்தி, குல்மம், மஹோதரம் முதலிய உதரத்தைப்பற்றிய வியாதிகள், பாண்டு, சோகை, குஷ்டம், ச்வித்ர மென்னும் வெண் குஷ்டம், வாதரோகங்கள் முதலிய ரோகங்களின் காரண-லக்ஷணாதிகள் 16-அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

மேலும் முகவுரையும், ஒவ்வொரு பக்கத்திலும் வியாக்யாநமும், விஸ்தாரமான விஷய அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிராசீன யந்திர சஸ்திரங்களென்ன, சரீர தத்துவங்களென்ன இவற்றை விளக்கும் சித்திரப் படங்கள் அநேகம் அச்சிடப்பட்டிருக்கின்றன. வைத்திய கலாநிதியின் அளவில் 450 பக்கங்களு மேல் கொண்டது.

தற்கால விலை:—ஸாதாரண அட்டைபைண்டு ரூ. 8

முழுக் காலிகோ அழகான பைண்டு ரூ. 10 0

## அஷ்டாங்க ஹ்ருதயம்.

இரண்டாம் பாகம். 28 அத்தியாயங்கள் கொண்டது.

சிகித்ஸா-கல்ப ஸ்தாநங்கள் அடங்கியது.

சிகித்ஸா ஸ்தாநத்தில்:—ஜ்வரசிகித்ஸை, இரக்த-பித்த சிகித்ஸை, காஸ சிகித்ஸை, ச்வாஸ சிகித்ஸை, இராஜயக்ஷ்ம (க்ஷய) சிகித்ஸை, சர்தி (வாந்தி) இருதய ரோக சிகித்ஸைகள், மூல (அர்சஸ்) சிகித்ஸை, அதிஸார சிகித்ஸை, கிரஹணீ சிகித்ஸை, மூத்திராகாத சிகித்ஸை, பிரமேஹ சிகித்ஸை, வித்ரதி சிகித்ஸை, அண்டவ்ருத்தி சிகித்ஸை, குல்ம சிகித்ஸை, மஹோதரம் முதலிய உதர ரோகங்களின் சிகித்ஸைகள், பாண்டுரோக சிகித்ஸை, ச்வயது (சோகை) சிகித்ஸை, குஷ்டரோகம் முதலிய சர்ம வியாதிகளின் சிகித்ஸைகள், வாத ரோகங்களின் சிகித்ஸை இவை முதலிய அநேகம் வியாதிகளின் சிகித்ஸா விஷயங்கள் 22-அத்தியாயங்களில் விஸ்தாரமாக விவரிக்கப்படுகின்றன.

கல்ப ஸ்தாநத்தில்:—வமந கல்பம், விரேசந கல்பம், வமந-விரேசநங்களாலுண்டாகும் தீங்குகளைப் பரிஹரிக்கும் கல்பம், வஸ்தி கல்பம், வஸ்திப் பிரயோகத்தாலான வியாபத் பரிஹார கல்பம், பேஷஜ கல்பம் இவை முதலிய வித்தௌஷத சிகித்ஸா முறைகள் 6-அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

மேலும் ஒவ்வொரு பக்கத்திலும் வியாக்யானமும், விஸ்தாரமான விஷய அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வைத்திய கலாநிதியின் அளவில் 250 பக்கங்களுக்கு மேல் கொண்டது.

ஸாதாரண அட்டை பைண்டு விலை ரூ. 3 12.

முழுக் காலிகோ பைண்டு ரூ. 4 8.

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்.

"நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்"

# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

A TAMIL MONTHLY JOURNAL OF MEDICINE AND SANITATION

EDITED BY
Ayurveda Bhushanam
PANDIT M. DURAISWAMI AIYANGAR,
Senior Physician in charge S.K.P.D. Hospital

பத்திராதிபர்:
ஆயுர்வேத பூஷணம்
பண்டிட் எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
எஸ். கே. பி. டி. ஆஸ்பத்ரியின் பிரதான டாக்டர்

Vol. VIII. புஸ்தகம் 8. | துன்மதி௵ மார்கழி௴ DECEMBER. 1921. | No. 12 ஸஞ்சிகை 12

18 NOV 1922 MADRAS

பொருளடக்கம். பக்கம்.

டைடல் பேஜும் வருஷாந்த அட்டவணையும் ...1-4
விசேஷ வியாஸங்கள்:—
சுதேசவைத்தியமுறை:— அதன் முற்கால தற்கால நிலைமைகள்: கே. சிவ ஸுப்ரமமணியம் ... 113
காஸரோகம்:—ஜி. கண்ணுசாமி வைத்தியர். ... 116
ச்வாஸரோகம்:—என். கேசவாசார்யலு, ஆயுர்வேத வைத்தியர், ... 117
பாம்புக்கடி வரலாறுகளைப்பற்றிய சில நிர்வசநம்—டாக்டர் மணிராம், எல். எம். எஸ், ... 119
பத்திராதிபருடைய வியாஸங்கள்:—
ஆயுர் வேதா பிவ்ருத்தியில் சில யோசனைகள் ... 12
நமது வாசக நேயர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு ... 129
கடிதங்கள்:—ச்வாதம் என்றால் என்ன; மலபந்தத்தில் ஹிதமான உணவுகள்; வஸ்திமுறை. ... 132
ஔஷதங்களும் சிகித்ஸையும்;—தேள் கொட்டுதலுக்குச் சிகித்ஸைகள்; அயம் மனிதருக்கு முக்கிய உணவு; நாட்பட்ட மலபந்தத்திற்கு; நித்திரையின்மைக்குப் பரிஹாரம்; குழந்தையின் பிணிக்குத் தாயை யடித்தல், வெங்காயம். ... 133
பலவகைக் குறிப்புகள்:—இரைப்பையில் மயிர்ப்பந்து; க்ஷய ரோக நிவாரணத்திற்கான ஸாதநங்கள்; வங்காள கவர்ன்மெண்டும் ஆயுர்வேதமும்; பாம்புக்கடிக்கு ஒரு நிச்சயமான சிகித்ஸை; ஒட்டிய தாடை; ஹரித்வாரத்தில் இருஷிகுல ஆயுர்வேத கலாசாலை. ... 135
மாதவநிதாநம்:—

## முக்கிய அறிவிப்பு

இந்த ஸஞ்சிகையோடு வைத்திய கலாநிதியின் 8-வது வால்யம் முடிவு பெறுகிறது. மற்ற விஷயங்களுக்கு இந்த ஸஞ்சிகையின் 129-வது பக்கத்திற் பிரசுரிக்கப்பட்டுள்ள "நமது வாசக நேயர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு" என்கிற விஷயத்தை ஒவ்வொரு சந்தாநேயரும் கவனிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

ADVERTISEMENTS.

# அஷ்டாங்க ஹ்ருதயம்.

முதற் பாகம்.

ஸூத்திர-சாரீர-நிதாந ஸ்த்தாநங்கள் அடங்கியது

ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது

ஸூத்ர ஸ்த்தாநத்தில்:—ஆயுஷ்காமீயம், தினசர்யை, ருதுசர்யை, ரோகங்கள் உண்டாகாதவழி, திரவத்திரவ்ய விஞ்ஞாநம், அந்நஸ்வரூப விஞ்ஞாநம், அந்ந ரக்ஷை, தோஷாதி விஞ்ஞாநம், சோதநாதி குணமுள்ள திரவ்ய ஸ்வரூப விவரணம், ஸ்நேஹம், ஸ்வேதம், வமந-விரேசனம், வஸ்தி, நஸ்யம், தூமபாநம், கண்டூஷாதிகள், அஞ்ஜநாதிகள், தர்ப்பண-புடபாகங்கள், யந்திரவிதி, சஸ்திரவிதி, ஸிராவ்யதை, சஸ்திர கர்மம், க்ஷாராக்னிடவிதிகள் முதலிய அநேகம் விஷயங்கள் 30-அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

சாரீர ஸ்த்தாநத்தில்:—கர்ப்போற்பத்தி, கர்ப்ப வியாபத். அவயவாதிகளின் தத்துவங்கள், மர்ம விவரணம், விக்ருத சாரீர விஞ்ஞாநம், தூதபரீக்ஷை முதலிய சரீர தத்துவாதி ஸம்பந்தமான விஷயங்கள் ஆக இவை முதலியவை 6-அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

நிதாந ஸ்த்தாநத்தில்:—ஜ்வரம், இரக்த பித்தம், காஸம் ச்வாஸம், ஹிக்கா (விக்கல்), க்ஷயம், மதமென்னும் வெறி, அர்சஸ் என்னும் மூலம், அதிஸாரம், கிரஹணீ, மூத்திர க்ருச்ச்ர மென்னும் நீர்ச்சுருக்கு முதலியவை, பிரமேஹம், வித்ரதி, அண்டவ்ருத்தி, குல்மம், மஹோதரம் முதலிய உதரத்தைப்பற்றிய வியாதிகள், பாண்டு, சோகை, குஷ்டம், ச்வித்ர மென்னும் வெண்குஷ்டம், வாதரோகங்கள் முதலிய ரோகங்களின் காரண-லக்ஷணாதிகள் 16-அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

ஆக இந்த முதற்பாகத்தில் 52-அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. முகவுரையும், ஒவ்வொரு பக்கத்திலும் வியாக்யாநமும், விஸ்தாரமான விஷய அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிராசீன யந்திர சஸ்திரங்களென்ன, சரீர தத்துவங்களென்ன இவற்றை விளக்கும் சித்திரப்படங்கள் அநேகம் அச்சிடப்பட்டிருக்கின்றன. வைத்திய கலாநிதியின் அளவில் 450-பக்கங்களுக்கு மேல் கொண்டது. விலை ரூபா. 5-0-0.

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்-

---

# அஷ்டாங்க ஹ்ருதயம்

இரண்டாம் பாகம்.

சிகித்ஸா—கல்ப ஸத்தாநங்கள் அடங்கியது.

ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

சிகித்ஸா ஸ்த்தாநத்தில்:—ஜ்வரசிகித்ஸை, இரக்த-பித்த சிகித்ஸை, காஸ சிகித்ஸை, ச்வாஸ சிகித்ஸை, இராஜயக்ஷ்ம (க்ஷய) சிகித்ஸை, சர்தி (வாந்தி) இருதயரோக சிகித்ஸைகள், மூல (அர்சஸ்) சிகித்ஸை, அதிஸார சிகித்ஸை, கிரஹணீ சிகித்ஸை, மூத்திராகாத சிகித்ஸை, பிரமேஹ சிகித்ஸை, வித்ரதி சிகித்ஸை, அண்டவ்ருத்தி சிகித்ஸை, குல்ம சிகித்ஸை, மஹோதரம் முதலிய உதர ரோகங்களின் சிகித்ஸைகள், பாண்டுரோக சிகித்ஸை, ச்வயது (சோதை) சிகித்ஸை, குஷ்டரோகம் முதலிய சர்ம வியாதிகளின் சிகித்ஸைகள், வாதரோகங்களின் சிகித்ஸை, இவை முதலிய அநேகம் வியாதிகளின் சிகித்ஸா விஷயங்கள் 22-அத்தியாயங்களில் விஸ்தாரமாக விவரிக்கப்படுகின்றன.

கல்ப ஸ்த்தாநத்தில்:—வமந கல்பம், விரேசந கல்பம், வமந-விரேசநங்களா லுண்டாகும் தீங்கூப் பரிஹரிக்கும் கல்பம், வஸ்தி கல்பம், வஸ்திப் பிரயோகத்தாலான வியாபத் பரிஹார கல்பம், பேஷஜ கல்பம் இவை முதலிய ஸித்தௌஷத சிகித்ஸா முறைகள் 6-அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

ஆக இந்த இரண்டாம் பாகத்தில் 28 அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு பக்கத்திலும் வியாக்யானமும் விஸ்தாரமான விஷய அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வைத்திய கலாநிதியின் அளவில் 250 பக்கங்களுக்கு மேல்கொண்டது. விலை ரூ. 3-12-0,

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்.

"நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்"

# வைத்திய கலாநிதி

ஒரு வைத்திய சுகாதாரப்-பத்திரிகை

# THE VAIDYA KALANIDHI

The only Tamil Journal of Medicine, Hygiene and Sanitation

EDITED BY

AYURVEDA BHUSHAN

Pandit M. DURAISWAMI AIYANGAR, A. K. A. C.

Diplomaed Ayurvedic Doctor; Chief Physician in-charge S. K. P. D. Ayurvedic Hospital; Translator of "Sarangadhara Samhita", "Ashtanga Hridaya, Madhava Nidana", etc., into Tamil, Examiner, All-India Ayurveda Vidya Pitta's Vidvat Examinations and Vice President, The All-India Ayurveda Vidya Pitta, etc., etc.

18 NOV 1922

எட்டாம் புத்தகம்

[ரௌத்ரி௵ தை௴ முதல் துன்மதி௵ மார்கழி௴ வரையில்.]

Vol. viii.

[From January to December 1921.]

MADRAS:
The "Vaidya Kalanidhi" Office,
VEPERY.
1921.

All Rights Reserved.

# INDEX.

## TO VOL. VIII.

### Original Articles.


PAGE

**Albumen or Ojas.**
Pandit H. Subbaraya Sastri ... 53
**Anæmia.**
G. Kannusami Vaidyar ... 12
**Aspect in Disease.**
K. V. Padmanabhan, Ayurvedic Physician. 43
**Asthma.**
N. Kesavacharlu 117
**Ayurvedic System of Surgery.**
The Late Vaidya Ratnam Pandit D. Gopala Charlu. 1
**Bodily Defences against Disease.**
K. Natarajan, L.M. & S. ... 38
**Bronchitis.**
G. Kannusawmi Vaidyar ... 116
**Dysmenorrhoea.**
G. Kannusami Vaidyar ... 56
**Fruits, their food value and use in diseases.**
W. Krishnaswami Row, Sub-Assistant Surgeon (Retired). 84
**Jeneral care of Infants.**
Dr. A. Manicka Mudaliar, Medical Practitioner. 87
**How to avoid Influenza.**
M. S. Aiyangar, Medical Practitioner 81
**Importance of Early Diagnosis of Cancer in Women.**
Dr. A. R. Anfranc, M.R.C.S., L.R.C.P., & C. 61
**Indigenous Medicines.**
K. Sivasubramanyam 113
**Injurious Effects of Anger.**
W. Krishnaswami Row, Hospital Assistant (Retired). 12
**Intestinal Worms.**
G. Kannusami Vaidyar ... 89
**Malaria.**
K. Subrahmanyam, Ayurvedic Physician 3
**Menstrual troubles of a Female patient.**
Dr. A. Nanjunda Aiyar, L.M.P. ... 10
**Our Children's Diet.**
G. Kannusami Vaidyar ... 9
**Prevention and cure for Cholera and Bowel complaints.**
V. A. Swaminathan, L.M. & S. ... 2
**Prevention and Treatment of Constipation.**
G. Kannusami Vaidyar ... 65
**Prevention of Infant Mortality.**
G. Kannusami Vaidyar ... 36
**Some Tales of Insanity.**
Dr. K. J. Dholakia, L.M. & S. ... 5
**Verdict about snake-bite stories.**
Dr. Maniram, L. M. & S. 119
**Water and its uses.**
The Late Vaidya Ratnam Pandit D. Gopalacharlu. 58


### Leading Articles, &c.


PAGE

A Dirty Tongue ... 73
Ayurvedic and Tibbi College, Delhi ... 43
Breath and Be Warm ... 16
Committee on the Indigenous Systems of Medicine. 100
Correspondences 21, 48, 74, 105, 132
Drugs and Therapeutics 22, 49, 77, 106, 133
Fly-A Disease Carrier ... 69
Importance of Psychology in Medicine. 46
Medicine in India ... 66
Notes and Items of Interest 23, 51, 79, 108, 134
Registration of Indigenous Medical practitioners. 71
Report of Dr. Koman on Indigenous Systems of Medicine. 18
Re-search Committee ... 65
Suggestions for the Improvement of the Ayurvedic System. 91,124
To our Readers 129
Treatment for Diarrhoea and Dysentery by the Indications of the Pulse. 42
Why People are Ill? 14


# அட்டவணை

## எட்டாவது புஸ்தகம்.

### விசேஷ வியாஸங்கள்


ஒரு ஸ்த்ரீயின் ஆர்த்தவ க்கோளாறு:—டாக்டர் ஏ. நஞ்ஜுண்ட ஐயர் எல். எம். பி. 10
ஓஜோதாது:—பண்டித எச். சுப்பராயசாஸ்த்ரி 53
கனிகள் உணவாகவும் வியாதிநிவாரகமாகவும் உபயோகமாதல்;—டப்ளியூ. கிருஷ்ணஸ்வாமி ராவ், ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜன் 84
காஸரோகம்:—ஜி. கண்ணுசாமி வைத்தியர் 116
குடலிலுண்டாகும் கிருமிகள்:—ஜி. கண்ணுசாமி வைத்தியர் ... ... 89
கோபத்தினால் விளையும் தீவினைகள்;—டாக்டர் டப்ளியூ கிருஷ்ணஸ்வாமி ராவ் ... 12
சரீரத்திற்குள்ள இயற்கைச் சக்தி:—கே. நடராஜன், எல். எம். எஸ். ... ... 38
சல்யதந்திரம்:—வைத்தியரத்னம் பண்டித டி. கோபாலாசார்லு ... ... 1
சிசுமரணத்தைத் தடுத்தல்;—ஜி. கண்ணுசாமி வைத்தியர் ... ... 36
சில உந்மாதரோகிகளின் உண்மைக் கதைகள்:—டாக்டர் கே. தோலாக்யா, எல் எம். எஸ். 5
சிசுக்களைப் பரிபாலிக்கும் பொது முறை:—டாக்டர் ஏ. மாணிக்க முதலியார் ... 87
சுதேசவைத்திய முறை:—கே. சிவஸுப்ரமணியம் ... ... 114
ச்வாஸரோகம்:—என். கேசவாசார்யலு ... 117
நமது குழந்தைகளின் உணவு:—ஜி. கண்ணுசாமி வைத்தியர். ... ... 9
பாண்டு ரோகம்:—ஜி. கண்ணுசாமி வைத்தியர் 82
பாம்புக்கடி வரலாறுகளைப்பற்றிய சில நிர்வசநம்:—டாக்டர் மணிராம்... ... 119
வாத கபஜ்வரத்தைத்தடுக்கும் வகை:—எம். எஸ். ஐயங்கார், ஆயுர்வேத டாக்டர் ... 81
மல பந்தத்தைத் தடுப்பதும் சிகித்ஸிப்பதும்:—ஜி. கண்ணுசாமி வைத்தியர் ... 65
ருது சூலை ரோகம்:—ஜி. கண்ணுசாமி வைத்தியர் 56
வியாதியில் ரிஷ்டங்கள் என்கிற சிலதோற்றங்கள்:—கே. வி. பத்மநாபன், ஆயுர்வேத டாக்டர் ... ... ... 41
விஷமஜ்வரம்:—கே. சுப்பிரம்மணியம், ஆயுர்வேத டாக்டர் ... ... 3
விஷூசி முதலியவயிற்று ரோகங்களைத் தடுப்பதும் பரிஹரிப்பதும்:—டாக்டர் வி. ஏ. ஸ்வாமிநாதன், எல். எம், எஸ். ... 25
ஜலமும் அதன் உபயோகமும்.—வைத்தியரத்னம் பண்டித டி. கோபாலாசார்லு ... 58
ஸ்த்ரீகளின் வல்மீக வியாதியை ஆரம்பத்திலேயே பரிசோதித்து அறிவதன் ஆவச்யகம் டி. ஏ. ஆன்ப்ரான்க். எம். ஆர் ஸி. எஸ். எல். ஆர். ஸி. பி. ... ... 61


### பத்திராதிபருடைய வியாஸங்கள்


பக்கம்

அழுக்கடைந்த நாக்கு 73
ஆயுர்வேதத்தைப்பற்றி டாக்டர் கோமன் 18
ஆயுர்வேதத்தை விருத்திசெய்வதற்கான சில யோசனைகள் 124
ஆயுர்வேத பரிசீலனைக் கமிட்டி 65
ஆயுர்வேத முறையை விருத்தி செய்யும் வகை 91
இந்தியாவில் வைத்திய முறை 66
சுதேச வைத்திய பரிசீலனைக் கமிட்டி 100
டில்லி ஆயுர்வேத யூனானி கலாசாலை 43
தேசிய வைத்தியர்களைப் பதிவு செய்தல் 71
நமது வாசக நேயர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு 12
நாடி நடைக்குறிகளை அநுஸரித்து அதிஸாரத்திற்கும் சீதபேதிக்கும் சிகித்ஸை 42
முறைப்படி மூச்சுவிட்டு உடலின் உஷ்ணத்தைக் காப்பாற்றிக்கொள்க 16
வியாதியைப் பரவச்செய்யும் ஈ 69
வைத்தியத்தில் மனஸ்தத்துவ சாஸ்திரத்திற்குற்ற பிராதாந்யம் 46
ஜனங்கள் ரோகிகளாவானேன்? 14


### கடிதங்கள்


பக்கம்

அங்காரக தைலம் 48
அலரி வேர் 48
ஆயுர்வேத பரீக்ஷைகள் 105
கநகஸுந்தர ரஸம் 76
கலா ஆஜார் 74
குடற் கோளாறு 105
க்வாதம் என்றால் என்ன? 132
சிசுஸம்ரக்ஷணை 75
சிறு குழந்தைகளுக்கேற்ற விரேசனௌஷதம் 22
ச்யவநப்ராசம் முதலியது 106
நரம்புச்சிலந்திக்குப் பரிஹாரம் 75
பக்ஷவாதம். 21
ப்யூமிகேஷன் 9
மருந்து 48
மலபந்தத்தில் இதமான உணவுகள் 132
யோகராஜகுக்குலுவும் க்ருத்ரஸீவாதமும் 21
வஸ்திமுறை 133
வேப்பம் பிசின் 76

## ஔஷதங்களும் சிகித்ஸையும்


அதிஸாரத்தில் குழந்தைகளுக்கு ஏற்ற குளிகை 23
அயம் மனிதருக்கு முக்கிய உணவு 134
ஆடாதோடை தேள்விஷத்திற்கு 77
ஆமவாதத்தில் தேனீயின் விஷம் சிறந்தஔஷதம் 78
ஆமை ஓட்டு பஸ்மம் 50
ஓமம் குடிப்பழக்கத்தைப் போக்கும் 50
கடுகெண்ணெயைத் தேய்த்துக் கொள்ளுதல் 108
கந்தக எண்ணெயும் கீல்வாயுவும் 23
காயம் கர்ப்பஸ்ராவத்தைத் தடுக்கும் 108
குழந்தையின் பிணிக்குத்தாயை யடித்தல் 134
சேராங்கொட்டை நரம்புச் சிலந்திக்கு 78
ச்ருங்க பஸ்மம் 77
தக்காளியும் மதுமேஹமும் 22
தசமூலதைலம் 106
தாளக பஸ்மமுறை 77
தேனுக்கு பல்யகுணம் 23
நவாசாரம் தேள் முதலியது கொட்டுவதைப் போக்க 107
நாட்பட்ட மலபந்தத்திற்கு 113
நித்திரையின்மைக்குப் பரிஹாரம் 134
நீலாஞ்ஜநமும் விஷமஜ்வரமும் 49
பித்த ஜ்வரத்திற்குபயோகமான த்ரிவ்ருத் சூர்ண முறை 57
மான்கொம்பு பஸ்மம் 70
மேதோரோகத்தில் அயம் 50
யூகலிப்டஸ் இலையும் மது மேஹமும் 107
விக்கலில் லவங்காதி சூர்ணம் 107
வெங்காயம் 134
ஜம்பூ வென்கிற நாவலின் குணங்களும் உபயோகங்களும் 77
ஜலம் அஜீர்ணௌஷதம் 23
க்ஷயரோகத்தில் சால்மூக்ரா எண்ணெய் 78


## பலவகைக் குறிப்புகள்


அதிஸாரத்திற்குப் பரிஹாரம் 24
ஆமதோஷமென்பதென்ன 104
ஆயுர்வேத ஔஷத பரிசீலனை 23
ஆயுர்வேதத்திற்கு ஆதரவு பீஹாரில் 79
இடுப்புவலிக்கு ஓர் எளிய சிகித்ஸை 51
இந்தியன் மெடிகல் ஸர்வீஸ் பரீக்ஷை 79
இரைப்பையில் மயிர்ச்சுருள் 134
எல்லா இந்திய ஆயுர்வேத மஹாமண்டலம் 108
எனது ஸந்தோஷம் 51
ஒட்டிய தாடை 135
ஒரு புதிய ஆஸ்பத்ரிக்கப்பல் 52
ஒரு ஸர்வபக்ஷகர் 79
குழந்தைகளின் தேஹக்கோளாறுகளையும் தேவைகளையும் தெரிந்துகொள்ளும் வகை 52
குடலிற் சென்ற கூர்மையான வஸ்துவை வெளிப்படுத்தல் 20
சூதகசன்னிக்கு ஒரு சிறந்த பரிசோதனை 109
சூரியவெளிச்சம் சிறந்த ஔஷதம் 24
தலைச்சுற்றல் அல்லது மயக்கத்துக்குப் பரிஹாரம் 109
தேசிய வைத்திய விமர்சக ஸமிதி 108
தேஹதாதுக்களின் உற்பத்தியும் அழிவும் 108
நிகில பாரத ஆயுர்வேத ஸம்மேளநம் 24
பம்பாயில் சுதேசவைத்திய பரிசீலனை 108
பாம்புகடிக்கு நிச்சயமான சிகித்ஸை 185
மேதோரோகமும் மது மேஹமும் 50
வங்காள கவர்ன் மென்டும் ஆயுர் வேதமும் 135
வாயால் மூச்சுவிடுவதாலான தீமை 82
விவாஹத்தின் பலன் 30
ஜப்பானில் வீடுகளுக்கு வெள்ளையடித்தல் 109
க்ஷயரோக பரிஹாரத்திற்கான ஸாதநங்கள் 135


---




## ஆயுஷ்ய ரஸாயநம்

### தேஹ பலத்தை விருத்தி செய்யும் மதுரமான ஔஷதம்.

ஆயுஷ்ய ரஸாயநம் எனகிற இவ்வருமைபான ஔஷதம் உணவு குடலில் நன்கு ஜீர்ணித்து இரத்தத்திற் சேருவதற்கு உதவி செய்கிறது. தேஹ போஷணையை விருத்தி செய்கிறது. க்ஷீணமாகும் தேஹ தாதுக்களை மீண்டும் சரிப்படுத்தி பலப்படுத்தி விடுகிறது. ஆகவே, க்ஷயரோகத்தில் இதை உபயோகிப்பது மிகவும் நல்ல தென்று தேர்ந்த சிகித்ஸகர்கள் கூறுகிறார்கள். இது மூளைக்கும், நரம்புகளுக்கும் சிறந்த உணவு, ஆகவே நரம்புத்தளர்ச்சி, பார்ச்வ வாயு முதலிய வாதரோகங்கள், மூளை பல ஹீனப்படுதல் இவற்றிற்கு ஆயுஷ்ய ரஸாயநம் வெகு அநுகூலமானது, புத்தியையுழைத்து வேலை செய்பவர் ஆயுஷ்ய ரஸாயநத்தை உபயோகிப்பதால் வெகு ஸந்தோஷமாகத் தமது வேலையை எளிதிற் செய்து முடிப்பர். இருதயம் பலஹீனமாயிருந்தால் அக்கோளாறைப் போக்கி, இருதயத்தை பலப்படுத்துவதற்கு ஆயுஷ்யரஸாயநந்தான் உத்தம மருந்து. "ஆயுஷ்யரஸாயநம் எல்லாவற்றினும் மேலாகச்செய்யக்கூடிய சிறந்த குணம் தாதுபுஷ்டியே; ஸ்த்ரீ-புருஷர்கள் நல்ல சக்தியைப் பெறுவதற்கு இதை உபயோகிப்பது விசேஷம். இரத்தத்தைச் சுத்தி செய்து, பாண்டுரோகம், சொறி சிரங்குகள், மற்றுமுள்ள தோலைப்பற்றிய கடுமையான வியாதிகள் இவற்றை நிவ்ருத்தி செய்வதும் ஆயுஷ்யரஸாயநமே. வெளிறியும் இளைத்தும் வெகு பல ஹீனப்பட்டுள்ள குழந்தைகளுக்கு ஆயுஷ்யரஸாயநம் ஏற்ற மருந்து. இது ஸ்த்ரீகளின் கர்ப்பாசயக் கோளாறுகளை சமநம் செய்து, அவர்களின் ஆரோக்கியத்தையும் விருத்தி செய்யும். இவ்வொரு ஔஷதத்தில் முன் குறிப்பிட்ட பல அருங்குணங்கள் அடங்கியிருப்பதாகச் சுமார் 14 வருஷ அநுபவத்தின் பேரில் அறிந்து ஆயுர்வேத பூஷணம் பண்டித எம் துரைஸ்வாமி ஐயங்கார், எ. கே எ. ஸி. அவர்கள், பொது ஜனநன்மையைக் கோரி இங்ஙனம் இவ்வௌஷதத்தை வெளியிட முன்வந்தார்.

இதன் விலை. ரூ. 3 0 0

ஆர்ய ஔஷதசாலை,
7, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி,
மதராஸ்.

---

## குளிர்ச்சியான தைலம்.

கண்கள் குளிரும் மூளை குளிரும் தேகம் குளிரும்.

முற்றிலும் சாஸ்திர முறைப்படி தயாரானது.

# ப்ருங்காமலக தைலம் என்பது இதன் சாஸ்த்ரீயப் பெயர்

தலைமயிரை வண்டு போல் கறுப்பாகச் செய்வதால் "ப்ருங்கம்" என்கிற சொல் இத்தைலத்தின் பெயரில் முதலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. தலை நரைத்தலை இத்தைலம் கிரமமாக மாற்றும். தலையில் உண்டாகும் சுண்டு, சொறி முதலியதைப் போக்கும். தலைச்சுற்றல், மயக்கம், ஒற்றைத்தலைவலி, கண் எரித்தல், கை கால்கள் எரித்தல் இவற்றையும் நிவாரணம் செய்யும். மூளை வேலை செய்பவர் இத்தைலத்தை அடிக்கடியும் தேய்த்துக் கொண்டுவந்தால் மூளைகுளிர்ந்து படிப்பாலுண்டாகும் மூளையின் சோர்வு நேரிடாம லிருக்கும். அனைவரும் ஸாதாரண எண்ணெயைத் தேய்த்துக் கொள்ளுவதற்குப் பதிலாக ப்ருங்காமலக தைலத்தையே உபயோகித்து வருவதால் உண்மையில் எண்ணெய் தேய்த்துக் கொள்வதால் அடையக் கூடிய முழுப்பலனையும் பெறுவார்கள். சுகமாக நித்ரையுண்டாகும்.

இத்தைலம் டிப்ளோமா பெற்ற ஆயுர்வேத சிகித்ஸகரான ஸ்ரீமான் ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார் எ. கே. எ. ஸி. அவர்களின் மேற்பார்வையில் தயார் செய்யப்பட்டது.

விலை புட்டி 1-க்கு ரூ 1-4-0

ஆர்ய ஔஷதசாலை,
7, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி, மதராஸ்

# "TAMILAHAM"

## தமிழகம்.

மலாய் நாட்டிற்கு ஒரே தமிழ்ப்பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இரு முறையாய், பிரதி புதன், சனிக் கிழமைகள்தோறும் வெளிவருகிறது. நம் தமிழ் நாட்டிலிருந்து பினங்கு, சிங்கப்பூர், மலாக்கா முதலிய பிரதேசங்களை உட்படுத்திய மலாய் நாட்டில் குடியேறவும் பிழைப்புக்காகவும் சென்றிருக்கும் 3-லக்ஷத்திற்கு மேற்பட்ட தமிழ்ஜனங்களின் நன்மைகளைக்கருதியும், உரிமைகளைக்காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது இது ஐக்கிய மலாய் நாட்டிலுள்ள கோலாலம்பூர், பத்து ரோட்டில், 186, 188, 190-ம் நெ. கட்டடங்களில் அமைக்கப்பெற்றிருக்கும் இண்டஸ்டிரியல் அச்சுக்கூட ஸ்வான்தாரர் ஸ்ரீமான் சி. செல்லத்தம்பி அவர்களால் தேர்ந்த தமிழறிவாளிகளைக்கொண்டு நடத்தப்படுவது. இது மலாய்நாடு, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுவதால் விளம்பரங்கள் செய்வதற்கு மிகவும் சிறந்த பத்திரிகையாகும். இதன் வருடச்சந்தா ரிங்கி 10-0-0, ஆறுமாதத்திற்கு ரிங்கி 5-5-0, மூன்று மாதத்திற்கு ரிங்கி 3-0-0, நீடித்த விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

| | |
|---|---|
| "TAMILAHAM" OFFICE, | மானேஜர், "தமிழகம்" ஆபீஸ், |
| No. 190, Batu Road, | நெ. 190, பத்து ரோட், கோலாலம்பூர், |
| Kuala Lumpur, | ஐக்கிய மலாய் நாடுகள். |
| (F. M. States.) | |



# KESARI'S THREE GEMS.

## கேஸரியின் இரத்ன திரயம்.

### LODHRA

**BEST UTERINE TONIC**

லோத்ர

ஸ்திரீகளுக்கோர் வரப்ரஸாதினி

ஸ்திரீகளுக்கு அநேக காரணங்களினால் ரஜோகர்ப்பாசயம் கெட்டு ருதுசூலை சம்பவிக்கிறது. இது ஸ்திரீகளுக்கு ஓர் பெரும் பூதமோ எனப் பயப்படக்கூடியது. இந்தக் கொடிய வியாதியுள்ளவர்கள் இன்னும் அநேக மர்ம வியாதிகளுக் கிரையாவதேயன்றி புத்திரபாக்கியமில்லாதவர்களாய்க்கூட இருக்கிறார்கள். இவ்வபாயமாகிய வியாதியை வேருடன் அறுப்பதற்கு எங்களிட "லோத்ர" அசமானமாகிய மருந்து.

இந்த 'லோத்ர' மேற்கூறிய வியாதியை நிவர்த்திப்பதேயன்றி காலத்தில் பஹிஷ்டையாகாமலிருப்பது, பஹிஷ்டை நின்று விடுவது, பஹிஷ்டை காலத்தில் ரஜஸ்வலை சரியாய் ஆகாமல், ஜாஸ்தியாய் அல்லது குறைச்சலாய் போவது, சோமரோகம், மேஹவியாதிகள், மூர்ச்சை, சந்தானமின்மை, தலைவலி, அஜீர்ணம், பலஹீனம், ரத்தஹீனம், சரீரம், ஸ்தூலித்திருப்பது, இளைத்திருப்பது, மலபந்தம், இருமல், விக்காக்கை முதலிய வியாதிகளை மிகவும் நம்பகமாய் நிவர்தித்து சரீரத்துக்கு காந்தியும் முகத்திற்கு தேஜஸையும் கொடுக்கின்றது.

ஆரியர்காள்! ஸ்திரீகளிடத்தில் அபிமானமுள்ள புருஷர்களெல்லாம் இவ்வவுஷத மணியை உபயோகிக்கச் செய்து அவர்கள் தேக சௌக்யத்திற்கு பாத்திரராய் இருப்பீர்களாக.

புண்ணிய க்ஷேத்திரயாத்ரை சந்தான ஹீனர்களாய் அரசமரபிரதக்ஷணம், ஆஞ்சநேய ப்ரதக்ஷணம், அநேக வையுபயோகித்து புத்திர பாக்கியமில்லவை செய்தும் பலனடையாமல் கடைசியில் எங்களிட "லோத்ர" பிரக்கிறார்கள்.

இதன் விலை பெரியபுட்டி ரூ. 3—[illegible] 1—10—0.

### AMRITA

**BEST BLOOD PURIFIER**

அம்ருத

இரத்தசுத்தி திராவகம்.

இவ்வவுஷதராஜம் லோகப்பிரசித்தமானபடியால் இதைக்குறித்து இங்கு விவரமாய் எழுதுவது அநாவசியமென்று தோன்றியபடியால் சுருக்கமாய் எழுதுகிறோம்.

இதனால் ரக்தக்ஷீணம், ரக்ததோஷம், அஜீரணம், இந்திரிய நஷ்டம், சுவப்னஸ்கலிதம், பலஹீனம் மலபந்தம், பாண்டு, காமாலை, சர்மவியாதிகள், சுகசங்கடங்கள், தலைவலி, கண் எரிச்சல், வயிற்றுவலி, விக்காக்கை, கீல்நோய், மேகரணங்கள் முதலிய வியாதிகள் அதிசீக்கிரமாய் நிவர்த்தியாவதே யல்லாமல் இது ரக்தத்தை சுத்தி செய்து பலஹீனம் எந்தக் காரணத்தினால் உண்டானபோதிலும் பெருங்காற்றி லடித்துக் கொண்டுபோகும் பருத்தியைப்போல் படாபஞ்சமாய் பரிக்கச்செய்யும்.

இதன் விலை பெரிய புட்டி ரூ. 3—0—0.
சிறிய புட்டி ரூ. 1—10—0.

### ARKA

**BEST CURE FOR INFLUENZA AND ALL OTHER FEVERS.**

அர்க்க

இன்புளுயன்சா முதலிய சர்வ ஜ்வர நிவாரணி.

இதனால், பிரதிதினம் வரும் ஜ்வரம், ஒருநாள் முறை ஜ்வரம், நின்று நின்று வரும். ஜ்வரம், புராண ஜ்வரம், மலை ஜ்வரம், குளிர் ஜ்வரம், இன்புளுயன்சா முதலிய சர்வ ஜ்வரங்களும் மூன்று வேளையில், நிவர்த்தியாகும். இந்த அவுஷதத்தை உபயோகிப்பதினாலேயே ஜ்வரக்கட்டிகள் அதிக ஆச்சரியமாய் மாயமாய்விடும். இவ்வவுஷதம் மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டபடியால் குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் எத்தகைய சந்தேகமுமின்றி உபயோகிக்கலாம்; தவிர இதனால் மலபந்தகம், சளிபிடிப்பு, அஜீரணம், தலைவலி முதலியவை நிவர்த்தியாகும்.

இதன் விலை புட்டி 1-க்கு ரூ. 1—8—0.

கே. என். கேஸரி, வைத்தியர் & வைத்திய சாலாதிகாரி,

"கேஸரிகுடீரம்" ஆயுர்வேத ஔஷதசாலை, 33, போலீஸ் கமிஷனர் ஆபீஸ் ரோட், எழும்பூர்.

விளம்பரக்காரருக்குக் கடிதம் எழுதுகையில் தயவுசெய்து வைத்தியகலாநிதியைக் குறிப்பிடுங்கள்.

**22 Gold Medals Awarded!!!**

# S. VAIDYA & Co.,

**MADRAS AND TRICHINOPOLY.**

## ஜிண்டான்

### ஜகப்பிரசித்திபெற்ற ஜிண்டான் மாத்திரை.

வெகு மேலான சுகந்த மாத்திரை.




சதா கைவசமிருந்தால் ஸகல உத்ஸாகத்துக்கும், தைரியத்துக்கும் எல்லா, வியாதி நிவர்த்திக்கும், சுருசுருப்புக்கும், விவேகத்துக்கும் காரணமாகிறது. இதின் உண்மை வாங்கி அநுபவித்தவர்கள்தான் அறிவார்கள். பெரிய பெரிய டாக்டர்கள் இதன் பெருமையைப் புகழ்வதின் காரணம் தெளிவாகிறது.

கையால் பிடுங்கிப்போடுவதை கோடாலிகொண்டு உட்படுத்திய அதுபோல் சுலபத்தில் கை... வெட்டுவார்கள் நிவர்த்திக்கும்... ஆரம்பத்திலேயே அடியோடே ...ன் பெருமைதெரியாமல் வியாதியை முதிர விட்டு சிரமப்படுபவருக்கு கர்மபலனே காரணம், இதுதான்.

## உண்மை. !!!

எல்லாக்கடைகளிலும் கேழ்க்கப் பெறலாம்: 260 மாத்திரைகளடங்கிய அழகான பொட்டளம் விலை ரூ. 1. இதில் கண்ணாடி வைத்த அழகிய டப்பி இனமாக வைத்திருக்கிறது. 65 மாத்திரையும் சாதா டப்பியுடன் 4. அணா. 15 மாத்திரை அடங்கிய பொட்டளம் 1. அணா.

ஹோல் ஏஜண்டுகள் :—

**எஸ். வைத்யா அண்டு கோ.,**

பார்க்டவுன், மதராஸ்.

பிராஞ்சிகள் :—

2, கொண்டி செட்டித்தெருவு, எஸ்பிளனேட், மதராஸ்.

சைனாபஜார் தெரு, திருச்சி கோட்டை.

N. B. —இவர்களிடம் ஸகல சுதேசி சாமான்களும், செண்டுகளும், குடும்ப மருந்துகளும், பிஸ்கட்களும், கூந்தல் தைலம், பல்பொடி மேலானது, பித்தளை மெழுகுவத்தி ஸ்டாண்டுகள், இங்கோ- எஸ்ஸென்ஸ் என்னும் குறுக்கின ஸத்துமசி-இத்துடன் 12 மடங்கு ஜலம் சேர்க்க மேலான மசி, ஸ்டீல் பேனா, பௌண்டென் பேனாக்களுக்கும் உபயோகமாகிறது. வேண்டியவற்றிற்கு எழுதினால் விவரம் அனுப்பப்படும்.

விளம்பரக்காரருக்குக் கடிதம் எழுதுகையில் தயவுசெய்து வைத்தியகலாநிதியைக் குறிப்பிடுங்கள்.


113


# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR:
Ayurveda Bhushan
Pandit M. Duraiswami Aiyangar, A. K. A. C.
Senior Physician-in-charge, S. K. P. D. Hospital.

பத்திராதிபர்:
ஆயுர்வேத பூஷணம்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
எஸ். கே. பி. டி. ஆஸ்பத்ரியின் பிரதான டாக்டர்.

புஸ்தகம் 7. Vol. VII. | துன்மதி௵ மார்கழி௴ DECEMBER 1921 | No. 12. ஸஞ்சிகை 12.


## THE INDIGENOUS MEDICINES

Their past and present Conditions.

சுதேச வைத்திய முறை

அதன் முற்கால-தற்கால நிலைமைகள்.

By. K. Sivasubrahmaniam
*Medical practitioner.*

முற்காலத்திலே, அதாவது இங்கிலீஷ்வைத்திய முறை இந்தியாவிலே வந்து தலைகாட்டுவதற்கு முன்னமே, நமது அருமையான ஆயுர்வேத யூனானி முறைகள் சீருடன் செழித்து வளர்ந்திருந்தன. இந்திய முறைகளையே அனைவரும் ஆதரித்து வந்தார்கள். ஆயுர்வேத யூனானி முறைகளே வியாதிக்ரஸ்தர்களுக்கு மிகவும் நன்மை பயக்கிவந்தன. ஆனால் மேற்குத்தேசத்து வைத்தியம் இந்தியாவில் பிரசாரத்திற்கு வந்தது முதலாக இந்து வைத்தியத்தின் பெருமையும், அதன் தத்துவங்களும், உபயோகங்களும் கிரமமாகக் குன்றிவரத்தலைப்பட்டன. அநேக ஜனங்களும் கவர்ன்மெண்டும் நமது சுதேசவைத்திய முறைகளை ஆதரிக்காமல் கைவிடலாயினர்; மேலும் மேல் நாட்டு வைத்தியத்தின் மாயையில் ஈடுபட்டு மயங்கிப் போயினர். இன்னும் கொஞ்சம் காலத்தில் சுதேசவைத்தியம் அடியோடு மறக்கப்பட்டு அழிந்து விடுமோவென்று அஞ்சவேண்டியிருக்குகிறது. இதற்கெல்லாம் முக்கிய காரணம் நம்மவர்களின் அலக்ஷ்யமும், அஞ்ஞானமும் என்று நான் சொல்லவேண்டும்.

இப்பொழுது ஏற்பட்டுள்ள மற்றோர் அனர்த்தம் இன்னும் முக்கியமாகக்கவனிக்கத்தகுந்தது. இக்காலத்தில் வேலையற்றுத் திண்ணை தூங்கிகளா யிருப்பவர்களும், ஒரு வேலைக்கும் பிரயோஜனமற்றுத் தான்தோன்றித் தம்பிரானாகத்திரிபவர்களும் திடீரென்று வைத்தியர்களாய் விடுகிறார்கள்! அவர்கள் அனுபவசாலிகளான தேற்சிபெற்ற வைத்தியர்களிடம் சாஸ்திரம் பயின்றதில்லை; அவர்கள் வைத்தியவாஸனையும் இல்லாதவர்கள்; வயிற்றுப்பாட்டுக்காக, வைத்தியத் தொழிலை ஆரம்பித்து, ஏதோ சில புஸ்தகங்களை அரை குறையாகப் படித்து வைத்தியர்களாக வெகு சுலபமாய்வெளிவந்து விடுகிறார்கள். தங்களைத்தாங்களே நேடிவ் டாக்டர்கள் என்றும் ஆயுர்வேத வைத்தியர்கள் என்றும் சொல்லிக்கொண்டு சுயேச்சையாக வெகு சீக்கிரத்தில் வைத்தியம் செய்யவெளிப்பட்டு விடுகிறார்கள். இவர்களில் சிலர் தமது வாசாலகத்தனத்தினால் அநேகஜனங்களை வஞ்சனை செய்து தமது பணப்பையை நிரப்பிக் கொள்ளுகிறார்கள். இது எவ்வளவு பரிதாபகர

மான விஷயம்! மேலும் சில வைத்தியர்கள், விளம்பரங்களையும் செய்து, அநேகம் விதமான அபிபாயக் காரியங்களைச் செய்கிறார்கள். ரோகிகளுடைய வியாதி நிலை தேஹநிலை முதலியவற்றை அறியாமலேயே அவர்களுக்கு ஏற்கனவேயுள்ள கோளாறுகளோடு, வேறு சில கோளாறுகளையும் உண்டு பண்ணுவதற்கும் இப்போலி வைத்தியர்களின் முயற்சி காரணமாகின்றது.

நேயர்களே! தற்கால ஸ்திதியைப்பற்றி சிறிதளவு குறிப்பிட்டேன். ஆர்யவைத்தியத்தின் பெருமை முற்காலத்தில் இருந்த நிலைமையை ஆராய்ந்து விசாரித்தோமானால் அது மனதில் ஓர் ஆச்சரியத்தையும் ஆத்திரத்தையும் உண்டுபண்ணும். நமது முன்னோர்கள் எல்லோரும் முதலில் பிரம்மசர்ய ஆச்ரமத்திற் புகுந்து, குருகுலவாஸம் செய்து, ஆத்மார்த்தத்திற்கு வேண்டிய நூல்களோடு கூடவே வைத்தியம் முதலிய சாஸ்திரங்களைக் கிரமமாகக் கற்றுவந்தார்கள். முன்னால் நாடி நடை விவரமும், தேஹதத்துவாம்சமும், பதார்த்த குணங்களின் தத்துவங்களும், ஸ்திரீ பால வைத்திய முறைகளும், ஔஷத நிர்மாண ரீதிகளும் ஆசார்யர்களுடைய கீழிருந்து கற்கப்பட்டு, அப்பால் குருமாரின் அநுமதியின் பேரில் சிலர் வைத்தியர்களாக முன்வருவது வழக்கம். அப்பொழுது அவர்கள் கூட தங்களைப் பெரிய வைத்தியர்களாகச் சொல்லிக் கொள்ள சிறிது அஞ்சுவார்கள். இங்ஙனம் கற்றுத்தேறிய பிறகு தமது அநுபவம் முற்ற முற்ற தங்களுடைய ஸொந்த முறைகளை வேறு பல அறிஞர்களின் உதவியின் பேரில் வெளியிட்டு, பிராசீன வைத்திய சாஸ்திரங்களை விருத்தி செய்து வந்தார்கள். இதனால் ஸாதாரண ஜனங்களுக்கும் வைத்தியர்களிடம் நல்ல நம்பிக்கை இருந்து வந்தது. அவரவர்கள் தம் தமது குடும்பத்திற்கு ஒவ்வொருவரை குடும்ப வைத்தியராகவும் ஏற்படுத்திக் கொண்டு, நமது தேசீயவைத்தியர்களை ஆதரித்து வந்தார்கள். ஆனால் இக்காலத்தில் சிறிது பாஷாஞ்ஞானம் இருக்கும் பக்ஷத்தில் ஏதோ இரண்டொரு வைத்திய நூல்களை மேலெழுந்தவாரியாகப் பார்த்து விட்டு சுயம் வைத்தியர்களாய் விடுகிறார்கள். இவர்களுக்குச் சிறிதும் அநுபவமாவது சாஸ்திரத்தில் ஆழ்ந்த அறிவாவது கிடையாது. ஜலத்தில் இறங்கி நீந்தக் கற்றுக் கொள்ளுவதற்குப் பிரயத்தனப்படாமலே, நீந்துவது இவ்விதமென்று ஒரு புஸ்தகத்தில் படித்துவிட்டு அவன் நீந்தத் தெரிந்து விட்டதாக ஆற்றில் உடனே இறங்குவது போல, இக்காலத்திய தமிழ் வைத்தியர்களின் தொழில் முறை அபாயம்விளைவிக்கக் கூடிய தென்பதில் ஸந்தேஹமில்லை.

இப்பொழுது நமது வைத்தியம் சீர்குலைந்து வருவதற்கு முக்கியமாக மற்றொரு காரணம் உண்டு. நமது வைத்தியர்கள் முறைப்படி சாஸ்திரம் [illegible] வைத்தியத் தொழிலில் புகுந்தவர் சுதேசவைத்திய முறைகளின் மீது குற்றங்குறைகளை அடிக்கடியும் கூறி இவ்வைத்திய முறையைப் புறக்கணித்து வரும்படி பலரையும் தூண்டுகிறார்கள். மேனாட்டு வைத்தியத்தைக் கற்றவுடனே தாம் கற்றதே ஒப்பற்ற சாஸ்திரமென்று நினைத்து ஏனைய சுதேசவைத்திய சாஸ்திரத்தில் ஆழ்ந்து கிடக்கும் தத்துவார்த்தங்களைப் படித்தறியாமலே அவைகளைத் தூஷிப்பதைக் கடமையாகக் கொள்ளுகிறார்கள். சில நாட்களுக்கு முன்பு இரண்டொரு ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜன்கள் இந்துவைத்திய முறைக்கு மூலாதாரமாயுள்ள வாதபித்த கபங்களைப்பற்றிய (த்ரிதோஷங்கள்) விஷயங்களை ஏளனமாக எழுதினார்கள்; அத்துடன் அவ்விஷயங்களில் நம்பிக்கைவைக்க வேண்டாமென்று பொது ஜனங்களையும் தூண்டி இரண்டொரு வியாஸங்கள் இந்துப்பத்திரிகையில் எழுதப்பட்டன. மேற்படியார்கள் அவ்விதம் எழுதியதற்குக் காரணம் நமது சாஸ்திரத்தில் அவர்களுக்குப் பரிசயம் சிறிதும் இன்



மையேயாம். ஒரு வைத்திய முறையைப் பயின்றவன், மற்றொருவைத்திய முறையை பூஷிக்கவோ தூஷிக்கவோ முயன்றால் அவனுக்கு அந்த மற்றொரு வைத்தியத்திலும் ஆழ்ந்த பரிசயம் வேண்டுமென்பது யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய விதியாகும்.

மற்றொரு விஷயம். இன்னமும் அநேக ஸாதாரணஜனங்களுக்கும்—ஏன் அரைகுறையாகக் கற்ற சில சுதேச வைத்தியர்களுக்குங் கூட சஸ்திர சிகித்ஸாமுறையும் பிரஸவசாஸ்திரமும் மற்றும் சில முக்கியமான பாகங்களும் இங்கிலீஷ் வைத்தியத்தில் அமைந்திருப்பது போல சுதேசமுறையில் அமைந்திருக்கவில்லையென்கிற ஸந்தேஹம் இருந்து கொண்டுவருகிறது. இந்து ஜனங்கள் எல்லா உயிர்களிடத்திலும் இரக்கம் காட்டும் இயல்பினர் என்பது மிகப் பிரஸித்தம். இவர்கள் தங்களுடைய நினைவிலும், கருத்திலும், எந்தவித ஆராய்ச்சி முறையிலும் தமக்கு இயற்கையிலேற்பட்ட இவ்விரக்கத்தன்மையை விட்டவர்களல்ல. நம் முன்னோர்கள் ரணவைத்தியம் செய்து வரும் போது, கூரிய கத்திமுதலிய ஆயுதங்களையுபயோகிக்காமல் வேறு உபாயங்களைக் கையாண்டுவந்ததாகத் தோன்றுகிறது. அக்காலத்தில் ஆயுதங்கள் தோன்றவில்லை. ஆனால் ஒருவிதத் துன்பமும் கொடுக்காததும், எளியோரும் வலியோரும் எளிதிற் கையாளும்படியான அநேக மூலிகைகளையும், கல்பமுறைகளையும் கண்டு பிடித்திருந்தார்கள்.

அச்வினீதேவதைகள் தேவவைத்தியர்கள் என்றும், இரணவைத்தியத்தில் அதி நிபுணர்கள் என்றும் பிரஸித்தியுண்டு. அவர்களுக்கு யஜ்ஞபாகம் கிடைத்ததற்கும் அவர்களுடைய இத்தொழில்திறமையே காரணம் எனக்கூறப்படுகிறது. யஜ்ஞபுருஷனுடைய தலை அறுபட்டுப்போக, அவனது சிரஸ்ஸையும் உடலையும் ஒட்டி அவனுக்குப் புநர்ஜீவநம் உண்டு பண்ணியவர் அச்வினீதேவர்களே. ஆகவே நமது வைத்திய முறையில் அநேகம் அபூர்வ வைத்தியதத்துவாம்சங்கள் ஆழ்ந்துகிடக்கின்றனவென்பதற்கு இத்யாதி முகாந்தரங்கள் ஸூசகங்களாம். இதைப்போலவே பிரஸவத்திற்கும் அநேக அரிய முறைகள் முன்னால் இருந்து வந்ததாகவே தெரியவருகிறது. கர்ப்பத்திலே இறந்துபோன பிண்டத்தை வெளியிலெடுக்க ஆயுர்வேதநூல்களில், (அஷ்டாங்க ஹ்ருதயாதிகளில்) அநேகம் ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆயுர்வேத முறைகளை நன்கு பரிசீலனைசெய்து, விஷயங்களை ஒன்றன்பின் ஒன்றாக அலசிப்பார்த்தால், மேனாட்டு வைத்தியமுறையில் காணாத வேறு அபூர்வ தத்துவங்களும் நமது சாஸ்திரத்தில் உண்டென்பது விளங்கும்.

[ஆயுர்வேதத்தில் சஸ்திர சிகித்ஸைக்குத் தேவையான ஆயுதங்கள் (சஸ்திரங்கள்) கூறப்படவில்லையென்று நமது நண்பர் எழுதுவது சரியல்ல. ஸுச்ருத ஸம்ஹிதையையும், அஷ்டாங்க ஹ்ருதயம் ஸூத்திரஸ்தாநத்தில் யந்திரவிதி சஸ்திரவிதி அத்தியாயங்களையும் நமது நண்பர் படிக்கவில்லையெனத் தோன்றுகிறது. கூர்மையான சஸ்திரங்களை வியாதி நிவாரணத்திற்காக உபயோகிப்பதாலேயே ஜீவகாருண்யத்திற் குறைந்தவர் என்று சஸ்திர சிகித்ஸகர்களைக் கூறுவது தவறு. வைத்தியசாஸ்திரம் முழுதுமே பொதுவில் ஜீவகாருண்யத்தை அஸ்திவாரமாகக் கொண்டு ஏற்பட்டது. உருவங்களிற் பலவாறான சிறியவையும் பெரியவையுமான அநேக சஸ்திரங்களும், யந்திரங்களென்கிற பலவகையான கருவிகளும், பந்தன முறைகளும் வெகு வியக்தமாக ஆயுர்வேதக்கிரந்தங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. மூலிகைகளைக் கொண்டே சஸ்திரசிகித்ஸை செய்வதென்பது அநுபவத்திற்கொவ்வாத விஷயம். விரணம் உண்டானவிடத்தில் மூலிகைகளைப்பிரயோகித்து விரணத்தைஆற்றலாம். பிளவுபட்ட அவயவத்தை மூலிகைகளின் பிரயோகத்தினால் ஒருக்கால் ஒருமிக்கச் செய்யக்கூடும். ஆனால் வித்ரதிமுதலியதை அறுக்கவும், உட்புகுந்துள்ள சல்யத்தை வெளியிலெடுக்கவும் சஸ்திர யந்திரங்கள் இல்லாமல் மூலிகைகளின் பிரயோகம் பயன்படமாட்டாது. கருப்பையில் முறைதவறாக அகப்பட்டிருக்கும் சிசுவையும், இறந்துபோன சிசுவையும் வெளிப்படுத்துவதற்கு கர்ப்பசங்குமுதலிய யந்திரங்களின் உதவி முற்றிலும் இன்றியமையாததென்பதை நமது நண்பர் கவனிப்பாராக. மற்ற விஷயங்களில் நம் நிருபநேயரது கொள்கை விரும்பத்தக்கதே. ப—ர்.]

## BRONCHITIS

### காஸ ரோகம்

By G. Kannuswami Vaidyar

நமக்கு ஸம்பவிக்கும் எண்ணிறந்த வியாதிகளுள் இது ஒரு துஷ்ட வியாதி. மனுஷ்ய தேஹம் ஜீவித்திருப்பதற்கே முக்கியம்சமாயுள்ள ச்வாஸ வேலையையே பாதிக்கும்படியான ரோகமானதால் இதை ஒரு துஷ்ட வியாதியெனக் கூறவேண்டியிருக்கிறது. ச்வாஸக் குழலின் கிளைகளுக்குள் அமைந்துள்ள சிலேஷ்ம கலைக்குக் காண்கிற ஒருவித அழற்சியால் இது பெரும்பாலும் ஸம்பவிக்கிறது. இதில் முக்கியமாய் இரண்டு விதமான பேதமுண்டு. ஒரு வியாதி ஜ்வரத்தோடு உக்கிரமாகக் காணும். மற்றொன்று ஜ்வரமில்லாமலே கண்டு வெகு நாட்களாகவும் நீடித்திருக்கும். இந்த வியாதி குழந்தைகளுக்குக் கண்டால் விலா எலும்புகளைத் தூக்கித் தூக்கிக் குழந்தைகள் மூச்சுவிடும். ஆகையால் அதை "அள்ளுமாந்தம்" என்று சொல்லுவார்கள். ச்வாஸக் குழலின் பெரிய கிளைகளுக்கு இந்த அழற்சி கண்டால், அதில் உண்டாகிற கபம் வெகு சுலபமாய் வெளிப்பட்டுவிடும். சிறியகுழல்களில் கண்டாலோ, அவற்றிலுண்டாகும் சிலேஷ்மம் வெளிப்படாமல், ச்வாஸம்விடுவதற்குத்தடையுண்டாய் வெகு ஸங்கடம் ஏற்படும். மேலும் இரத்தாசாயத்தின் வேலையும் விகற்பமடையும். ஆகவே இரத்தம் சுத்தியடைய வழியில்லாமற் போகிறது. அசுத்த ரத்தம் தேஹத்திற் சேர்ந்து அபாயகரமான நிலைமை நேரிடுவதுண்டு. வயது சென்ற மனிதருக்கும், சிறு குழந்தைகளுக்கும் காஸ ரோகம் கண்டால், முக்கியமாய் சிறு குழல்களே அழற்சியடைவது வழக்கம். ஆகையால் இவர்களுக்கே வைத்தியர்கள் வெகு ஜாக்கிரதையாகச் சிகித்ஸை செய்யவேண்டும். வயது சென்றவர்களுக்கு ஜ்வரமில்லாத காஸ வியாதி கண்டு நெடுநாட்கள் வரையில் உபத்திரவப்படுத்தும். சிலருக்கு இவ்வியாதி தீராமலே போய்விடுவதுமுண்டு. இக்காஸரோகத்தில் கபம் வெளிவராமலே வறட்டிருமலாகவும் இருப்பது வழக்கம். சிலருக்குக் கபம் தாராளமாகவும் வெகு அதிகமாகவும் வெளியாகும். வேறு சிலருக்குக் கபம் உண்டாய், அது வெகு கஷ்டப்பட்டு வெளி வருவதாயிருக்கும். கபம் தாராளமாய் அதிக அளவில் வரும்போது, அவ்விதம் வெளியாகிற கபத்தைக் குறைக்கவோ தடுக்கவோ முயற்சி செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் அஸாத்தியமான இதர வியாதிகளும் ஏதேனும் ஸம்பவித்து, மரணத்தை யளிக்கும். ரோகலக்ஷணங்களில் சிலவற்றை இங்கே குறிப்பிடுவதும் அவச்யமாகிறது.

இருமல் ஜ்வரம்:—இதில் கோழை அதிகமாய் வெளியாகும். மூச்சு அடைபடும். நெஞ்சில் குரு குருவென்கிற தொனியுண்டாகும். நாடி நடை தீவ்ரமாகும். ஆயாஸம் அதிகரிக்கும். மலச்சிக்கலும் காணும். இவை இதற்குண்டாகும் முக்கியமான குறிகளாம். ஆரம்பத்தில் கோழை கொஞ்சமாக நார்போல விழும்: பின்பு கிரமமாக அக்கோழை அதிகரித்துச் சீழ் போலாகும். ச்வாஸக்குழலின் பெரிய குழலுக்குக் கண்டால் ரோகிக்கு கஷ்டம் அதிகமாயிராது. சிறிய குழல்களுக்குக் காண்பதே மிகவும் கெடுதி பயக்கக் கூடியது. சிறிய குழல்களில் இவ்வியாதி கண்டிருக்கையில் ரோகி அனுபவிக்கும் கஷ்டம் வெகு கடுமையானது; ஆயாஸமும் அபரிமிதம். மேலும் இரத்தம் சுத்தியடைவது தடையுறுவதால், அசுத்த ரத்தம் தேஹத்திற் பரவத் துவக்கும்: அச்சமயம் உட்காரவாவது படுக்கவாவது நிற்கவாவது தோன்றாமல், நித்திராபங்கமும் உண்டாய், முகம் விம்மிக் கொண்டு திணறும். இது நாட்பட்ட வியாதியாயிருந்தால் பாதங்களிலும், காலிலும் வீக்கமும் காணும். பித்தம், பிதற்றல், புலம்பல், பிரமை முதலிய துர்க்குணங்களும் ஏற்பட்டு, பிராணாபாயமும் நேரிடும். மிகவும் மெல்லிய சிறுநாடிகள் போன்ற ச்வாஸக்குழல்களுக்கு வியாதி கண்டு, ச்வஸாநாளத்தினுட்புறக் கலைகளும் தடித்து, அக்குழல்களில் பிசின் போன்ற கபம் ஒட்டிக்கொண்டு விடுவதால், ச்வாஸம் உள்ளுக்கு வாங்கும்போது வாயு பிரவேசிக்க வழியில்லாமல் ச்வாஸ மார்க்கம் அடைபட்டு விடுவதாலே இவ்விதமான விபத்து ஏற்படுகிறது என்று கூறப்படுகிறது.

சிலர் காஸரோகத்தை க்ஷயமென்று அறியாமையால் கூறுகிறார்கள். க்ஷயரோகம் வேறு காஸரோகம் வேறு. இவற்றிற்குள்ள பேதங்களையும், வியாதி நிலைமைகளையும், தேஹக் கூறுபாடுகளையும், பிணியாளியின் மனோநிலைமையையும் தீர விசாரித்துணர்வதும் அததற்கேற்ப சிகித்ஸைகளைச் செய்வதும் அவசியம். வியாதிக்ரஸ்தரின் தேஹபலம் குறைவுபடாமல் கவனித்து நல்ல ஊட்டம் கொடுத்து போஷித்து வருவதே முக்கியமான சிகித்ஸையாம். கபத்தைக் கண்டிக்கும் மருந்துகளைக் கொடுப்பதும் அவசியம். நாட்பட்டகபரோகிகளுக்கு கபஹரமாகவும், உஷ்ணவீர்யமாகவுமுள்ள மருந்துகளைக் கொடுக்க வேண்டும். எப்பொழுதும் கோழையை அதிகமாய் வெளிப்படுத்துவதிலேயே முக்கியக் கருத்தாயிருக்கவும். கோழை தாராளமாக வெளிவரும்போது அதை நிறுத்தலாகாது. அப்படிச் செய்தால் சிலேஷ்மம் உள்ளேயே அடங்கிப்போய், ச்வாஸ வேலை வெகு கஷ்டமான நிலைமைக்கு வந்து வேறுவித கெட்ட குறிகளும் காணும். இதனடியில் காஸ ரோகத்திற்கு ஏற்ற சில மருந்துகளும் குறிப்பிடப்படுகின்றன. தேஹப் பிரக்ருதி முதலியதற்கு ஏற்றவாறு அவற்றுள் ஏதேனும் ஒன்றைக் கொடுத்து ரோகியைச் சிகித்ஸிக்கலாம். ஜ்வரத்தோடு கூடிய காஸரோகத்திலும் இவை இலகுவாகவும் சாந்தமாகவும் வேலை செய்து நல்ல பலன் தரக்கூடியவை. குப்பைமேனியின் ஸ்வரஸம், எருக்கம் வேரின் பட்டைத்தூள், மருக்களாங்காய், ஆடாதோடையிலையின் கஷாயம்; இவைகள் முக்கியமாய் காஸஹரமான ச்ரக்குகள்.

அல்லது சார்ங்கதர ஸம்ஹிதையில் கண்டிருக்கிற சரியான கைபாகமாகச் செய்த அடியிற்கண்ட ஔஷதங்களை ஜ்வரமில்லாத காஸ ரோகங்களில் கொடுக்கலாம் அவையாவன:—

1. பிப்பல்யாதி ரஸாயனம். 2. முசுமுசுக்கையிலையின் ஸ்வரஸம் 3. தூதுவளைக் ருதம் அல்லது தூதுவளைக் கஷாயம் 4. கண்டங்கத்திரிக் கஷாயம் 5. பிரவாளபஸ்மம். 6. விஷ்ணுக்கிராந்தி கஷாயம். கடைசியிற் குறிப்பிட்ட கஷாயத்தில் சிறிதளவு தேன் சேர்த்து உட்கொள்ளலாம். 7 ச்யவநப்பிராசம் கொடுத்தால் வியாதிபலம் குறைக்கப்பட்டு பிணியாளியின் தேஹபலமும் சீரடையும். [illegible] வியாதிக்ரஸ்தர்களுக்குப் பசுவின் பாலைக்காட்டிலும் ஆட்டுப் பாலையுபயோகிப்பதால் நல்ல பலன் உண்டாகலாம்.

பார்த்த

## ASTHMA.

### ச்வாஸ ரோகம்.

By N. Kesavacharyalu.
Ayurvedic Physician.

இது ச்வாஸம் என்றும், உப்பஸம் என்றும் வழங்கப்படும். முக்கியமாய் இந்த வியாதி ச்வாஸகோசங்களைப்பற்றியது. ஆகையால் இந்த ரோகவிஷயத்தில் எவரும் அஜாக்கிரதையாயிருக்கக் கூடாது. இதை அலக்ஷ்யம் செய்வதால் இவ்வியாதிமூலமாய் பிரபலமான அநாரோக்கியமும் உபத்திரவமும் உண்டாவதை நாம் அனைவரும் பார்த்து வருகிறோம். பிரபஞ்சத்தில் எத்தேசத்திலுள்ளவர்களிலும் பலருக்கு இந்த ரோகம் உண்டாகின்றது.

இவ்வுப்பஸ வியாதியில் ச்வாஸம் விடுவது வெகுகடினமாயிருப்பது ஸர்வஸாதாரணம். இந்த வியாதியில் முக்கியமாய் மூச்சு வாங்குவதும் மூச்சு விடுவதும் கோளாறடைந்து விடுகின்றன. இவ்வியாதியில் கபம் சேர்ந்திருப்

பதுமுண்டு, சேராமலிருப்பதுமுண்டு. கபம் சேர்ந்து இருமலுடன் கூடியதாயிருந்தால் அது "காஸ-ச்வாஸம்" என்றும், கபம் இல்லாமலே உப்பஸம் மாத்திரமாயிருந்தால் அது தனி "ச்வாஸம்" என்றும் வழக்கப்படும்.

இதுவன்றி இவ்வியாதியில் மிகவும் கஷ்டமாய் இருமலுண்டாதல், கடுங்கஷ்டமாய் மூச்சுவாங்கி விடுதல் ஆகிய இத்தொந்தரவுகள் நமக்கெல்லாம் தெரிந்த விஷயமே. முக்கியமாய் இவ்வுப்பஸ வியாதி பல ஸமயங்களில் வம்சபரம்பரையாகவோ, அல்லது பெற்றோரிடமிருந்து மாத்திரமேயோ பற்றுவது வழக்கம். இந்த வியாதி இரவு நேரங்களில் தனது கடுங் குறிகளைக் காட்டுவது இயக்கம்.

ரோகக் குறிகள்:—இந்த வியாதியில் ரோகியினுடைய சிரஸ்ஸில் ஊசிகுத்துகிறமாதிரி வலியுண்டாகும். பேசும்போது நாக்குத்தடையுறும். மூச்சு வாங்குவதும் விடுவதும் வெகு கடினமாகும். வயிறு விம்மிக்கொள்ளும். தேஹத்தில் தினவெடுக்கும். கண்கள் விறண்டு விழிக்கப்படுவது போலத் தோற்றும். தொண்டையிலும் ச்வாஸாசயத்திலும் புஸ்புஸ் என்கிற சப்தம் (அல்லது குர் குர் என்கிற சப்தம்) கேட்கப்படும். இரவு நேரங்களில் படுக்கவும் முடியாமல் உப்பஸம் வெகு கடுமையாகும். அப்பொழுது இரத்தாசய வேலையும் கஷ்டப்பட்டு நடைபெறும். இதனால் சிலஸமயத்தில் பிணியாளி தான் இறந்துபோகக் கூடுமென்ற நிலையடைவான். சிலருக்குத் தொண்டையில் அப்போதைக் கப்போது கபம் ஊறி வெளியாவதும், கபம் வெளிவராமலே சிரமப்படுவதும் உண்டு. இவ்வியாதிக்ரஸ்தர்கள் நித்திரையுறுவது அரிது. சில ஸமயத்தில் திடீரென்று பெருத்த ஆயாஸமும், இருதயத்தில் ஏதோ பாரம் சேர்ந்திருப்பது போன்ற உணர்ச்சியும், வாந்தியும் உண்டாவதுண்டு. இப்பிணியாளி உட்கார்ந்து கொண்டு (திண்டின் மீது மார்பைச் சாய்த்த வண்ணம் உட்கார்ந்து கொண்டு) இருப்பதை ஒருவாறு ஸௌகர்யமாகக் கருதுவான்.

ரோகி கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள்:--இந்த வியாதி கடுமையான நிலைமையைப் பெறுமலிருக்கையிலேயே, ரோகியானவன் தகுந்த ஔஷதமுபயோகிப்பதில் சிரத்தையெடுத்துக் கொண்டால் பெரும்பாலும் ஆரோக்கிய ஸ்திதியை மீண்டும் அடையக்கூடிய பாக்கியம் ஏற்படும். மேல் ச்வாஸமும் பொருமலும் உண்டாகும்போது தலையணைகளை அணைத்து உட்கார்ந்திருப்பது நன்மையே. அக்குள் பக்கமாகப் பெருவிரல்களை அழுத்தி வைத்து, மற்ற நான்கு விரல்களையும் தோள் பக்கமாகக் கெட்டியாக வைத்து, இறுகப் பிடித்துக்கொண்டிருந்தால், ஒருவாறு ஆயாஸம் குறையும். போஜனம் செய்ததும் எப்பொழுதேனும் ஆயாஸம் அல்லது இருமல் மிகுதியாயுண்டானால், உடனே உட்கொண்ட உணவை ஏதேனும் ஔஷதப் பிரயோகத்தினால் வாந்தி செய்வித்து வெளிப்படுத்தி விடுவதுதான் தகுந்த முறையாம்.

இதில் வைத்தியன் முதலிற் செய்ய வேண்டிய வேலை:—இருமலாலும்,உப்பஸத்தினாலும் கஷ்டப்படும் ரோகியின் மார்பினுள் ச்வாஸ நாளங்கள் அடைபட்டிருக்குமாகையால், அக்குழல்களின் த்வாரங்களில் வாயு நன்கு பிரவேசிக்கத் தகுந்தவாறு, கபம் முதலியதை வெளிப்படுத்த வேண்டியது வைத்தியனுடைய முதல் வேலையாகும். எந்த மருந்து கபத்தை வெளிப்படுத்தி, தேஹத்திற்கு தார்ட்யத்தையும் உண்டுபண்ணுமோ அவ்விதமான மருந்தே இந்த ரோகத்தில் வெகு அவசியமானது. இருமலுக்கு ஸாதாரணமாய் உபயோகமாகிற ஔஷதங்கள் ச்வாஸ ரோகத்திலும் பெரும்பாலும் பயன்படுவதாய் அறிக.



சிகித்ஸைகள்:—(a) திப்பிலி $\frac{1}{4}$ தோலா, இந்துப்பு $\frac{1}{4}$ தோலா, கண்டங்கத்திரிக்காய் (உலர்ந்தது) $\frac{1}{2}$ தோலா, கருஞ்ஜீரகம் $\frac{1}{2}$ தோலா, சிற்றுமுட்டிவேர் $\frac{1}{2}$ தோலா; இவற்றை வெகு மிருதுவாகச் சூர்ணம் செய்து தேனிற் குழைத்து 8 அல்லது 10 குன்றுமணி யெடையளவாக ஒரு யாமத்திற்கு ஒரு முறையாக உட்கொண்டால் தொண்டையிலுள்ள கபம் கழன்று, ச்வாஸம் விடுவதற்கு ஸௌகர்யமேற்பட்டு பிணியாளியின் ஆயாஸம் தீரும். (b) ஆமணக்கன்வேர், திப்பிலி இவ்விரண்டையும் ஸமயெடையா யெடுத்து சூர்ணம் செய்து, 6-நெல்லெடையளவாக இரண்டு மூன்று மணிக்கொரு தடவையாகத் தேனிற் கலந்துபயோகித்தாலும் நற்குணம் உண்டாகும். (c) பேய்த்தும்மட்டிக்காயில் ஒரு த்வாரம் செய்து அதில் சில மிளகுகளையும், இலவங்கங்களையும் போட்டு, த்வாரத்தை மூடி, அக்காயின் மீது சீலை செய்து, 20 அல்லது 25 வறட்டிகளில் புடமிட்டு, அப்பால் அந்தக் காயை விண்டு, அதனுள்ளிருக்கும் மிளகுகளையும், இலவங்கங்களையும் எடுத்து உலர்த்தி வைத்துக் கொண்டு, இந்த வியாதிக்ரஸ்தன் உபயோகித்து வர, கட்டிக் கொண்டிருக்கும் கபம் தாராளமாய் வெளிப்பட்டு உப்பஸமும் சுலபமாய் தீரும். ச்வாஸாசயத்திலுள்ள தோஷம் ஔஷத முட்கொண்டும் வெளிவராமற் போனால். அதற்கு துத்தூர தூபத்தை ச்வஸிக்கலாம். ஷை தூபம் பின்வருமாறு:-கருஊமத்தையிலையை உலர்த்தி, அதை நன்கு சூர்ணம் செய்து, அதில் ஓர் அணுவளவு பெட்லுப்பைச் சோத்துக்கலந்துகொள்ளவும். இப்பொடியை நெருப்புத்தழலில் போட்டு, அதிலிருந்துவரும் தூமத்தை உறிஞ்சலாம்; அல்லது அப்பொடியைக் காகிதத்திற் சுருட்டாகச் செய்து, அந்தப் புகையையாவது உறிஞ்சவும். இவ்விதம் பகலில் ஒரு தடவையும், முக்கியமாய் படுக்கைக்குப் போகும் முன்பு இரவில் ஒருதடவையும் தூமபானம் செய்ய ச்வாஸத்தினால் தொந்தரவு ஏற்படாமல் நித்திரையும் நன்கு உண்டாகும். ரோகி படுக்க முடியாமல் உட்கார்ந்து கொண்டே சிரமப்பட வேண்டிய அவசியமும் ஏற்படாது.

---

## VERDICT ABOUT SNAKE-BITE STORIES.

### பாம்புக்கடி வரலாறுகளைப் பற்றிய சில நிர்வசநம்.

By Dr Maniram, L. M. & S.
*Physician & Surgeon*

பாம்புக்கடியைப்பற்றிய பலவிதமான கதைகளை நான் ஒரு ஆங்கில தினசரிப்பத்திரிகையில் சில நாட்களுக்கு முன்பு படித்துவந்தேன். அவை யாவும் ஒருவாறு நூதனமாகவும், விரோதஸ்வரூபங்களாகவும் தோன்றின.

1. ஒருமநிதனிடமிருந்து விஷம் ஒரு ஸர்பத்தினிடம் பற்றிச் செல்லுவதாக [illegible] எவ்வளவு மூடத்தனமும்மிகப்பேதமையுமான கொள்கையோ யோசித்துப் பாருங்கள். 2. சிலர் சொல்லுவதாவது :—ஸர்ப்பங்களைப் பூஜித்தால், அதற்குப் பிரதிபலனாக அவை திரவியங்களைக் கொடுத்து உதவுகின்றனவாம்; அவை சிலநிதிகளை அல்லது புதையல்களைக் காத்துக் கொண்டிருக்கும். இந்த ஸர்ப்பங்கள் பூஜிக்கப்பட்டாலேயொழிய எவரையும் இநத நிதிகள் அல்லதுபுதையல்களிடம் எப்பொழுதும் அணுகவிடமாட்டா. வெகு செல்வவான்களாயிருந்தும் தர்மவிஷயத்தில் ஒரு பைசாவும் செலவு செய்ய மனம்வராமல் எவர் வெகு க்ருபணராயிருக்கின்றனரோ அவர்கள் மறுபிறப்பில் அந்தச்செல்வநிதியைக் காக்கும் பாம்புகளாகப் பிறந்திருப்பதாய் இந்துக்களின் புராண ரீதியாய் நம்பப்படுகிறது. 3. ஒரு ஸர்ப்பம் சுமார் ஒன்றரை அடி நீளமும், தலைமுதல் வால்வரை ஒரே சீரான பருமனுள்ளதாகவும், பனிபோல் நிறத்தில் வெண்மையாகவும் இருந்துவிட்டால்,

அது மற்றெல்லாவிதமான ஸர்ப்பங்களைக் காட்டிலும் வெகு சிறந்த ஜாதியாகக் கருதப்படுகிறது. இது ஒரு தேவத்தன்மைவாய்ந்த ஸர்ப்பமென்றும், இதற்கு உறைவிடமாயிருப்பது ஒரு புதையல் பூமியாகவே இருக்கவேண்டுமென்றும், ஒரு காட்டில் அல்லது ஒரு சுவரில் இப் பாம்பு காணப்பட்டால் அவ்விடங்களிலும் புதையல்கள் இருக்குமென்றும் நாம் தெரிந்துகொள்ளவேண்டுமோம். ஸாதாரணமாய் அவ்விதமான ஸர்ப்பம், முற்காலத்தில் பிரபலமான பிரபுக்கள் அல்லது கோடீச்வரர்கள் வஸித்து கிலமாகப் போன அரண்மனைபோன்ற வீடுகள் இருந்த பிரதேசத்திலேயே வஸிப்பது வழக்கமாம். இந்தவிதமான ஸர்ப்பங்களைஎவரேனும் தொந்தரவு செய்துவிட்டால், அதை மறக்காமல் நூற்றுக் கணக்கான மைல் தூரமும் ஓடிச் சென்று அவரைக் கடித்துக் கொன்றாலேயொழிய இவற்றிற்கு ஆறுதல் உண்டாவதில்லையாம். ஏதேனும் ஒரு சிறு பூச்சி தன்பக்கமாய் ஓடினால், அதைக்கூட அது ஸஹிக்காமல், அப்பூச்சியைப் பிடித்துக் கொன்று விட்டுதான் அது அமைதியடையும்.

4. ஒரு வெளுத்த ஸர்ப்பம் தன்னைக் கடிப்பதாக, அதிலும் முக்கியமாய் உடம்பில் இடது பக்கத்தில் ஏதேனும் ஒரு பாகத்தைக் கடிப்பதாகவோ, அல்லது தனக்கு இடதுபுறமாக வெளுத்த ஸர்ப்பம் இருப்பதாகவோ, அல்லது வேறு எங்கேயாவது ஓரிடத்தில் இருப்பதாகவோ இரவில் ஒருவன் ஸ்வப்னம் கண்டால் அவன் மிகுந்த திரவியங்களைப் பெற்று இலக்ஷாதிகாரியாக ஆய்விடுவான் என்று இந்துக்களின் ஜ்யௌதிஷசாஸ்திரம் கூறுகிறது. எவ்வளவுக் கெவ்வளவு இரவின் பின் நேரத்தில் (அதாவது விடியற்காலம் நெருங்க நெருங்க) இத்தகைய ஸ்வப்னம் காணப்படுகிறதோ, செல்வவானாக ஆகக்கூடியபலனும் அவ்வளவுக்கவ்வளவு ஸமீபித்ததாகவும் விசேஷமாகவும் இருக்கும். ஸர்ப்ப விஷயமாய் இதிஹாஸம் ஜ்யௌதிஷம் இவற்றிற்கு ஸம்பந்தப்பட்ட சில அம்சங்கள் மாத்திரம் இங்கு கூறப்பட்டன. அநுபவ ரீதியாய் இக்கோட்பாடுகள் எவ்வளவு தூரம் உண்மையில் பலிக்கக் கூடியவையென்று தத்துவஞ்ஞர்களால் தான் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

இனி மந்திரங்களால் பாம்புக்கடி சிகித்ஸிக்கப்படுவதைப் பற்றி வெகு புகழ்ந்து பேசப்படும் விஷயத்தைப்பற்றிய சில அம்சங்களைக் கவனிப்போம். மாந்த்ரிக சிகித்ஸைகளில் பலவேறு விதமான முறைகளைப்பற்றி நாம் சிறிது பேசப்புகுமுன், ஸர்ப்பஜாதிகளின் பல பேதங்களைக் குறித்து சில விஷயம் குறிப்பிட விரும்புகிறேன். முதலில் இதில் இரண்டு பெரிய வகுப்புகள் உண்டு; ஒன்று கடற்பாம்பு வகுப்பு, மற்றொன்று நிலப்பாம்பு வகுப்பு. கடற்பாம்புகள் விஷத்தன்மையில் மிகக் கொடியவையென்பதைச் சிலரே அறிந்திருப்பர். கடற்பாம்புகளில் ஸாதாரண இனத்தைச் சேர்ந்தவைகளின் விஷங்கூட நிலத்திலுள்ள நல்லபாம்பின் விஷத்தினும் எட்டுமடங்கு அதிக கொரேகுணமுள்ளதென்று கண்டறியப்பட்டிருக்கிறது நிலத்திலுள்ள பாம்புகளுள் அநேக விதமான ஸர்ப்பங்களும், பலவகையான சாரைளும், வெவ்வேறு விதமான விரியன்களும் உண்டு. இவற்றுள் ஒவ்வோர் இனத்திலுமுள்ள பலவகைப்பட்ட பாம்புகளுக்கும் அந்தந்த தேசத்தில் ஒவ்வொரு விதமான பெயர் வழங்கப்படும். இவை யாவும் உருவத்திலும், குணத்திலும் வெகுவித்தியாஸப் பட்டவைகளாயிருக்கின்றன. சில பாம்புகள் 15 அடிவரையில் நீண்டிருப்பதும் (கொங்கண தேசத்தில் அவ்வித ஜாதி விசேஷம்), சில ஒரு அடி அளவாகக் குறுகியிருப்பதும் உண்டு. அதாவது பலவகைப்பட்ட பாம்புகளும் நீளத்திலும் பலவேறு விதங்களாயிருக்கின்றன.

இவற்றுள் சில கறுப்பாகவும், வேறு சில கபில நிறமாகவும், வெண்கபில நிறமாகவும்,



மஞ்சள் நிறமாகவும், சாம்பல் நிறமாகவும், பிங்களவர்ணமாகவும், இலைப்பச்சையாகவும் இன்னும் பல வேறு நிறமாகவும் இருக்கின்றன. சிலவற்றின் தலையும் வாலும் சிவப்பாகவோ மஞ்சளாகவோ வெகு அழகாகப் பளபளத்தோ துலங்கும். சில பாம்புகளின் உடம்பு செதிள் செதிளாகவும், சிலவற்றின் உடல் பட்டைப்பட்டையானகோடுகளுள்ளதாகவும், சிலவற்றிற்கு வேறுவிதமான பலவகையாயுள்ள கோடுகளும் உண்டு. சில பாம்புகளின் வயிற்றுப்புறம் மாத்திரம் வெண்மையாகவோ, மஞ்சளாகவோ, கருமஞ்சளாகவோ, அல்லது வேறுவித நிறமாகவோ இருக்கும். சில பாம்புகளுக்கு ஒருவித கவசம் உடலோடு அமைந்திருக்கும். வேறு சில பாம்புகளுக்கு உடலின் இரு முனைகளிலும் வாய்கள்உண்டு; அவை இருதலைப்பாம்பு என்று வழங்கப்படுகின்றன. ஆகவே முன்னூறு விதங்களுக்குக் குறையாத பாம்பு இனங்கள் உண்டென்று ஏற்கனவே இது வரையில் நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம்: இத்தனை வகையான பாம்பு இனங்களில் எவெவை எவ்வெவ்விதமான சுபாவமுள்ளவையென்கிற பகுத்தறிவு பெரும்பாலும் பொதுஜனங்களுக்குக் கிடையாதென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு பாம்பினிடமும்குறிப்பிட்ட ஒவ்வொரு விசேஷ சுபாவம் உண்டென்பதை உண்மையில் அறிந்தவர் வெகு அரிது. ஆனால் ஜனங்கள் பொதுவாக எல்லாப் பாம்புகளும் விஷகுண முள்ளவையென்றும், எவனையேனும் பாம்புகடித்து விட்டால் அவன் இறந்துவிடுவான் என்றும் நம்புகிறார்கள். இவ்விதமான அறியாமையோடு, சில மந்திரவாதிகள் அவ்விதமான பாம்புக்கடியை எதையும் மந்த்ரித்து ஸ்வஸ்தம் செய்து விடுவதாக ஸ்தோத்திரம் செய்து வருகிறார்கள். ஒவ்வொருவரும் அடியிற் கூறும் விஷயத்தைக் கவனிக்கவேண்டும். அதாவது: சில பாம்புகளுக்குக் கடைவாயின் மேற்புறத்தில் இரண்டு பற்கள் கோரப்பற்களைப் போல நீண்டு வளைந்துவந்திருக்கும். ஆகவே இப் பாம்புகள், கடித்தவிடங்களில் அவற்றின் விஷத்தை வெகு எளிதிற் கொட்டிவிடமுடியாது. ஏனெனில், அவை கடவாய்ப் பற்களால் போதிய தசையைக் கௌவிக் கடித்தாலேயொழிய விஷம் கடிவாயில் விழமாட்டாது. அப்படிக் கடவாய்ப் பற்கள் சதையில் இறங்குவதென்றால், கோரப்பற்கள் இரண்டு பாரிசங்களிலும் ஒரு கொத்துச் சதையில் முதலில் ஆழமாயிறங்கும்படி பலமாகக் கடிக்கவேண்டும். அதன் பிறகுதான் கோரப்பற்களைவிடக் குறுகியவையான விஷப்பற்கள் சதையினுள் இறங்கி, அப்பால் அவற்றின் மூலமாய் கடிவாய்க்குள் விஷம் கக்கப்படவேண்டும். மனிதன் தூங்கிக் கொண்டிருந்தாலேயன்றி இவ்வளவு பலமாகவும் ஸாவகாசமாகவும், விஷப்பல் இறங்குமாறு ஸௌகர்யம் ஏற்படமாட்டாது. இல்லையேல் ஒருவனைப் பாம்பு கடிக்கையில், அவன் அப்பாம்பைப் பார்த்ததும் மிகத் திடுக்கிட்டு அலறி அவ்விடமிருந்து எழும்பி வெகு தூரத்திற் குதித்து ஓடிவிடுவது இயல்பல்லவா? ஆகையால் கோரப்பற்கள் சிறிது சதையில் பாய்வதற்கும் அவகாசமில்லாமலிருக்கையில் விஷப்பற்கள் இறங்கி விஷம் தேஹத்தில் பற்றுவது எளிதல்ல. மேலும் சில பாம்புகளுக்கு மேல்வாயின் மத்தியில் விசேஷித்த ஒருவித கோரப்பல் அமைந்திருக்கிறது. இதுவும் விஷப்பல் பிறரது தேஹத்தில் ஜடிதியிற் பாய்வதை ஒருவாறு தடுக்கக் கூடியதாகவே இருக்கிறது. வேறு சிலவற்றிற்கு விஷப்பல் என்பதே கிடையாது. உண்மையை விளங்கக் கூறினால் முற்கூறிய முன்னூறு வகையான பாம்புகளுள் அறுபது விதமான பாம்புகளே விஷமுள்ளவையெனத் தெரியவருகிறது; இவ்வறுபதினுங்கூட சில பாம்புகள் பிராணபாய மூண்டு பண்ணக்கூடியவாறு அவ்வளவு விஷத்தன்மையுடையவைகளல்ல. மேலே நோவுண்டுபண்ணுவதென்ன, வலியுடன் கூடிய வீக்கங்களை யுண்

டாக்குவ தென்ன, இரத்தப் பெருக்கையும் மூர்ச்சையையும் உண்டுபண்ணுவதென்ன இவ்விதமான சில ஸாதாரணமும் அல்லது கடுமையுமான தொந்தரவுகளே இவ்வினத்தாலும் நேரிடக்கூடியவையாம். விஷத்தன்மை யுள்ளதாகக் கருதப்படும் ஒரு பாம்பு நாய்களையும் மற்றுமுள்ள சிறிய ஜந்துக்களையும் பலமாகக் கடித்தும் அப்பிராணிகள் உயிர் துறக்கவில்லையென்று பலமுறைகளில் பரீக்ஷிக்கப்பட்டிருப்பதால், அவற்றைவிட பெரிய பிராணிகளான மனிதருக்கு இப்பாம்புக்கடியால் உண்டாகக் கூடிய கெடுதி இன்னும் சொற்பமாகத்தான் இருக்குமென்று அநுமானிப்பதும் சரியல்ல. நல்ல பாம்பும், விரியன் பாம்பும் கடித்துங்கூட நாய் முதலிய சிறிய ஜந்துக்கள் இறந்து போகவில்லையென்று பல திருஷ்டாந்தங்களைக் கொண்டு ஒருவன் தெரிந்து கொண்டிருக்கலாம்; அது வாஸ்தவமே. ஆனால் இவ்விரண்டு விதமான பாம்புகளும் மனிதருக்குப் பிராணாபாயம் விளைவிக்கக்கூடிய கொடிய விஷமுள்ளவையென்பதும் நமக்குத் தெரிந்துள்ள விஷயம். மேலும் பாம்பு கடிக்கும்போது ஸாதாரணமாக மேலே கீறப்படுவது முதலாக வெகு ஆழத்திற் பற்கள் பாய்வது ஈறாக பலவகையான கடிகள் ஏற்படுவதுண்டு. இவ்விதமான பாம்புக் கடிகளுள் எந்தக் கடியாலும் மரணம் உண்டாகுமென்று தீர்மானிப்பது சரியல்ல. ஒவ்வொரு பாம்புக்கடியிலும் விஷத்தின் கடுமைக்குத் தகுந்தவாறும், தேஹத்திற் கடித்துச்செலுத்தப்பட்ட விஷத்தின் மாத்திரைக்கு (அளவுக்குத்) தகுந்தவாறும் விஷக்குறிகள் வெவ்வேறு வகையாகத் தோன்றும். உட்செலுத்தப்பட்ட விஷத்தின் மாத்திரை மிகப்பரமாணு ரூபமாயிருந்தால் அதனாலுண்டாகும் குறிகள் பிராணாபாயத்திற்குக் காரணமாக மாட்டா. பாம்பு விஷத்தினால் உயிர் துறப்ப தாயிருந்தாலும், சில நிமஷங்களிலிருந்து சில மணி வரையில், அல்லது சில நாட்கள் வரையிலுங்கூட மரணம் நேரிடுகிற காலவளவு வித்தியாஸப்படும்; பாம்பு கடித்து இருபது நாட்களுக்குப் பிறகு கூட மரணம் நேரிட்டிருப்பதாகத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு பாம்பு மரணமுண்டு பண்ணக்கூடிய அளவான விஷத்தைக் கடிவாயினுள் நன்றாகச் செலுத்திவிட்டால், அவ்விஷம் ஸாதாரணமாய் மந்திரப் பிரயோகத்தினால் நிவாரணம் செய்யமுடியாத தென்பதையும், மந்திரத்தினால் ஸௌக்கியப் படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பாம்புக் கடிகளில் பெரும்பான்மையும் பாம்பு தீண்டியதாகத் திகைத்துப் பிரமித்தவையேயன்றி வாஸ்தவத்தில் விஷம் தேகத்திற் பிரவேசித்த கேஸுகளாகமாட்டாவென்பதையும் நிரூபணம் செய்யவே நான் இவ்வளவு விஷயங்களையும் விவரித்துக் கூறவேண்டியதாயிற்று. கற்றுத் தேறிய வைத்தியர் முதலில் இவ்விஷயத்தில் விசேஷபரிசயமுள்ள அறிவாளிகளைத் தவிர மற்ற ஸாதாரணமனிதர்கள் பாம்பு கடித்து விஷம் தேகத்திற் பற்றியதாகத் திகைத்துப் பிரமிப்பதையும், உண்மையில் பாம்பு விஷம் தேகத்திற் பற்றியிருப்பதையும் பகுத்தறியக் கூடியவர்களல்ல; இதே காரணத்தினால் இந்த ஜனங்கள் மாந்த்ரிகனுடைய திறமை வெகு விசேஷமானதென்றும், அவனது மந்திரசக்தி நிகரில்லாததென்றும் அவ்வளவு அதிசயமாகப் புகழ்கிறார்கள். 5. மற்றொரு விநோதமான செய்தியையும் நான் கேள்விப்பட்ட துண்டு; அதாவது: சில மாந்த்ரிகர்கள், ஸர்ப்பம் கடித்த மனிதனிடம் வந்து, ஏதோ சில மந்திரங்களை யோதி, எந்தப் பாம்பு ஒருவனைக் கடித்ததோ அதேபாம்பைத் தனது மந்திரசக்தியால் வரவழைத்து, முன் கடித்த விடத்தையே மறுபடியும் கடித்துத் தனது விஷத்தை மனிதனது தேஹத்திலிருந்துத் திரும்ப உறிஞ்சுவிடும்படிச் செய்கிறார்களாம். நாம் பிரத்தியக்ஷமாக நமது கண்ணால் பார்த்தாலே யொழிய இவ்விதமான செய்திகளைக் கட்டுக்கதை யென்றே கருத வேண்டியிருக்கிறது. 6. ஒரு மாந்த்ரிகன், நான் இருக்கும் ஊரிலேயே ஸர்ப்பங்கடித்த ஒருவனை ஸ்வஸ்தம் செய்ததாகச் சில தினங்களுககு முன்பு கேள்விபட்டேன். எனது துரத்ருஷ்டத்தினால் அந்தச்சமயம் இவ்விஷயம் எனக்குத் தெரியாமற் போகவே நான் அந்தமாந்த்ரிகனுடைய பிரயோகமுறைகளை நேரில் கண்டு உண்மையறிய முடியாமற் போயிற்று. ஆனால் பாம்பு கடித்த வரலாற்றை விசாரித்து அறிந்த



பின்பு, மாந்த்ரிகன் கடியுண்டவனை ஒரு மரத்தூணிற் கயிற்றால் கட்டி விட்டதாகத் தெரியவந்தது; இப்படிச் செய்ததற்கு அவன் சொன்ன ஸமாதாநம் என்ன வென்றால், நாகங்கள் (ஸர்ப்பங்கள்) அக்கடியுண்டவனிடம் ஆவேசம் பெறுமென்பதும், இம்மனிதன் அப்பொழுது வேறு எவரையேனும் கடித்து விட நேரிடு மென்பதும், அப்படியானால் அப்பாம்பு விஷம் அவனால் கடிக்கப்படுகிறவரிடமும் பற்றுதலடைய அவர்களும் இறந்து விடுவார்களென்பதுமேயாம். இதெல்லாம். எவ்வளவுதூரம் உண்மையாகுமோ என்னால் சொல்லக் கூடவில்லை. இம்மனிதனை ஒரு மரத்தூணிற் கட்டிய பிறகு, ஏதோ சில மந்திரங்களை உச்சரித்துக் கொண்டே அவனது முகத்தில் பலமாகக் குளிர்ந்த நீரை வாறி யடித்து, சில நிமிஷங்களுக்கு ஒரு முறை கடுமையாகப் பயமுறுத்தி மூர்க்கத்தனமானப் பிரயத்தனத்துடன் அவனிடம் ஆவேசம் செய்திருப்பது யாதென்றும், எதற்காக அவனைக் கடித்துத் தொந்தரவுசெய்ய வேணுமென்றும் இவ்வாறாக அவனைப் பல கேள்விகள் கேட்டானாம்; அதற்குக் கடியுண்டமனிதனிடம் ஆவேசம் செய்துள்ள நாகமானது தன்னை அம்மனிதன் முன் ஒரு ஸமயம் காலால் மிதித்ததாகவும், பிறகு தன்னை அடித்து ஒரு குழியில் எறிந்ததாகவும், இன்னும் பலவாறாகவும் அம்மனிதன் மூலமாகப் பதிலுரைத்ததாம். மாந்த்ரிகன் பரமரஹஸ்யமான விசேஷவிஷய மெதையும் தனது மந்திரபலத்தினால் வெளிப்படுத்தி விடவில்லை. பாம்புக் கடியிலிருந்து மந்திர சக்தியினால் மீண்டதாகக் கூறப்பட்ட அம்மனிதனை நான் அதற்கு மறுநாளே பார்த்தேன்; பாம்பு கடித்ததற்கான பற்குறிகள் எதையும் அவன் காட்டமுடியவில்லை; தான் நேரில் பாம்பைப் பார்த்தாகவும் அவன் சொல்லவில்லை; பாம்பு கடித்தால் எந்தக் கேஸிலும் இருக்கவேண்டிய இரண்டு பற்கள் புதைந்த அடையாளம்சிறிதும் காணப்படவில்லை. பாம்புக்கடிகளில் எதிலும் ஒரு அங்குலம் இடை வெளிக்கு ஒரு பல்வீதம் இரண்டு பற்கள் ஆழ்ந்துள்ள குறிகள் இருப்பது பிரஸித்தம், இம்மனிதன் ஏதோ காரணத்தினால் சிலநேரம் ஞாபகசக்தியிழந்திருந்தான்; ஒரு காலின் சுண்டு விரலிலிருந்து சிறிது இரத்தப் பெருக்கும் இருந்தது. இதையே ஒரு கொடிய பாம்பின் விஷக்கடியென்று சொல்லிவிட்டார்கள்; மேலும் மாந்த்ரிகன் தனது மந்திர பலத்தினாலும் தைவத்தன்மை பொருந்திய சக்தி விசேஷத்தாலும் பிராணாபாயத்திலிருந்து இவனை மீட்டுவிட்டதாக அம்மாந்த்ரிகன் வெகுவாக யோசனையில்லாமலே புகழப்பட்டான். 7. காலஞ்சென்ற H. H. நைஜாம் பிரபுவானவர், எவரையேனும் ஸர்ப்பம் கடித்தால் உடனே தமது பெயரைக்குறிப்பிட்டு விஷம் தங்கும்படி உத்தரவுசெய்தால் கடியுண்டவனிடமிருந்து விஷம் நீங்கி விடுவதாக அநேகம் பத்திரிகைகளில் விளம்பரம் செய்ததுண்டு. இதன் தத்துவத்தையாவது மதிப்பையாவது பரிசோதிக்கும்படியான ஸந்தர்ப்பம் எனக்கு வாய்க்காமற் போயிற்று.

பாம்புக்கடிகளைச் சிகித்ஸிப்பதில் சாஸ்த்ரீயமான முறையைப்பற்றிக் கூறுவோமானால், உண்மையில் ஸர்ப்பந்தீண்டிய பலமான கேஸுகளில் மந்திரம் ஓதுவதில் உபயோகமில்லையென்று தான் நான் கூறுவேன். இதில் முதல் முதல் செய்யக்கூடியதும் வெகுமுக்கியமானதுமான முறை, பாம்புகடித்தவிடத்திற்கு மேலே வெகு பலமாக இழுத்துக் கட்டு கட்டவேண்டியதேயாம். இதைக் கடியுண்டவன் தானே செய்துகொள்ளலாம் அல்லது அருகிலுள்ளவேறு எவரேனும் செய்யலாம். ஆனால் ஒரு சிறிதும் தாமதம் செய்யாமல் கட்டு கட்டவேண்டும்; இப்படி கடித்தவிடத்திற்கு மேலே இருகக் கட்டிவிடுவதால், விஷமானது தேஹத்தின் மற்ற இரத்தத்திற்கலக்காமலும், உடலிற் பரவாமலுமிருக்கும். இதன்பிறகு கூர்மையான எந்த வஸ்துவினாலாவது (அது கூடியவரையில் சுத்தமாயிருக்க வேண்டும்) கடித்தவிடத்தில் குறுக்கும் நெடுக்குமான இரண்டு கீறுகள் போட்டு அறுத்து, பொடாஸியம் பெர்மாங்கனேட் என்கிற சரக்கை அறுத்தவிடத்திற்போடவும். இல்லாவிட்டால் அழற்சியுண்டுபண்ணும் வேறு எவ்வஸ்துவையாவது அவ்விடத்தில் பிரயோகிக்கலாம் அல்லது இரும்பைக் காய்ச்சி அதனால் அவ்விடத்தைச் சுட்டுவிடலாம். அப்பால், ஸமீபத்தில் கிடைக்கக்கூடிய கைதேர்ந்த வைத்தியரை அழைத்து வந்து, சிகித்ஸை செய்யவும். ஸ்வர்ண பஸ்மம் கலந்த ஸந்துக்ஷணமருந்து (Stimulant) சர்மத்திற்குத்திச் செலுத்தப்படுவது நலம். (வாக்படர் முதலியவர் ஸ்வர்ணம் விஷஹரம் என்பதைக் கூறியிருப்பதைக் கவனிக்கவும்.)

# வைத்திய கலாநிதி

துன்மதிஞு மார்கழிமீ

## SOME SUGGESTIONS TO IMPROVE THE AYURVEDIC SYSTEM.

## ஆயுர் வேத வைத்தியத்தை அபிவிருத்தி செய்வதற்கான சில யோசனைகள்.

பொதுவிஷயம்:—ஆயுர்வேதவைத்திய சாஸ்திரத்தைக் கற்றுமுணராமலே அதற்குப்பலர் பிரதிகூலமாகப் பேசுவதை நாம் அடிக்கடியும் கேட்டுவருகிறோம். சென்ற வருஷம் ஆகஸ்டு மாஸத்தில் இச்சென்னை சட்டஸபையில் ஆயுர்வேத வைத்தியர்களைப் பதிவு செய்யும் பொருட்டு டாக்டர் ஸ்லேடர் ஒரு தீர்மானம் கொண்டு வர அது பலரால் ஆதரிக்கப்படாமலே நிறுத்திக் கொள்ளப்பட்டது. டாக்டர் ஸி. பி. ராமராவ் ஒருவர் அத்தீர்மானத்தை நிறைவேற்ற ஆதரவளித்தாராணலும், ஆயுர் வேத வைத்தியத்தைச் சீர்திருத்துவது வேகு சிரமம் என்று அப்பிபிராயம் கூறினர். எம்மைப் போன்றவர் சட்ட ஸபையில மெம்பராக இருந்தால், அல்லது வைத்தியஇலாகாவில் ஒரு பிரதான அதிகாரியாகப்போனால், அதற்கு நாம் தகுந்த ஸமாதானம் சொல்லியிருப்போம். என்ன ஸமாதானம் என்று கேட்பீர்கள். மேனுடுகளிலிருந்து இலக்ஷக்கணக்கான விலை கொடுத்து வருஷந்தோறும் வரவழைக்கும் பெரும்பான்மையான ஔஷதங்களை உடனே நிறுத்திப்போட்டு அவற்றிற்குப் பதிலாக, அதிற் பாதி திரவியத்தைச் செலவு செய்து ஆயுர் வேதவைத்திய முறையையும் மற்றப் பாதி திரவ்யத்தைக் கொண்டு ஆயுர்வேத ஔஷதங்களையும் விருத்தி செய்ய முடியும்" என்பதே எமது ஸமாதானம்.

ஆயுர்வேதத்தைக் கற்காதவர் அதன் மேல் அடிக்கடியும் குற்றக்குறை கூறுவதுதான் எம்போன்றவருக்கு வெகு விஸனகரமாயிருக்கிறது. "ஆயுர் வேதம் வெகு பண்டைக் காலத்தியது, அனுபவத்திற் கொவ்வாதது, சாஸ்த்ரமென்று கூறுவதற்குத் தகாதது, ஆகவே அதை முன்னுக்குக் கொண்டு வருவது முடியாத காரியம்" என்று கர்னல் ஜாக்ஸன் என்பவர் ஒரு ஸமயம் (1915-இல்) பம்பாய் சட்டஸபையில் கூறியிருப்பதை சிலர் மறந்திருக்கலாம் ஸந்தர்ப்பம் நேரிட்ட போதெல்லாம், விஷய முணராமல் வெளியாகும் இத்தகைய துரபிப்பிராயங்களைக் கண்டிப்பதும், நமது தேசீய வைத்தியத்தின் உண்மையான பெருமையை விளக்கி அதன் அபிவ்ருத்தியை நாடுவதும் எம்போன்றவரின் கடமை. வியாதி கொண்ட ஜந்துக்களின் தேஹங்களிலிருந்து கிரஹிக்கப்படும் பலவிதமான, வீரம் என்கிற லஸிகைகளை மனித தேஹங்களிற் குத்திச் செலுத்தி பிரக்ருதிக்கு எதிரிடையான விக்ருதிகளையுண்டாக்கும் சிகித்ஸையென்ன, பலவித பாஷாணங்கள், அயோடைட் முதலியவற்றை உபயோகிக்கும் வகைகளென்ன இவைகளால் தற்காலத்திலேற்படும் குணங்கள் வெகு சொற்பமிருந்த போதிலும் காலாந்தரத்தில் உதிக்கும் உத்பாதங்கள் அநேகம் என்பதை நாம் அநுபவத்தில் பல முறையும் கண்டிருக்கிறோம்.

நன்றாகக் கற்றறிந்த ஒவ்வொரு ஆயுர்வேத வைத்தியரும் வியாதிகளை நிவாரணம் செய்வதற்குப் பிரயோகித்து வரும் ஔஷதமுறையாவும் சாஸ்த்ரீய விதிகளுக்கு ஏற்றவைகளாயிருக்கின்றன திருஷ்டாந்தமாக—ஆமதோஷம் என்கிற. மந்தத்தன்மை பெரும்பான்மையான ஜ்வரங்களுக்கும் ஆரம்பாவஸ்தையாகும்; இந்த நிலைமையில் உணவாவது ஔஷதமாவது கொடுக்கக் கற்றறிந்த வைத்தியன் எவனும் ஸம்மதிக்கமாட்டான். இந்த நிலைமையில் "லங்கநம் பரமௌஷதம்" என்கிற கோட்பாடு சாஸ்த்ரீயக் கோட்பாடேயன்றி, பாமராபிப்பிராயமல்ல. இங்ஙனமே சீதபேதியின் ஆரம்ப நிலைமையில் சிறிது விரேசநம்



செய்வித்து, அப்பால் ஸ்தம்பநௌஷதாதிகளைக் கொடுப்பதும் எங்களுடைய சிகித்ஸாக்கிரமம். க்ஷயரோகத்தில் தாதுக்களெல்லாம் க்ஷீணிக்கும் நிலைமையில் அவற்றைப் பலப்படுத்த கொழுப்பு மாம்ஸம் முதலியவை கலந்த ஔஷதங்களும் உணவுகளும் முறையே உட்கொள்ளக் கொடுப்பது ஆயுர்வேத முறை. நெய் முதலிய கொழுப்பு ஸம்பந்தமான கோக்ஷுராதிக்ருதம், பலாதிக்ருதம் முதலியவை சரகர் முதலியவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஔஷதங்கள். ஸாதாரண மாம்ஸங்களை விட இறைச்சியுண்ணும் மிருகங்களுடைய மாம்ஸம் இன்னும் விசேஷமானது என்று சரகாதிகள் கூறுகிறார்கள்:—"மேலும் வஸ்திரோக மென்னும் மூத்திரப்பையின் அழற்சியிலும் பாண்டு ரோகத்திலும் உப்பில்லாப் பத்தியம் ஏற்படுத்துவதும், நீடித்த காலமாய்த் தொந்தரவளிக்கும் கிரஹணீரோகத்தில் இரஸபர்ப்படி யென்னும் ஔஷதத்தைக் கொடுப்பதும், அதில் சுத்தப்பாலையே உணவாகத் தருவதும் ஆயுர்வேத சிகித்ஸாகிரமங்களாகும். இந்த முறைகளெல்லாம் பாமரவைத்திய மாகுமோ? சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்டதாக விளம்பரங்கள் செய்து மேலே அழகாக அச்சிட்ட காகிதங்களை யொட்டி ஜனங்களைப் பிரமிக்கச்செய்து விற்கப்பட்டுவரும் ஐரோப்பிய ஔஷதங்களை நீங்கள் சாஸ்த்ரீயமானவை யென்று ஒப்புக் கொள்கிறீர்களா? பகுத்தறிவுள்ளவர் அவைகளை மனப்பூர்வமாய் உபயோகிப்பது உசிதமென்று கூறமாட்டார்களென்றே நினைக்கிறோம். மேனாட்டு ஔஷதமுறையிலாகட்டும் சிகித்ஸாகிரமத்திலாகட்டும் பெரும்பான்மையான அம்சங்களும் கேவலம் அநுபவத்திற்கு ஸம்பந்தப்பட்டவைதான். நமது தேசீய வைத்தியத்தொழில் முன்னேற்றமடைந்து விடுவதில் பொறாமை கொண்ட சில குறுகிய கொள்கையுடைய மேனாட்டு வைத்தியம் கற்றவர்மாத்திரம் நமது முறையை ஏதோ அநுபவ வைத்தியம் (எம்பிரிகல்) என்று கூறி நமது உத்ஸாஹத்தை குறைக்கப் பார்க்கிறார்கள். க்ளிப்போர்ட் ஆல்பட் (Clifford Albutt) என்னும் வைத்தி சிரேஷ்டருடைய பெயரைச் சிலர் கேள்விப் பட்டிருக்கலாம். நாலு வருஷங்களுக்கு முன் "மெடிகல் டைம்ஸ்" என்கிற வைத்தியப்பத்திரிகையில் வெளிவந்திருந்த அவரது குறிப் ஒன்றை நாம் கவனித்தோம் அது பின்வருமாறு:—"இப்பொழுது சாஸ்த்ரீய வைத்தியர்களென்று வெறுமனே கூறப்படும் பல உபயோகமான வழியில் தமது அறிவைப் பிரயோகிக்க முடியாமல் அநேக ஸமயங்களில் கண்மூடித்தனமயாய் தமது தொழிலை நடத்தும் சுபாவமுள்ளவர்களாகவும், ஆகவே அவர்களுடைய செய்கைகள் சாச்வதமாக ந குணங்களுக்குப் பதிலாக அபாயகரமான ப னைத் தரக்கூடியவைகளாகவும் காணப்படு கின்றன." என்பதேயாம்.

ஆயுர்வேதத்தைப் படிக்காதவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு இதுவரையில் சிறிது ஸமாதானம் கூறினோம். அரை குறையாய் வைத்திய நூல் படித்த சிலர் ஆயுர் வேதத் தின்மேல் சுமத்தும் சில தோஷங்களையும் கவனியுங்கள். ஆயுர்வேதநூல்களில் பல விதமான ஓஷதிகளையும், லோஹங்களையும் ஔஷதங்களாக உபயோகிக்கும்படி எழுதி யிருப்பதில் ஒன்றும் குறையில்லை; ஆனால் சில வஸ்துக்களைச் சுத்தி செய்வதில் கோமூத்திரம் முதலியதும், சாகலாதிக்ருதம் முதலிய வற்றில் இறைச்சியும், வேறு சில ஔஷதங்களில் சில பிராணிகளுடைய பித்தம், கொழுப்பு இரத்தம் முதலியதுங் கூட கலக்கவேண்டுமென்று இருப்பது உசிதமா? அருவருக்கக் கூடிய இவையெல்லாம் ஔஷதங்களாகுமா எந்த நாகரிகந்தான் இவ்வௌஷதங்களை உபயோகிக்க விரும்புவான்" என்று கூறப்படும் குறைகளை நாம் சில ஸமயம் கேட்க நேரிட்டதுண்டு. இவ்வஸ்துக்கள் மேற்பார்வைக்கு அருவருக்கக் கூடியதென ஸாதாரண ம

ளுக்குத் தோன்றுவது ஸஹஜமே. ஆனால், ம்மைப்போன்றவர்களுக்கு அவை ஔஷதங்களாகவே புலப்படுகின்றன. எமது வைத்யம் நாகரிகமல்ல வென்றால், உங்களுடைய தாற்றத்திற்கு நாகரிகமாகத் தென்படும் மனாட்டு ஔஷதங்களில் அவ்வருவருக்கக் டிய பதார்த்தங்கள் கலப்பில்லாமலே இருக் ன்றனவா? எருதின் பித்தத்தை ஒருவாறு ளிப்பாகப் பக்குவம் செய்து, (FelBovium) பல் போவியம் என்று தயார் செய்யப் ட்ட ஔஷதம் மேனாட்டாரால் கையாளப் டவில்லையா? வைரால் என்கிற இங்கிலீஷ் ராஸாயனமருந்து எலும்பின் மஜ்ஜையிலிருந் து தயார் செய்யப்பட்டதென்று அதன் ளம்பரத்தைக் கொண்டே தெரிந்து கொள் லாம். பேளரில் என்பது எதிலிருந்து தயார் சய்யப்பட்டது? ஹெமடோஜன் என்று ங்கில வைத்தியர்கள் பலஹீனர்களுக்குச் பார்க செய்யும் மருந்து ஹிமக்ளோபின் ன்கிற சோணிததாதுவை (அதாவது இரத் த்தைக்) கொண்டே தயார் செய்யப்பட்ட தன்பது பிரஸித்தம். மீனெண்ணெயை ;od liver oil) விட மிகக் கேவலமான கொழு புவேறொன்றுண்டா? மேலும் போன்மே ா டேப்ளாய்ட்ஸ், ரா மீட் ஜ்யூஸ், காப் ட் ஜெல்லி இவை முதலியவை தாராளமாய் கரிக வைத்தியர் என்பவரால் கையாளப்படு ன்றனவே. ஆகவே, நமது தேசியவைத்தி ம் முன்னேற்ற மடையாமலிருப்பதற்கு வரவருக்குத் தோன்றியதை யெல்லாம் வனுமென்று குற்றங்குறையாகக் கூறத் ணிகிறார்கள் என்கிறோம்.

ஆயுர்வேதம் ஆயிரக்கணக்கான வருஷங் ளுக்கு முன் ஏற்பட்டது வாஸ்தவமே. தையே நாம் அச்சாஸ்திரத்திற்குப் பெரு மையாகக் கூறுகிறோம். அவ்வளவு பண்டைக் ால முதல், ஏதோ சிற்சில மாறுபாடுகளுடன் துவரையிலும் அழியாமல் இருந்து வரு தே, அதனிடமுள்ள அருமையான குண சேஷங்களைக் குறிப்பிடுகிறது.

புத்தர் காலத்தில் இந்தியாவில் இரண்டு பெரிய கல்விச்சங்கங்கள் இருந்தன. (Universities) இச்சங்கங்களால் வைத்தியப்பரீக்ஷையும் நடத்தப்பட்டுவந்தது. வைத்திய சாஸ்திர நிபுணர்களுக்குப் பெரியபட்டங்களும், பரிசுகளும் அளிக்கப்பட்டன. இக்கல்விச்சங்கங்களில் ஒன்று கிழக்கே வாராணஸியிலும், மற்றொன்று மேற்கே தக்ஷசிலையிலும் ஸ்தாபிதமாயிருந்தன. சாஸ்திரங்களில் தேறிய மேதாவிகள் இச்சங்கங்களில் போதகாசிரியராயமர்ந்திருந்தனர். தக்ஷசிலையில் ஆத்ரேயர் வைத்திய சாஸ்திரத்திற்கு மஹோபாத்யாயரா யிருந்ததாகவும் கூறப்படுகிறது,

ஆயுர்வேதக் கிரந்தங்களை ஆதியோடந்தமாகப்படித்துவந்தால், விஷயங்கள் தகுந்த பாகுபாடு செய்யப்பட்டு ருதுசர்யாத்யாயம் என்றும், திநசர்யாயமென்றும், வமநவிதி யென்றும், விரேசநவிதியென்றும், தசப்ராணாயதநீயமென்றும், கர்ப்போத்பத்தி யென்றும் இவ்வாறு சாஸ்திரமுறைப்படி பிரிக்கப்பட்டிருக்கின்றன. உண்மையில் குற்றங் குறை கூற இடமேயில்லை. ஆத்ரேயர், ஸுச்ருதர் முதலியவர்களுடைய காலத்துக்கு முன்பே வைத்திய சாஸ்திரம் விருத்தியடைந்திருந்ததாக முற்கூறிய சில முகாந்தரங்களைக் கொண்டு நாம் நிச்சயிக் கவேண்டியிருக்கிறது. அக்நிவேசர் முதலியவர்களால் காயசிகித்ஸாப் பிரதானமான சரகாதி ஸம்ஹிதைகளும், தந்வந்தரிமுதலியவர்களால் சல்ய சிகித்ஸாப் பிரதானமான ஸுச்ருதாதிஸம்ஹிதைகளும் தனித்தனியே இயற்றப்பட்டு ஆயுர்வேதமுறை அவர்களுடைய காலங்களில் முன்னேற்ற மடைந்து வந்தன. அக்காலங்களிலும் பிரத்தியக்ஷஞானம் வெகு அவசியமென்று தீர்மானித்துச்சாரீரத்தில் ஸுச்ருதர் வைத்திய வித்யார்த்திகளுக்கு சவச்சேதம் செய்து காட்டவேண்டுமென்று விவரிக்கிறார். சாஸ்திரங்களைப் படித்து, அநுபவத்திலும் பிரத்தியக்ஷமாக விஷயங்களைக் கற்றுணர்ந்து சிகித்ஸை செய்ய முன்வரவே



800 005 144986.

முற்காலங்களில் காய சிகித்ஸையிலும், விசேஷமாக சல்ய சிகித்ஸையிலும் நமது பூர்வாசார்யர்கள் வெகு நிபுணராயிருந்தனர் என்று தெரியவருகிறது. கிரந்தி (tumour) என்கிறவீக்கத்திற்கு வீஸஹ்மாவலோகநம் என்கிற பிராசீநக்கிரந்தத்தில் அவ்வாசிரியர் கூறும் சிகித்ஸையைச் சிறிது கவனித்தால், அவ்வளவு அநாதி காலத்தில் வைத்திய சாஸ்திரம் இத்தேசத்தில் எவ்வளவு மஹோந்நத தசையிலிருந்ததென்பது ஒருவாறு விளங்கும். யுத்தத்துக்குப்போக நேரிடும்போது, ஸைந்யத்தில் வியாதிக்ரஸ்தர்களை ஸௌக்கியப்படுத்தவும், காயம் பட்டவர்களுக்கு விரணசிகித்ஸை செய்யவும் வைத்தியர்கள் இரணரங்கங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவது வழக்கமிருந்தது. சல்ய சிகித்ஸையில் முதன்மை பெற்றிருந்த ஸுச்ருதர் தமது ஸம்ஹிதையில் யுக்தஸேநீயாத்யாயத்தில் இவ்விஷயமாக வர்ணிக்கும் அம்சம் எம்போன்ற சிகித்ஸகர்களுக்கு மாத்திரமல்ல, ஸாதாரண மனிதருக்கும் படிப்பதற்கு வெகு ருசிகரமாயிருக்கும். ஸேனை செல்லுமிடங்களிலுள்ள வழிகளிலும், ஜலாசயங்களிலும் அவர்கள் உபயோகிக்கும் உணவுமுதலியவைகளில் எதிரிகள்விஷம் முதலியதைக் கலந்து விடுவார்கள் என்றும், அவ்விதமாக விஷம் முதலியவை ஜலாசயாதிகளில் கலக்காமற் பாதுகாப்பது ஈறுகவுள்ள விஷயங்களில் ஸேனையுடன் கூடச்செல்லும் வைத்தியர் ஊக்கத்துடன் கவனம் செலுத்தவேண்டியது அவசியமென்றும் ஸுச்ருதர் கூறுகிறார். காஸ்டிலானி (Castellani), சாமெர்ஸ் (Chalmers) இவ்விருவரும் உஷ்ணதேச ஸம்பந்தமான வைத்திய விஷயமாய் (Tropical medicines) நூல்எழுதியிருக்கிறார்கள். இப்புஸ்தகத்தின் ஆரம்பத்தில் வைத்தியம் வந்த வழியும் உலகத்தில் வைத்திய சாஸ்திரம் பரவியதற்கே ஸம்ஸ்கிருத வைத்திய நூல்கள் ஆதாரமாயிருந்த வகையும், இந்தியாவில் ஆயுர்வேத வைத்தியம் ஆதியில் சிறப்புற்றிருந்து காலக்கிரமத்தில் ஆங்கில அரசாட்சி வலுக்க அம்முறை, மழுக்கங்கொள்ள நேர்ந்த ரீதியும் வியக்தமா[க] விவரிக்கப்பட்டிருக்கின்றன.

நண்பர்களே! நாம் இவ்வளவு தூரம் கூற வந்தது எதற்காக [illegible] உங்களுக்குத் தெரிந்ததே. வேரற்றுச் சாய்ந்து விழுந்த[...] வாயிலுள்ள ஆயுர்வேதத்திற்கு செப்பை[...] கட்டுகள் கட்ட நாம் முயல்வதாக நீங்கள் நினைக்க மாட்டீர்களென்று நம்புகிறோம். ஆயுர்வேதம் தகுந்த அஸ்திவாரத்தின்மேல் எழுப்பப்பட்டிருப்பதாக நாம் சொற்பதிருஷ்டாந்தங்களைக்கொண்டு கீழே நிரூபித்திருக்கிறோம்.

ஆயுர்வேதம் விருத்தியடையாமல் ஸ்தம்பித்தும் நிலை குலைந்தும் போவதற்குக் காரணம் மூன்றுண்டு.

1. முதற்காரணம்:—பாரதவர்ஷம்சாஸ்திர பிவ்ருத்தியில் மிகப் பெருமை பெற்று நாகரிகத்திலும் ஆகவே தர்ம சிந்தையிலும் அளவற்ற ஆதிக்யத்தை அடைந்திருந்ததும், அவ்வநாதி காலத்தில் மேனாடுகள் நாகரிகத்தில் மிகக் கீழ் நிலைமையிலிருந்து கொண்டுவந்ததுமே ஆதிகாரணமென்போம். பிற நாடுகளிலிருந்து வந்[த] மஹா அலெக்ஸாண்டர் முதலியவர்கள் பெ[...] லாத வீரர்களாயிருந்தும், சாஸ்திர பரிசயமற்றவராயிருந்தனர். இத்தேசத்திற் புகுந்ததும் இந்த நாகரிகத்தை அபஹரிக்கப் பேரவா கொண்டனர். நமது சாஸ்திரத்தை முக்கியமாக வைத்தியசாஸ்திர நூல்களை, இங்கிருந்த வித்வான்களிடமிருந்து படித்துக் கேட்டு, அக்கிரந்தங்களை யெல்லாம் ஸாத்தியமான வகையில் தமது தேசத்துக்குக் கொண்டு போய்விட்டனர். இதற்கெல்லாம் ஆதாரங்களைக் கூறினால் விஷயம் இன்னும் விஸ்தரிக்குமென்று கருதி, அவசியமான விஷயங்களைச் சொன்னோம். நாம் தர்ம சிந்தையுள்ளவர்கள். நம்மைப் பெற்றவர்கள் தர்மசிந்தை யுடையவர்களாயிருந்தார்கள். அத்துடன் கள்ளங்கபடு தெரியாத ஸாத்விகர்கள். பிற நாட்

டாரை நம்பி, அவர்களுக்கு சாஸ்திரவிஷயங்களைச் சொல்லிக் கொடுத்து, நூல்களையும் அவர்களுக்குக் கொடுத்தனர்கள். இவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு க்ரீஸிலும் இதர யவநதேசங்களிலும் வைத்திய சாஸ்திரம் ஆரம்பமாயிற்று. நமது தேசத்தில் ஆயுர்வேதக் கிரந்தங்கள் குன்றிப் போகவும் லைப்பட்டது. காய சிகிக்ஸாப் பிரதானமான பளஸம்ஹிதை முதலியவைகளும், சாரீர விஷயமான போஜஸம்ஹிதை முதலியதும் காணமற்போயிருப்பதற்குக் காரணம் இதுவே. நமது இராஜ்பத்தை ஆளுவதற்கு நாம் சக்தியற்றவர்களாகப் போகுந்தருவாயில், அளவிடமுடியாத இதர செல்வங்களைப்போலவே வைத்யசாஸ்திரத்தையும் பிறருக்கு சமர்ப்பணம் செய்து, அவற்றிற் பெரும்பான்மையையும் இழக்க நேரிட்டது.

2. இரண்டாம் காரணம்:— அக்காலத்தில் திதாக விருத்தியடைந்தமேனாட்டார், தாம் ற்பவித்தியதாகக் கூறிக்கொள்ளும் ஆங்கில வைத்திய முறையை இத்தேசத்திற் பரவச் செய்ததுடன், இராஜாங்கம் அவர்களுடைய பக்ஷத்திலிருப்பதால், இராஜாங்க ஆதரவை பெற்று விட்டதும், அதே ஸமயத்தில் ஆயுர்வேத வைத்தியத்திற்கு இராஜாங்க ஆதரவு அற்றுப் போனதும் ஆயுர்வேதம் நிலைகுலைவதற்கான இரண்டாவது காரணமாகும். இராஜாங்கத்தார் மேனாட்டு வைத்தியத்தைப் போதிப்பதற்குக் கல்விச்சாலைகளை அங்காங்கு ஏற்படுத்தினார்கள். அவற்றிற் படித்துத் தேறியவருக்கே உத்தியோகம் கொடுக்கப்படுமென்று நியமம் செய்து கொண்டார்கள். மேனாடுகளிருந்து வரும் ஔஷதங்களையே இராஜாங்கத்தார் ஆதரிக்க முயன்றார்கள். ஆகவே ஆயுர்வேதத்தைப் படிப்பவர் வரவர குறைந்துபோய், இப்பொழுது அதிக கேவலமான நிலைமை நேர்ந்துவிட்டது. இராஜாங்க ஆதரவு இல்லாமற்போனது இரண்டாவது காரணமென்று இதனால்தெரிவித்தோம்.

3. மூன்றாவது காரணம்:—நமது வைத்தியர்களுக்குள் ஒற்றுமையின்மையும், நமது சாஸ்திராபிவிருத்தியில் நமது தேசத்தியவருக்கே சிரத்தையின்மையுமேயாகும்.

இவ்விதம் நமது சாஸ்திரம், உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத சாஸ்திரம் ஆதரிப்பாரின்றி துர்தசையில் இருந்து வருகிறது. இந்த நிலைமையில் இதை நாம் கைவிட்டு விடுவதா? விருத்திக்குக் கொண்டு வருவதா என்கிற விஷயத்தை நாம் பகுத்தறிவுடன் நன்கு யோசித்துத்தீர்மானிக்கவேண்டும்சென்றசெப்டம்பர் மாஸத்தில் ஆயுர்வேத வைத்தியர்களைப் பதிவு செய்யும் விஷயமாய் டாக்டர்ஸ்லேட்டர் கொண்டுவந்த தீர்மானம் சட்டஸபையில் நிறைவேற்றப்பட்டிருந்தால், ஆயுர்வேத வைத்தியம் விருத்தியாக அது ஒரு முக்கிய ஸாதநமாயிருந்திருக்கும். அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய Dr. C. B. ராமராவே, இத்தேசத்தில் 100-க்கு 90-பேரும் தேசியவைத்தியத்தையே நாடியிருப்பதாகக் கூறியிருக்கிறார். இவ்வித மஸோதா ஆயுர்வேதத்தின் க்ஷேமத்தைக் கோரி கொண்டுவருவது அவசியமென்று, 1913.ம் வருஷம் டிசம்பரில் வெளியான வைத்தியகலா நிதியிலேயே தகுந்த காரணங்களைக் குறிப்பிட்டு வியாஸம் ஒன்று எழுதியிருக்கிறோம். இதைப் பற்றி அப்பொழுது ஸர். பி. எஸ், சிவஸ்வாமி ஐயரிடமும் பிரஸ்தாபித்தோம். "ஆயுர்வேதத்தைக் கற்றுத் தேர்ந்தவர்கள் இன்னும் தேசத்தில் அதிகமாய் வெளிவந்தால் அப்பொழுது அவர்களுக்கென்று ஒரு வைத்தியப் பதிவு சட்டம் ஏற்படுத்த யோசிப்பது யுக்தமாகும்" என்று அப்பிராயப் பட்டார். ஏதோ தைவவசமாய் டாக்டர் ஸ்லேட்டர், ஒருவருடைய தூண்டுதலுமில்லாமல் மஸோதாஒன்று ஆயுர்வேதவைத்தியப் பதிவு விஷயமாகக் கொண்டு வந்தும் அது சட்டஸபையில் ஆதரிக்கப்படாமல் நின்று விட்டதைப் பற்றி ரொம்பவும் நமக்கு ஸங்கடந்தான். ஆகிலும்,



நமது சாஸ்திரம் தகுந்த அஸ்திவாரத்தின் மேல் ஏற்பட்டிருப்பதாக நாம் கீழே நிருபித்த விஷயங்களிலிருந்து நீங்கள் தெரிந்து கொண்டிப் பீர்கள். ஆகவே நீங்கள் அதைக் கைவிட்டு விடத் துணியமாட்டீர்களென்று நம்புகிறோம்.

ஒரு விஷயம் கடைசியாகச் சொல்லிவிட்டு நாம் இந்த நிருபத்தை முடித்துக் கொள்கிறோம். ஒரு பாடசாலையில் சுகாதார விஷயம் கற்பிக்கப்படும் வகுப்பில் பரீக்ஷை நடந்தது. அப்பொழுது பையன்களை நோக்கி பரீக்ஷகர் அடியில் வருமாறு ஒரு கேள்வி கேட்டார். அதாவது :— "நீங்கள் வஸிக்கும் அறையில் தகுந்த காற்றோட்ட மில்லாமலும் அழுக்கும் அடைந்திருந்தால் நீங்கள் அதற்கு என்ன செய்வீர்கள்?' என்று. அங்கிருந்த மாணவர்களுள் ஒருவன் உடனே எழுந்து "அவ்விதமான அறையை விட்டு நான் வெளியே போய் விடுவேன்" என்று பதில் சொன்னான் என்று ஒரு கதையுண்டு.

நூற்றுக்குத் தொண்ணூறு ஜனங்களுக்குத் தேவையான ஆயுர்வேதம், காலக் கேட்டால் ஒருவாறு துரவஸ்தையிலிருந்தாலும், அதை நாம் சீரான நிலைமைக்குக் கொண்டுவர முயலாமல் அதைக் கைவிட்டுவிடுவோமென்று எவரேனும் சொன்னால், அது நாம் குறிப்பிட்ட மாணவனது விடையைப் போல் பரிஹாஸாஸ்பதமாகும்.

---

## TO OUR READERS.

### AN IMPORTANT NOTIFICATION.

### நமது வாசக நேயர்களுக்கு

### ஒரு முக்கிய அறிவிப்பு.

எட்டாவது வருஷத்திய வைத்திய கலாநிதி இச்சஞ்சிகையோடு ஒருவாறு முடிவு பெறுகின்றது. கலாநிதியை எவ்வகையிலாவது தொடர்ந்து நடத்த நாம் பல வேறு சிரமங்களை யேற்றுக்கொண்டு முயன்றுவருகிறோம். இப்பத்திரிகை இனி நடைபெறமாட்டாதெனக் கருதுபவரும் சிலர் உளர். கலாநிதி காலம் தவறி வெளியாவதைக் கண்டு வருத்தமுற்று நமக்குச் சிலர் எழுதியும் வருகின்றனர். பத்திரிகையைச் சரியான காலங்களில் வெளியிடமுடியாத நமது நிலைமையை நோக்குங்கால் உண்மையில் நமது மனம் மிகத் துன்புறுகின்றது. கலாநிதியை வெகு தாமதப்படுத்தி வெளியிடுவதால் நமது கை யொப்பக்காரர்களைவிட நாமே விசேஷ கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்க வேண்டியவராயிருக்கிறோம். நாம் வைத்திய சாஸ்திரத்தைக் கற்று, அதில் தேர்ச்சியடைந்த பின்பு அத்தொழிலில் பிரவேசித்ததும், தமிழ் நாட்டிற்கு நமது படிப்பைக் கொண்டு சிறிது ஊழியம் புரியவேண்டுமென்று ஒரு ஸங்கல்பம் செய்துகொண்டோம். முக்கியமாய் வைத்திய சாஸ்திரத்தையும், சுகாதார முறையையும் சுலபமான வழியில் தமிழ்நாட்டு ஜனங்களுக்கு போதித்து, அவர்களுக்குக் கூடியவரையில் இத்துறையில் அறிவு புகட்ட வேண்டுமென்று தீர்மானித்தோம், அன்றியும் ஸம்ஸ்க்ருதத்தில் ஆதி காலத்தில் இயற்றிய ஆயுர்வேதக் கிரந்தங்கள் வெகு சிலாக்கியமாயிருப்பதை யுணர்ந்து, அவற்றைத் தமிழ் நாட்டார் தாராளமாகப் படித்து, அவற்றாலான உபயோகங்களை அவர்களும் உய்ந்தனுபவிக்கவேண்டுமெனக் கருதி, அவைகளை ஒன்றன்பின் ஒன்றாக மொழி பெயர்த்துத் தமிழில் வெளியிட வேண்டுமென்றும் தீர்மானித்தோம். இவ்வூழியங்களை நாம் நினைத்தபடி ஆரம்பிக்கவும் செய்து, நமது இப்பெருங்கோரிக்கையைச் சுமார் ஒன்பது வருஷ காலமாய் பிறருதவியின்றி காரியத்திலும் நிறைவேற்றி வருகிறோம். நண்பர்களே ! நாம் வைத்திய கலாநிதியைத் தொடர்ந்து நடத்தாமற் போகும் நிலைமை நேரிட்டால், நாம் மேலே கூறிய நமது ஸங்கல்பங்கள் நிறைவேறாமற் போகுமல்லவா ? அப்பொழுது நமது கையொப்ப

நேயர்களைவிட நாம் எவ்வளவோ அதிகமாய் துயரம் அனுபவிக்கவேண்டியிருக்கும். வைத்திய கலாநிதி ஒழுங்காக வெளியாக வேண்டுமென்று உங்களுக்கெல்லாம் விருப்பம் விசேஷமாயுண்டென்பதும் நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால் நாம் பலவிதத்திலும் கஷ்டப்பட்டும் இதை ஒழுங்காக வெளியிடுவதில் சிறிது இடையூறு நேரிடுகையில், நமது சந்தாநேயர்கள் நமக்கு உத்ஸாஹக் குறைவு உண்டு பண்ணுவதற்குப் பதிலாக, நமக்குக் கூடுமான வழிகளில் உதவிபுரிந்து நமது ஊக்கத்தை விருத்தி பண்ண முன் வரவேண்டும். அது நமக்கும் உங்களுக்கும் அனுபவத்தில் வெகு உபயோககரமாயிருக்கும். அப்படிக்கில்லாமல், கலாநிதி காலாகாலத்தில் வெளியாகவில்லையென்றும், இதற்குச் சந்தாதாராயிருப்பது அநாவசியமென்றும் நினைப்பீர்களானால், அது தீர்க்காலோசனையில்லாத தீர்மானமாகும். ஒரு வருஷத்திற்கெல்லாம் சேர்ந்து, இவ்வித பத்திரிகைக்காகத் தாங்கள் செலவிடப்போவது நான்கு அல்லது நாலரை ரூபாயென்றி அதற்கு மேலில்லை. அதைத் தாங்கள் ஒரு இலாபமாக நினைத்தாலும் நஷ்டமாக நினைத்தாலும் எவ்விதத்திலும் அது ஒரு பொருட்டல்ல: நாமோ ஒவ்வொரு ஸஞ்சிகை வெளியிடுகையிலும் அதைப்போல் எத்தனையோ மடங்கு நாலரை ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு வருஷத்திற்கு நாம் செலவழிக்க வேண்டுவது என்னவென்பதையும் விசாலமான நோக்கமுள்ளவர் கவனிக்கவேண்டும். எவ்வளவோ சரீர சிரமும் நமக்கு விசேஷமாயுண்டு. சாஸ்திராபிவ்ருத்தி விஷயத்தில் நாம் ஏகதேசத்தில் இவ்வளவு கஷ்டங்களையும் செலவுகளையும் அனுபவித்து வரும்போது, நமது சந்தாநேயர்கள், நாம் ஒழுங்காகவோ—காலந்தவறியோ அனுப்பிவரும் கலாநிதியைப் பெற்றுக் கொண்டு, அதற்குக் கைம்மாறாக உதவும் மிகவும் சொற்பத்தொகையான தமது சந்தாப் பணத்தை ஒரு செலவாகவே கருத இடமில்லை.

மேலும் நாம் ஒன்று கேட்கிறோம். நாம் இவ்வளவாவது விடாமுயற்சியுடன் இவ்வளவு நீண்ட காலமாக இவ்வூழியத்தைப் பலவித இடையூறுகளுக்கு இடையில் நடத்திவரத் துணிவுடன் நின்று வருகிறோம். சிறிது காலமாக நாம் சரியான காலத்தில் கலாநிதியைப் பிரசுரிக்கக் கூடவில்லையென்கிற ஒரு சிறிய குறை நம் மீது உண்மையில் உண்டு. அதை நாம் ஏற்றுக் கொண்டு, பத்திரிகையை இன்னும் நடத்திவரவும் யோசித்திருக்கிறோம். நாம் இக்காரியத்தை நடத்தவில்லையென்றால், தகுந்த யோக்யதையும் பொறுப்பும் வாய்ந்த வேறுகனவான் எவரேனும் இவ்வூழியத்தைச் செய்ய முன்வருவதற்குத் தயாராயிருக்கின்றாரா? நாம் ஒன்பது வருஷகாலமாய் ஆயிரக்கணக்கான திரவியச் செலவையும், இராப்பகலாய் உழைக்கும் அஸாதாரணமான சிரமத்தையும் ஏற்றுக்கொண்டு, ஏதோ விசாலமான நோக்கத்துடன் இவ்வூழியத்தைச் செய்து வருகிறோம். நமக்குச் செல்வவான்களுடைய உதவி சிறிதேனும் இருந்தால், கலாநிதி ஒரு சிறிதும் தாமதமின்றி வெகு ஒழுங்காகவும், இன்னும் விசேஷ சீர்மைகளோடும் வெளியாகும்படி நாம் ஏற்பாடுகள் செய்வோம். ஆனால் செல்வவான்களை அடுப்பதென்றால், அது நம்மாலாகாத காரியம். இக்காரியத்தின் பெருமையும் யோக்யதையும் இத்தகையதென்று தெரிந்து உதவிபுரியும் செல்வவான் அரிது. கலாநிதியின் நண்பர்களான சந்தாநேயர்கள் சந்தாத்தொகையோடுவேறு திரவியஸஹாயம் செய்தாலும் செய்யலாம்; அல்லது அவரவருக்குத் தெரிந்த வேறு தனவான்களிடம் ஸமயம் நேர்ந்தபோது அறிவித்து, அச்செல்வவான்கள் மூலமாய் உதவி புரிய ஏற்பாடு செய்தாலும் செய்யலாம். சாஸ்திராபிவ்ருத்திக்கு முக்கியோபயோகமாயுள்ள இக்காரியத்தை இடையூறின்றி நடைபெறச் செய்வது நமது சந்தாநேயர்களுக்கும் கடமையாயேற்பட்ட விஷயம். ஆகவே நாம் நமது சந்தா நேயர்களையே நம்பிக்கொண்டு இக்காரியத்தைக் கைவிடாமல் நடத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். நமக்குக் கிடைக்கும் சொற்பவரும்படியையும், நமது உழைக்கும் சக்தியையும் நம்மாலான வரையில் நாம்இதற்காகச் செலவிட உத்தேசித்திருக்கிறோம். ஆகவே நமது கையொப்ப நேயர்கள் நம்மைக் கூடிய வரையில் ஆதரிப்பார்கள் என்கிற நம்பிக்கையோடு நாம் அடுத்த வருஷத்திய கலாநிதியை ஆரம்பிக்கப் போகிறோம்.



வைத்தியகலாநிதி தாமதித்து வெளியாவதற்கு அச்சாபீஸில் நடந்தேறும் சில ஒழுங்கீனமும் முக்கிய காரணம். இந்த ஸஞ்சிகைக்குத் தேவையான விஷயங்களைச் சம்பாதித்து அச்சாபீஸுக்கு நாம் அனுப்பி சுமார் ஆறுமாதங்களாயின. பிரஸித்தமானதும் மிகப்பெரிதுமான. இவ்வச்சாபீஸில் நாம் ஆரம்பம் முதல் சுமார் 9-வருஷ காலமாய் கலாநிதியை அச்சிட்டுவருவதால், வேறொரு அச்சாபீஸுக்கு வேலையை மாற்றுவதற்கும் சில அசௌகரியங்கள் இருந்துவருகின்றன. இனியும் இவ்விதமே தாமதம் நேரிடும் போலிருந்தால், சீக்கிரத்தில் மற்றொரு அச்சாபீஸுக்குக் கலாநிதியின்வேலையை மாற்றுவதாகவும் யோசித்திருக்கிறோம். மற்றொரு விஷயத்தையும் இச்சந்தர்ப்பத்திற் குறிப்பிடுவது அவசியமாகிறது. ‘மாதவநிதாநம்’ என்கிற ரோகவிஞ்ஞாநக்கிரந்தம் மொழி பெயர்க்கப்பட்டுக் கிரமமாக வைத்திய கலாநிதியோடு வெளியிடப்பட்டு வருகிறது. அது மிகவும் உத்தமமான வைத்தியக்கிரந்தம். அது அடுத்த வருஷத்தில் பெரும்பாலும் முடிவு பெறும். ஒவ்வொரு சந்தா நேயரும் இதன் பூர்த்தியை ஆவலுடன்எதிர் பார்ப்பரென்றும் நாம் நிச்சயமாய் நம்புகிறோம்.

இத்யாதி ஸந்தர்ப்பங்களை யெல்லாம் நன்கு யோசித்து, நமது சந்தா நேயர்கள் வைத்திய கலாநிதி நீடித்து நடைபெறுவதற்கு ஏற்றவாறு நம்மை மேன் மேலும் உத்ஸாஹப்படுத்த வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம். நண்பர்களே! இப்பொழுது தபால் சார்ஜுகளெல்லாம் மிகவும் உயர்த்தப்பட்டுப் போயின. அடுத்த ஸஞ்சிகை வெகு சீக்கிரத்தில் வெளிவரும். அதை வருஷச் சந்தாவுக்கு வி. பி. இல் அனுப்பும்படி தாங்கள் சும்மாயிருக்கக் கூடாதென்று கேட்டுக் கொள்கிறோம். வி. பி. இல் அனுப்புவதானால் ஐந்தாறு அணா அதிகமாய் விடுகிறது. ஆகவே நமது சந்தாதார் ஒவ்வொருவரும், அவரவரது சந்தாத் தொகை 4 ரூபாயையும், இப்பத்திரிகை கிடைத்த ஒரு வாரத்திற்குள் நமது ஆபீஸுக்கு மணியார்டர் மூலமாய் அவசியம் அனுப்பிவிட வேண்டுமென்று நாம் முக்கியமாய் ஞாபகப்படுத்துகிறோம். இதற்குத் தவறினால் வி. பி. இல் பத்திரிகையை அனுப்ப நேரிடும். அதனால் வீணுக்கு 5 அல்லது 6 அணா அதிக செலவு நேரிடும். மேலும் சந்தா நேயர் வி. பி. யைப் பெற்றுக் கொள்ளாமல், அது நமக்குத் திரும்பி விட்டால், நாம் இன்னும் நஷ்டத்தில் மூழ்கிவிடுவோம். வைத்திய கலாநிதி நீடித்து நடந்துவருவதில் விருப்பமுள்ள நமது கை யொப்பக்கார நண்பர்கள் அவ்வித கஷ்டம் கலாநிதிக்கு நேரிடுவதற்கு இடந்தர மாட்டார்களென்றே கருதுகிறோம். ஆகவே ஒவ்வொரு சந்தா நேயரும் தமது சந்தாத் தொகையை உடனே தயவு செய்து மணியார்டர் மூலமாய் அனுப்பிவிடுவார்களென்று நாம் எதிர் பார்க்கிறோம். மேலும் வேறுவிதமான உதவியைச் செய்யக் கூடிய நன்பர்களும், முன்னதாய் நமக்கு தயவு செய்து அறிவித்துவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.அடுத்த மூன்று ஸஞ்சிகைகளின் வேலைகளில் பெரும் பான்மையான பாகம் முடிந்துவிட்டது. வெகு சிக்கிரத்தில் உங்களுக்கு அனுப்ப வேண்டியிருப்பதால்நாம் மேலே வேண்டிக்கொண்டுள்ள விஷயங்களில் தவறாமல் கவனம் செலுத்தி ஏற்றதைச் செய்வீர்களென்று நம்புகிறோம்.

# CORRESPONDENCE.

## கடிதங்கள்.

### க்வாதம் என்றால் என்ன?

வைத்திய கலாநிதி பத்திராதிபர் அவர்களுக்கு

ஐயா,

தங்களுடைய அருமையான வைத்திய கலாநிதியைச் சில நாட்களாக நான் படிக்க நேர்ந்தது, இதில் பெரும்பாலும் விஷயங்கள் எல்லாம் எளிதில் விளங்கக்கூடியவைகளாகவே இருக்கின்றன. அரிதாக ஒவ்வொரு அம்சம் என்னைப் போன்றவருக்குக் கொஞ்சம் விளங்கவில்லை. ஆகவே நான் இப்பொழுது கேட்கும் ஒரு விஷயத்தை மாத்திரம் கவனித்து, தயவு செய்து தகுந்தவாறு பதில் எழுதக் கோருகிறேன்.

ஆங்காங்கு "க்வாதம்" என்று தங்களால் எழுதப்படுவதைப் பார்த்தேன். அதைப்பற்றிய விவரத்தைக் கவனித்ததில் அதற்குக் கஷாயம் என்று பொருள் என்று தெரியவருகிறது. கஷாயம் என்கிற பிரஸித்தமான பெயரை விட்டு க்வாதம் என்கிற ஸம்ஸ்க்ருதப் பெயரைத் தமிழில் எழுதிவருவதன் பிரயோஜனமென்ன? பலருக்கும் பிரஸித்தமாயுள்ள பெயரையே தாங்கள் எழுதினால் உபயோகமாயிருக்குமல்லவா? இவ்விதமே வேறு சில ஸந்தேஹங்களும் எனக்கு உண்டு. அவற்றைப்பற்றி மற்றொரு தடவை தங்களுக்கு எழுதுவதாய் உத்தேசம். கலாநிதியின் மூலமாய் இதற்குத் தகுந்த ஸமாதானம் வெளிவருமென்று எதிர்பார்க்கிறேன்.

**கே. எம். சதாசிவம் பிள்ளை, வைத்தியர்.**

**விடை** :—க்வாதம் என்றால், அது ஒருவித கஷாயத்தின் பெயரேயன்றி, பலவித கஷாயங்களுக்கும் பொதுப் பெயரல்ல. க்வாதம், ஸ்வரஸம், பாண்டம், கல்கம், ஹிமம் என்று கஷாயம் ஐந்து விதம். (1) கஷாயத்திரவ்யங்களை ஜலத்திற் சேர்த்து, ஓரளவுக்குக் குறையும்படி வற்றக் காய்ச்சி வடிக்கட்டி யெடுப்பது "க்வாதம்." (2) திரவ்யங்களை (மூலிகைகளை) ஈரமாயிருக்கையிலேயே இடித்துப் பிழிந்து ரஸமெடுப்பது "ஸ்வரஸம்." (3) ஔஷதச்சரக்குகளைச்சூர்ணம் செய்து, அதில் ஓரளவு கொதித்துக் கொண்டுள்ள ஜலத்தைச் சேர்த்து, சிறிது நேரம் கழித்து வடிக்கட்டி யெடுப்பது "பாண்டம்." (4) திரவ்யங்களைத்திரவம் விட்டு ஆட்டி யுபயோகிப்பது "கல்க கஷாயம்." (5) பதார்த்தங்களைக் குளிர்ந்த ஜலத்திற் சேர்த்து, இரவில் பனியில் ஊறவைத்தெடுத்து உபயோகிப்பது "ஹிமம்." இந்த ஐந்துக்கும் சேர்ந்த பொதுப் பெயர் கஷாயம என்பதே. ப—ர்.

---

### மலபந்தத்தில் ஹிதமான உணவுகள்.

வைத்திய கலாநிதி பத்திராதிபர் அவர்களுக்கு

ஐயா, மலபந்தத்தினால் கஷ்டப்படுகிறவர்களுக்கு எந்த விதமான ஆஹாரங்கள் உபயோகமானவை? என்னிடம் வருகிற பிணியாளிகளுக்கு அடிக்கடி நான் மலபந்தத்திற்கு ஏதாவது தகுந்த ஔஷதம் கொடுத்து, மலச்சிக்கலுக்கு ஒருவாறு பரிஹாரம் செய்ய வேண்டியிருக்கிறது. அவ்விதம் ஔஷதம் கொடுப்பதால் தத்கால சாந்திதான் பலருக்கு உண்டாகிறது. உணவுகளை மாற்றியுபயோகிப்பதால் கிரமமாக மலச்சிக்கலும் மாறி குடலும் ஸ்நிக்த்தமாகும் என்று நினைக்கிறேன். எவ்விதமான உணவு மலபந்தத்திற்குப் பரிஹாரமாயிருக்குமென்பதை தயவு செய்து வைத்தியகலாநிதியின் மூலமாய் தெரியப்படுத்தினால் என்போன்றவருக்கு ரொம்ப உபகாரமா யிருக்கும்.

**ப. இராமக்ருஷ்ண வைத்தியர்.**

**விடை**:—கோதுமை அல்லது வாற்கோதுமையினாலான உணவு மலபந்தரோகிகளுக்கு உபயோககாரமாயிருக்கும். ஒவ்வொருவேளையிலும் போஜனத்திற்குப் பிறகு ஸாத்கியமானால் சிறிது வெண்ணெயுண்பது, தாராளமாகப் பருப்பும் நெய்யும் கலந்த போஜனம், பலவிதமான கீரையினங்கள், வெண்டை, புடல், சேம்பு, அவரை இந்த சாகங்கள், பாலும் சர்க்கரையும் கலந்த அன்னம், ஆடைத் தயிர் கலந்த போஜனம், ஆமணக்கெண்ணெயில் வறுத்த பொரியல்கள், விசேஷ பருப்பு சேர்த்துப் பக்குவம் செய்த குழம்பு, கமலாக்கிச்சிலி, கொடி முந்திரிகை, மாதுளை, அத்தி, செவ்வாழை முதலிய சில கனிகள்; ஆகிய இவற்றில் எவரெவருக்கு எது ஸௌகர்யமாகக் கிடைக்குமோ அதை யுபயோகிக்கலாம். மல பந்தத்தில் உபயோகிக்கத்தகாதவையாவன :—ரொட்டி, கடலை, கோழி முட்டை, மாம்ஸ போஜனம், சவ்வரிசி முதலியவை. சில பொதுக்குறிப்புகள்:—இப்பிணியாளி தனக்குத் தேவையான திரவத்தை முழு அளவாகவும் உட்கொள்ளச் செய்வதில் கருத்தாயிருப்பது அவசியம். நடுப்பிராயத்திலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் 1 அல்லது 1½படி திரவப் பொருள் குறைந்தது தேவையாயிருக்கிறது. மலபந்தத்தினால் கஷ்டப்படும் பல ஸ்த்



ரீகள் தினந்தோறும் ஒன்று அல்லது ஒன்றே கால் பைண்டுக்கு அதிகமாக நீர்ப்பொருள் உட்கொள்வதில்லை யெனத் தெரியவருகிறது. இவ்வளவு குறைவாக நீர்ப்பொருள் உட்கொள்வதே இவர்களுடைய மலபந்தத்திற்கு முக்கிய காரணமாய் ஆகிறது. பிறகு போதிய அளவு திரவப் பொருள் உபயோகித்து வந்தால் அந்த மலச்சிக்கல் நீங்குவதுண்டு. ப. ர்.

---

### வஸ்தி முறை.

வைத்திய கலாநிதி பத்திராதிபர் அவர்களுக்கு

கனம் தங்கிய ஐயா,

(1) தங்களுடைய சார்ங்கதர ஸம்ஹிதையின் உத்தர கண்டம் 281-வது பக்கத்தில் 35-38½ ச்லோகங்களின் மொழி பெயர்ப்பில் சில வஸ்திப் பிரயோகங்கள் கூறப்பட்டிருக்கின்றன. சில டாக்டர்கள் சொல்லுகிறபடி அவ்வஸ்திகள். உடலுக்குக் கெடுதி செய்யுமா? (2) 324-முறை வஸ்திப் பிரயோகம் செய்யலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது; ஒரு நாளிலேயே அத்தனை தடவை வஸ்தி செய்வதா? (3) அடிக்கடி வஸ்திப் பிரயோகம் கெடுதி செய்யாதா? (4) 291-வது பக்கத்தில்கூறியுள்ள "ஸித்தவஸ்தியும் அதன் சரக்குகளும்" என்கிற தலைப்பில் குறிக்கப்படுகிற 'தைலம்' என்பதற்கு என்ன எண்ணெய் சேர்க்கலாம்? இவற்றிற்கு அவசியமான விவரங்களை வைத்திய கலாநிதியின் மூலமாய் தெரிவிக்கக் கோருகிறேன்.

**மௌல்மீன், பி. எம். கிருஷ்ணஸ்வாமி பிள்ளை.**

**விடை** :— (1) வஸ்திகளை முறைதவறாமல் உபயோகித்தால் விசேஷ நன்மை யேற்படுமென்று அந்தப் பிரகரணத்திலேயே கூறப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க அச்சிகித்ஸை கெடுதி செய்யுமென்று மேனாட்டு வைத்தியம் கற்றவர் கூறுவதற்குப் பிரமாணமில்லை. எந்த விதமான மனிதருக்கு, எந்தெந்த நிலைமைகளில், எந்த காலத்தில் வஸ்திகளை எவ்விதமாகப் பிரயோகிக்க வேண்டுமோ அவ்விவரங்களும் சார்ங்கதர ஸம்ஹிதையின் அதே பிரகரணத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்த முறைகளை அநுஸரித்து வஸ்திகளைப் பிரயோகிப்பதால் கெடுதியொன்றும் ஏற்படமாட்டாது. ஆங்கில வைத்தியம் கற்றவர் பலவிதமான விஷ நீர்களை ஒவ்வொரு பிணியாளியின் தேஹத்தில் (நேரில் இரத்தத்திற்குள்ளேயே) பல முறை குத்திக் குத்தி நிரப்புகிறார்களல்லவா? அப்படிச் செய்வதால் தீங்குண்டாவதில்லையோ வென்று அந்த ஆங்கில வைத்தியர்களைத் தாங்கள் கேட்கக் கூடாதா? ஸூசிகர்பரணமுறையை விட வஸ்தி முறை எவ்விதத்திலும் தன்மையில் சாந்தமானது. (2) ஒரே நாளில் 324-தடவை வஸ்தி செய்ய முடியாது; அவ்விதம் கிரந்தத்திலும் கூறப்படவில்லை. சில நாள் விட்டு விட்டு, கிரமமாக அத்தனை வஸ்திகளைப் பிரயோகிக்கலாமே யன்றி ஒரு நாளிலாவது ஒரு வாரத்திலாவது அத்தனை வஸ்திகளையும் பிரயோகிக்கக் கூடாது. (3) அவசியம் நேரிடுகையில் அடிக்கடி வஸ்தியைப் பிரயோகிப்பதால் கெடுதி யுண்டாகாது. (4) ஒரு குறிப்பிட்ட எண்ணெயைக் கூறாமல், பொதுவாகத் "தைலம்" என்று மாத்திரம் மொழிந்தால், அதற்கு 'நல்லெண்ணெய்' என்பதுதான் பொருள். (சார்ங்கதரஸம்ஹிதை, இரண்டாம்பதிப்பு, 21-வது பக்கம் 17, 18-வது வரிகளைப் பார்க்க.)-ப-ர்.

---

# DRUGS AND THERAPEUTICS.

## ஔஷதங்களும் சிகித்ஸையும்.

### தேள் கொட்டுதலுக்குச் சிகித்ஸைகள்.

திருவாலூரிலிருந்து ஸ்ரீமான் ஆத்மாராமன் என்பவர் அடியில் வருமாறு நமக்கு எழுதுகிறார்:—

"நான் இங்கே எழுதுவது பலருக்குப் பிரயோஜனமுள்ளது என்று தோன்றுவதால், தயவுசெய்து இதை தாங்கள் கலாநிதியில் பிரசுரம் செய்யவேணுமாய் கேட்டுக்கொள்கிறேன். தேள்கொட்டினால் அதற்குச் சிகித்ஸை தெரியாதவர்கள் யாருமில்லை. மந்திரத்தினால் விஷம் இறங்கிவிடுகிறது என்றுஎண்ணம் உண்டு. தேள்கொட்டிய வுடனே விஷம் மேலுக்கு ஏறாமல் கொட்டுவாய்க்கு மேலே கயிற்றால், கட்டிவிட்டு, அடியிற்கண்ட மருந்துகளில் ஏதேனும் ஒன்றை உபயோகிக்கலாம்.— (1) நாயுருவிப்பூண்டின் கொழுந்தைக் கசக்கித்தேய்க்கலாம். (2) சுண்ணாம்பு, ஒட்டடை இவைகளை அரைத்துப் பூசலாம். (3) புளியங் கொட்டையைத் தோல் நீக்கி உட்பருப்பு தெரிகிறவரையில் தேய்த்து கொட்டினவாயில் வைததால் அது அங்கே ஒட்டிக்கொள்ளும். விஷம் அதில் இறங்கினபிறகு விதையின் நிறம் மாறிவிழுந்துவிடும் என்று சொல்லப்படுகிறது. (4) சுண்ணாம்பு உப்பு இவற்றைச் சமனாகச் சேர்த்து அரைத்து கொட்டினவிடத்தில் பூசி அனல் காட்டலாம். (5) வெங்காயத்தைக் கொட்டினவிடத்தில் வைத்து அரைமணி நேரம் தேய்க்கலாம். (6) பெருங்காயத்தை அவ்விடத்தில் பூசலாம். (8) காடிக்காரத்தைப் பூசலாம்."

---

## அயம் மனிதருக்கு முக்கிய உணவு.

மனிதருடையவும், இதர உயர்த்ரஜந்துக்களுடையவும் உணவுகளில் அயம் ஒரு முக்கியமான ஸத்துவம். அதை மாத்திரையாகவும் பஸ்மமாகவும் மாத்திரம் உட்கொண்டுதேஹத்திற் சேர்க்கலாமென்றுநினைக்கவேண்டாம். ஆனால் இந்த லோஹம் இயற்கையிலேயேசேர்ந்துள்ள சாகங்களை தாராளமாய் புஜித்து இதைதேஹத்தில் சேர்க்கலாம். இரண்டாவது கூறிய முறையே மற்றதினும் மிகச்சிறந்தது.எல்.மாக்வின்,ஆர். செரிகெல்லி என்கிற இரண்டு ஆராய்ச்சிக் காரர்களும் பல ஒஷதிகளின் பற்பல அம்சங்களையும் பரிசோதித்து அவற்றில் அயம் பல வேறு அளவுகளில் பௌதிகக் கூறுபாடாகக் கலந்திருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒஷதிகளில் அயம் இரண்டுவகையில் கலந்திருக்கிறது. ஒஷதிகளை எரித்தோ, வேறுவகையில் அவற்றைச் சமைத்தோ அவற்றிலிருந்து பிரத்தியேகமாகப் பிரித்து எடுக்கக்கூடியது ஒருவகை. இது ஒஷதிகளின் சர்மங்கள் அல்லது பட்டைகளில் பெரும்பாலும் அடங்கியிருக்கிறது. மற்றொருவகை ஒஷதிகளின்பல பாகங்களிலும் பிரித்துக் கிரஹிக்கக்கூடாதவிதமாய் பரவியிருக்கிறது. இரண்டாவது கூறிய அயப்பொருளடங்கிய சாகங்களே தேஹத்தில் எளிதில் சேர்ந்து போஷணைக்கு உபயோகமானதாயிருக்கிறது. உருளைக்கிழங்கு, ஆள்வள்ளிக்கிழங்கு, பசளை இவை முதலிய சாகங்களில் அயப்பொருள் விசேஷமாகக் கலந்திருப்பதாக அநேகம் பரிசோதனைகளிலிருந்து தெரியவந்தது.

---

## நாட்பட்ட மலபந்தத்திற்கு.

அடியிற் குறிப்பிடும் கஷாயமுறை நாட்பட்ட மலபந்தத்திற்குச் சிறந்த பரிஹாரம்:

| | |
|---|---|
| சூரத்து நிலாவாரை | 4 தோலா |
| சுக்கு | 1 ,, |
| லவங்கம் | 2 ,, |
| ஜலம் | ½ படி |

முதலிற் கூறிய மூன்று சரக்குகளையும் இடித்து, படிஜலத்தில் சேர்த்து, 1/16 படியாகச் சுண்டவைத்து வடிக்கட்டிச் சாப்பிடவும். வெகு சுகமாக மலம் கழியும்.

---

## நித்திரை யின்மைகதுப் பரிஹாரம்.

பித்த மேலீட்டினால், அல்லது வேறு அஸௌக்கிய நிலைமையினால் ஸாதாரணமாயுண்டாகும் தூக்கமின்மைக்கு போலிக் கொட்டாவி முறை நல்ல பரிஹாரம் என்று தெரிய வருகிறது. ஓர் ஆங்கில வைத்தியப் பத்திரிகை இம்முறையைப் பாராட்டி யெழுதுகிறது முதலிற் படுக்கையில் ஒருவாறு சாய்ந்துகொண்டு, கண்களை மூடிக்கொண்டு, வாயைத் திறந்து இரண்டு மூன்றுத் தடவை நீண்ட கொட்டாவி விடுவதுபோல் அப்யாஸம் செய்யவும். இவ்விதம் ஐந்து ஆறு தடவை போலிக் கொட்டாவி விட்டபிறகு பெரும்பாலும் தூக்கம் கண்ணை மறைப்பதாகத் தோற்றும். அவ்விதமே கண்களை மூடியவாறு மீண்டும் நாலைந்து தடவை கொட்டாவி விடவும். அப்பால் படுக்கையிற் படுத்து நன்கு தூங்கவேண்டிய நிலைமை யுண்டாவது நிச்சயம். இதன் தத்துவார்த்தம் என்னவென்றால்—ஒவ்வொரு தடவையும் நீண்ட ச்வாஸத்தை இழுத்து விடும்போது உட்புறமுள்ள அசுத்தவாயு வெளிப்பட, அது மூலமாய் நித்திரைக்குத் தடங்கலுண்டுபண்ணக்கூடிய தோஷமும் சிறுகச் சிறுக வெளியாகிறது. ஆகவே உட்புற இந்திரியங்கள் சாந்த நிலைமையைப் பெற்று, மனதுக்குச் சாந்தத் தன்மையுண்டாய், சுகநித்திரையும் ஏற்படுகிறது.

---

## குழந்தையின் பிணிக்குத்தாயை யடித்தல்.

ருமேனியா தேசத்து கிருஷிகர்களிடம் ஒரு விநோத வாடிக்கையுண்டு. அதிலும் அவ்விடத்திய ஆண்டிகள் மாதிரியான ஜாதிகளிடம் (Gypsies) இவ்வழக்கம் விசேஷம். அதாவது ஒரு குழந்தை நோயுண்டு இறந்தால் அதற்குக் காரணம் ஏதோ ஒரு பேயென்றும், அப்பேய் தாயினிடம் பிரவேசித்திருக்குமென்றும் அவர்கள் கருதுகிறார்கள். ஆகவே தாயை அடித்தால், அவளிடம் ஆவேசம் செய்துள்ள துர்தேவதை ஓடிப்போமென்றும், அதனால் குழந்தை ஸௌக்கியமடையு மென்றும் நினைக்கிறார்கள். குழந்தைகள் அஜ்ஜாதியாரில் சுகவீனப்பட்டால், தாய்மாரின் கதி சொல்லத் தேவையில்லை. இந்த மூகாந்தரத்தைக் கொண்டு, ஒரு குழந்தை அஸௌக்கிய மடைந்ததென்றால், அதன் தாய், பிறர் கண்டு பிரமிக்கும்படியாகத் தன்னைத்தானே அடித்துக்கொண்டு விழுவாள்.-Practical Medicine.

---

## வெங்காயம்.

தேஹ போஷணைக்கு இன்றியமையாத ஸத்துவங்களும் உப்புவகைகளும் அடங்கியது வெங்காயம். வைத்தியசாஸ்திர பரிசீலனையின்படி இது ஒரு சிரேஷ்டமான சாகமாகும். நித்திரையின்மை முதலிய சில கோளாறுகளில் இது சிறந்த பரிஹாரவஸ்து வென்றும் பிரஸித்தியுண்டு.கீல் வாயு வென்கிற ஆமவாதத்தைப் போக்குங்குணமும் இதனிடம் உண்டு. இது பிடிக்காத சிலபிர்க்ருதிகளைத்தவிர்த்து,மற்றவர்களுக்கு இது ஜீர்ணசக்தியை விருத்தி செய்கிறது; தேஹத்தைப் போஷணை செய்கிறது; பசியை உத்தீபனம் செய்கிறது; நரம்புமண்டலத்தைச் செழுமையாகச் செய்கிறது. மிருதுவான மூத்திரவர்த்தினியாகவும் வேலை செய்கிறது. வெங்காயத்தில் கந்தகம் முதலிய ஸத்துவங்கள் அடங்கியிருப்பதால் இந்த சாகம் குடலுக்குள் கிருமிஹரமாகவும் வேலை செய்கிறது. ஜனங்கள் ஜலதோஷத்தைப் போக்குவதற்காகவும் வெங்காயத்தை அடிக்கடியுட்கொள்ள விரும்புகிறார்கள்:சமைத்த வெங்காயம் உடல் வேதனையைத் தணிக்கவும், மலத்தை மிருதுவாகச் செய்து வெளியாக்கவும் கடுமையான ஜலதோஷத்திலும் கபத்தை வெளிப்படுத்தவும் உபயோகமாகிறது. ஆனால் கடுமையான ஜலதோஷத்தில் கபத்தை வெளிப்படுத்தவும் மார்வலியைப் போக்கவும் மார்பின்மீது வெங்காயத்தைப் போட்டலிகையாக(poultice) பிரயோகிக்கலாம்.—Popular Science Siftings.



---

# NOTS AND ITEMS OF INTEREST.

# பலவகைக் குறிப்புகள்.

## இரைப்பையில் மயிர்ப்பந்து.

குழந்தைப் பருவத்தில் ஒரு துர்வழக்கத்தின் பயனாக ஒரு பெண் கடுமையான வயிற்று வலியால் வருந்தநேரிட்டது. வொயிட்மோர் என்பவர் எழுதியுள்ள இது ஸம்பந்தமான ரிபோர்டின் சுருக்கம் பின்வருமாறு:—"இங்கே குறிப்பிடுகிற பெண் 13-வயதுள்ளது. ஒருவித குடல் வாதநோய் (appendicitis) ஏற்பட்டிருப்பதாக அப்பெண் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டாள். குழந்தைப்பருவத்தில் அநேக ஸமயங்களில் அப்பெண் தன் தலைமயிரையிழுத்து விரலில் சுருட்டிச் சுருட்டி, அவ்விரலை வாயில் வைத்துக் கொண்டிருப்பது வழக்கமாயிருந்தது என்று பிறகு தீர விசாரித்ததில் தெரியவந்தது. அநேக ஸமயங்களில் கண்டித்தும் அவ்வழக்கம் இரண்டொரு வருஷம் தொடர்ந்து வந்ததாம். ஒரு வருஷத்திற்கு முன்பு இரண்டு மாஸங்களுக்கு ஒரு முறை, சில ஸமயம் அடிக்கடி, இரைப்பையில் வலி யெடுத்து அப்பெண் துன்பப்பட நேர்ந்தது. அஸ்ஸமயங்களில் படுத்திருந்தால் வலியிராது; எழுந்துலாவினால் வலி கிரமமாக அதிகரிக்கும். பிறகு சஸ்திர மிட்டு(ஆபரேஷன் மூலமாய்) இரைப்பையைப் பரி சோதித்ததில்,அதனுள் நெளியக்கூடிய பதார்த்தச் சுருள் நிரம்பவும் இருப்பதாக உணரப்பட்டது. பிறகு இரைப்பையிலும் சஸ்திரமிட்டு (ஆபரேஷன் செய்து) பார்த்ததில், இரைப்பையின் உட்புறம் முடியவும் கவர்ந்து கொண்ட பெரிய மயிர்ச்சுருள் இருந்தது. அதை வெளிப்படுத்திய பிறகு அப்பெண் ஸௌக்கியப் படுத்தப்பட்டது. அந்தமயிர்ச் சுருள் சுமார் 7 அவுன்ஸ் எடையிருந்தது."—Boston Medical and Surgical Journal.

---

## க்ஷய ரோக பரிஹாரத்திற்கான ஸாதநங்கள்.

1. வீட்டின் கூரையின் மேலும், சுற்றுப் புறங்களிலும் சூர்யரச்மி நன்றாகப் பரவுதல். 2. நகரங்களுக்கு வெளியில், விசாலமான நிலங்களில், அல்லது வநங்களில் நல்ல பரிசுத்த வாயுவை ச்வஸித்துக் கொண்டு வஸித்தல். 3. சர்மம், பற்கள், நாசித்வாரங்கள் ஆகியவை வெகு பரிசுத்தமாயிருத்தல். 4 நிர்மலமும் பரிசுத்முமான பான ஜலம். 5 வெண்ணெய், ரொட்டி, பால், இனிப்பான தயிர், கனிகள், புதிய சாகங்கள் முதலிய சிறந்த போஷணைக்குரிய உணவுகள். 6 அமைதியாக எட்டுமணி ஸாவகாசத்துக்குக் குறையாத சுகமான நித்திரை. 7. பதினைந்து நிமஷத்திற்குக் குறையாமல் நன்கு ச்வாஸம் விட்டு, உடலையுழைத்து தினந்தோறும் வியாயாமம் செய்தல். 8. உடலை நிமிர்த்திக் கொண்டு உட்காருவதும், தலைநிமிர்ந்து நடப்பதும், 9. மனவூக்கமும் உத்ஸாஹமுமாயிருத்தல்:—டாக்டர் ஸ்ரீராம்.

---

## வங்காள கவர்ன்மெண்டும் ஆயுர் வேதமும்.

ஆயுர்வேத யூனானி முறைகளைப்பற்றிய விஷயதத்துவங்களை விசாரித்து, அவற்றின் உபயோகங்களை கவர்ன்மெண்டுக்கு அறிவிக்க இம்மாகாண கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறார்களல்லவா? அங்ஙனமே வங்காள கவர்ன்மெண்டாரும் ஆயுர்வேத வைத்திய முறையின் பரிசீலனைக்காக் கமிட்டியேற்படுத்தி யிருக்கிறார்கள். கீழ்நாட்டு வியாதி பரிசீலனத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஸ்கூல் ஆப்ட்ராபிகல் மெடிஸின் என்கிற கார்யாலயத்தின் அதிகா

ரிகள், அக்கமிட்டியார் விடுத்துள்ள பிரச்னபத்திரங்களை இந்தியாவில் அனேகவிடங்களிலுள்ள பிரஸித்தமான ஆயுர்வேதவைத்தியர்களுக்கு அனுப்பிவருகிறார்கள். இக்கமிட்டிகள் தேசீய வைத்தியாபிவிருத்தியில் எவ்வளவுதூரம் உபயோகப்படுமோ அது அவர்களுடைய முடிவான ரிபோர்டுகள் வெளியான பிறகுதான் தெரியுமேயன்றி, கமிட்டி நியமித்து விட்டதையே நாம் ஒரு பெருமையாகக் கருதிவிடுவதற்கில்லை.

---

## பாம்பு கடிக்கு ஒரு நிச்சயமான சிகித்ஸை.

ஐதராபாத்திலிருந்து ஹகீம் முகம்மத் யௌனிஸ் என்பவர் பின்வரும் மிக முக்கியமான ஒரு செய்தியை யெழுதுகிறார். "புகையிலை வெகு சுலபமாகக் கிடைக்கக் கூடியதும், ஸர்ப்பவிஷத்தைப் போக்குவதில் உண்மையில் சிலாக்கியமானதுமாயிருக்கிறதென்கிற இவ்விஷயத்தைப் பலரும் அறிவதற்காகத் தமது பத்திரிகையில் இவ்விஷயத்தைப் பிரசுரம் செய்ய வேண்டும். சுமார் ஐந்துதோலா எடையுள்ள புகையிலையை பத்து தோலா ஜலத்தில் அரைத்துக் கரைத்து விடவும். அதில் தெளிவாயுள்ள திரவபாகத்தைக் குடித்து விட்டு, சக்கையைத் தள்ளிவிடவும். ஸர்பத்தால் கடிக்கப்பட்டவன் ஞாபகமற்று வீழ்ந்திருந்தால், புகையிலைநீரை அவனது தொண்டையில் செல்லும்படி ஊற்றவும்; பற்கள் கட்டிப்போயிருந்தால் நாஸித்வாரங்களினுலாவது தொண்டைக்குள் செல்லும்படி இந்த திரவத்தைப் பீச்சிடவும். இது உபயோகிக்கப்பட்ட ஐந்து நிமிஷங்களில் அம்மனிதன் வாந்திசெய்ய ஆரம்பிப்பான். வாந்தியாக ஆக விஷத்தின் வீர்யமும் அற்றுப்போம், மனிதன் கிரமமாக ஒருமணி ஸாவகாசத்தில் குணமடைந்து விடுவான். ஸர்ப்பங்கள் புகையிலை விளையும் நிலங்களின் மூலமாய் நடமாடுவதில்லை யென்று இவ்விடங்களில் ஒரு பிரஸித்தியுண்டு. ஆகவே ஸர்ப்பவிஷத்திற்குப் புகையிலை ஒரு சிறந்த முறிவுச் சரக்காகும்.

---

## ஒட்டிய தாடை.

ருவன் தாடை ஒட்டிப் போய் பள்ளம் ந்திருப்பதன் காரணம் என்ன வென்றும், ப் போயுள்ள பாகத்தைக் கதுப்புள்ளதாகச் து பருமனாகத் தோற்றுவிப்பதற்கு என் வழியென்றும், ஒருவன் உடல் இளைத்திருப்பதாலேயே அவன் தவடைகளும் ஒட்டிப் போயிருக்க வேண்டுமென்கிற அவசியமில்லையென்றும், ஆகவே தவடைகளை நிரப்பிக் கதுப்பாகச் செய்யும் உபாயமேதேனும் இருந்தால் தெரிவிக்க வேண்டு மென்றும் 'வானிடி' யென்பவர் "டாக்டர்" என்கிற பத்திரிகையின் ஆசிரியரைக் கேட்டதற்கு, அப்பத்திரிகை யளித்துள்ள விடை பின்வருமாறு:—"ஒட்டிய தாடைக்குப் பரிஹாரம் செய்ய ஔஷதம் எதுவும் வேண்டாம்; ஏனெனில் அது வியாதியல்ல; தவடைகள் ஒட்டியிருப்பதற்குக் காரணம் தேஹத்திற் போதிய கொழுப்பின்மையே. இது பொதுவாயுள்ள ஹேது. ஜீர்ணசக்தியை விருத்தி செய்வதற்கும், உண்ணும் உணவு இரத்தத்திற் சேர்ந்து போஷணையை விருத்தி செய்வதற்கும் தகுந்த ஔஷதம் அல்லது உபாயம் ஏதேனும் செய்து கொண்டால், தேஹத்திற் போதிய கொழுப்பு ஏற்பட்டு, உடல் செழிக்கத் தவடைகளும் கதுப்பாகப் பெருக்கும்."

---

## ஹரித்வார ஆயுர்வேத கலாசாலை.

ஹரித்வாரத்தில் ருஷிகுல கல்விச்சாலை ஸங்கம் என்று ஒரு ஸ்தாபனம் உண்டு. அச்சங்கத்தாரின் முயற்சியினுல் வெகு ஸமீபத்தில் மிகப்பெரிய ஆயுர்வேத கலாசாலை யொன்று ஏற்படுத்தப்போவதாய் அறிய நாம் மிகவும் ஸந்தோஷப்படுகிறோம். அக்கலாசாலையுடன் சேர்ந்தாற்போல ஓர் ஆதுரசாலையும்(ஆஸ்பத்ரி), ஓர் ஔஷதசாலையும் (டிஸ்பென்ஸரி), வேறு அவசியமான ஸாதநங்களும் அமைக்கப்படும் என்றும் அறிகிறோம். வைத்தியசாஸ்திரத்தில் சிறப்பாகத் தேர்ச்சி பெறுவதற்கு என்னென்ன ஸாதநங்கள் வேண்டுமோ அவையெல்லாம் அக்கலாசாலையில் அமைக்கப்பட்டு, இஃதோர் ஆதர்ச கலாசாலையாக (Modal Ayurvedic College) இருக்க வேண்டியதற்கான ஸகல ஏற்பாடுகளும் செய்யப்படும் என்றும் தெரியவருகிறது. இக்கலாசாலை அமைக்கப்படுவதற்கான விசாலமான ப்ளானையும் நாம் பார்வையிட நேர்ந்தது. ஐக்கியமாகாண கவர்ன்மெண்டார் இக்கலாசாலை ஸ்தாபநஸம்பந்தமாய்50,000 ரூபாய் உதவி செய்ய ஸம்மதித்திருப்பதாகவும் கேள்விப்படுகிறோம்.

---



—பாண்டு ரோகத்தில் அஸாத்ய லக்ஷணங்கள்:—(1) வெகு நாட்களுக்கு முன்பு உண்டாய் மிக்க முதிர்ந்து போயுள்ளதும் ஆகவே உரத்துப்போனதுமான பாண்டுரோகம் சிகித்ஸைக்கு வசப்படாது. (2) அவயவங்கள் வீங்கிப்போய், பார்க்கப்படுபவை யெல்லாம் மஞ்சள் நிறமாக எவனுக்குத் தோற்றுகின்றனவோ அவனுக்குண்டாயுள்ள பாண்டுவும் அஸாத்யமாகும். (3) இறுகிய சொற்ப மலத்துடன் மஞ்சள் நிறமாகவும் கபத்துடன்கூடியதாகவும்[1] எவனுக்கு அதிஸாரமும் உண்டாயிருக்கிறதோ அப்பாண்டு அஸாத்யமாம். (4) அதிக தீநதன்மையடைந்து, மிகுதியாக வெண்மை நிறத்தினுலேயே அவயவங்கள் பூசப்பட்டதைப் போலத் தோற்ற, வாந்தி மூர்ச்சை நாவறட்சி இவற்றால் வருந்துபவனை பாண்டுரோகியும் பிழைக்கமாட்டான். (5) இரத்தம் க்ஷீணித்துப் போய் அதனுல் உடலெல்லாம் வெண்மையாகப் போனுல், அவ்வித பாண்டுவும் அஸாத்யமே. (6) எவனொருவனுக்குப் பற்களும் நகங்களும் வெளிறியிருக்கின்றனவோ, நேத்திரங்களும் அவ்விதமே வெண்மையாகப் போயிருக்கின்றவோ, வெண்ணிறமான மண்டலங்கள் எவனது பார்வைக்கு எங்கும் புலப்படுகின்றனவோ அப்பாண்டுரோகியும் இறந்துவிடுவான். (7) தேஹத்தின் முனைகளில்[2] வீக்கமுண்டாய், மத்தியப்பிரதேசத்து அவயவங்கள் மிகவும் இளைத்துப் போயுள்ள பாண்டுரோகியென்ன, அங்ஙனமே முனைபாகங்கள் இளைத்து மத்திய அவயவங்கள் வீக்கங்கொண்டுள்ள பாண்டுரோகி யென்ன, குதத்திலும் ஆண்குறியிலும் பீஜங்களிலும் வீக்கங்கொண்ட பாண்டுரோகியென்ன இவர்களையும் கைவிடவேண்டியதே. (8) மிக்க இளைத்து வியாதியால் தவித்துக்கொண்டு பிரஞ்ஞையற்றவன் போல் வீழ்ந்திருக்கும் பாண்டுரோகியையும் நற்பெயரை விரும்பும் வைத்தியன் சிகித்ஸை செய்ய ஏற்றுக்கொள்ளக் கூடாது [3]. (9) அவ்விதமே அதிஸாரம் ஜ்வரம் இவ்விரண்டாலும் கஷ்டப்படும் பாண்டுரோகிக்கும் சிகித்ஸை செய்வதிற் பிரயோஜனமில்லை. 12—15.

### காமலா அல்லது காமாலை. [4]

காமாலையின் ஸம்ப்ராப்தி:-யாதொரு பாண்டுரோகியானவன் பித்தத்தை விருத்தி செய்யக்கூடிய பதார்த்தங்களை வெகு அதிகமாயுபயோகிக்கின்றானோ, அவனுடைய இரத்தத்தையும் மாம்ஸத்தையும் பித்தமானது தஹித்து காமாலை யென்கிற காமலாரோகத்தை யுண்டுபண்ணுகிறது. 16.

காமாலையின் இலக்ஷணம்:—அப்பிணியாளியின் நேத்திரங்களும், சர்மமும், நகங்களும், முகமும் பசுமை நிறங்கொள்ளும்; மலமும் மூத்திரமும் செந்நிறமாகவேனும், மஞ்சள் நிறமாகவேனும் மாறும்; அவன் தவளையைப் போன்ற தேஹவர்ணத்தைப் பெற்று, புலன்கள் மங்கலடைய, உடலழற்சியாலும், அரோசகத்தினுலும், உணவு ஜீர்ணமாகாமையாலும், தேஹபலம் குன்றுவதாலும், சரீரமிளைப்பதாலும் துன்புறுவான். 17

---

1. இதில் கபம் முக்கியமாய் ஸம்பந்தித்திருந்தும் மலமானது இளகியிருப்பதற்குப் பதிலாய் இறுக்லாகவும், அதிகமாயிருப்பதற்குப் பதிலாகச் சொற்பமாகவும், வெண்மைக்குப் பதிலாக் மஞ்சள் நிறமாகவும் இருப்பது வியாதியின் பிரபாவத்தினுல் என்றறிக.

2. கைகள், கால்கள், சிரஸ் இவை இங்கே தேஹமுனைகள் என்று வழங்கப்படுகின்றன.

3. இந்த நிலைமையை ஸுச்ருதர் பாலகம் என்றும், அதனுல்பீடிக்கப்படுவனை பாலகியென்றும் கூறுகிறார். "முனைகளில் வீங்கியும், இடையில் இளைத்தும் அல்லது முனைகளில் இளைத்தும் இடையில் வீங்கியும், குதம் ஆண்குறி இவற்றில் வீங்கியும், ஜ்வரம் அதிஸாரம் முதலியவைகளால் மூர்ச்சித்து இறந்தவன் போலும் தோற்றும் ரோகி பாலகி யெனப்படுவான்" என்று மற்றோர் ஆசிரியர் கூறுகிறார்.

4. காமாலை யென்கிற இவ்வியாதி ஸம்ஸ்க்ருதத்தில் "காமலா" என்று வழங்கப்படும். காமாலை பாண்டுரோகத்தின் உபத்திரவமாகவும் உண்டாகலாம், அல்லது தனித்துச் சுதந்திரமாகவும் காணலாம்.

கும்ப காமாலை:—கோஷ்டத்தையும்[1] சாகைகளையும்[2] பற்றி, மிகுதியாகப் பித்தமேலீட்டினால் உண்டாகும் இக்காமாலையானது காலக்கிரமத்தில் மிகவும் முதிர்ந்து போய், கஷ்டஸாத்யமான கும்பகாமலா (கும்பகாமாலை) என்பதாக[3] மாறும். 18.

காமாலையின் அஸாத்யக் குறிகள்:-எவனொருவனுக்கு மலம் கறுநிறமாகவும் மூத்திரம் பசுமையாகவும் இருந்து, தேஹம் மிகவும் வீங்கி, கண்களும் முகமும் செந்நிறமடைந்து, வாந்தியும் இரத்தங் கலந்தண்டாகிறதோ, அங்ஙனமே மூத்திரமும் இரத்தங் கலந்ததாய் வெளியாகிறதோ, எவன் மிகத் துவண்டு வருந்துகிறானோ, தேஹதாபம், அரோசகம், நாவறட்சி, வயிற்றுப் பொருமல், சோம்பல், மூர்ச்சை இவற்றாலும் துன்பப்படுகிறானோ, முறறிலும் பசியற்றுப் போய் ஞாபகசக்தியுமிழக்கிறானோ அந்த காமாலை ரோகி சீக்கிரம் இறந்துவிடுவான். 19, 20.

கும்பகாமலாவின் அஸாத்ய நிலைமை:—வாந்தி, அரோசம், இருதயம் வெகு அதிகமாகத் துடித்தல், ஜ்வரம், தேஹம் துவண்டு போதல் இவற்றால் பீடிக்கப்பட்டும், ச்வாஸம் காஸம் இவற்றால் துன்பப்பட்டும், அதிஸாரத்தினால் வருந்தியுங் கொண்டுள்ள கும்பகாமாலை ரோகி பிழைக்கமாட்டான். 21.

ஹலீமகம்:—எப்பொழுது பாண்டுரோகத்தில் தேஹநிறம் மஞ்சளாகவும், கறும் பசுமையாகவும் ஆய்விடுகிறதோ, தேஹபலமும் உத்ஸாஹமும் க்ஷீணித்துப் போகின்றனவோ, சோம்பல் - ஜாடராக்னி மந்தித்தல்-மிருதுவான ஜ்வரம் இவை தொடர்கின்றனவோ, ஸ்த்ரீகளிடம் ஆவலற்று, உடலுளைத்தல் கண்டு, தேஹத்தில் அழற்சியும் நாவறட்சியும் அரோசகமும் தலைச்சுற்றலும் உண்டாகின்றனவோ, அப்பொழுது அப்பிணியாளிக்கு "ஹலீமகம்" என்னும் வியாதி கண்டிருப்பதாய் அறிக. இது வாதமும் பித்தமும் மிகப் பிரகோபித்து உண்டாகிறது.[4] 22, 23.

## 9. இரக்த-பித்த நிதானம். *

இரக்த-பித்த நிதாநமும் ஸம்ப்ராப்தியும்:—வெயிலில் அதிகமாய் நடமாடுதல், அதிகமாய் வியாயாமம் செய்தல், அதிக மனத்துயரம், மிகுதியாக வழி நடத்தல், மிதமிஞ்சிய புணர்ச்சி இவற்றாலும், தீக்ஷ்ணமான வஸ்துக்களையும், உஷ்ணமான வஸ்துக்களையும், க்ஷாரத்திரவ்யங்களையும்,[5] அம்லங்களையும், கடுரஸமுள்ள சரக்குகளையும் அமிதமாயுபயோகிப்பதாலும் பித்தம் பிரகோபித்து விதக்தம் என்கிற அழலும் நிலைமையைப் பெற்று, அப்பித்தமானது தனது கோளாறடைந்த குணத்தினாலேயே இரத்தத்தையும் சீக்கிரம் அழன்று போகச் செய்கிறது. அதன் பிறகு அவ்வித ரக்தம் மேல்நோக்கியும், கீழ்நோக்கியும்.

1. கோஷ்டம்—ஆமாசயம், அக்நியாசயம், பக்வாசயம், மூத்திராசயம், இரத்தாசயம், ச்வாஸாசயம், மலாசயம் இவையெல்லாம் கோஷ்டங்களாகும். இது விசேஷ பரிபாஷை. ஸாதாரணமாக இரைப்பை முதல் குதம் வரையிலுள்ள குடலே கோஷ்டமெனப்படும்.

2. சாகைகள்—இரத்தம் முதலிய ஆறு தாதுக்கள் சர்மம் இவற்றின் பொதுப் பெயர்.

3. கும்பகாமாலை—இது தமிழில் வறட்காமாலையென்று வழங்கப்படும். இதில் வீக்கமும் அதிகமாயுண்டாகும்.

4. பாண்டுவிலேயே லாகவகம் அல்லது அலஸம் என்கிற மற்றொரு நிலைமை ஸுச்ருதரால் கூறப்படுகிறது. [லாகவகம்—ஜ்வரம், உடலுளைத்தல், தலைச்சுற்றல், அக்னிமாந்த்யம், சோம்பல், தேஹம் க்ஷீணித்தல் இவை இதற்குக் குறிகள்.] ஹலீமகத்திலேயே இக்குறிகளெல்லாம் அடங்கியிருப்பதால் லாகவகம் அல்லது அலஸம் என்பது பிரத்தியேகமாக மாதவகரனால் கிரஹிக்கப்படவில்லை.

* இரக்த-பித்தம்—பித்தம் வேக்காட்டையடைந்து (காந்தலுற்று), இரத்தமும் அதனால் அழற்சியடைந்து தேஹத்தில் ஏதேனும் ஒரு வழியால் அத்தோஷம் வெளியாகும் வியாதி.

5. க்ஷாரத்திரவ்யங்கள்—யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம் முதலியன.





அல்லது இரண்டு பக்கங்களிலுமாய் வெளிப்படுகின்றது. அதாவது மேலே நாசி, செவி, கண்கள், வாய் இவற்றின் மூலமாகவும், கீழே ஆண்குறி அல்லது யோனி, குதம் இவற்றாலும், மற்ற தேஹத்திலும் எல்லா மயிர்க்கால்கள் மூலமாகவும் அவ்விதம் பிரகோபித்து அழன்றுபோன இரத்தம் வெளிப்படுகிறது.[1] 1—3.

இரக்த-பித்தத்தின் பூர்வரூபம்:— ஜாடராக்னி மந்தமாதல், குளிர்ச்சியில் விருப்பம் அதிகரித்தல், தொண்டை புகைந்து உஷ்ணமாதல், வாந்தி. ச்வாஸத்தில் அயத்தின் வாஸனையேற்படுதல் ஆகிய இக்குறிகள் இரக்த-பித்தம் உண்டாவதை அறிவிக்கக் கூடிய முற்குறிகளாம். 4

ச்லேஷ்மிக இரக்த-பித்தம்:— கபஸம்பந்தமான இரக்த பித்தத்தில் வெளியாகும் இரக்தமானது கனமாகத் தோய்ந்தும், வெளிறியும், ஸ்நிக்த்தமாகவும், பிசுபிசுப்புள்ளதாகவும் இருக்கும். $4\frac{1}{2}$.

வாதிக இரக்த-பித்தம்:—வாததோஷம் அதிகரித்த இரக்த-பித்தத்தில் வெளியாகும் இரத்தமானது கறுஞ்சிவப்பாகவும், நுரையுடையதாகவும், ரூக்ஷமாகவும் இருக்கும். 5.

பைத்திக இரக்த-பித்தம்:—பித்த ஸம்பந்தமான இரக்த-பித்தத்தில்[2] வெளியாகும் இரக்த-பித்ததோஷம் கஷாய நிறமாகவும், கறுப்பாகவும், பசு மூத்திரம் போன்றதாகவும், ஒருவித ஊதாநிறமாகவும், ஒட்டடை போன்றதாகவும், மைபோன்ற நிறமுள்ளதாகவும் ஆக இவ்வாறு பல வேறு நிறமுள்ளதாகக் காணப்படும். 6.

ஸம்ஸர்க்க-ஸந்நிபாத இரக்த-பித்தங்கள்:—ஸம்ஸர்க்கம் என்கிற இரட்டை தோஷங்களால் காணும் இரக்த-பித்தம் ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு தோஷங்களுடைய குறிகள் கலந்து உண்டாகும். அங்ஙனமே ஸந்நிபாத இரக்த-பித்தத்தில், மூன்று தோஷங்களில் ஒவ்வொன்றாலு முண்டாகும் இரக்த-பித்தத்திற்காணும் குறிகளெல்லாம் ஒரு மிக்கச் சேர்ந்து காணப்படும். $6\frac{1}{2}$.

இரக்த-பித்தம் மூன்று வகைப்படும்:—(1) மேல் நோக்கி வெளியாவது ஊர்த்வக ரக்த-பித்தம் எனப்படும்; இது கபதோஷத்துடன் கூடியது. (2) கீழ் த்வாரங்களால் வெளியாவது அதோக ரக்த-பித்தம் ஆகும்; இதில் வாத தோஷம் தொடர்ந்திருக்கும். (3) இரண்டு மார்க்கங்களாலும் வெளியாவது உபய மார்க்க ரக்த-பித்தம் எனப்படுகிறது; இதில் வாத-கபங்களாகும் இரண்டு தோஷங்களும் தொடர்ந்திருக்கும். $7\frac{1}{2}$.

இரக்த-பித்தத்தில் ஸாத்யாஸாத்ய நிலைமைகள்:—அவற்றுள் ஊர்த்வக ரக்த-பித்தம் சிகித்ஸையினால் எளிதில் நிவாரணமாகக் கூடியது. அதோக ரக்த-பித்தம் யாப்யமாகும். உபயமார்க்கமான இரக்த-பித்தம் அஸாத்யமாம். மேலும் ஒரு மார்க்கத்தினால் வெளியாகும் இரக்த-பித்தமும், பலசாலிக்குக் காணும் இரக்த-பித்தமும், அதிக வேகமில்லாமல் மிதமாய் வெளிப்படுவதும், சொற்ப காலத்திற்குள் உண்டானதும், ஸுகமான சீதள காலத்தில் தோன்றியதும், உபத்திரவங்களால் தொடரப்படாததுமான இரக்த-பித்தமும் எளிதில் நிவ்ருத்தியடையும். அன்றியும், ஒரு தோஷத்தினால் தொடரப்பட்டுக் காணும் இரக்த பித்தம் ஸாத்யமாகும்; இரண்டு தோஷங்கள் தொடருமானால்

1. இங்கு குறிப்பிட்டுள்ள நிலைமைகளை யனுஸரித்து, இவ்வியாதியானது "ஊர்த்வகரக்த-பித்தம்", "அதோகரக்த-பித்தம்", "உபயமார்க்க ரக்த-பித்தம்', என்று மூன்று விதமாய் வழங்கப்படுகிறது.

2. எல்லா இரக்த-பித்தமும் கோளாறடைந்த பித்தத்தினால் உண்டாகின்றன, அப்படியிருக்க பித்தத்தினால் உண்டாகும் இரக்த-பித்தமென்று பிரத்தியேகமாகக் கூறப்படுவதெங்ஙனம்? என்றால், இதர தோஷங்களுடைய ஸம்பந்தமில்லாமல் பித்ததோஷக் கோளாறு ஒன்றையே ஆதாரமாகக் கொண்ட இரக்த-பித்தம் எனக் கருத்து.

அது யாப்யம்; மூன்று தோஷங்களால் உண்டாவதும், அதிக வேகமாக வெளியாவதும், அக்னி மாந்த்யமிருக்கையிற் காண்பதுமான இரக்த பித்தம் அஸாத்யமாகும். வேறு வியாதிகளால் தேஹம் க்ஷீணித்தவனுக்கும், கிழவனுக்கும், அரோசகம் முதலியதால் உணவுண்ணுமலிருப்பவனுக்கும் உண்டாகும் இரக்த பித்தமும் அஸாத்யமாகும். 8-10

இரக்த-பித்தத்தில் உபத்திரவங்கள்:-பல மின்மை, ச்வாஸ-காஸம், ஜ்வரம், வாந்தி, வெறி, தேஹம் வெளுத்துப் போதல், தேஹத்தில் தாபம், மூர்ச்சை,புஜித்த உணவு மிகக் கடுமையாகக் குடலில் புளித்துக் காந்தலுறுதல், எப்பொழுதும் மனதில் அதைர்யம், இருதயத்தில் அபரிமிதமான வேதனை, நாவறட்சி, மலம் உடைந்து பேதியாதல், சிரஸ்ஸில் தாபம், நாசியினுல் சீழைச் சிந்துதல், அன்னத்வேஷம், உணவு ஜீர்ணமாகாமை ஆக இவை இரக்த பித்தத் திற்காணும் பல்வேறு விகாரங்களும் உபத்திரவங்களுமாம். 11.

இரக்த-பித்தத்தின் அஸாத்ய லக்ஷணங்கள்:- இதில் வெளியாகும் இரக்த-பித்த தோஷமானது மாம்ஸம் கழுவிய தண்ணீர் போன்றதாக்வும், கொதிக்க வைத்துப் பழுதடைந்த இரத்தம் போன்றதாகவும், சேறு கலந்த தண்ணீர் போன்றதாகவும், கொழுப்பும் சீழும் இரத்தமும் கலந்த தோஷம் போன்றதாகவும், அல்லது யக்ருத் என்கிற கல்லீரல் போன்றதாகவும், பழுத்த நாவற்கனி போன்றதாகவும், கறுப்பாகவும், அதிக நீலமாகவும், அதிக சவநாற்றமுடையதாகவும், இந்திரதனுஸ்ஸுக்குச் சமானமான காந்திகளைப்பெற்றதாகவும்—ஆக இக்கோளாறுகளோடு கூடியதாக—இருக்குமானல், இக்கோளாறில் எதுவும் அஸாத்யக் குறியென்றறிக. மேலும் யாதொரு இரக்த-பித்தத்தினுல் வருந்தும் ரோகியானவன், தான் நோக்கும் வஸ்துக்களையும், ஆகாயத்தையும் இரக்த நிறமாகவே காண்கிறானே, அவனுக்குண்டாயுள்ள அந்த வியாதியும் நிச்சயமாய் அஸாத்யமென்றே யறிக. அன்றியும் எவனெருவன் மிகுதியாக இரத்தத்தைக் கக்குகிறானே, இரத்தம் போன்று மிகச் சிவந்த நேத்திரங்களையுடையவனுகவும் ஆகிறானே, பார்க்கப்படுவதெல்லாம் இரத்தமயமாகவே எவனுக்குத் தோற்றுகின்றதோ அவ்வித இரக்த-பித்தரோகியும் ஜடிதியில் உயிரிழப்பான். 12—14.

## 10. இராஜயக்ஷ்ம-க்ஷதக்ஷீண நிதாநம் *

### இராஜயக்ஷ்மா.

இராஜயக்ஷ்ம நிதாநம்:—வேகங்களைத் தடுப்பது,[1] தாதுக்கள் க்ஷீணமடைவது, ஸாஹஸமான கடும் வேலைகளைச் செய்வது[2],விஷமமான உணவுகளைத் தின்பது[3] ஆக இந்த நான்கு முக்கியமான காரணங்களால் மூன்று தோஷங்களும் கோளாறடைந்து இராஜயக்ஷ்மாவென்கிற க்ஷயரோகம்[4] உண்டாகிறது 1.

* இராஜயக்ஷ்மா—ஸாதாரணமாய் க்ஷயம் என்று வழங்கப்படும் பிரஸித்தமான வியாதி. க்ஷதக்ஷீணம்-இதற்கே உரக்ஷதம் என்றும் பெயர்;இது ச்வாஸாசயத்தை ஆச்ரயித்துண்டாகும் கழலைரோகம்.

1. வேகங்களைத் தடுப்பது என்பதால் அபானவாதம், மலம்,மூத்திரம் இவைகளின் வேகத்தை அடக்குதல் எனப் பொருள்:அஷ்டாங்க ஹ்ருதயத்தின் வேகவிதராணீயாதி அத்தியாயங்களில்கூறப்படுகிற கொட்டாவி முதலிய இதரவேகங்கள் இங்கு குறிக்கப்படவில்லை. "எதேனும் முகாந்தரத்தினுல் அபானவாதம், மூத்திரம், மலம் இவற்றின் வேகம் தடுக்கப்படுமானல் அது யக்ஷ்மாவுக்குக் காரணமாகும்" என்று சரகர்.

2. ஸாஹஸமான கடுமையாயுள்ள வேலைகளைச் செய்வது க்ஷதக்ஷீணம் என்கிற உரக்ஷதரோகத்திற்கு முக்கிய காரணமாகும்.

3. "பலவேறு உணவுகளை மாற்றி மாற்றி யுண்கிறவர்களுக்கு வாத தோஷம் முதலியவை வைஷம்யமடைந்து, போஷணைத்திரவ்யம் செல்லும் மார்க்கங்களான ஸ்ரோதஸ்ஸுகளை அடைத்து, தாதுக்கள் போஷிக்கப்படாமையால் மிகக் கோளாறடைய அத் தோஷங்கள் வியாதியை (க்ஷயத்தை) உண்டுபண்ணுகின்றன; தாதுக்களும் போஷணையின்றி க்ஷீணிக்கும்" என்று சரகர்.

4. இதற்கே சோஷம், யக்ஷ்மா என்றும் பெயர். ஆனல் தாதுக்களின் ஸதாரணமான இளைப்பு அல்லது சிதைவுக்கு சோஷம் என்கிற பெயா முக்கியமாக வழங்கப்படுகிறது.



இராஜயக்ஷ்ம ஸம்ப்ராப்தி:—முக்கியமாக கபமும்[1] ஸாதாரணமாய் மற்ற தோஷங்களும் பிரகோபித்து இரஸதாது ஓடுவதற்கு ஆதாரமான ஸ்ரோதோ மார்க்கங்கள் தடுக்கப்படுவதாலும், அதிகமாகச் சிற்றின்பத்தில் ஈடுபடுவதால் சுக்ரதாது க்ஷீணிப்பதாலும் மற்ற தாதுக்கள் அனைத்தும் கிரமமாக க்ஷீணித்துவர,[2] அதனுல் அம்மனிதன் முற்றிலும் சுஷ்கித்து விடுகிறான். 2.

இராஜயக்ஷ்ம பூர்வரூபம்:—ச்வாஸக் கோளாறு; தேஹமெங்கும் வேதனை; கோழையூறுதல், தவடைகள் சுஷ்கித்தல், வாந்தி, பசியின்மை, வெறி, பீநஸம், காஸம், அதிக நித்திரை இவ்விகாரங்கள் இராஜயக்ஷ்மாவென்கிற சோஷம் உண்டாவதற்கு முன்பு பூர்வரூபமாகத் தோன்றும்; அம்மனிதன் கண்கள் வெளிறி, இறைச்சியுண்பதில் அதிக விருப்பத்தையும், புணர்ச்சியில் அதிக ஆவலையும் பெறுவது வழக்கம். மேலும் ஸ்வப்னத்தில் காகம், கிளி, ஸல்லகி யென்கிற பக்ஷி, மயில், கழுகு ஆக இப்பறவைகளும், குரங்குகளும், ஓணன்களும் தன்னைச் சுமந்து கொண்டு போவதாக அல்லது தீண்டுவதாக அவனுக்குத் தோற்றும்; வற்றிப்போன நதிகளையும், உலர்ந்தும், காற்று புகை காட்டுத்தீ இவைகளால் அழிக்கப்பட்டும் கிடக்கும் விருக்ஷங்களையும் அவன் ஸ்வப்னத்திற் காண்பான். 3, 4.

இராஜயக்ஷ்மாவின் ஸாமாந்ய லக்ஷணம்:—தோள்கள் விலாப்பக்கங்கள் இவற்றில் வேக்காட்டுடன் கூடிய வேதனை,கைகளிலும்பாத களிலும் எரித்தல், எல்லா அவயவங்களைய ஆச்ரயித்த ஜ்வரதாபம் ஆக இவை இரா யக்ஷ்மாவில் காணும் பொதுக்குறிகளாம்[3].

இராஜயக்ஷ்மாவின் பதினேருவித விசே லக்ஷணங்கள்:—(1) வாததோஷம் அதிகரி இராஜயக்ஷ்மாவில் குரல் பேதித்துப் போத வயிற்றிளைத்தல், தோள்கள் விலாப்பக்கங்க இவை சுருக்கங் கொள்ளல் ஆகிய இக்கோ ளாறுகள் காணும்.(2) பித்ததோஷம் அ கரித்த இராஜயக்ஷ்மாவில் ஜ்வரம்,உட்லழற் அதிஸாரம், இரத்தம்வெளியாதல் ஆகிய வி ரங்கள் தோன்றும்.(3) கபதோஷம் அதிக த்துள்ள இராஜயக்ஷ்மாவில் சிரஸ் நிறைந் பாரமாயிருப்பதாகத் தோற்றல், உணவி விருப்பமின்மை, காஸம், தொண்டை பிள கப்படுவது போன்ற வேதனை ஆக இக்கோ ளாறுகள் உண்டாகும். 6. 7.

இராஜயக்ஷ்மாவின் அஸாத்ய லக்ஷணங்கள் இராஜயக்ஷ்மாவில் முற்கூறிய பதினெ குறிகளுமோ அல்லது அவற்றுள் ஆறு கு களோ[4] ஒரு மிக்கக் காணுமானலும், காஸ அதிஸாரம், விலாப்பக்க நோவு, தொண்ட நோவு,அரோசகம், ஜ்வரம் இவற்றுடன்கூடி தாயிருந்தாலும், காஸம் ச்வாஸம் இரக்த ந்தி ஆக இம்மூன்று வித விகாரங்கள் சே திருந்தாலும் அவ்வித க்ஷய ரோகத்தின வருந்துபவனுக்கு சிகித்ஸை செய்ய நற்பெ ரில் விருப்பமுள்ள வைத்தியன் பிரவ்ருத்தி

1. க்ஷய ரோகத்தில் மிகுதியாக கபதோஷம் கோளாறடைவதும், அதனுலேயே ச்வாஸாசயம் விசேஷமாகச் சீரடைவதும், ஆகவெ விகாரமடைந்த கபதோஷம் அதிகமாய் ஸ்ரவிப்பதும் இயல்பு.

2. இரஸம், இரத்தம், மாம்ஸம், மேதஸ், அஸ்த்தி, மஜ்ஜா, சுக்ரம் என்கிற ஸப்ததாதுக்களால் ஆனது தேஹம். இதில் முதலில் இரஸதாது க்ஷீணித்து, அதற்கப்பால் போஷணையின்மையினுல் இரத்தம் முதலியதாதுக்கள் க்ஷயிப்பது அநுலோமக்ஷயம். அல்லது கடைசியான சுக்ரதாது க்ஷயித்து, அப்பால் கிரமமாக அதற்குமுன்புள்ள மஜ்ஜாதி தாதுக்கள் க்ஷீ மடைவது விலோமக்ஷயம். இவ்விரண்டு விதமா க்ஷயங்களுக்கும் முறையே இங்கு ஸம்ப்ராப்திக்ர குறிக்கப்படுவதாய் அறிக.

3. போஜன் முதலிய வேறுசிலர் "காஸம், ஜ்வ இரக்த-பித்தம் ஆகிய மூன்றும் இராஜயக்ஷ்மாவி பொதுக்குறிகள்" என்கிறார்கள்.

4. அன்னத்வேஷம், ஜ்வரம், ச்வாஸம், கா இரத்தம் கக்குதல், குரல் உடைந்து மாறுபடு, ஆகிய இவை ஸுச்ருதரால் கூறப்படும் ஆறு கு களாம்.

க் கூடாது. ஆகவே ஸகல லக்ஷணங்களோ ம் கூடியதாகவோ, அல்லது அதிற் பாதி ான ஆறு லக்ஷணங்களுள்ளதாகவோ, அல் து காஸம் ச்வாஸம் இரக்தம்கக்குதல் ம்மூன்று குறிகளோடு கூடியதாகவோ ாணப்படும் இராஜயக்ஷ்மரோகத்திற்கு சிகித் ஸ செய்வதிற் பிரயோஜனமில்லை; மற்ற ந்த லக்ஷணங்கள் இருந்த போதிலும் து நிவாரணம் செய்யக்கூடிய தேயாம்.[1] ன்றியும் அபரிமிதமாகப் புஜிப்பவனும், க க்ஷீணித்து வருபவனும், அதிஸாரத்தினுல் ருந்துபவனும், பீஜமும் வயிறும் வீங்கிய னுமான க்ஷய ரோகிக்கு சிகித்ஸை செய்வ ல் உபயோகமில்லை. கண்கள் வெளுத்துப் பானவனும், அன்னத்தில் வெறுப்புண்டான னும், ஊர்த்வச்வாஸத்தினுல் கஷ்டப்படுப னும், கஷ்டப்பட்டு அதிகமாய் மூத்திர ஸர்க்கம் செய்பவனுமான யக்ஷ்மரோகி ிழைக்கமாட்டான். 8—12.

இராஜயக்ஷ்மாவில் ஸுகஸாத்யமான நிலை மகள்:—ஜ்வரம் தொடராததும், பலசாலி- லமான சிகித்ஸைகளைத் தாங்கு மியல்புள்ள ன்- தைரியசாலி- நல்ல ஜாடராக்னியுடைய ன்- பருமனுன தேஹமுள்ளவன் ஆகியவர் ளுக்குக் காணுவதுமான இராஜயக்ஷ்மா கித்ஸையினுல்நிவ்ருத்திக்கக் கூடியதாம். 13.

ஏழுவிதமான சோஷங்கள்:—வ்யவாய சோஷம், சோக சோஷம், ஜரா சோஷம், வ்யாயாம சோஷம், அத்வ சோஷம், விரண சோஷம், உரக்ஷத சோஷம் என்கிற சோஷ வியாதிகளின்[2] இலக்ஷணங்கள் அடியிற் கூறப் படுகின்றன. 14.

வ்யவாய சோஷம்:—வ்யவாயம் என்கிற மித மிஞ்சிய புணர்ச்சியினுல் உண்டாகும் க்ஷயமானது சுக்ரக்ஷயத்தினுல் உண்டாகும் குறிகளுடன் கூடியதாய்[3] பிணியாளியைத் தொந்தரவு செய்யும்; அவனுடைய தேஹம் மிக்க வெளிறிப் போகும்; அவனுடைய சுக்ரம் முதல் இரஸம் வரையிலும் உள்ள தாதுக்கள் கிரமமாக க்ஷயித்து வரும். 15.

சோக சோஷ:—இதில் மனிதன் எப்பொழுதும் எதையேனும் நினைத்து நினைத்துக் கவலையுற்றிருப்பான்; அவயவங்கள் தளர்ச்சியடைந்தவனுய், சுக்ரம் க்ஷீணித்ததாலுண்டாகும் மற்றக் கோளாறுகளுடன் கூடியவனுயிருப்பான்.[4] $15\frac{1}{2}$.

ஜரா சோஷம்[5]:—கிழத்தனத்தினுலான க்ஷயத்தில் சுக்ரம், புத்தி, தேஹவன்மை, நேத்திரம் முதலிய இந்த்ரியங்கள் ஆகியஇவை க்ஷீணிக்கும்; நடுக்கம் காணும்; அரோசகம் உண்டாகும்; அவனது குரல் உடைந்துபோன வெண்

1 "வாதரோகம், அபஸ்மாரம், குஷ்டம், பீஜரோம், புராணஜ்வரம், குல்மம், மது மேஹம், இராஜய ஷ்மா ஆகிய இந்த ரோகங்களில் சரீர பாரமும் தசை ோர்களும் க்ஷீணித்து விட்டால் அஸாத்யமாகும்" என்று சரகர்.

2. இவ்வேழும் முற்றிலும் இராஜயக்ஷ்மாவைச் சேர்ந்தவையல்ல வென்றும், கேவலம் அந்தந்த தாது முதலியதின் பலமான இளைப்பால் உண்டாகுபவை யென்றும் கூறவேண்டும்; சோஷம் என்கிற வியாதியில் சில தோஷங்களுடைய லக்ஷணங்களே தோற்றும்; மூன்று தோஷங்களுடையவும் எல்லாக் குறிகளுமே இதில் காணுவதில்லை. ஆகையால் இவ்வித வியாதிகள் தாது க்ஷயங்கள் என்று மாத்திரம் கூறப் படுமேயன்றி இராஜயக்ஷ்மா வென்று வழங்கப்படுவதில்லை.

3. சுக்ரக்ஷயத்திலுண்டாகும் முக்கியமான குறிகள் பின்வருமாறு:-'சுக்ரக்ஷயத்தில் ஆண்குறி பீஜங்கள் இவற்றில் வேதனை, புணர்ச்சியில் சக்தியின்மை, சுக்ரம் சிறிதும் ஸ்ரவிக்காமலும் அல்லது மிகச்சொற்பமாக ஸ்ரவித்தல் அல்லது சுக்ரத்திற்குப் பதிலாக இரத்தம் ஸ்ரவித்தல் இவை குறிகளாம்.' ஸுச்ருதர்.

4. "சுக்ரம் க்ஷயித்துப் போவதைத் தவிர சுக்ர க்ஷீணஸம்பந்தமான மற்றக் கோளாறுகளோடு கூடியது" என்று ஸுச்ருதர்.

5. ஜரா சோஷம் — கிழத்தனத்திலேற்படும் க்ஷயம்.





கலத்தைத் தட்டுவதாலுண்டாகும் சப்தம் போன்றதாயிருக்கும்; கபமில்லாமலே நாசியைச் சிந்துவான்; தேஹகுருத்வம், புறட்டல் இவற்றால் பீடிக்கப்படுவான்; வாயிலும், நாசியிலும், கண்களிலும் நீர் ஊறும்; மலம் இறுகி சுஷ்கித்திருக்கும்; தேஹ காந்தி மழுங்கி ரூக்ஷமாகும். $16-17\frac{1}{2}$.

அத்வ சோஷம்[1]:—மிதமின்றி வழி நடப்பதாலான சோஷத்தில் அவயவங்கள் சோர்ந்து விழும்; வறுக்கப்பட்டதுபோல் தேஹ நிறம் கோளாறடையும்; அவயவங்களின் உணர்ச்சியிழந்துபோம்; க்லோமம், தொண்டை, வாய் இவை வறட்சியுறும். $18\frac{1}{2}$.

வ்யாயாம சோஷம்:—வ்யாயாம மென்னும் தேஹவுழைப்பினுல் உண்டாகும் சோஷத்தில் அத்வ சோஷத்திற்குக் கூறிய லக்ஷணங்களே பெரும்பாலும் காணும்.[2] மேலும் இரக்தப் பெருக்கைத் தவிர்த்து[3] உரக்ஷதத்திற்கான மற்றக் குறிகளும் இதில் உண்டாகும். 19.

விரண சோஷம்:—விரணம் உண்டானவனுக்கு இரத்தம் மிகவும்க்ஷீணித்துப்போவதாலும், பலவித வேதனைகளாலும், அங்ஙனமே உணவை உட்கொள்ளாமற் போவதாலும் ஒருவித க்ஷயம் உண்டாகும்; அது மிகவும் அஸாத்யமாகக் கருதப்படுகிறது.[4] 20.

க்ஷத-க்ஷீணம்[5]

உரக்ஷத நிதாநம்:—வில் முதலிய ஆயுதப் பழக்கத்தினுல் மிக்க அதிகமாய் ஆயாஸ படுதல், வெகு பாரமான சுமையைச் சும தல், பலிஷ்டர்களோடு த்வந்த்வயுத்த செய்தல், மேடுபள்ளமான உயர்ந்த பிரதேசத்திலிருந்து விழுதல், ஓடுகிற விருஷப அல்லது குதிரை அல்லது சிரமப்பட்டு அட க்கக்கூடிய வேறு அத்தகைய மிருகத்தை அடக்குதல், பாறை பெரிய மாக்கட்டை க த்த கருங்கல் முதலிய குண்டு இவற்றைெ டுத்து வீசி யெறிதல், எதிரிகளை பலமாக தாக்குதல், மிகவும் உரத்துக் கூச்சலிட்டு படித்தல், வேகமாக நெடுந்தூரம் ஓடுத பெரிய ஆறுகளை நீந்திக் கடத்தல், குதிரை களோடு விரைந்தோடுதல், வலிய உயர எழு பிக் குதித்தல், வெகு வேகமாகக் கூத்தா தல், அங்ஙனமே கடுமையான வேறு காரிய களால் மிகவும் தாக்கப்படுதல், ஸ்த்ரீகளிட மிதமிஞ்சிப் பிரவ்ருத்தித்தல், ரூக்ஷமாகவு சொற்பமாகவும் அல்லது அமிதமாகவும் பு த்தல் ஆகிய இத்தகைய காரியங்களால் மா பினுட்புறம் சிதைவடைய அதனுல் கடுமை யான இந்த வியாதி ஸம்பவிக்கின்றது[6]. 21-2

உரக்ஷதத்தின் லக்ஷணுதிகள்:—இந்த விய தியில் மார்பு விறிந்து போவது போலவு பிளக்கப்படுவது போலவும், சிதைக்கப்படுவ போலவும், நசுக்கப்படுவது போலவும் க மையான நோவுண்டாகும். அப்பால் விலா

1. அத்வ சோஷம்—வழி நடப்பதால் உண்டாகும் க்ஷயம்.

2. மிதமின்றி வழிநடப்பதும் கடுமையான வ்யாயாமமாகையால், வ்யாயாமம், வழிநடப்பது இவற்றால் உண்டாகும் கோளாறுகள் சற்றேறக்குறைய ஒரு மாதிரியானவை யெனக் கூறப்பட்டது. வ்யாயாமத்தின் குறிகள் அத்வ சோஷத்தின் குறிகளை விட அதிக பலமா யிருக்கும்.

3. இரத்தப் பெருக்கைத் தவிர்த்து என்பதற்குப் பதிலாக "விரணத்தைத் தவிர்த்து" என்றும் கூறுவதுண்டு.

4. விரண சோஷம் முற்றிலும் அஸாத்ய மென்று கூறப்படுகிறது. அப்படியானுல் "இளைத்துப் போகிற வர்களுக்கும், விரண சோஷிகளுக்கும் ப்ருஹ்மண சிகித்ஸை செய்யவேண்டும்" என்று ஸுச்ருதர் சி த்ஸை கூறியிருப்பது எங்ஙனம்? என்றால், விரண தினுல் சோஷம் ஆரம்பிக்கும் போதே, அக்குறிக பலமாகத் தோன்றுமலிருக்கையிலேயே ப்ருஹ்மண சிகித்ஸை செய்வது உசிதமென்பது ஸுச்ருதரி கருத்து.

5. க்ஷதம்—விரணம் உண்டாவது, பிறகு அச்சிதை வை ஆதாரமாகக்கொண்டு எற்படும் க்ஷயத்திற் க்ஷீணம் எனப் பெயர். ஆகவே இவ்விரண்டுக்கும் ஒ ங்கே க்ஷத-க்ஷீணம் எனப் பெயர் வழங்கப்படுகிற க்ஷதமே உரக்ஷதம் என்றும் கூறப்படும்.

6. இக்காரணங்களுள் சில எல்லா தேஹத்திற்கு சில மார்புக்கு மாத்திரமும் தீங்கிழைப்பவையென் றிக.

த்ரகங்கள் சுஷ்கிக்கும்; அவயவங்கள் நடுக் ம் கொள்ளும்; தேஹத்தின் சுறுசுறுப்பும், ன்மையும், காந்தியும், உணவுகளில் விருப்ப மும், ஜாடராக்னியும் கிரமக்கிரமமாகக் குன் ப்போம்; ஜ்வரம், மனத்துயரம், மனச்சோ வு, பேதி, ஜாடராக்னி அழிதல் ஆகிய இத் ளர்க்குணங்களும் காணும்; அடிக்கடி இரு லுண்டாகும்; அங்ஙனம் இருமும் போது கட்டுப்போய் ஆகவே ஒருவாறு கறுநிறமா வும், அதிக துர்க்கந்தமுள்ளதாகவும், மஞ் ள் நிறமாகவும், கட்டிக்கட்டியாகவும், அள ல் அதிகமாகவும் இரத்தத்தோடு கூடிய ய் கபம் வெளியாகும். இது க்ஷதம் (அல் து க்ஷதக்ஷீணம) எனப்படும். இப்பிணியாளி கு சுக்ரதாதுவும், ஓஜோதாதுவுங்கூட க்ஷயி கும்; ஆகவே இப்பிணியாளி மிகவும் க்ஷ த்துப் போவான். இக்குறிகள் நன்கு விள காத வகையில் தோன்றியிருந்தால் அவை ய க்ஷீணத்தின் பூவர்ருபமாகும். 26—29.

க்ஷதத்தின் விசேஷலக்ஷணம்:- க்ஷதம் என் கிற நிலைமையில் மார்பில் நோவுண்டாகும்; இரத்தம் கக்கப்படும்; இருமலுண்டாகும்; ஆக இவை க்ஷதத்தின் விசேஷ லக்ஷணங் களாம். 29½.

க்ஷீணத்தின் விசேஷ லக்ஷணம்:—க்ஷீணம் அல்லது க்ஷயமடைவது என்கிற நிலைமையில் மூத்திரம் இரத்தங்கலந்திருக்கும்; விலாப்பக் கங்களிலும, ப்ருஷ்ட பாகத்திலும், இடுப்பி லும் இசுவும் பிடிப்பும் ஏற்படும்.[1] 30.

க்ஷத க்ஷீணத்தில் ஸாத்யா ஸாத்ய நிலைமை கள்:—லக்ஷணங்கள் சொற்பமாகக் கண்டு, ஜாடராக்னியும் நல்ல நிலைமையிலிருந்து, வியா திக்ரஸ்தனும் இயற்கையிலேயே பலிஷ்டனு கவுமிருந்துவந்தால், வியாதியும் சொற்ப கா லத்திற்குள்ளேயே ஏற்பட்டதாயிருந்தால் அது சிகித்ஸையினல் நிவ்ருத்திக்கக் கூடியு தாகும். வியாதி ஒருவருஷத்திற்கு மேற் பட்டு முதிர்ந்து போனதாயிருந்தால் அது யாப்யமாகும். எல்லாக்குறிகளும் பூர்ணமா யுண்டான வியாதி அஸாத்யம். 31.

## 11. காஸ நிதாநம்.

காஸ நிதாநம்:—புகையினல், ச்வாஸமார்க் கம் அடைபடுதல், அங்ஙனமே ஆமரஸம் ச்வாஸாசயத்திற்சேருதல்,[2] அதிகவியாயாமம், ருக்ஷமான அன்னத்தைப் புஜித்தல், விழுங் கும்போது உணவு அதன் பாதையை விட்டு வேறு வழியில் பிரவேசிப்பது, வேகங்களை அடக்குவது, அவ்விதமே தும்மலை அடக்கு வது இத்யாதிகாரணங்களால் காஸ நோய் உண்டாகிறது. 1.

காஸ ஸம்ப்ராப்தி.—பிராணவாயுவானது கோளாறடைந்துஉதாநவாயுவிலுைம் பின்பற் றப்பட்டதாய், உடைந்த வெண்கலப் பாத்திர த்திற் கொப்பான சப்தத்தையுண்டு பண்ணிக் கொண்டு, தோஷங்களுடன் கூடியதாய்[3] பல மாக வாயிலிருந்து கிளம்புகிறது; இது அறி ஞர்களால் காஸம் எனப்படுகிறது.[4] 2.

காஸம் ஐந்து விதம்:—வாதம், பித்தம், கபம், க்ஷதம், க்ஷயம் இவ்வொவ்வொன்றை யும் காரணமாகக் கொண்டு ஒவ்வொருவித காஸமாக ஐந்துவித காஸங்கள் உண்டாகின் றன. இவற்றுள் ஒவ்வொன்றும் மேன்மேலும்

1. க்ஷதம், க்ஷீணம் (அல்லது க்ஷயம்) இவை ஸம் பந்தமாய் அடுத்து வரும் காஸப்பிரகரணத்தில் (க்ஷத காஸம், க்ஷயகாஸம்) என்கிற வேறு சில விவரங்கள் கூறப்படுவதையும் கவனிகக.

2. ஆமரஸம் வாதத்தினல் மேல் நோக்கித் தள் ளப்பட்டு, கோளாறடைந்த கபமாகக் காஸத்தில் வெளியாகும். [ரஸம என்பதற்கு ஆமரஸம் என்று இங்கு பொருள்; ரஸம் என்பதற்குப் பதிலாக "ரஜஸ்" என்கிற பாடம் ஒன்றுண்டு; ச்வாஸமார்க்கத்தில் ரஜஸ் (தூசுகள்) பிரவேசிப்பதாலும் காஸம் உண்டாகும் எனப்பொருள்.]

3. தோஷங்கள் என்பதால் கபம் முக்கியமாகவும் பித்தமும் இங்கு குறிக்கப்படுகின்றன.

4. காஸம் என்றல் இருமுதல் எனப் பொருள்.



ஒன்றைவிட மற்றொன்று தன்மையில் வலுத்த தாகும்; இவற்றுள் எதையுபேக்ஷித்த போ திலும் இறுதியில் அது க்ஷய காஸமாகப் பரி ணமிக்கும். 3.

காஸத்தின் பூர்வரூபம்:—தொண்டை, வாய் இவை சூகங்கள் என்கிற சின்னஞ்சிறிய முளைகள் நிரம்பியதாயிருக்கும்; அல்லது அவ் விதம் நிரம்பியிருப்பது போன்ற உணர்ச்சி யுண்டாகும்; தொண்டையில் தினவும், உண வில் விருப்ப மின்மை அல்லது உணவை விழுங்கமுடியாமையும்[1] அந்த காஸங்களுக் குப் பூர்வரூபங்களாகத் தோன்றும். 4.

வாதகாஸம்:-- வாததோஷத்தினுலுண்டான காஸத்தில் இருதயம், கன்னங்கள், சிரஸ், வயிறு, விலாப்பக்கங்கள் இவற்றில் வலியுடை யவனுகவும், வாடி மெலிந்த முகமுடையவனு வும், தேஹவன்மை - குரல் - ஓஜோதாது இவை க்ஷீணித்தவனுகவும், தொண்டை மிகக் கம்மிப்போய் குரல் மாறியவனுகவும், தொடர் ந்தாற் போல் பிணியாளி அடிக்கடியும் சுஷ்க மாகவே இருமுவான். 5.

பித்தகாஸம்:—பித்தத்தினுலுண்டாகும் கா ஸத்தில் மார்பில் எரித்தல், ஜ்வரம், வாயு லர்ந்து போதல் இவற்றல் ரோகி வருந்து வான்; வாய் கைப்பாயிருக்கும்; நாவறட்சியி னுல் மிகக்கஷ்டப்படுவான்; மஞ்சள் நிறமாக வும் கைப்பாக அல்லது காரமாகவும் வாந்தி செய்வான்; உடல் வெளுத்தும் தொண்டை அழற்சியுண்டும் வருந்தியவாறுஇருமுவான். 6.

கப காஸம்:—கபம் பிரகோபித்துண்டான காஸரோகத்தில் ஶ்லேஷ்மம்சூழ்ந்த வாயுடன் வருந்தியவனுய், தலைவலியாலும் துன்பப்பட் டவனுய், தேஹத்தில் கபம் நிரம்பி, உணவில் விருப்பமற்று, தேஹத்தில் பாரமும் தினவும் ஏற்பட்டு தோய்ந்துபோன கபத்தை வெளிப் படுத்திக்கொண்டு அதிகமாயிருமுவான். 7.

க்ஷத காஸம்:—அதிக வியாயாமம், அதிக மாய் வழிநடத்தல், மிகவும் கனமான சுமை களைச் சுமத்தல், கடுமையாக யுத்தம் செய்தல், யானை குதிரைகளை பலமாக எதிர்த்துப் பிடி த்து அடக்குதல், இவற்றல் ருக்ஷமாயிருப்ப வனுக்கு மார்பில் சிதைவு ஏற்பட, அந்தச் சிதைவிலிருந்து இரத்தத்தை வாயுவானது கிரஹித்து காஸத்தை யுண்டுபண்ணும்; அப் பிணியாளி முதலில் வறட்டிருமலாகவே இரு மி, அப்பால் இரத்தங்கக்குவான்; அப்பொ ழுது அவனுக்குத் தொண்டைவலி வெகு அதிகமாயிருக்கும்; மார்பு பிளக்கப்படுவது போன்றிருக்கும்; மேலும் கூர்மையான ஊசி களால் குத்தப்படுவது போன்ற வலியினுலும், பிளக்கப்படுவது நசுக்கப்படுவது எரிக்கப்படு வது போன்ற வலியினுலும் மார்பில் கடும் நோயுண்டாக, அதனுல் மார்பு பரிசிக்கவுங் கூடாமலிருக்கும். கணுக்களில் பிளக்கப்படு வது போன்ற வலியும், ஜ்வரமும், ச்வாஸமும், நாவறட்சியும், அரோசகமும் உண்டாய் மிகத் தொந்தரவளிக்கும்; மாடப்புறுபோல் கூக் குரலிட்டு வருந்துவான்; க்ஷதம் என்கிற மார் புச்சிதைவாலான காஸத்தில் இக்குறிகள் காணும். 8—11.

க்ஷயகாஸம்:—விஷமமான ஆஹாரம்-அஸா த்மியமான ஆஹாரம் இவற்றைப் புஜிப்பது, அதிக வியாயாமம், வேகங்களை அடக்குதல், மிகவும் இளகிய மனதாயிருத்தல், துயரப்படு தல் இக்காரணங்களால் ஜாடராக்னிமுற்றிலும் அழிந்துபோக, அதனுல் மூன்று தோஷங் களும் பிரகோபமடைந்து, தேஹத்திற்கு க்ஷய முண்டுபண்ணக் கூடியதான க்ஷயகாஸம் என்கிற வியாதியை யுண்டுபண்ணுகின்றன. அந்த காஸரோகியானவன் அவயவங்கள் தோறும் வலி, ஜ்வரம், தேஹதாபம், மூர்ச் சை இவற்றையும், இறுதியில் ஜீவிதநாசத் தையும் பெறுகிறுன். இவன் சுஷ்கித்துப் போய் மிகவும் பலஹீனமடைந்து, மாம்ஸம்

1. தொண்டையினுள் கிரந்தி முதலிய கைவீங் கிப்போவதால் உணவு விழுங்க முடியாமற் போ வது வழக்கம்.

மிக க்ஷீணத்தசையைப் பெற்று, சீழுடன் கூடிய இரத்தத்தைக் கக்குகிறான். இந்த க்ஷயகாஸம் ஸந்நிபாத தோஷத்தினுலுண்டாவதாகவும், மிகவும் கஷ்ட ஸாத்தியமானதென்றும் சாஸ்திரமறிந்த வைத்தியர்கள் கூறுவர். 12, 13.

க்ஷதகாஸ - க்ஷயகாஸங்களின் ஸாத்யாஸாத்யாதி நிலைமைகள்:—முற்கூறிய க்ஷயகாஸமானது ஏற்கனவே தேஹம் மெலிந்துள்ள மனிதனுக்குண்டானால் அவனுடைய தேஹத்திற்கு அது நாசத்தைவிளைவிக்கும். அதுவேபலிஷ்டர்களுக்குண்டானால் ஸாத்யமாகவாவது ஆகும், அல்லது யாப்யமாகவாவது ஆகும். க்ஷதகாஸத்திலும் ஸாத்யாஸாத்யாதி நிலைமைகளை இங்ஙனமே யறிக. இவ்விரண்டுவித காஸங்களும் ஆரம்ப தசையிலிருந்தாலும், சதுஷ்பாதங்களும் குறைவில்லாமலிருந்தாலும்[1] ஒருக்கால் சிகித்ஸையினால் நிவாரணமாகலாம். கிழவர்களுக்குண்டாகும் ஜராகாஸம் எவருக்குமே யாப்யமாகத்தானாகும். முதலிற்கூறிய மூன்றுவித காஸங்களும் சிகித்ஸையினால் நிவாரணம் செய்யக்கூடியவையாம். யாப்யங்களென்று கூறப்பட்டுள்ள காஸங்கள் அனுகூலமான சிகித்ஸை முதலியவற்றைச் செய்து வந்தால்தான் யாப்யங்களாயிருக்கும். 14, 15.

## 12. ஹிக்கா ச்வாஸ நிதாநம். *

ஹிக்கா ச்வாஸ நிதாநம்:—விதாஹி,[2] குரு, விஷ்டம்பி[3], ரூக்ஷம், அபிஷ்யந்தி[4] என்கிற குணமுள்ள போஜனங்களாலும், சீதளமான அன்ன-பானங்களாலும், அவ்விதமான இடங்களில் அதிகமாய் நடமாடுவதாலும், தும்பு தூசுகள், தூமம்-வாயு இவை உட்புகுவதாலும், வியாயாமம்-பாரமான சுமையைச் சுமத்தல்-அதிக வழி நடத்தல்-வேகங்களை அடக்குதல்-இலங்கநம் முதலிய அபதர்ப்பணகிரியை[5] ஆகிய இவற்றாலும் மனிதருக்கு ஹிக்காவென்கிற விக்கலும், ச்வாஸமும், காஸமும் உண்டாகின்றன[6]. 1, 2.

1. சதுஷ்பாதங்கள்—இதன் விவரம் 33-ம் பக்கத்தில் டிப்பணியில் கூறப்படுகிறது.

* ஹிக்கா—விக்கல்; இது ஹித்மா என்றும் கூறப்படும். ச்வாஸம் என்றால் ச்வாஸ ரோகம்.

2. விதாஹி—27ம் பக்கம் டிப்பணியைப் பார்க்க.

3 விஷ்டம்பி—மலமூத்திராதிகளைக்கட்டி வயிற்றுப் பொருமல் முதலியதையுண்டு பண்ணும் தன்மை.

4. அபிஷ்யந்தி—பசையினாலும், குருத்தன்மையினாலும் இரஸாயனியன் என்னும் குழாய்கள் ஒருவாறு அடைபட்டு ஒருவகைச் செழிப்பு உண்டாகும் குணம்.

5. அபதர்ப்பணம்—உபவாஸம், விரேசநம், வமநம் முதலியதால் தேஹத்தை இளைக்கச் செய்யும் சிகித்ஸை.

6. ஹிக்கா, ச்வாஸம், காஸம் இம்மூன்றும் ஒரே காரணத்தினால் உற்பத்தியாகையில், காஸத்தை மாத்திரம் பிரத்தியேகமான அத்தியாயத்தில் விவரிப்பதற்குக் காரணம் யாதென்றால், வாதகாஸம், பித்தகாஸம், கபகாஸம் என்றவாறு மூன்று தோஷங்களாலும் தனித்தனியே காஸம் உண்டாகின்றது; ஹிக்கா-ச்வாஸங்களோ வென்றால் கப-வாதங்களால் ஸம்பவிக்கின்றன. "கப-வாதங்களால் உண்டாகிற இவ்விரண்டுக்கும் பித்தாசயம் ஸ்த்தானமாகும்" என்று த்ருடபலர். ஆனால் ச்வாஸத்திற்கும் ஹிக்காவுக்கும் பேதம் என்னவென்றால் ஸம்ப்ராப்தி, வேகங்கள், க்ரியைகள் இவற்றிலுள்ள வேற்றுமைகளைக் கொண்டு இவ்விரண்டுக்கும் பேதம் கூறப்படுகிறது. [பித்தஸ்த்தானத்திலிருந்து இவ்விரண்டும் உண்டாகின்றன வென்று த்ருடபலர் கூறினாலும், க்ஷுத்ரஹிக்கா முதலியதற்கு அது பொருந்தாது; க்ஷுத்ரஹிக்கா கண்ட மூலத்திலிருந்து கிளம்புவதாகக் கூறப்படுகிறது.]



### ஹிக்கா.

ஹிக்கா ஸாமாந்ய லக்ஷணம்:—வாயுவானது[1] அடிக்கடியும் சப்தத்துடன் கூடியதாய் மேல் நோக்கி வாயிலிருந்து வெளிக்கிளம்பும்: அப்பொழுது யக்ருத், ப்லீஹம், குடல் இவை வாய் மூலமாக வெளிக்குப் பிடுங்கித் தள்ளப்படுவது போன்ற உணர்ச்சியுண்டாகும்; ஹிக் என்கிற தொனியுடன் சீக்கிரத்தில் பிராணனைப் பறிப்பது போன்றிருப்பதால் இது அறிஞர்களால் ஹிக்கா[2] என்று கூறப்படுகிறது. 3.

ஹிக்கா ஐந்து விதம்:—வாயுவானது கபத்தினால் பின்தொடரப்பட்டதாய், ஐந்து விதமான ஹிக்கா என்கிற விக்கலையுண்டுபண்ணுகின்றது; அவையாவன:—அன்னஜ ஹிக்கா, யமளஹிக்கா[3], க்ஷுத்ரஹிக்கா, கம்பீரஹிக்கா, மஹாஹிக்கா என்பனவாம். 4.

ஹிக்கா பூர்வரூபம்:—தொண்டை மார்பு இவற்றில் குருத்வம், வாய் கஷாயரஸமடைதல், வயிற்றில் குழப்பம் இவ்விகாரங்கள் எல்லா ஹிக்காவுக்கும் உண்டாகிற பொதுவான பூர்வரூபமாகும். 5.

அன்னஜ ஹிக்கா:—அமிதமாயுட்கொள்ளப்பட்ட அன்ன பானங்களால் திடீரென்று ஒரு மிக்க அழுத்தப்பட்ட வாயுவானது மேலே கிளம்பி விக்கலையுண்டு பண்ணுகிறது; இதை அன்னஜ ஹிக்கா என்றறிக. 6.

யமள ஹிக்கா:—வெகு தாமதித்து இரட்டையான வேகங்களோடு, சிரஸ் கழுத்து இவைகளை நடுங்கச் செய்து கொண்டு[4] யாதொரு விக்கல் உண்டாகின்றதோ அது யமள ஹிக்கா எனப்படும் 7.

க்ஷுத்ர ஹிக்கா:—வெகு நேரம் கழித்துச் சொற்பவேகத்துடன், தொண்டையின் அடிப்புறத்திலிருந்து யாதொரு விக்கல் கிளம்புகிறதோ அது க்ஷுத்ர ஹிக்கா எனக் கூறப்படும். 8.

கம்பீர ஹிக்கா:—யாதொரு விக்கல் நாபிஸ்த்தாநத்திலிருந்து கிளம்பியதாய், கம்பீரமான சப்தத்தை யுண்டுபண்ணிக்கொண்டு கடுமையாகவும், அநேகம் உபத்திரவங்களையுடையதாகவும் வெளியாகின்றதோ அது கம்பீர ஹிக்கா எனக் கருதப்படுகிறது. 9.

மஹா ஹிக்கா:—மர்மஸ்த்தாநங்களைக் களைந்து வெளித்தள்ளுவதுபோன்றதாய், அகில அவயவங்களையும் நடுங்கச் செய்துகொண்டு இடைவிடாது யாதொரு விக்கல் உண்டாகிறதோ அதை மஹாஹிக்கா என்றறிக. 10.

ஹிக்காவின் அஸாத்ய லக்ஷணங்கள்:—(1) விக்கும்போது எவனுக்கு தேஹமானது மிக்க விரிவதுபோல வாகின்றதோ, கண் பார்வையும் மேல்நோக்கி யிழுக்கப்பட்டு எப்பொழுதும் கஷ்டமுண்டாகிறதோ அந்த ஹிக்காரோகியும், (2) இளைத்துப் போய், உணவை வெறுத்து எவன் மிக்க அதிகமாய் விக்கலால் வருந்துகிறானோ அவனும், (3) இறுதியிற் கூறிய இரண்டு ஹிக்காரோகிகளும்[5] சிகித்ஸையினால் ஸௌக்கியப்படுத்த வியலாதவராவர். மேலும் தோஷம் தேஹத்தில் மிகுதியாகச் சேர்ந்துவிடுபவனுக்கும், உணவின்மையினால் இளைத்தவனுக்கும், வியாதிகளால் தேஹம் க்ஷீணித்தவனுக்கும், கிழவனுக்கும், அதிகபுணர்ச்சியுள்ளவனுக்கும் முற்கூறிய ஹிக்கைகளுள் எதுஉண்டானபோதிலும் அவனது உயிரைச் சீக்கிரம் போக்கிவிடும். வாய்ப்பிதற்றல், நோவு, மூர்ச்

1. வாயு வென்று இங்கே பொதுவாகக் கூறப்பட்டாலும் உதாந வாயுவுடன் கூடிய பிராணவாயு குறிக்கப்படுவதாகச் சிலரது அபிப்பிராயம்.

2. ஹிநஸ்தி ப்ராணாந் (உயிரை வதைக்கிறது) என்கிற விற்பத்தியின் பேரில் ஹிக்கா என்கிற பெயர் வந்தது.

3. யமளஹிக்கா என்பது சரகரால் வ்யபேதஹிக்கா என்று கூறப்படுகிறது.

4. சிரஸ்ஸையும் கழுத்தையும் நடுங்கச் செய்வது என்பது உபலக்ஷணம்; வாய்ப்பிதற்றல், மூர்ச்சை, வாந்தி, நாவறட்சி, கொட்டாவி, வாயுலர்தல் முதலிய சரகரால் கூறப்படுகிற வேறு சில லக்ஷணங்களும் காணும் என்று கயாதாஸன் கூறுகிறார்.

5. இங்கே இரண்டு ஹிக்கா ரோகிகளும் என்பது, (1) விக்கும்போது எவனுக்கு தேஹம் ... ... என்கிற குணங்களையும், (2) இளைத்துப் போய் ... ... என்கிற இவை முதலிய குணங்களையும் ஆக இவ்விரண்டு விஷயங்களைக் குறிப்பதாக விஜயரக்ஷிதனது வியாக்யாநம். அது அவ்வளவு யுக்தமாகத் தோற்றவில்லை; ஏனெனில் "இறுதியிற் கூறிய" என்பதற்கு அப்பொழுது பொருளில்லாமற் போகிறது. ஐந்து ஹிக்காக்களில் இறுதியிற் கூறியவை கம்பீர மஹா ஹிக்மாக்களே. இவ்விரண்டும் வெகு கடுமையான அஸாத்ய வியாதிகள் என்பதும் பிரஸித்தம்.

ஸை, நாவறட்சி இவற்றுடன் கூடிய 'யமிகா' என்கிற ஹிக்காவும் அஸாத்யமேயாம். இளைக்காதவனாகவும், தீனத்தன்மையற்றவனாகவும், பலமான தாதுக்களையும் இந்திரியங்களையும் பெற்றவனாகவும் யாதொருவன் உண்டோ அவனுக்குண்டாயுள்ள யமிகை[1] என்னும் ஹிக்கா சிகித்ஸையினால் நிவாரணம் செய்யக் கூடியதாம்; அவ்விதமில்லாத வேறுவிதமான குறிகளுடன் கூடிய ஹிக்காவானது மனிதனை சீக்கிரம் கொன்றுவிடும். 11—14.

### ச்வாஸம்.

ச்வாஸம் ஐந்து விதம்:—ச்வாஸம் என்கிற ஒரு மஹாவியாதியே மஹாச்வாஸம், ஊர்த்வ ச்வாஸம், சின்ன ச்வாஸம், தமக ச்வாஸம், க்ஷுத்ர ச்வாஸம் என்று ஐந்து விதமான பேதங்களுள்ளது.[2] 15. (க்ஷுத்ரச்வாஸம் வாததோஷம் அதிகரித்தது; தமகச்வாஸம் கபதோஷத்தின் மேலீட்டால் உண்டாவது; சின்னம் என்பது பிரகோபித்த கபம் வாதம் இவ்விரண்டின் ஸம்யோகத்தினாலுண்டாகிறது; மஹாச்வாஸத்தில் அவ்விரண்டு தோஷங்களோடு வாதமும் ஸம்பந்தித்திருக்கும்; ஊர்த்வச்வாஸமும் அங்ஙனமே யுண்டாகும்.)

ச்வாஸத்தின் பொதுவான பூர்வரூபம்:—இருதயத்தில் வேதனை, வயிற்றில் வலி, வயிற்றிலும் மார்பிலும் பொருமல், வயிற்றிற்குழப்பம், வாய் அரோசகமடைதல், கன்னங்களில் வேதனை ஆகிய இவை ச்வாஸரோகத்தின் பூர்வரூபங்களாகும். 16.

ச்வாஸ ஸம்ப்ராப்தி:—முதலில் கபமும் பின்னால் வாதமும் மார்பறையைச் சேர்ந்த ஸ்ரோதஸ்ஸுகள் என்னும் குழல்களை நிரப்பி யடைத்து, அந்த ஸ்ரோதஸ்ஸுகளில்[3] நாற்புறமும் எப்பொழுது அவை வேகமாகப் பரவுகின்றனவோ அப்பொழுது, அவ்வேகமானது பலவிதமான ச்வாஸ விகாரங்களையும் உண்டு பண்ணுகிறது. 17.

மஹா ச்வாஸம்:—இப்பிணியாளி பெரிதும் மேல் மூச்செறிந்து கொண்டு மஹத்தான சப்தத்தோடு, ஏக்கமுற்று, ச்வாஸம் அடைபட்ட, கொழுத்த விருஷபம் மூச்சுவிடுவது போல இடைவிடாது உரத்து மூச்சுவிடுவான்; ஞான-விஞ்ஞானமென்கிற ஸகல அறிவையும் இழப்பான்; விரண்ட பார்வையுடையவனாயிருப்பன்; கண்களும் முகமும் விரியும்; மூத்திரமும் மலமும் கட்டிப்போகும்; வார்த்தை தழுதழுக்கும்; தீனமான நிலைமையைப் பெறுவான்; இவன் விடும் பெருமூச்சானது வெகு தூரத்திலிருந்தே கேட்கப்படும்; இது "மஹா ச்வாஸம்" எனப்படும். இவ்வியாதிக்ரஸ்தன் சீக்கிரம் உயிர் துறப்பான். 18—20

ஊர்த்வ ச்வாஸம்:—எவனுக்கு மேல் நோக்கி வரும் ச்வாஸம் மிகவும் நீண்டிருக்கிறதோ, மீண்டும் அந்த ச்வாஸத்தை உள்ளுக்கு இழுக்கச் சக்தியற்றவனாகிறானோ,[4] வாய் தொண்டை முதலிய த்வாரங்கள் கபத்தினால் மிகவும் சூழப்படுகின்றனவோ, மிகப் பிரகோபித்து மேலெழும் வாயுவால் ஸங்கடமுண்டாகிறதோ, எவன் மேல் நோக்கியும் இங்கு மங்குமாய் விரண்டு விழித்துப் பார்க்கிறானோ, வேதனைகளால் வருந்தி-முகம் வெளுத்து,

1. யமிகா—யமளஹிக்கா. சரகர் யமிகாவைப் பிரத்தியேகமாகக் கூறியிருக்கிறார்.

2. ச்வாஸம் — துருத்தியினால் ஊதப்படுகையில், வாயுவானது துருத்தியை நிரப்பி நிரப்பி எவ்விதம் பலமாக மேற்கிளம்புகிறதோ அவ்விதம் ச்வாஸாசயத்திலிருந்து கடும் வேகத்துடன் உண்டாவது ச்வாஸ வியாதி.

3. ஸ்ரோதஸ்ஸுகள் என்பதால் ஹிக்கா ரோகத்திற் குறிப்பிட்ட ப்ராணவஹ ஸ்ரோதஸ்ஸுகளும், உதாநவஹஸ்ரோதஸ்ஸுகளும் இங்கு கூறப்படுவதாய் அறிக.

4. நிச்வாஸம் என்கிற வெளியிடும் மூச்சு வெகு நீடித்தும், உச்சுவாஸம் என்கிற உள்ளுக்கு வாங்கும் மூச்சு வெகு சொற்பமாகவும் இருக்குமென்பது பொருள். மேல் நோக்கி வருகிற ச்வாஸம் வெகு நீடித்ததாகையாலேயே இது ஊர்த்வச்வாஸம் எனப்படுகிறது



இருந்தவிடத்திலிருக்க முடியாமல் தவித்து மயக்கங் கொள்கிறானோ, மேல் நோக்கிய (ஊர்த்வ) ச்வாஸம் பிரகோபிக்கையில் உள்ளுக்கு இழுக்கப்படவேண்டியது(உச்சுவாஸம்) தடைபடுகிறதோ அப்பிணியாளி ஊர்த்வ ச்வாஸத்தினால் வருந்துவதாய் அறிக. மூர்ச்சையடைந்து கொண்டும், வேறு பல வேதனைகளால் தவித்துக் கொண்டுமுள்ள இவன் சீக்கிரம் உயிர்துறக்க நேரிடும். 21—23.

சின்ன ச்வாஸம்:—உயிருடன் மன்றாடிக் கொண்டு இடையிடையே விட்டு விட்டு ச்வஸிப்பது, அல்லது ச்வஸிக்க முடியாமலே மர்மங்கள் அறுக்கப்படுவது போன்ற வேதனைகளால் வருந்துவது, வயிற்றுப் பொருமல் அதிக வியர்வை-மூர்ச்சை இவற்றால் பீடிக்கப்படுவது, வஸ்தி யென்னும் மூத்திரப்பை எரிக்கப்படுவது போல் ஆவது, கண்களில் நீர்ததும்புவது, மிக்க இளைத்துப் போவது, இடையிடையே பெருமூச்செறிவது, ஒரு கண் மிகச் சிவந்துபோவது, ஞாபகம் தவறிப் போவது, வாய் உலர்ந்துபோவது, முகம் கறுத்துப்போவது, எதையெதையோ பிதற்றுவது ஆக இவை மூச்சு மிகவும் தடையுண்டு சின்னச்வாஸம் என்கிற வியாதியால் வருந்துபவனுடைய குறிகளாம். மூச்சு முற்றிலும் தடையுறுவதால் இவன் சீக்கிரம் உயிர் துறப்பான். 24—26

தமகச்வாஸம்:—எப்பொழுது ச்வாஸமானது இயற்கைக்கு எதிரடையான வகையில் வெவ்வேறு ஸ்ரோதோமார்க்கங்களிற் புகுந்து, தொண்டை சிரஸ் இவற்றின் ஸ்ரோதஸ்ஸுகளென்கிற வழிகளைத் தடுத்து, கபத்தை மிகுதியாகக் கிளப்பி குர் குர் என்கிற சப்தத்தையும் பீநஸவியாதியையும் உண்டு பண்ணுகிறதோ, பிராணனைப் பீடிக்கவல்ல மிகக்கடுமையான ச்வாஸமு முண்டாகின்றதோ அப்பொழுது அக்கடுமையான ச்வாஸ வேகத்தினால் பிணியாளி மிகவும் சோர்வடைவான்; நாவறட்சியுள்ளவனாவான்; அசைவற்று மிருப்பான்; அடிக்கடி இருமிக்கொண்டே அதிகமாக மூர்ச்சையடைவான்; கபம் உள்ளிருந்து வெளிப்படாதவரையில் மிகவும் கஷ்டப்படுகிறான்; அது வெளிப்பட்டவுனே ஒரு முகூர்த்த நேரம் ஸுகமாயிருப்பான்; இவனது தொண்டையில் அதிக தினவுண்டாகும்; மிகவும் சிரமப்பட்டு சிறிது பேசுவான்; இந்த ச்வாஸத்தினால் வருந்தியவனைப் படுத்துக்கொண்டு நித்திரையுறமுடியாமல் வருந்துவான்; படுத்துக் கொள்ளும் போது வாயுவானது அவனது பார்ச்வ பாகத்தைப்பற்றிக் கொள்கிறது; உட்கார்ந்து கொண்டால் ஸுகம் பெறுகிறான்; உஷ்ணம் உடம்பில் தாக்கினால் அது அவனுக்கு இதமாயிருக்கின்றது.[1] நெற்றி வியர்க்க, கண்கள் வீங்கிப்போக பெரிதும் துன்பப்பட்டுக்கொண்டு, வாய் உலர்ந்துபோக, அடிக்கடியும் பெருமூச்சு விட்டுக்கொண்டு தேஹம் குலுங்க அடிக்கடி வருந்துவான்; இந்த ச்வாஸமானது மேகம், தண்ணீர், குளிர்ச்சியான வஸ்து, கீழ்க்காற்று, கபத்தை விருத்தி செய்யும் வேறுபதார்த்தங்கள் இவற்றால் விருத்தியடையும். இது "தமக ச்வாஸம்" எனப்படுகிறது. இது யாப்யமான வியாதி. புதிதாக உண்டானதாயிருந்தால், ஸாத்யமாகவும் ஆகும். 27—34.

ப்ரதமக ச்வாஸம்:—அதே தமகச்வாஸத்தில் ஜ்வரமும், மூர்ச்சையும் கூடியிருந்தால், அதை ப்ரதமகச்வாஸம் என்றறிக[2]. உதாவர்த்தம், தூசுகள், அஜீர்ணம், விதக்தமான உணவு, வேகங்களை அடக்குதல் இவற்றாலும் இது உண்டாகிறது. இருட்டில் இவ்வியாதி மிகவும் விருத்தியடைகின்றது. சீதளமான வஸ்து முதலியவற்றால் சீக்கிரம் உபசாந்தியடைகிறது. இருட்டில் ஆழ்ந்து போவதுபோல் பிணியாளி யுணருவான். இவ்வித வியாதியை "ஸந்தமகம்"[3] என்றறிக. 35, 36.

1. இந்த வியாதி வாதகபங்களால் ஏற்பட்டது. ஆகவே வாதகபங்களுக்கு எதிரிடையான உஷ்ணத்தினால் இவனுக்கு இதம் உண்டாகிறது.

2. ப்ரதமகத்தில் பித்தமும் அதிகமாய் அநுஸரிப்பதால் இதில் ஜ்வரமும் காண்கிறது.

3. ப்ரதமக ச்வாஸத்தையே 'ஸந்தமகம்,' என்று கூறுவர்.

க்ஷுத்ரச்வாஸம்:—ரூக்ஷத்தன்மை அதிகரிக்க ஆயாஸகரமான காரியங்களைச் செய்வதால் ச்வாஸாசயத்தில் அதிகபலமில்லாமல் ஒருபெருமூச்சு கிளம்பும். அது 'க்ஷுத்ர ச்வாஸம்' எனப்படுகிறது. அது அதிகமாய் சரீரத்தை வருத்தக்கூடிய கொடிய துர்க்குணங்களை யுண்டு பண்ணுவதன்று. அங்கங்களுக்கு எவ்வித துன்பமும் இது விளைவிப்பதில்லை. மற்ற ச்வாஸவியாதிகள் உண்டுபண்ணும் துன்பங்கள் இதனால் உண்டாவதில்லை. போஜனம், பானம் இவை இயற்கையில் உட்செல்லுவதற்குத் தடங்கலையுமுண்டுபண்ண மாட்டாது. இந்திரியங்களில் எதற்கும் கெடுதியுண்டு பண்ணுவதுமில்லை. அல்லது வேறு எவ்விதமான நோவும் இதனால் உண்டாகாது. இது ஸுகஸாத்யமானது. 37—38½.

ச்வாஸத்தில் ஸாத்யாஸாத்யங்கள்:—நல்ல பலிஷ்டர்களுக்குண்டாகுபவையும், ச்வாஸவியாதிக்குரிய லக்ஷணங்கள் நன்கு தோன்றாதவையுமான எல்லா ச்வாஸ ரோகங்களும், க்ஷுத்ரச்வாஸமும் ஸாத்யங்கள். தமகச்வாஸம் க்ருச்சிர ஸாத்யம்; அதிலும் துர்ப்பலமான மனிதனுக்குண்டாகும் தமக ச்வாஸமும் அஸாத்யமாகும். மற்ற மூன்று ச்வாஸங்களும் அஸாத்யமாகும். 39,40.

ச்வாஸரோகம் மிகக்கடுமையானது:—உயிரைப்பறிப்பவையான வியாதிகள் பல உண்டென்பது வாஸ்தவம்;[1] ஆனால் அவையெல்லாம் ச்வாஸம் ஹிக்கா இவற்றைப் போன்றவையல்ல; இவ்விரண்டும் சீக்கிரத்தில் பிராணனைப் போக்கி விடுகின்றன. 41.

## 13. ஸ்வர பேத நிதானம்.*

ஸ்வர பேதத்தின் நிதானம்:—மிகவும் உரத்துப் பேசுதல், ஏதேனும் விஷம் ஸம்பந்தப்படுதல், உரத்த குரலுடன் ஓதுதல், அடிதாக்குதல் ஆகிய இக்கோளாறுகளால் வாதம் முதலிய தோஷங்கள் பிரகோபமடைந்து; குரலுக்கு ஆதாரமாயுள்ள ஸ்ரோதஸ்ஸுகள் என்கிற த்வாரங்களில் தங்கி தொண்டையிலிருந்து குரல் கிளம்புவதைக் கெடுத்துவிடுகின்றன. 'ஸ்வரபேதம்' எனப்படுகிற அந்த வியாதி ஆறுவிதம். 1.

ஸ்வரபேதம் ஆறுவிதம்:—(வாதம் முதலிய மூன்று தோஷங்களால் தனித்தனியே ஒன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், மேதஸ் என்னும் கொழுப்பு அதிகரிப்பதால் ஒன்றும், க்ஷயத்தினால் ஒன்றுமாக ஸ்வரபேதம் ஆறுவிதம்.)

வாதஜ ஸ்வரபேதம்:—வாத தோஷத்தினாலுண்டாகும் ஸ்வரபேதத்தில் பிணியாளியின் கண்களும், முகமும், மல-மூத்திரங்களும் கறுநிறங்கொள்ளும்;[2] அவனது தொனி உடைந்தும் வெகு மெதுவாகவுமிருக்கும்; கழுதையின் குரலைப்போல அவன் பேச்சு ஒருவாறு கர கர வென்றும் தோன்றும். 1½.

பித்தஜ ஸ்வரபேதம்:—பித்தத்தினாலுண்டாகும் ஸ்வரபேதத்தில் கண்கள், முகம், மலமூத்திரங்கள் இவை மஞ்சள் நிறமாயாகும்; அவன் பேசும்போது தொண்டையில் அவனுக்கு அழற்சியுண்டாகும். 2.

கபஜ ஸ்வரபேதம்:—கபதோஷத்தினாலுண்டாகும் ஸ்வரபேதத்தில் எப்பொழுதுமே தொண்டையில் கபம் சூழ்ந்து அடைத்துக்கொள்ள, சொற்பமாகவும், மெதுவாகவும் பேசுவான்; பகல் வேளையில் மாத்திரம் நன்றாகப் பேச முடியும். 2½.

ஸந்நிபாதஜ ஸ்வரபேதம்:—மூன்று தோஷங்களாலும் உண்டாகிற ஸ்வரபேதத்தில் முன் கூறிய ஒவ்வொரு தோஷத்தினாலு முண்டாகிற ஸ்வரபேதம் ஒவ்வொன்றுக்கும் காண்கிற இலக்ஷணங்கள் அனைத்தும் தோன்றும். இது அஸாத்ய வியாதியென்று இருஷிகள் அபிப்பிராயப்படுகிறார்கள்[3]. 3.

1 ஸந்நிபாத ஜ்வரம் முதலியவை பிராணஹரமானவேறு கொடியவியாதிகளாம்.

*ஸ்வரபேதம்:—தொண்டையின் குரல்விகாரப்படுதல். குரல் கெட்டுப்போவது என்பொருள். 'ச்வாஸரோகம் போலவே இதிலும்பிராணவாயுவும், உதானவாயுவும் கோளாறடைகின்றன.

2. ஸ்வரபேதத்திற்குக் காரணமான தோஷங்கள் தேஹமெங்கும் வியாபிப்பதால் மல மூத்திராதிகளும் விகாரமடைகின்றன.

3. ஸந்நிபாத ஸ்வரபேதத்தையும் க்ஷயஜஸ்வரபேதத்தையும் விலக்கி மற்றவைக்கு சிகித்ஸை செய்யலாம் என்று ஸுச்ருதர் கூறுவது இங்கு குறிக்கப்படுகிறது.



க்ஷயஜ ஸ்வரபேதம்:—க்ஷயத்தினாலுண்டாகும்[1] ஸ்வரபேதத்தில், பேசும்போது வாயிலிருந்து கடுமையான ஆவி கிளம்பும்; பிறகு வாக்கும் க்ஷீணமடையும்;[2] அவ்விதம் பேசுவதற்கு முற்றிலும் சக்தியற்றுப் போய்விட்ட பிறகு இவனது வியாதிக்கு சிகித்ஸை செய்ய முடியாது. 3½.

மேதோஜ ஸ்வரபேதம்:—மேதஸ் என்கிற கொழுப்பு கோளாறடைவதாலான க்ஷயத்தில் குரல் உள்ளுக்கு இழுக்கப்பட, சொற்கள் விளங்காவண்ணம் பேசுவான்; அதுவும் வெகு நேரத்திற்கு ஒரு வார்த்தையாகப் பேசுவான்; கபம் அல்லது மேதஸ் அவன் தொண்டையில் சூழ்ந்திருக்கும்; நாவறட்சியினால் வருந்துவான். 4.

ஸ்வரபேதத்தில் அஸாத்யமானவை:—தேஹம் இளைத்துப் போனவன், கிழவன், இயற்கையில் மெலிந்த தேஹமுடையவன், இவர்களுக்குண்டாகும் ஸ்வரபேதமும், நீடித்த காலமாகத் தொடரும் ஸ்வரபேதமும், பிறந்தது முதலேயுள்ள ஸ்வரபேதமும்,[3] மிகக் கொழுத்த சரீரமுடையவனுக்குக் காணும் ஸ்வரபேதமும்,[4] ஸந்நிபாத தோஷங்களாலுண்டாகும் ஸ்வரபேதமும் சிகித்ஸையினால் நிவ்ருத்திக்க முடியாதவைகளாம். 5.

## 14. அரோசக நிதானம்.

அரோசக நிதானம்:—(ஐந்து வித அரோசகங்கள்.) வாத-பித்த கபங்களால் தனித்தனியே மூன்றுவித அரோசகங்களும், ஸந்நிபாதத்தினால் ஒருவித அரோசகமும்,[5] மனத்துயரம், பயம், அதிகலுப்தத்தன்மை, அதிககோபம், மனவெறுப்புண்டாக்கும் உணவு, அத்தகைய ரூபங்களைப் பார்த்தல், அவ்விதமான வாஸனை ஆக இவற்றால் ஆகந்துகமான அரோசகமும் உண்டாகின்றன. ¾.

வாதஜாரோசகம்:—வாததோஷத்தினாலுண்டாகும் அரோசகத்தில் பற்கள் கூசும்; வாய் கஷாயரஸமுடையதாயாகும். 1.

பித்தஜாரோசகம்.—பித்தத்தினாலுண்டாகும் அரோசகத்தில் வாய் கைப்பாகவும், அம்லமாகவும், உஷ்ணமாகவும், ஒரு ஸமயம் விரஸமாகவும், இலவணரஸமுள்ளதாகவும், துர்நாற்றமுடையதாகவும் ஆகும். 1½.

கபஜாரோசகம்:—கபத்தினாலுண்டாகும் அரோசகத்தில் வாய் இனிப்பாகவும், அதிக பசை சேர்ந்துள்ளது போலவும், குருத்தன்மையும் சைத்யமும் உள்ளதாகவும், அதிக கோழை சூழ்ந்ததாகவும், கட்டப்பட்டது போல் திறந்து அசைக்க முடியாததாகவும் ஆகும். 2.

ஆகந்துகா ரோசகம்:—சோகம், பயம், அதிக லோபியாயிருத்தல், கோபம் இவைமுதலியவற்றாலும், மனதுக்குப் பிடிக்காத அசுத்தமா...

1. க்ஷயம் என்றால் தேஹதாதுக்கள் க்ஷீணமாவது.

2. ஓஜோ தாது அழிவதால் பேசுவதற்குச் சக்தியற்றுப் போவதாகக் கூறப்படுகிறது.

3. பிறந்தது முதலேயுள்ள ஸ்வரபேதத்தை காகஸ்வரம் என்பார்கள்.

4. இதற்குமுன் கூறிய மேதோஜ ஸ்வரபேதம் கொழுப்பு விகாரங்கொள்வதால் ஏற்படுகிறது. இங்கே கூறப்படுவது மிகவும் கொழுப்பு அதிகரித்தவனுக்குண்டாவது எனப்பொருள். ஆகவே மேதஸ் கோளாறடைந்துண்டாகும் ஸ்வரபேதம் சிகித்ஸையினால் நிவாரணம் செய்யக்கூடியது எனக் கருதுக.

5. மனத்துயரம், பயம் முதலிய பல காரணங்களா(ல்) உண்டான போதிலும், ஆகந்துகம் என்கிற ஒரு பொதுவான ஹேதுவை ஆதாரமாகக் கொண்டு, இவ்வனைத்தாலும் உண்டாவது ஒரேவித அரோசகமாகக் கருதப்படுகிறது. "அரோசகம் ஐந்து விதந்தான்" என்று ஸுச்ருதரும் கூறுகிறார். சோகம் முதலியவற்றாலான அரோசகமும் வாதாதி தோஷங்களாலேயே உண்டாகின்றவையாயினும், மூல காரணத்திற்குப் பரிஹாரம் தேடுவது அவசியமென்பதைக் கருதி ஆகந்துகாரோசகமும் தனியாகக்கூறப்படுகிறது.

யுள்ள நாற்றம் முதலியவைகளாலும் உண்டாகும் அரோசகத்தில் வாய்மாத்திரம் ஸாதாரண நிலைமையுடையதாகவே இருக்கும். 2½.

ஸந்நிபாதஜாரோசகம்:—மூன்று தோஷங்களாலும் காண்கிற அரோசகத்தில் வாய் வாதஜாரோசகாதிகளிற் கூறிய பலவிதமான சுவைகளைப் பெற்றதாயிருக்கும். 3.

அரோசகங்களிற் காணும் விசேஷக்குறிகள்:—வாதஜாரோசகம் இருதயத்தில் குத்தல் வேறுவிதமான வலி இவற்றுடன் கூடியதாயிருக்கும். பித்தஜாரோசகம் நாவறட்சி தேஹ அழற்சி உறியப்படுவதுபோன்ற நோவு இவற்றால் சூழப்பட்டிருக்கும். கபஜாரோசகம் அதிக கபம் சேர்ந்ததாயிருக்கும். ஸந்நிபாதாரோசகம் பலவிதமான நோவுகளையும் உண்டு பண்ணும். மற்ற ஆகந்துகாரோசகங்களை மனதில் கலவரம், மயக்கம், திமிர்ப்பு இக்குறிகளைக் கொண்டு அறியவும். 4.

## 15. சர்தி நிதானம்.

சர்திகள் ஐந்து விதம்:—கோளாறடைந்த மூன்று தோஷங்களால் தனித்தனியே மூன்று சர்திகளும், ஸந்நிபாததோஷத்தினால் ஒன்றும், அருவருப்பான விஷயங்களைப் பார்ப்பது அல்லது நினைப்பது முதலியவற்றால் மற்றொன்றும் ஆக ஐந்துவித சர்திகள் உண்டாவதாய் அறிக. இதன் கீழ் அவற்றின் இலக்ஷணங்கள் கூறப்படுகின்றன. 1.

சர்திநிதாந ஸம்ப்ராப்திகள்:—அதிக திரவமானவை, அதிகஸ்நிக்த்தமானவை, மனதுக்குப் பிடிக்காதவை, அதிக உப்புள்ளவை, அளவில் அதிகமானவை, அகாலத்தில் உபயோகிக்கப்படுபவை, அஸாத்மியமானவை ஆகிய இவ்விதமான உணவுகளாலும், சிரமத்தினாலும், பயத்தினாலும், அங்ஙனமே, உள்ளக்கொதிப்பாலும், அஜீர்ணத்தினாலும், கிருமிகள் வயிற்றிற் சேர்ந்துண்டாகும் தோஷத்தினாலும், ஸ்த்ரீக்கு கர்ப்பம் உண்டாவதாலும், அதிக துரிதமாய் புஜிப்பதாலும், பீபத்ஸமான வேறு [illegible]ங்களாலும் தோஷமானது வலிவாகக் [illegible] வேகமாய் மேல் நோக்கிக் கொண்டு [illegible]பட்டு வாய் மூலமாய் வாந்தியாய் விடு[illegible]; வேகங்களால் வாயை ஆச்சாதநம் [illegible]ப) செய்து அவயவங்களை ஒடுக்கி அர்த்து (பீடித்து) வேகம் உண்டாவதிலிருந்து இதற்குச் "சர்தி"[1] என்கிற பெயர்வந்தது. 2-4.

சர்தியின் பூர்வ ரூபம்:—இருதயம் பட பட வென்று அடித்துக் கொள்ளுதல், தேக்கெறிவு தடையுறுதல், வாயில் உப்பாகவும் பசைபற்றதாகவும் உமிழ் நீரூறுதல், அன்ன பானங்களில் அதிக வெறுப்புண்டாதல் ஆகிய இவை வமநம் உண்டாகப் போவதைக் குறிப்பிடும் பூர்வரூபமாகும். 5.

வாதஜ சர்தி:—வாதஸம்பந்தமான சர்தியில் இருதயத்திலும், விலாப்பக்கங்களிலும் நோவு, வாயில் வறட்சி, சிரஸ்ஸிலும் நாபியிலும் வேதனை, இருமல், குரல் கம்மிப்போதல்; குடைத்தல், இத் தொந்தரவுகளோடு, பிரபலமான தேக்கெறிவுபோன்ற சப்தமுமுண்டாக சிறிது நேரத்திற் கொருமுறை வாந்தி செய்வான். மேலும் வாந்தியானது நுரைத்தும், சிறிது கறுப்பாகவும், தடிப்பில்லாததாகவும், கஷாய ரஸமுள்ளதாகவும், அளவில் வெகு சொற்பமாகவும் இருக்கும். இதில் மஹத்தான வேகத்தினால் மிகப் பீடிக்கப்பட, வெகு சிரமப்பட்டு சொற்ப அளவான வஸ்துவை வாந்தி செய்வான். இந்தச் சர்தி மிகத் துன்பமளிக்கக்கூடியது. 6.

[1] சர்தி—வாந்தி. (வாந்தி யென்பது ஒரு வியாதியின் குறியாக விருந்தபோதிலும் ஜ்வரம் முதலியதைப் போலவே இதுவும் ஒரு சுதந்திர வியாதியாகவே இங்கே கருதப்படுகிறது.)

அழகானது ! சுதேசியமானது !! உபயோகமானது !!!

அழகான 1921 கியாலண்டர்

ஜனவரிமீ 31 தேதிக்குள்ளாக எங்கள் டிபோ மருந்துகளை
6 ரூபாய்க்கு ஒரே தடவை வாங்குபவர்களுக்கு

ஒரு கியாலண்டர் இனமாக அனுப்பப்படும்.

தனியாக கியாலண்டர் 1-க்கு வி. பி. யோடு 0-6-0

மொத்தமாய் வேண்டுமானால் விலை சாசமாய்க் கொடுக்கப்படும்.
வி. பி. இல்லாமல் முன்னதாக தபால்பில்லை அனுப்புவோருக்கு கியாலண்டர் சேராமல் போனால் அதற்கு நாங்கள் ஜவாப்தாரரல்ல.
சில பிரதிகள் மாத்திரமே அச்சிட்டிருக்கிறோம்.
வேண்டியவர் உடனே வரவழைத்துக்கொள்ளவும்.

| படைமருந்து | பற்பொடி | மோஹினி தைலம் |
|---|---|---|
| டப்பி 1-க்கு 0-6-0 | டப்பி 1-க்கு 0-2-0 | டப்பி 1-க்கு 0-1-2-0 |

# அமிருதாஞ்சனம்

எல்லா நோய்களுக்கு சித்தௌஷதம்.

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத்தலைநோய், வீக்கம் சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்வியாமிருதம்.

டப்பி 1-க்கு 0—8—0, டஜன் 1-க்கு 5—6—0, வி. பி. வேறு.

அமிருதாஞ்சனம் டிபோ.

9 தம்பு செட்டி தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்,
109, ப்ரேரிரோட், பொம்பாய்.

சீர்திருத்தப்பெற்ற இரண்டாம் பதிப்பு.

# சார்ங்கதர ஸம்ஹிதை.

ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் முதன் முதல் வெளியான ஆதிகாலத்திய ஆயுர்வேத வைத்திய நூல். 'வைத்திய கலாநிதி, பத்திராசிரியரான ஆயுர்வேத பூஷணம். பண்டிட் ஸ்ரீமான். துரைஸ்வாமி ஐயங்கார் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

இவ்வைத்தியக் கிரந்தம் மூன்று கண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

1. பூர்வ கண்டத்தில்.—ஆயுர்வேத பரிபாஷை, ஔஷதாதிகளின் விவரம், தீபன-பாசன-ரேசநாதி குண விசேஷங்கள், தேஹதத்துவ ஸம்பந்தமான அம்சங்கள், ரோகஸங்க்யை, மற்றும் அருமையான அநேகம் விஷயங்கள் 7-அத்தியாயங்களைக் கொண்டு விவரிக்கப்பட்டிருக்கின்றன.

2. மத்தியம கண்டத்தில்:—ஸ்வரஸம்,க்வாதம், பாண்டம், கல்கம் முதலிய கஷாயவகைகளும், சூர்ணம், குளிகைகள், பாண்டங்கள், தைலங்கள், கிருதங்கள் இரஸௌஷதங்கள், பஸ்ம முறைகள், தாதுமாரண சுத்தி முறைகள், ஆஸவங்கள், அரிஷ்டங்கள் முதலிய ஔஷத நிர்மாண முறைகளும் 12 அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

3. உத்தர கண்டத்தில்:—கிருதபானம், ஸ்வேதசிகித்ஸை, வமன சிகித்ஸை, விரேசன சிகித்ஸை, வஸ்தி சிகித்ஸை (எனிமா), நஸ்யவிதி,கண்டூஷாதிவிதி, இரத்தத்தை வெளிப்படுத்தும் முறை, நேத்திர சிகித்ஸை முதலான மிகவும் உபயோககரமான சிகித்ஸா க்ரமங்கள் எளிதாகச் செய்யக்கூடிய வகையில் 13-அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆக இக்கிரந்தத்தில் மொத்தம் 32 அத்தியாயங்கள் அடங்கியிருக்கின்றன

விவரமாக வியாக்கியானம் ஒவ்வொரு பக்கத்திலும் உண்டு. முகவுரை மிகவும் விசேஷமானது. விஷய அகராதி விரிவானது. டபுள்கிரௌன் என்னும் அளவில் உயர்ந்த காகிதத்தில் சுமார் 450 பக்கங்களில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ரூ. 3.

"வைத்திய கலாநிதி" ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்.

---

## அஜீர்ண கேஸரி.

வயிற்றில் புளிப்பு சேருதல், குடல் இரைத்தல், மார்பில் எரிவு, வயிற்றுப்பஸம், வயிற்றுவலி, மலச்சிக்கல் அல்லது அதிஸாரம் முதலியவைகளையும், இக்குறிகளுடன் அல்லது வேறு குறிகளோடு கூடிய எவ்வித அஜீர்ண ரோகத்தையும் இவ்வௌஷதம் நிவாரணம் செய்யும். இக்காரணத்தினால் ஏற்பட்ட பசியின்மையையும் போக்கி, பசியை நன்கு உத்தீபநம் செய்யவல்லது. வயிற்றிலுண்டாகும் குல்ம ரோகங்களையும் போக்கும். குழந்தை முதல் அனைவரும் உபயோகிக்கலாம். ஜ[illegible]ம் முதலியதால் உண்டான நாக்கின் அரோசகத்தையும் நிவ்ருத்தி செய்க்கவல்லது. நூற்றுக்கணக்கான அஜீர்ண ரோகிகள் இவ்வௌஷதத்தினால் ஸௌக்கியமடைந்திருக்கிறார்கள்.

டப்பி 1-க்கு விலை ரூ 2.

ஆர்யன் பாரமஸி.

7. ஆதியப்பமுதலித் தெரு, புரசவாக்கம், மதராஸ்.

144986.